The same event is also referred to in Kali-Thokai (கலித்-தொகை 104). The surging sea stole his (Pandia's) land. He was not discouraged. He proceeded against his neighbours and won a portion of their land removing their tiger and bow emblems and planting his fish ensign. He earned everlasting fame'. The Silappathikaram text gives an emblished version of this incident. May the Pandia King of the South Prosper. In revenge for his throwing the spear at the ocean to indicate to other kings the extent of his dominion under his feet, the cruel sea swallowed the Camorin mountain and its many ranges along with the river Pahruli. To make good this loss he conquered the Ganges and the Himalayas'.(Silapp: 11, 1725) It may be seen here that while Kali-Thokai makes the Pandia king get some land by over coming Ceran and Cholan, the Silappatikaram adds the Ganges and Himalayas to his dominion which is but poetic exageration. No where in Tamil literature there is mention about more than one deluge.

Adiyarku-Nallar while commenting on Venirkathai - of Silappadikaram says that this deluge occured during the time of the First Sangam where Nilam-Thiru-Vir pandian also called Jeyamakirthi was the king. But he puts the reign of this king at Kabadapuram during the time of the 2nd Sangam in the preface to Silappadikaram. Thus he is inconsistent as to the time of the deluge whether it occured during the First Sangam or the Second Sangam. In support of this he cites Kalaviyal-Urai and Ilampooranam But they do not support him at all. All that we can conclude from the information given by Silappatikaram and Adiyarkku-Nallar is that there has been only one deluge and that it occured in the Pandia land in the reign of Nilam. Thiru-Vir Pandian also called Jeya-Ma-Kirthi at Kabadapuram during the Second Sangam. Kalviyal-Urai supports Adiyarkku-Nallar in all the above points excepts in the name of the king. It names him as Muda-Thiru-Maran.

Since there has been only one sea eroison we can conclude that these two names Nilam-Tharu-Thiruvir Pandian and Muda-Thiru-Maran refer to the same person. This conclusion becomes more plausible if we take that Thiru-Maran and Thiruvir Pandian (Two words of identical meaning) can represent one and the same person. This Nilam-Tharu-Thiruvir Pandian is called Nilam-Tharu-Thiruvin Nediyon - (நிலந்தரு திருவின் நெடியோன்) by his contemporary Panamparanas in the preface to Tholkappiam. He is described as நிலந்தந்த பேருதவிப் பொலந்தார் மார்பின் நெடியோன் in Madurai-Kanchi. There need not be much difficulty in reconciling the fact that the two contradictory words Muda-Maran (முடிமாறன்) and Nediyon (நெடியோன்) should refer to ome and the same person if we remember the fact that in the 7th Century AD Koon Pandian - கூன் பாண்டியன் - was also called Nedumaran - நெடுமாறன் - the two contradictory terms Koon Pandian and Nedumaran refering to the same person. Thus the contradiction in the words Muda-Maran and Nediyon may itself be

taken as supporting the fact that the two names refer to one and the same person.

In Madurai-Kanchi - மதுரைக் காஞ்சி - Mangudi Maruthan மாங்குடி மருதன் - gives a graphic description of the event which added the attribute Nilam-Tharu - நிலந்தரு - to the Pandia's name. He (-Mangudi Marathan) praises a later Pandia King நெடுஞ்செழியன் attributing to him the feats of his ancestor Nilam-Tharu-Thiruvir - Pandian. He says that this Nilam - Tharu - Thiruvir - Pandian conquered the great sera and sola kings along with the Velir Chieftains. He over came his enemies beyond wild deserts and high mountains. Havings added new dominious to his kingdom and thus greatly contributed to the prosperity of his people, he was aptly called நிலந்தந்த பேருதவிப் பொலந்தார் மார்பின் நெடியோன் (மதுரை. 55-62). These are not the only exploits of Nilam-Tharu-Thiruvin-Nediyon. In extolling this king further Mangudi-Maruthan adds that he proved a great hero on the high seas as well, having added to his kingdom many dominions beyond the seas. He says: 'This Pandian sailed throught the terrible waves on the wide and frightening sea and reached the harbour of Nellure - (நெல்லூர் - காலியூர்) surrounded by deep sea with flags flying and drumps beating and captured it. (மதுரை. 75-88)

This Nellore also called Thuliur is none but the present island of zava. For zava is an alternate name of (நெல் - சாலி. நெல்லின் பரியாய நாமம் சாலியாம்) Because of the fact that rice of high quality was produced in plenty there it was called சாலியூர் - சீர்தூன்ற உயர்நெல்லின் ஊர் and it is an island தென்கடல் குண்டகழி--ஊர். Even Nachinarkkiniar the only commentator on this mentions nothing more than the two facts. 1 (உயர் நெல்லின் ஊர் சாலியூர்) 2. that it is at an inaccisbly long distance. G.E. Girini in his Further India calls this harbour as சாரி சாரி is only a modification of the name சாலி. The later kings of this place called themselves சாலி பாலவர்மர் Protectors of the Island of Zava.

The pandian who conquered this Nellore has been called Jeyamakirthi. Jeya is another name for Zava.[1] The fact that this Pandian conquered Zava and established a Colony of Tamils there, obtaining thereby great fane has earned him the name நிலந்தரு திருவின் பாண்டியன் என்கிற சயமாகீர்த்தி. We have seen that he is also called Nediyon Puram 9 speaks about this Nediyon as having celebrated a festival in honour of the sea - முந்நீர் விழவின் நெடியோன். Probably these celebrations should have been in honour of his victory over seas. In explaining the word நெடியோன் (the great) the old commentator says, this denotes his standing with the sea washing his feet - முந்நீர்க்கண் வடிம்பலம்ப நின்றான் what does this mean? This is simply a metaphoric expression in praise of his mighty feet which crossed the wide seas, Nediyon means Thirumal - Just as Thirumal contained the whole universe with in the span of his feet. In support of this, the custom of engraving the feet of the Emperor on the rock so as to be perptually washed by the sea may be cited.[2]

The Emperors of Zava were known as Sri. Maravijayothunkan and their emblem was fish - (மகதத்துவசம்)[3] Evidently the name Maran and the fish emblem speak about Pandian Lineage. Grini says that a later king by the name of - மாற

---

1 அரசன் தன் அடிகளைப் பாறையிற் பொறித்து அதை நீரலம்பும்படி வைக்கும் செய்தியை ஜாவாவில் பரிபூர்ணவர்மன் சாசனங்களிலே காணலாம்.

Aint III 355-58

இவன் முன்னோர் யவத்திவத்திலே குடிஏறிய இந்திராதல் நிவண்டும் என்பது ஆராய்ச்சியாளர் துணிபு.

2 ராஜ ராஜ சோழன் தன் 21ம் ஆண்டு ஆட்சியிலே நாகப்பட்டினத்துச் சூளாமணிவர்ம விகாரத்துக்கு ஊர் கொடுத்த சாசனம் ஸ்ரீவிஜயாபதிக்கு மகாத்துவமும் ஸ்ரீமாறவிஜயோத்துங்கன் என்ற பெயரும்கூறுகிறது.

3 யவத்தீவத்துப் பிற்கால சாசனம் ஒன்று, மீன முத்திரையுடன் ஜெயநகர சுந்தர பாண்டியன் தேவனைக் குறிப்பிட்டுள்ளது.

சிறுமாறன் சாலி embraced Islam and called himself மாலிக் உல் சாலி 1270-75 A.D. Thus the epithet denoting Pandias continues to be present in the name of the Zava kings. In speaking about the Zavanese family name Maleokulan (மலயகுலன்), Grini points out the Similarity with the word Malayan. Malaya Madhavan - the great sage of Malaya - (பொருவில்) is one of the many names of Agasthiar. This might have been the root word for Maleon as well as the name of the Malaya Penninsula.

In this connection the views of Pandit Nehru as expressed in his Discovery of India may be noted: He says : 'It is suggested, from a similarity of names, that many of these people who came were from the wide spread Malva tribe in India - hence the Malay race which has played such an important part in the whole of Indonesia. A part of central India is still known as Malava. The early colonists are supposed to have gone from Kalinga on the East Coast - Orissa but it was the Hindu Pallava Kingdom of the South that made an organised effort at Colonization'. In view of the later part of the above statement and in view of the points seen above, it stands more to reason to suppose that the earliest colonization in the Far East was carried by the people of the Malaya country i.e., the Pandia people.

பண்பாடு

தா. நீலகண்டபிள்ளை

பண்பாடு என்னும் சொல்லை பண்பு + பாடு எனப்பிரிக்கலாம். பண்பு எனப்படுவது உயிர், உயிரினாலாகிய பொருட்களின் குணம் ஆகும் என தமிழ்மொழி அகராதி கூறும். பாடு என்பது பேசுதல், சொல்லுதல் ஆகும். பண்படுதல் என்பது சீர்திருத்துதல் எனப்பெறும். எனவே, பண்பினைப் (குணத்தைப் பற்றி) பேசுவது பண்பாடு எனப்பெறும். பண்பாடு எனும் சொல்லுக்கு அமெரிக்க அறிஞர் குரோபரும் (Kroeber)குளுக்கானும் (ஜெர்மன் அறிஞர் - Kluckhon) 15க்கும் மேற்பட்ட வரையறைகளைக் கொடுத்துள்ளனர். தொல்காப்பியர் காலத்தில் 'பண்பு' என்ற சொல்லே வழக்கில் இருந்தமையாக அறிய முடிகின்றது. பண்பாடு என்னும் சொல் அண்மைக் காலத்தில்தான் வழக்கில் வந்துள்ளது. டி.கே.சி. அவர்கள் இச் சொல்லை முதன் முதலாக பயன்படுத்தியுள்ளமை தெரிகிறது.

'இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி'[1]

பண்பாடு என்னும் இன்றைய சொல்;

'பாடறிந்து ஒழுகும் பண்பினாரே'[2]

'பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்'[3]

என வழக்கத்திற்கு ஒப்ப ஒழுகுதல் என்ற பொருளில் எடுத்தாளப்பட்டுள்ளது. பண்பாடு என்னும் பொருளில் நாகரிகம் என்னும் சொல்லும் காணப்படுகின்றது.

'நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்'[4]

'நயத்தக்க நாகரிகம் வேண்டு பவர்'[5]

பண்பாடு என்பது பக்குவப்படுதல் என்னும் பொருளைத் தருகின்றது. கல்ச்சர் (Culture)என்ற ஆங்கிலச் சொல்லின் நேர் பொருளைத் தருகின்றது. ஆயின், பண்பாடு என்னும் சொல் ஒரு சமுதாய வளர்ச்சியைச் சுட்டிச்செல்லும் வகையில் அமையும். ஒரு சமுதாயத்தின் அறிவு வளர்ச்சி, நாகரிகத் தன்மை, பழக்க வழக்கங்கள் போன்றவற்றைச் சுட்டுவதாகும், சமுதாயத்திலுள்ள மக்கள் தங்கள் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் முறையே பண்பாடாகும்.

எது பண்பாடு

சமூக வழக்காறுகள், மரபுகள், கட்டுப்பாடுகள் இவற்றின் அடிப்படையில் தோன்றுவதே பண்பாடு. பண்பாடு என்பது சமுதாய அகவளர்ச்சியைக் கூறுவது. மக்களின் செறிவான வாழ்க்கை முறையைப் பண்பாடு எனலாம். அது

அச்சமுதாய மக்களின் உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டது. நாகரீகம் புற வளர்ச்சியினைப் பெரிதெனப் போற்றும் தகைமையது. பண்பாடோ அம்மக்களது அகவளர்ச்சியைக் காட்டுவது.ஈ.பீ.டெய்லர் (E.B. Taylor) என்னும் அறிஞர் கூறுவதுபோல் பண்பாடு என்பது மனிதன், சமுதாயத்தில் ஓர் உறுப்பினன் என்ற நிலையில் அறிவு, நம்பிக்கை அறவாழ்க்கை, சட்டம், பழக்கங்கள் முதலியன பற்றிப் பெற்ற ஒருவித வாழ்க்கையாகும். பண்பாடென்பது ஒரு சந்ததியார் தமது முந்தைய சந்ததியாரிடம் பெற்ற நடத்தையாகும். பொதுவாக குறிப்பிட்ட சமூக அமைப்பினர் நடத்திய, நடத்தும் வாழ்வில் முறையே பண்பாடு எனப்படும். பண்பாடு காலத்தால் மாற்றம் கொள்ளாது. ஆயின் நாகரீகம் மாறும் தன்மையுடையது.

பண்பாட்டின் வளர்ச்சி

ஒவ்வொரு சமூகமும் ஒவ்வொருவிதப் பண்பாட்டினைக் கொண்டது. பண்பாடு படிப்படியாக அமையும் ஒருவித வளர்ச்சியாகும்.

பண்பாடு
- பொருள் பற்றியது (புற வளர்ச்சி)
- ஆன்மா பற்றியது (அக வளர்ச்சி)

என இருவகையாகப் பிரிக்கலாம். புறவளர்ச்சி சமுதாய அடிப்படையிலும் அக வளர்ச்சி மன அடிப்படையிலும் ஏற்படுகின்ற வளர்ச்சியாகும். இவ்வளர்ச்சியும் பாரம்பரியம் வாயிலாகவும் சமுதாயத்தின் வாயிலாகவும் வளர்வதாகும். வளர்ப்பு சரியாக இருந்தால் வளர்ச்சி சரியாக அமையும். கல்வி பயிற்றலிலோ, கற்பதினாலோ மட்டும் பண்பாடு வளர்வதில்லை (Education is not valued; Discipline is the valuable thing) பண்பாட்டின் வளர்ச்சி என்பது மக்களினம் வாழும் இடம்; அங்குள்ள இயற்கை வளங்கள், பிறருடன் தொடர்பு கொள்வதற்கான வாய்ப்புகள், பிறருடன் கொள்ளும் பழக்க முறைபாடு; முன்நடத்திச் செல்வோர் தன்மை இவற்றை அடிப்படையாகக் கொண்டே அமையும். கற்கும் கல்வியாலும், மேற்கொள்ளும் பயிற்சியாலுமே (Education and Experience) பண்பாடு மெருகடையும். எனவே, முன் சொன்னவற்றுடன் தொழில்நுட்பம், பொருளாதாரம், சமூக அமைப்பு, சமயம், மொழி, கலைகள் போன்றவற்றைப் பண்பாட்டின் அடிப்படையாக எண்ணலாம்.பிறர் நடப்பதைப் பார்த்து, அதிலுள்ள நல்லனவற்றைத் தெரிந்துகொண்டு தானும் அவ்வாறு நடத்தல் வேண்டும் என்னும் ஆசையே பண்பாட்டின் வளர்ச்சிக்கான ஆணிவேராகும். ஒரு சமுதாயம் தான் பேசுகின்ற மொழி, அது பின்பற்றுகின்ற பழக்க வழக்கத்திற்கு ஏற்ப அச்சமுதாயம் மாற்றம் பெறுதல் இயல்பு. இது பண்பாட்டு வளர்ச்சியாகும்.

பண்பாட்டின் தேவையும் - பயனும்

எல்லா மக்களும் ஒரேவிதமான பண்பாட்டினைக் கொண்டிருப்பதில்லை. பண்பாட்டினால் பல மாறுபாடுகள் தோன்றலாம். அவரவர் தாம் கொள்ளும் கொள்கைக்கு ஏற்பப் பண்பாட்டின் தன்மை

மாறலாம். நல்ல பண்பாடுகளை உடையவர் நல்ல தன்மையுடையவர் எனப் போற்றப்படுபவர். விலங்குகளைப் போல எதையும் துய்ப்பதோடு மட்டும் நிற்காது சிந்திக்கும் திறனுடையவராய் விளங்குகின்ற காரணத்தால் நம்மை ஆறறிவுடைய மக்கள் என்கின்றோம்.

நல்ல பண்பாடு உடையவர் கட்டுப்பாடுகளை உடையவராய் விதிகளுக்கு உட்படுபவராய் விளங்குதல் காணலாம். பண்பாடு ஒருவனை இயல்பாகவே சிறந்தவனாக மாற்றும் தன்மையுடையது. நல்ல குணநலன் உடையவனை சமுதாயம் அடையாளம் கண்டு அவனைப் போற்றிப் பாராட்டும். நல்ல பண்பாடுகளை உடைய சமுதாயத்தை இலக்கியங்கள் பாராட்டும். (குப்தர்கள் காலம் பொற்காலம் என இந்திய வரலாறு குறிப்பிடல் காண்க). பொதுவாக அவ்வக்கால இலக்கியங்கள் அவ்வக்கால சமுதாயப் பண்பாட்டு நிலைகளை **(Social Culture)** வெளிப்படுத்துவனவாகும். அவ்வம் மக்களின் மன உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற நிலையில் சில தனிப்பட்ட இயல்புடையன. அதனை இனங்கண்டு அவ்வவ் பண்பாட்டுச் சிறப்புக் கூறுகளை எடுத்துக்காட்டி உணர்த்துவது பண்பாட்டுக் கல்விக்குத் துணை **(Cultural Study)** ஆகும்.

இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடி மட்டுமல்லாது வரலாற்றுச் சான்றாகவும் விளங்கும் தன்மையன. அதன்மூலம் நல்ல பண்பாடு உடைய புதிய சமுதாயம் தோன்ற வாய்ப்பு அதிகம். தான் கற்ற இலக்கியத்தினின்று நல்லன கெட்டன அறிந்து அதன்படி செயல்பட நமக்கு உதவுகின்றது. பண்பாடு என்பது ஒரு சமுதாயத்தின் குணநலனை - செயல்பாட்டை எடுத்துக்கூறுவதால் அது மிக மிகத் தேவையாகிறது. தான் வாழும் சமுதாயப் பண்பாட்டின் நல்ல கூறுகளை ஆய்வு செய்தறிய முன்னைய பண்பாட்டின் தன்மை தெரிந்திருக்க வேண்டும். ஒன்றை வைத்தே இன்னொன்றை ஒப்பிட இயலும். எனவே, முன் பண்பாடு சட்டமாகவோ சான்றாகவோ பதிந்திருக்க வேண்டியது அவசியம். நல்ல சாத்திரங்களை வெளிநாட்டார் வணங்கல் வேண்டும், அதற்குப் பண்பாடு அவசியமாகிறது.

பண்பாடு என்பது ஒழுக்கம், பழக்கம் போன்ற பல கூறுபாடுகளின் மொத்த வடிவம். இதைக் கடைப்பிடிக்கும் சமுதாயமே நல்ல திறமுடைய சமுதாயமாகும். எவன் ஒருவன் பண்பாட்டின் பொருண்மையை அறிந்திருக்கிறானோ அவனைப் பண்பட்டவன் என்று இச்சமுதாயம் கூறுகிறது. எச்செயல்பாட்டிற்கும், எந்த வினைக்கும் பண்பாடே ஓர் ஊக்கியாகத் திகழ்கின்றது.

பண்பாட்டின் தோற்றம்

ஆதிமனிதன் தனக்கு எது தோன்றியதோ, தனக்கு எது அத்தியாவசியத் தேவையோ அதனைச் செய்துவந்தான். ஆதிமனிதனுக்கு முதலில் தேவைப்பட்டது உணவு. உணவை உருவாக்கலும் சேகரிப்பதும் (ஃஒ்நஙி ஹஏஒஊ - லீஒருருஙிஹஏஒஊ) அவனது முதல் தொழிலாக அமைந்தது.

தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க அவனது பண்பாட்டில் புரட்சி ஏற்பட்டது. வேட்டையாடி கிடைத்த உணவையும், காய்கறி கனி வகைகளையும் உண்டுவந்த கற்கால மக்கள் முதலில் அதனைப் பச்சையாக, சற்று சூடாக்கிப் பின்னர் சரியாக வேகவைத்து உண்ண ஆரம்பித்தனர். காலப்போக்கில் நாடோடி வாழ்க்கை வாழ்ந்த மனிதன் நிரந்தரமாக ஒரு இடத்தில் குடியேறி வாழ்ந்த தன்மையே பண்பாட்டின் முதல் தோற்றமாகக் கொள்ள இயலுகின்றது நிரந்தர வாழ்க்கையால் முதலில் விவசாயம் செய்யக் கற்றுக்கொண்டனர். அதிலும் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தனர். ஒரே இடத்தில் மொத்தமாக வாழ்ந்தவர் பின்னர் தங்களுக்குள் சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து பல இடங்களில் தங்கள் குடியேற்றங்களை அமைத்தனர். இதுவே, முதல் மனிதன் செய்த பண்பாட்டுப் புரட்சியின் மலர்ச்சி. இவ்வாறு கிராமங்களில் வாழ்ந்து தமக்குள் சில அரசியலமைப்பு, கட்டுப்பாடுகள், சட்டதிட்டங்களை ஏற்படுத்திக்கொண்டு எழுதும் முறையை உருவாக்கியபோதே நகர நாகரீகங்கள் தோன்றலாயின. அதற்கும் சிறந்த எடுத்துக்காட்டாகச் சிந்து சமவெளி நாகரீகம் அமைகின்றது. பண்பாட்டின் அடிப்படையாகக் குடும்ப வாழ்க்கையே அமைகின்றது. குடும்ப வாழ்வே பின்னர் விரிந்து பலவித விதி, சட்டம், சமூக, பொருளாதார, அரசியல், சமய துறைகளை உண்டாக்கி வளர்த்தது.

பண்பாட்டின் இயற்கை

அச்சத்தின் காரணமாக முதலில் மனிதன் இயற்கையை வணங்க முற்பட்டான். அச்சமூட்டும், தீ, சூரியன், மழை, காற்று முதலியவற்றை வணங்கினான். பின்னர் ஒவ்வொன்றுக்கும் ஒரு இறைவனை வைத்து அதனை வணங்க முற்பட்டான். பின்னர் அததற்குப் பெயர் இட்டுத் தம்மைப்போல மனித உருவாக்கம் செய்து வணங்கலானான். அதிலும் சில மாற்றம் செய்து மும்முதற் கடவுளைப் படைக்க முற்பட்டு வெற்றி கொண்டான். அதன் உருவாக்கமே சிவன், பிரம்மா, விஷ்ணு. பெருந்தெய்வ வழிபாட்டிற்கு முன்னர் சக்தி வழிபாட்டினைக் கொண்டிருந்தனர். சக்தி வழிபாட்டினை அடிப்படையாகக் கொண்டு பெருந்தெய்வங்களுக்குத் துணையாக மலைமகள், கலைமகள், திருமகளைப் படைத்தனர். அவர்களுக்கு வீரம், கல்வி, செல்வத்தைத் தொழிலாகக் கொடுத்துனர். பின்னர் சிறுதெய்வங்களுக்கும் மதிப்பளிக்கத் தொடங்கினர். திராவிடப் பண்பாட்டில் சிறுதெய்வங்களுக்கே முதலிடம் கொடுக்கப்பெற்றதாக ஆய்வாளர் பலர் கருதுகின்றனர். சிறுதெய்வ வழிபாடு அச்சத்தின் காரணமாகத் தோன்றியனவே. நடுகல் தெய்வங்கள், முன்னோர் தெய்வங்கள், மலைத்தெய்வங்கள், அகால மரணமடைந்தவர் வழிபாடு, காவற்தெய்வம்,போன்றன இத்தகையனவே. முதலில் சிறுதெய்வ வழிபாடே தோன்றியிருத்தல் வேண்டும். பண்பாட்டில் புரட்சி ஏற்பட்டு மலர்ச்சியடைந்த பின்னரே பெருந்தெய்வ வழிபாடு, கோவில் வழிபாடு முதலியன தோன்றியிருத்தல்வேண்டும்.

அகப்பண்பாடு

தொல்காப்பியம் சங்ககாலப் பண்பாட்டை எடுத்துக் கூறுகின்றது. தமிழர் தம் சமூகப் பண்பாட்டு பிழிவே தொல்காப்பிய பொருளதிகாரம். தமிழரது அக வாழ்க்கையை அழகுபட உரைக்கின்றது களவியலும் கற்பியலும். அக வாழ்க்கை பல்வேறு வித கடப்பாடுகளுக்கு உட்பட்டே நடக்கின்றது. பாங்கன் கூட்டம், பாங்கியர் கூட்டம், இடந்தலைப்பாடு அறத்தொடு நிற்றல், தலைவி தோழிக்குக் கூறல், தோழி செவிலிக்குக் கூறல், செவிலி நற்றாய்க்குக் கூறல், நற்றாய் தன் ஐவருக்குக் கூறல் என வழிமுறைகள் உள்ளன. ஏறு தழுவுதல், மடலேறுதல் போன்றன காளையர் தம் சிறந்த பண்பாட்டினைக் கூறுகின்றன. உடன்போக்கு என்பது நல்ல பண்பாட்டின் மாற்றுக் கூறாயினும் அதுவும் அன்றைய சமூகத்தின் பண்பாட்டுக் கூறாகவே அமைந்திருந்தது. ஓர் ஆடவன் தன் காதலின் தின்மையைக் காட்ட, ஊரரது அனுதாபத்தைப் பெற்று அவர்கள் மூலம் தம் காதலை நிறைவேற்ற மடலேறுதல் ஒரு உத்தியாகும். இது, குறிஞ்சித் தினைக்குரிய பண்பாடாக

''ஏறிய மடல் திறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே''[6]

ஐந்திணையுடன் கைக்கிளை பெருந்திணையையும் அகத்திணையாக ஒரோவழி கொள்ளுவர். இதுபோன்று பர்மாவிலும் பெண்ணை அடைய புல்லாங்குழலோ, பிடிலோ வாசித்து அப்பெண்ணை அழைத்துச் செல்லும் கூறுபாடு உள்ளதாக அறியமுடிகின்றது.[7]

அகம் ஐந்திணைக்குரிய இடமும் பொழுதும் முதற்பொருள் எனவும் தொழில், உணவு, புள், பறை போன்ற இன்ன பிற கருப்பொருள் என அவற்றுள் பிரிவு வரையறைகளும் அமைந்து அன்றைய பண்பாட்டுக் கூறுகளை நமக்கு உணர்த்துகின்றது.

தலைவனோ, தலைவியோ தன் துணையைக் காணத் தூது விடுதல் இன்றுபோல் அன்றும் இருந்தமை அறிய முடிகின்றது. 'வினையே ஆடவர்க்குயிரே' என்பதற்கு இணங்க அன்றைய ஆடவன் தன் வீரத்தைக் காட்டியே மணம் செய்ய இயலும். வீரம் வாய்ந்த ஆடவனையே அன்றைய மகளிர் விரும்பவும் செய்தனர். இவையெல்லாம் தொல்காப்பியம் நமக்குத் தரும் செய்திகளாகும்.

புறப் பண்பாடு

அகத்தில் காதல் திறம் பேசப்பட்டது போல புறத்தில் வீரத்தைப் பற்றிப் பேசப்படுகின்றது. சமுதாயத்தில் உள்ள எல்லோருக்கும் புற வாழ்க்கையில் பங்கு உண்டு என்கின்றார் பொன்முடியார் என்னும் பெண்பாற் புலவர்.

'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே

வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறு வாளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே'[8]

என எல்லோர் செயல்பாடுகளையும் கூறுகின்றது ஒரு புறப்பாடல்.

போர் முறையும், எடுத்தோம் தொடுத்தோம் என்று இல்லாமல் நிரைகவர்தல், நிரைமீட்டல் முதலான வெட்சி, கரந்தை,வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை, பாடான், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்னும் பன்னிரு புறத்திணைகளுக்கு உட்பட்டே போரும் நடந்தது. அன்றைய போர் அறநெறிப் போராகவே அமைந்திருந்தது. மாற்றான் வீரமும் மதிக்கப்பெற்றது. இவையெல்லாம் அவர்களது பண்பாட்டுச் சிறப்புகளாகும்.

சங்ககாலப் பண்பாடு

இரப்போர்க்கு இடுவதும், எல்லோரிடமும் இனிமையாகப் பேசுவதும், இயன்றவரை பிறர்க்கு உதவுவதும், கொள்கையும் மானமும் கெடின் உயிரை விடுவதும் பண்பாட்டுக் கூறுகள் என ஞா. தேவநேயன் கூறுவார்.[9] இக்கருத்துக்களை உள்ளடக்கியனவாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. சங்க இலக்கியம் முன் சொன்ன அக, புற பண்பாட்டு நிலைகளை உடையதாகும். அகம், புறம் என்ற இருபக்கக் காட்சி இணையும் மாட்சியே வாழ்வு. சங்க இலக்கியம் நமக்குப் பல பண்பாட்டுக் கூறுகளைக் கூறுகின்றன. அதனுள் ஒன்றே ஈதல் இசைபட வாழ்தல். அதுவே உயிருக்கு ஊதியம் என இயம்புகின்றது.

'காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களோடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே'[10]

என தொல்காப்பியம் வாழ்வின் இலக்கைக் கூறும்.

ஏதோ பிறந்தோம், உண்டோம், வாழ்ந்தோம், இருந்தோம், இறந்தோம் என்றில்லாமல், குறிக்கோளோடு வாழ்தல் வேண்டும். வாழ்வின் நோக்கு யாது? இரு பாலாருக்கும் எது உயிர்? உயிர் வாழ்தல் யாங்ஙனம். விடை பகருகின்றது குறுந்தொகைப் பாடல் ஒன்று.

' வினையே ஆடவர்க்கு உயிரே; வாணுதல்
மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர்'[11]

சுருக்கமாக நிறைந்த கருத்தைக் கூறும் வாழ்வியல் உயிர்த்தொடராக இதுஅமைகின்றது. நால்வகைப் பொருளையும் வினை எனும் சொல் குறிக்கின்றது. நால்வகைப் பொருளயும் அடைதலே அன்றைய பண்பாட்டில் நோக்கம். தானே முயன்று பொருளீட்டும் பண்புடையவர் அந்நாளைய மக்கள். தம் முன்னோர் தேடிவைத்த பொருளை எண்ணுவது இல்லை. இதனால்

திருமணத்தை முன்வைத்துப் பொருள்வயிற் பிரிந்து சென்றனர். தான் தேடிய பொருள் இல்லாமல் இருந்தல், இரத்தலைவிட இழிவு எனக் கருதினர். இதனை,

'உள்ளது சிதைப்போர் உளரெனப்படார்
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு'[12]

என்ற குறுந்தொகைப் பாடலால் அறியலாம்.

புறநானூற்றின் 182 ஆம் பாடல் சங்கத் தமிழ் மக்களின் பண்பாட்டுச் சிறப்பின் உயர்வை நமக்கு நன்குணர்த்தும் தகைமையது.

'உண்டா லம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்த மியைவ தாயினும் இனிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்'[13]

புகழ் வருமாயின் உயிரையும் கொடுப்பர். யார்? தமிழர். பழி வருமெனின் இந்த உலகமே தருவதாயினும் அதனை ஏற்கமாட்டார். யார்? தமிழர். பிறருக்குக் கொடுத்து உதவும் பழக்கம் பண்டை மக்களிடம் இருந்தது. தம் வீட்டிற்கு வந்த விருந்தினருக்கு ஈசல் பொரியலும், புளியஞ்சோறும், கள்ளும் அளித்து விருந்தளித்த செய்தி சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை போன்ற சங்க நூல்களில் காணப்பெறுகின்றது. அகநானூற்றுப் பாடல் மூலம் திருமண விருந்து எப்படி அமைந்தது என்பதை அறிய முடிகின்றது. பசியறிந்து அதற்குத் தக உணவளிப்பதே விருந்தாகும். அந்த விருந்தோம்பலில் சங்ககால மக்கள் சிறந்து விளங்கினர்.

சிலம்பும் மேகலையும்

சிலப்பதிகாரம் சங்க காலத்திலிருந்து சற்று மாறுபட்டு அமைகின்றது. கால மாறுபாடுகளுக்குத் தக சமுதாயமும் மாறுதல் அடைந்துள்ளது என்பதற்கு இதுவே சான்று. சங்க இலக்கியத்தில் இயற்கையை வணங்கிய மக்கள் சிலப்பதிகாரத்தில் சற்று மாறுதலான வணக்கம் உடையவராக உள்ளனர். திங்களையும் ஞாயிறையும் ஒருபுறம் வணங்கினாலும், சிவன் திருமால் வணக்கமும் சிலம்பில் இடம்பெறக் காணலாம்.

விருந்தோம்பல் எக்காலத்திலும் சிறப்பாகக் கருதப்பட்டு வந்துள்ளது. கண்ணகி தான் கோவலனைப் பிரிந்து இருப்பதால் விருந்தினரை உபசரிக்க இயலவில்லை எனக் கூறுகிறாள்.

'அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பினும்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை'[14]

என வரும் வரிகளால் விருந்தின் சிறப்பு, எப்படி விருந்தளித்தல் வேண்டும் என்பன அறிய இயலுகின்றதோடு பண்டைய பண்பாட்டு முறைகளும்

தெரியவருகின்றது. மணிமேகலையும், 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என உணவின் பெருமையைக் கூறுவதோடு, கதைத் தலைவி மணிமேகலை அமுதசுரபி மூலம் பசித் துன்பத்தைத் தீர்க்க முயல்வதும் இதனையே உறுதிப்படுத்துகின்றது.

கம்பராமாயணம்

கம்பராமாயணம் குடும்பநிலை, அரசநிலை, அறநிலை, தர்மநிலை போன்ற பல நிலைகளிலுள்ள பண்பாடுகளைக் கூறுகின்றது. போர்க்களப் பண்பாட்டினைப் பல இடங்களில் காணலாம். வாலியுடன் மறைமுகமாகப் போர் செய்த இராமன், இராவணன் போர்க்களத்தில் நிராயுதபாணியாக நிற்கும்போது 'இன்று போய் நாளை போருக்கு வா' எனக் கூறி அனுப்புகின்றான். இதில் பண்பாட்டு மாற்றம் காணப்படுகின்றது. இதனை மீறல் என்பாரும் உண்டு, தர்மம் என்பாரும் உண்டு.

அடுத்த நாள் கடனாளியாக எழுவதைக் காட்டிலும் இன்று பட்டினியாகப் படுக்கைக்குச் செல்வதே மேல். இது பழமொழியே ஆயினும் அவ்வக்கால மக்களின் பண்பாடே இலக்கியமாக மலர வாய்ப்பு அதிகம். கண்ணதாசனும் வாங்கிய கடனை ஒரே தவணையில் தீர்த்துவிடு இல்லாவிட்டால் வட்டி உன் தலைமுறைக்கும் தொடரும் எனக் கூறியுள்ளார். இவையெல்லாம் கடன்படுபவரது துயரத்தைக் குறிப்பன.

இலங்கை மீது இராமன் போர் தொடுத்துள்ளான். மந்திரிகள், கும்பகர்ணன் போன்றோர் சீதையை விட்டுவிடு அதுவே நல்லது எனகின்றனர். ஆனால் இராவணனோ ஆசையை அடக்கமுடியாமல், மானத்தை விடமுடியாமலும் துன்புறும் நிலையைக் 'கடன் கொண்டான் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்கின்றார் புலவர். கடன் வாங்கி காலம் கழிக்கும் பண்பு, நல்லதல்ல என்ற பண்பாடு இராமாயண காலத்திலேயே இருந்தமை அறியலாம்.

பண்பாட்டில் பெண்கள்

வினையே ஆடவர்க்கு உயிரே என புறச்செயல்கள் ஆண்களுக்கு ஒதுக்கப் பட்டது போல, குடும்பத்து அகச்செயல்கள் பெண்ணுக்கு ஒதுக்கப் பெற்றுள்ளது. ஒரு குடும்பம் பெண்ணால்தான் சிறக்க முடியும் என்பதை வீடில்லா பெண்ணிற்கும், பெண் இல்லா வீட்டிற்கும் சிறப்பு இல்லை என்னும் முதுமொழி உணர்த்தும். இத்தகைய பெண் அன்று தொட்டே மிகச் சிறந்த, உயர்ந்த இடத்தை சமுதாயத்தில் பெற்றிருந்தாள். பெண் இல்லாத குடும்பமோ சமுதாயமோ இல்லை. இதை மெய்ப்பித்தல் போலவே ஒரு ஆணுக்குக் கல்வி அளித்தல் அவன் ஒருவனுக்கு மட்டுமே உரித்தாகும். ஆனால் ஒரு பெண்ணுக்குக் கல்வி கற்பிப்பது ஒரு சமுதாயத்திற்குக் கல்வி கற்பிப்பதற்குச் சமமாகும். உலகப் பொருட்கள் யாவையும் பெண்மைக்கே உருவகம் செய்யப் பெறுகின்றது. பூமியைப் பெண்ணாக உருவகம் செய்து சிறப்பித்த நாடு பாரத நாடு.

குடும்பப் பொறுப்பு பெண்களுக்கே அதிகம். 'சேர்த்தப் பணத்தைச் சிக்கனமாகச் செலவு செய்து ... அவங்க ஆறை - நூறாய் ஆக்கிடுவாங்க' என பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் பாட்டும் இதனைத்தான் நமக்கு உணர்த்தும். கணவன் வரவு அறிந்து செலவு செய்யும் திறன் பெண்களுக்கு அவசியம் தேவை. முன்னேறுகின்ற ஒவ்வொரு ஆணின் பின்னாலும் ஒரு பெண் இருக்கின்றாள் என்னும் சொல் எத்தனையோ உண்மைகளை உள்ளடக்கியதாகும்.

பெண் நினைத்தால் ஓர் ஆணை ஆக்கவோ முடியும். கற்பு பெண்ணுக்கு மட்டும் உரியது அல்ல. அது ஆணுக்கும் உரியதே. ஆயின் இங்கு, 'கற்பு எனப்படுவது சொற்றிறம்பாமை'[15] என்னும் பாடலடியால், கற்பில் சிறந்தவள் - கணவன் சொல்லுக்கு மாறுபடாதவள் என்னும் பொருளைக் கொள்ளலாம். பேச்சுரிமையினால் கருத்துப்போர் புரிந்தாலும் கணவனது முடிவிற்குக் கட்டுப்பட்டமையால் அன்றைய சமுதாயம் பிரச்சினைகளற்ற சமுதாயமாக விளங்கியது.

பெண்களுக்கு அன்றைய சமுதாயம் சில கட்டுப்பாடுகளை விதித்திருந்தது. அது எத்துனை நன்மை பயப்பன? என்பதை இன்றைய சமுதாயச் சீரழிவினால் தெரிய முடிகின்றது. 'கணவனின் தவறுக்குக் கூட மனைவிதான் பொறுப்பு ஏற்க வேண்டிய நிலையில் உள்ளாள்' என காந்திஜி, கஸ்தூரிபாய் பற்றிக் கூறும்போது ஒருமுறை கூறியுள்ளார். கணவன் மட்டுமல்லாது குழந்தைகளின் பண்பாட்டிற்கும் பெண்ணே மூலாதாரமாக உள்ளாள்.

ஆணுக்கு இல்லாத பூப்புனித. நீராட்டுவிழா, புனிற்று மகளிர், கலந்தொடா மகளிர், கைம்மை மகளிர், உடன் மாய்தல் போன்றன பெண்ணுக்குச் சிறப்பளிப்பதோடு அது அவர்களைக் காத்துக்கொள்ளும் கருத்துடனும் அமைத்துக் கொள்ளப்பட்டனவாகும். மங்கல விழாக்களுக்கும், மங்கலச் செய்திகளுக்கும் பெண்ணே உதாரணம் காட்டப் பெற்றாள். அன்றைய சமூகம் பெண்ணுக்கு உயர்ந்த மதிப்பு கொடுத்திருந்தது.

பெண்களின் உடலில் ஏற்படும் நன்னிமித்தக் குறிகளையே இலக்கியங்கள் பகருகின்றன. ஆண்களின் உடலில் ஏற்படும் மாற்றங்களை நன்னிமித்தமாகக் கொண்டதாக எங்கும் சான்றில்லை.

'சுரிவளைப் பொலிந்த தோளுஞ் செற்றும்'[16]

என்னும் அடியில் பெண்களின் தோள் செறிதலும்,

'பூங்கண் இடம் ஆடும் கனவும் திருந்தின'[17]

என்னும் அடியால் கனவு திருத்துதலும்,

'இறந்த கண் ஆடும் இடம்'[18]

என்னும் அடியால் கண் இடனாவதும்,

'நுண்ணோர் புருவத்த கண்ணும் மாடும்
மயிர்வார் முன்கை வளையுஞ் செறூஉம்'[19]

என்னும் வரிகளால் வளை செறிதலும் கூறப்படுகின்றன.

கண் துடித்தலில் பெண்களுக்கு இடக்கண் துடிப்பது நன்மை பயக்கும் என்ற செய்தி பல இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகிறது.

'கண்ணகி கருங்கணு மாதவி செங்கணும்
உண்ணிறை கரந்தகத் தொளித்து நீருகுத்தன
எண்ணுமுறை யிடத்தினும் வலத்தினும் துடித்தன'[20]

இந்திரவிழவூரெடுத்த காதையில் விழாவின்போது கோவலன் மாதவியை விட்டுப் பிரிந்து கண்ணகியிடம் செல்லப் போகின்றாள் என்பதை இது சூசகமாகத் தெரிவிக்கும் செய்தியாக உள்ளது. இதுபோன்று அனுமன் இலங்கை சென்றபோது சீதைக்கு இடக்கண் துடித்ததையும், பாண்டியன் நெடுஞ்செழியன் தவறிழைத்தபோது கோப்பெருந்தேவிக்கு வலக்கண்ணும் துடித்துப் பின்னர் நிகழப்போவதை முன்னரே அறிவிக்கும் நிமித்தக் கூறாக அமைந்தது. இது போன்று மட்டுமல்ல இன்றைய சமுதாயப் பண்பாடாகவும் அமைந்து விளங்குகின்றது. காகம் கரைதல், கண் துடித்தல் போன்றவற்றிற்கு இன்றும் பலன் பார்த்துச் செயல்படுவோர் உள்ளனர்.

திருமணம் என்பது புனிதமானச் சடங்கு. ஒருவனும் ஒருத்தியும் மனம் ஒன்றி உள்ளம் கலப்பது ஆகும். ஒருவன் ஒருத்தியாய் தனக்கு உரிமையானதை பிறர்க்கு விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு இல்லாதவராய் இருந்தனர். இதனைக் கம்பனிலும் காண இயலுகின்றது.

'இந்த இப்பிறவிக்கு இரு மாதரைச்
சிந்தையாலும் தொடேன் என்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்'[21]

எனக் கூறுவதை அறியலாம்.

கணவன் இருக்கும் இடமே மனைவிக்கு கோவில் என்னும் பண்பாடு அன்றே வளர்ந்து இருந்தது. கம்பனில் சீதை இராமனிடம் 'நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு' என்று கூறும்போது இந்நிலை நன்கு விளங்கும்.

முற்காலத்தில் பெண்கள் வீட்டைவிட்டு வெளியே இறங்காமலும் உலக அறிவு இல்லாமலும் கணவனே கண்கண்ட தெய்வமாய் இருந்தனர் என்பதற்குச் சிலப்பதிகார கண்ணகியும் (வண்ணச் சீரடி மண்மகள் அறிந்திலள்) இராமாயணத்துச் சீதையும் (காடு வந்துற்றதா) நமக்குச் சான்றாக உள்ளனர். ஆனால் இன்றோ இந்நிலை முற்றிலும் மாறியுள்ளது.இது சூழ்நிலை காரணத்தால் பண்பாட்டில் ஏற்பட்ட வளர்ச்சி எனலாம்.

மலரணியும் பண்பாடு

மலர் மங்களத்தைச் சுட்டுவது. பெண்களோடு தொடர்புடையது. இறைவனுக்கும் பெண்ணுக்கும் மலர் சூட்டுவது இயல்பு. மலருக்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் மிகுந்த நெருங்கிய தொடர்புள்ளது. அரசனின் அடையாளப் பூவாக வேப்பம்பூ, பனம்பூ போன்றன இருந்தன. போர்ப்பூ (வெட்சி, கரந்தை...வாகை) அடையாள மாலை, கண்ணி, தார் போன்றன புற

வாழ்வோடு தொடர்புடையதாக இருந்தது. மணமக்களை நெல்லுடன் மலர் தூவி வாழ்த்தியமை,

பெற்றோர் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி'[22]

என்ற அடிகளால் அறியலாம். மணமான பெண்டிர் மட்டுமே மலர் அணிவர்.

மணவறை பூக்களால் அலங்கரிக்கப் பெற்றமை 'நீல விதானத்து நித்திலப் பூம் பந்தர்க் கீழ்'[23] என்னும் தொடரால் அறியலாம்.

தமிழ் மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரை எல்லாச் சடங்குகளிலும் மலர்கள் இடம் பெற்றுள்ளன. அதிகமாக மலர்கள் மங்கலக் குறிப்பினைத் தருவதாகவே உள்ளது.

விழாக்கள் காட்டும் பண்பாடு

பலர் ஒன்றுகூடி சந்திக்கும் ஒரு வாய்ப்பினை நல்குவது விழாக்களே. சோர்வுற்றவர்களை அச்சோர்வும், நலிவும் போக்கி; இன்பம், மலர்ச்சி, புத்துணர்ச்சியும் ஊட்ட வைப்பது விழாக்களே; விழாக்கள் நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்பட்ட சடங்குகளால் நடத்தப் பெறுவன. குடும்ப விழாக்கள், சமூக விழாக்கள், நாட்டு விழாக்கள் என அவற்றை வகுத்து தொகுத்து விரிக்கலாம். ஒரு சமுதாயத்தின் நடைமுறை வளர்ச்சி, வீழ்ச்சி, மறுமலர்ச்சி போன்றவற்றை அச்சமுதாய விழாக்கள் மூலம் அறிய இயலும்.

சடங்குகளே விழாக்களின் அடிப்படை ஆயினும் சடங்குகள் என்பன, வாழ்வியல் அடிப்படை நிகழ்ச்சிகள் (பிறப்பு, இறப்பு, காதணி, பூப்புணிதல், திருமணச் சடங்குகள்) ஆகும். விழாக்கள், சமுதாயம் மற்றும் சமயம் சார்ந்த மந்திரங்கள், மீவியல்பாற்றல் போன்றவற்றுடன் தொடர்புடையன. விழாக்கள் ஒரு சமுதாயத்தை ஒற்றுமையுடன் செயல்பட வைக்கும் திறனுடையது. விழாக்கள் மகிழ்ச்சி வெளிப்படுத்துவன. ஆனால் சடங்குகள் பலவிதக் கட்டுப்பாடுகளைக் கொண்டவை.[24] விழாக்கள் அறிவூட்டுவன, சமுதாயம் மற்றும் சமயத் தொடர்பும் உடையன.[25]

பண்டைத் தமிழ் இலக்கியங்கள் விழாவினை சாறு,[26] விழா,[27] விழைவினை விழவு[28] என அழைத்தன. வேனிற்காலமே விழாவிற்குரிய காலமாகக் கொள்ளப்பட்டது. பண்பாட்டின் அடிப்படையில், நாடு, இனம், மொழி, குழு ஆகியவற்றின் அடிப்படையில் விழா மரபுகள் வேறுபட்டு விளங்குவதுண்டு. பண்பாட்டில் நிகழும் மாற்றங்களை விழா மரபுகளில் ஏற்படும் மாற்றங்கள் மூலம் அறியலாம். ஒரு சமூகத்தில் நடக்கும் விழா மரபுகளைக் கொண்டு அந்த சமூகப் பண்பாட்டினை அறிந்துகொள்ள இயலும்.

சிலம்புகழி நோன்பும் - மெட்டியும்

சிலம்புகழி நோன்பு பற்றி நற்றிணையின் 299-ஆம் பாடலும், ஐங்குறுநூற்றின் 399-ஆம் பாடலும், அகநானூற்றின் 385-ஆம் பாடலும் நமக்கு உரைக்கின்றன.

மணவினை நிகழும்போது இச்சடங்கு நடத்தப் பெறும். மணமகள் இளம்பருவத்திலிருந்து தான் அணிந்துள்ள சிலம்பினைக் கழற்றுதலே இதன் நோக்கம். இக்காலத்தில் 'கருமணி கழித்தல்' என்னும் சடங்கு நிகழ்த்தப் பெறுகின்றது. சிலம்புகழிஇயும், வதுவையும் தலைவியின் வீட்டிலேதான் நிகழும். இன்றும் திருமணம் பெண் வீட்டிலோ அல்லது பெண் வீட்டாராலோ நடத்தப்படுதல் காணலாம். உடன்போக்கு நிகழ்ந்த காலத்து மணமகன் வீட்டில் நிகழலும் உண்டு.

சங்க காலத்து சிலம்பு கழிதல் போன்று, தற்போது மண நாளன்று மெட்டி எனும் ஆபரணம் அணியப்படுகின்றது. பெண்ணின் இருகால், பெருவிரலை அடுத்துள்ள விரலில் இஃது அணியப் பெறும். மணமான எல்லா பெண்களின் காலிலும் இந்த மெட்டியைக் காண முடியும். தான் மணமானவள் என்பதைப் பிறருக்கு அறிவிக்கும் மூகத்தான் இஃது அணியப்பெறுகின்றது என்பது ஒரு கருத்தாயினும், இவ் அணியே பிற ஆடவரது தவறான எண்ணத்திலிருந்து அவளுக்கு காப்பு அளிக்கின்றது என்ற கருத்தும் நோக்கத் தக்கது. இந்த மெட்டியணிவித்தலைச் சிலம்பு கழிஇ நோன்பின் பண்பாட்டு மீறல் எனக் கூறுவாரும் உளர். மெட்டி அணிவிக்கப்படுகின்றது . ஆனால் சிலம்பு நீக்கப்படுகின்றது.

இன்று, மன முறையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. சங்க நூலான அகநானூறு வதுவை மணத்தைக் கூறும். சிலம்பு, ம்ாமுது பார்ப்பாள் மறைவழி காட்டத் தீ வலஞ்செய்ததைச் சொல்லும். இன்றைய மண முறையோ பார்ப்பான், பெரியோர், பெற்றோரால் நடத்தப்பெறுகின்றது.

இன்றைய நிலையும் நாளையத் தேவையும்

பண்பாடு மக்களை ஒன்றுபடுத்தும் ஆற்றலுடையது. ''மக்களுடைய பண்பாடே அதாவது அவர்கள் பொதுவாகக் கொள்ளும் கருத்துக்களும் வாழ்க்கை நிலையுமே அவர்களை ஒன்றுபடுத்துகிறது' என்பர் ரூத் பெணிடிக்ட்டு என்னும் அறிஞர். இத்தகைய ஒன்றுபடும் நிலை இன்று நமக்கு மிகத் தேவையாகின்றது. அதனை நமக்கு அளிப்பது நம் பண்பாட்டுச் சிந்தனைகளே. இதனைத்தான் பாரதி 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்றான்.

பண்டைய பண்புகள் இன்று பல நிலைகளில் மாற்றமடைந்துள்ளது. இதன் காரணம் கால மாற்றமேயாகும். இன்றைய இல்லற வாழ்வு பல்வேறு சிக்கலைக் கொண்டு அமைகின்றது. பொருளாதாரச் சிக்கல், கூட்டுக்குடும்பச் சிக்கல், தனிமனித நேயம் போன்ற இன்ன பிற சிக்கல்கள் உருவாக ஏதுவாக உள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு, அன்பும் அறனும் இல்லற வாழ்விற்கு மிகத்தேவை என்பது உணரப்படுகின்றது. கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு செயல்பட்டாலன்றி வாழ்வு சுவைக்காது என்பது இன்றைய நிலையில் எல்லோரும் தெரிய வேண்டியதாகும். சாதி, சமயப் பிரிவிற்கு இனி இடமில்லை. உழைத்தால் அன்றி உயர முடியா நிலை இன்று காணப்பெறுகின்றது.

வாழ்க்கை என்பது மெல்லிய கொடி, வாழ்க்கை இன்பங்கள் அந்தக் கொடியிலே மலரும் மலர்கள். கனிவு எனும் பனிநீர் இல்லாமல் இக்கொடி மலர்வதில்லை. அன்பு என்பது இரண்டு மனிதரின் உள்ளத்தில் தனித்தனியாக இருப்பினும், அவை இணைந்தால் மட்டுமே அக்கனிவு உலகத்தார் கண்ணுக்குத் தெரியவருகின்றது.

முயற்சி என்னும் வெற்றியையே தரும் (Efforts never fail), முன்னேற விரும்பும் ஒருவனுக்கு சோம்பல் ஒரு தடையாகும். வாழ்க்கை என்பது ரோசாக்கள் அடங்கிய படுக்கை அல்ல (Life is not a bed of Rose) எனவே உழைப்பு என்ற மூலதனம் எல்லோருக்கும் தேவையாகின்றது. உழைப்பினால் உயர்ந்தவர் பலரை இன்றைய சமுதாயம் அடையாளம் காட்டி நிற்கின்றது. இன்று என்பது இன்னும் சிறிது நேரத்தில் முடிந்து விடும். நாளை என்பதுதான் நாம் எதிர்கொள்ள இருப்பது. எனவே, அது செம்மையாய் அமைய நல்ல பண்புகளை உருவாக்குதல் வேண்டும்.

வருங்காலம் இளைஞர், குழந்தைகள் கையில் உள்ளது எனவே, அவர்கட்கு நல்ல கலை, கலாச்சாரம், ஒழுக்கம், கல்வி, உடல்நலம் போன்ற இன்ன பிற பண்புகள் ஏற்படி நாம் வழிவகை செய்தல் வேண்டும்.

குழந்தைக்குச் சொத்து சேர்த்து வைப்பதிலும் நல்ல ஒழுக்கத்தைக் கற்பித்துக் கொடுத்தல் வேண்டும். இலக்கியம், கலை, கலாச்சாரம் பற்றிய நிலையிலும் நல்லறிவினைப் புகட்டல் வேண்டும். பழையன கழிதலும், புதியன புகுதலும் கால வழுவன்று. நல்ல பண்புகள் எக்காலத்தும் மாற்றமடைவதில்லை.

தமிழர் தம் நாகரீக வரலாற்றை முழுமையாகக் காணவேண்டுமாயின் தமிழ் இலக்கியங்கள் முதன்மையாகவும் முழுமையாகவும் உதவும். ஏனெனில் பிற மொழிகளும் இலக்கியங்களும் இடைக்காலத்தில் தோன்றியனவே ஆகும். தொல்காப்பியம் முதலான சங்க நூற்களுக்கு முற்பட்ட இலக்கியமோ மொழியோ வேறு எங்கும் இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை ஆகும். சமயங்களும் மதமும்கூட பிற்கால வளர்ச்சியே. எனவே, தமிழர் பண்பாடே மனித நாகரீகத்தின் முதற் பண்பாடு எனலாம்.

பண்டுதொட்டே தமிழர் பண்பாடு மிகச் சிறப்பாக அமைந்து விளங்குகின்றது என்பதை அறிய முடிகின்றது. நல்ல பண்பாட்டு மரபுகள் என்றும் மீறப்படுதல் இல்லை. நம் நாட்டுக் கலைகள்கூட பண்பாட்டைப் பிரதிபலிப்பனவே. இதை நாமும் நாடும் எந்நாளும் போற்றி உய்வுற வழிவகை வகுப்போம்.

குறிப்புகள்

1. தொல்காப்பியம், உரியியல், செய்யுள் 1.
2. புறநானூறு, 197.
3. கலித்தொகை, 133-8.
4. நற்றிணை, 355-7.
5. திருக்குறள், 580.
6. தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுள்-54.
7. அழகிரிசாமி, கு., ஜீவப்பிரவாகம், உலாமடல், ப. 77.
8. புறநானூறு, 312.
9. பண்டைத் தமிழ் நாகரீகமும் பண்பாடும், ப. 8.
10. தொல்காப்பியம், கற்பியல், செய்யுள்-51.
11. குறுந்தொகை, 135, 1-2.
12. குறுந்தொகை, 283.
13. புறநானூறு, 182, 1-6.
14. சிலப்பதிகாரம், 2: 85-87.
15. கொன்றைவேந்தன், 14.
16. குறுந்தொகை, 260-3.
17. ஐந்திணை எழுபது, 41.
18. திணைமாலை நூற்றைம்பது, 80.
19. ஐங்குறுநூறு, 218-1-2.
20. சிலப்பதிகாரம், 5: 237-239.
21. கம்பராமாயணம், சுந்தரகாண்டம், சூளாமணிப்படலம், 34.
22. அகநானூறு, 86-14-17.
23. சிலப்பதிகாரம், 1-49-53.
24. "A rite is an established, prescribed or customary form of religious or other. Solemn Practice'. -The Random House Dictionary of English Language, p. 241.
25. "Festivals have an educational and Social as well as religious character'. -Encyclopaedia Britannica, Vol.9. p. 125.
26. குறுந்தொகை, 41-2.
27. கலித்தொகை, 83-14.
28. அகநானூறு, 115-1.

பண்பாடு - ஒரு வரையறை

டாண்யா நடராசன்

பண்பாடு என்பது ஒரு மனிதனைப் பற்றியது; மனித சமுதாயத்தைப் பற்றியது; பண்பாடு ஒரு கோட்பாடாக வளர்க்கப்பட்டு வருவது; நடை முறை அளவில் பண்பாடு அன்றலர்ந்த மலராகப் புத்துணர்ச்சியையும், அழகுணர்ச்சியையும் ஊட்டுவது; ஆக்கவும் அழிக்கவும் வல்லதான ஆற்றலுடையதாக இன்று பண்பாடு மனித சமூகத்தில் ஊடுருவிக் கிடக்கிறது.

நிலப் பண்பாடும் மனப் பண்பாடும்

விலங்கின வாழ்க்கை முறையிலிருந்து மனிதன் என்று விலக ஆரம்பித்தானோ அன்றே மனிதன் தன்னை வளர்த்துக் கொள்ளும் நோக்குடையவனாகிறான். என்று பயிர்த் தொழிலைக் கண்டுபிடித்தானோ அன்று முதலே தன் வாழ்வைப் பண்படுத்திக் கொள்ள முனைந்து விட்டான். கல்லும் முள்ளும் நிறைந்த நிலமாக, புதரும் வலிமையும் கொண்ட பூமியாக, பாறைபோல் இறுகிப் போயிருக்கும் நிலத்தைத் தோண்டிப் பண்படுத்துவது எவ்வளவு கடினமோ அவ்வளவு கடினம் ஒரு மனிதன் பண்படுவதிலும் உண்டு.

ஒவ்வொரு மனிதனுடைய சிந்தனையும் புறச் சூழ்நிலைகளுக்குட்பட்டே பண்படுத்தப்பட்டு வருகிறது. பயிர்த் தொழிலுக்காக நிலத்தை ஒவ்வொரு அறுவடைக்குப் பின்னும் மீண்டும் மீண்டும் ஆழ உழுது உரமிட்டுப் பண்படுத்துகின்றான் மனிதன். அதே மனிதன் தன் இன்ப வாழ்வுக்காகத் தன்னைச் சுற்றியுள்ள புற நடவடிக்கைகளை மேன்மேலும் திருத்தம் செய்வதன் மூலமாகத் தன் சமூகத்தைப் பண்பாடு உடையதாக மாற்றுகின்றான். காலந்தோறும் மாறிவரும் சமூக வாழ்க்கைக்கு மரபுவழி வந்த வாழ்க்கை நெறிமுறைகள் பொருந்தி வராதபோது புதிய பண்பாட்டு ஒழுக்க நெறியைப் புகுத்த வேண்டிய நிலைமை ஏற்படுகின்றபோது, புதிய விதிமுறைகளைப் படைத்துக் கொள்கின்றான்.

மக்கள் சமுதாய வளர்ச்சியும் இயக்கமும் பற்றிய ஆய்வு ஒரு விஞ்ஞான ஆய்வாகவே மலர்ந்து விட்டது. விஞ்ஞான ஆய்வில் பௌதிகப் பொருள் அடிப்படையில் மட்டுமன்றி மனித வாழ்க்கை பற்றிய மதிப்பீடும் இன்று தனி ஒரு துறையாக ஆராயப்படுகிறது.

வரலாறும் பண்பாடும்

வீரவரலாற்று காலத்தில் (சங்ககாலம்) வீரமும், கொடையும் இலட்சியமாக இருந்தது. பக்தி இயக்க காலத்தில் (இடைக்காலம்) இறைநெறி பரப்புவதே இலட்சியம். அன்னியராதிக்க காலத்தில் அரசியல் விடுதலையே குறிக்கோள். இன்றைய நூற்றாண்டில் இன்ப வாழ்வைத் தரும் பொருளாதார சமூக விடுதலையே பெருநோக்கம். ஒவ்வொரு வரலாற்று காலத்திலும் இலட்சியத்தை நோக்கிச் சென்று அடைவதற்காக மக்கள் வகுத்துக்கொண்ட நெறிமுறைகளையும் பண்பாடு என்று குறிப்பிடலாம். 'பண்பாடு' என்ற சொல்லின் இலக்கணத்தை வரையறுப்பதற்கு முன்னால் மனித வரலாற்றின் மதிப்பீடு நமக்குத் தேவை.

பண்பாட்டின் அடிச்சுவடுகள்

பழைய கற்கால வரலாற்றின் விலங்குகளின் மாமிசத்தைப் பச்சையாக உண்ட மனிதனை விடச் சுட்டு உண்ணக் கற்றுக் கொண்டவன் நாகரிக முடையவனாகிறான். மாமிசத்தைச் சுட்டு உண்டு ஆங்காங்கே அலைந்து திரிந்தவனை விடத் தமக்கென்று சில குகையிருப்பிடங்களைத் தேடிக் கொண்டவன் நாகரிகம் உடையவனாகிறான். குகை, பரண் போன்ற இருப்பிடங்களில் ஆடையின்றிப் பின் தங்கி வாழ்ந்தவனை விட இலை, தழை, மரவுரி போன்ற ஆடைகளால் உடம்பை மறைத்தவன் மேலும் நாகரிகச் சிறப்படைகிறான்.

மொழி

இவ்வாறு காலந்தோறும் வளர்ந்து வந்த நாகரிக அற்புதங்களுக்கிடையே மிகப் பெரிய அற்புதம் ஒன்று நிகழ்ந்தது. மனிதன் மொழி என்ற அழியாத புதையலைக் கண்டுபிடித்தான். மொழியைப் படைத்த மனிதன் எல்லா வகையிலும் நன்மையடைந்து வருகிறான். மொழி, பண்பாட்டை வளர்க்கும் ஒரு சிறந்த துணைக் கருவியாயிற்று.

நாகரிகம் – பண்பாடு

பண்பாடு, நாகரிகம் இரண்டும் வாழ்வின் அகமும் புறமுமாக இருப்பது. இவ்விரண்டு சொல்லுக்குமிடையே உள்ள பொருள் ஒற்றுமை என்ன? வேற்றுமை என்ன? என்று நாமறிந்து கொள்ள வேண்டியது அவசியம். அது மட்டுமன்றி நாகரிகத்திலிருந்து பண்பாடு தோன்றியதா? பண்பாட்டிலிருந்து நாகரிகம் தோன்றியதா? என்பது பற்றிய தெளிவும் நமக்குத் தேவை.

நாகரிகம்

மிகப் பழைய மனித வரலாற்றைப் பொறுத்த வரையில் நாகரிகத்திலிருந்து பண்பாடு தோன்றியிருக்க வேண்டும். நல்ல பண்பைப் பற்றியோ ஒழுக்கத்தைப் பற்றியோ, வாழ்க்கை நெறி முறையைப் பற்றியோ ஆதி மனிதன் அறிந்திருக்க வில்லை. ஆதி மனிதன் குழுக் குடும்ப அமைப்பு முறையில் வாழ்ந்தான். ஒவ்வொரு தனி மனிதனின் கண்டுபிடிப்பும்,

ஒவ்வொருவனின் செயல் திறமையால் உருவான உற்பத்திக் கருவியும் அனைவருக்கும் சொந்தமாக்கப்பட்டது. சேர்ந்து வாழ்ந்த அச்சமுதாய அமைப்பில் எந்தப் பொருளையும் சேர்ந்து அனுபவிக்கின்ற வாழ்க்கை நெறியைப் பின்பற்றியிருந்தான்.

சார்பொழுக்கங்கள்

நாகரிகம் பண்பாடு ஆகிய இரண்டும் எந்த ஒழுக்கத்திலிருந்து எந்த ஒழுக்கம் பிறந்தது? என்ற மயக்கநிலை நம்மை விட்டு நீங்க வேண்டும். ஒன்றையொன்று சார்ந்தே வளருகின்ற இருவேறு வளர்ச்சிகளாக இவை இருக்கின்ற காரணத்தாலேயே நமக்கு இப்படி ஒரு மயக்கம் ஏற்படுகின்றது. இந்த மானுட வரலாற்றுப் பரிணாமங்களை மனங்கொண்டு, சமூகவியல் அகராதி பண்பாட்டினை நான்கு வகைப்பட்ட வரலாற்றுப் பண்பாடாகப் பிரித்துக் காண்கிறது.


The historic stages in the evolution of their functions and institutions are indicated by shifts in emphasis of time and attention devoted to them in the order above indicated: From the lower, more primitive and physical, economic activities, through the intermediate reflective and controlling activiites, to the higher appreciative activiites - the later class awaiting full development upon the adequate development of the farmer.

This may be observed in the historic succession of types of human culture:

1. The savage or Primitive culture.
2. The medieval or feudal culture.
3. The modern or industrial culture. and
4. The contemporary, more world wide and comprehensive, more democratic culture.[1]

இந்தப் பிரிவுகளின்படி நமக்குத் தெரியவரும் உண்மை யாது? சமுதாய அமைப்பின் பின்னணியில் மக்களின் பண்பாட்டொழுக்கம் அழிவதும். அதுவே பின்னர் புதிய வடிவில் சிறப்புடன் தோன்றுவதும் அடங்கியிருக்கிறது என்பது நன்கு புலனாகும்.

உற்பத்திக் கருவிகள் நல்ல வளர்ச்சி கண்டபின், அரசு அமைப்புத் தோன்றியபின் சமயம், கலை, மருத்துவம் ஆகிய கலைகள் நல்ல வளர்ச்சி பெற்ற பின் 'பண்பாடு என்ற சொல்லால் வாழ்க்கை ஒழுக்க நெறி முறைகள் பேசப்பட்டன. அரசியல் அமைப்பு பல்கலைகளின் சிறந்த வளர்ச்சிக்கு வழி வகுத்தது. இதனால் மக்கள் தங்கள் புற வளர்ச்சியுடன் அக வளர்ச்சியையும் வளர்த்துக் கொண்டவர்களாயினர்.



நாகரிகம் என்பதும் பண்பாடு என்பதும் மானுடவியல் அறிஞர்களால் இணைத்துப் பேசப்படுகிறது. புற வாழ்க்கையமைப்பு வளர்ச்சி அடைகின்ற பொழுது அக வாழ்க்கை ஒழுக்கங்களும் சேர்ந்தே வளருகின்ற காரணத்தால் அவர்கள் அப்படிக் குறிப்பிடுகின்றனர். புற வாழ்க்கைக் கருவிகள் அகவாழ்வு நெறிகளையும், அக வாழ்வின் பண்பாடு புறவாழ்க்கைக் கருவிகளையும் வளர்த்துக் கொண்டே வருகின்ற பண்பையுடையது மனித சிந்தனை. பண்பாடும் ஒரு கலையாக இன்று வளர்க்கப் பட்டு வருகிறது.

நாகரிகம், பண்பாடு - சொல் மயக்கம்

ஆங்கிலத்தில் civilization, culture ஆகிய இரண்டு சொற்களிடையே மூன்றாவதாக 'Manners' என்ற சொல்லும் நாகரிகம் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அதேபோல், உடனிருக்கக் கூடியவர்களுடன் பழகத் தெரியாத ஒருவனை, முறையறிந்து உண்ணத் தெரியாதவனை 'நாகரிகம் இல்லாதவன்' என்றே நாம் குறிப்பிடுகின்றோம். நாகரிகம், பண்பாடு ஆகிய இரண்டு சொல்லின் பயன்பாட்டுக் குழப்பம் இதனால் ஏற்படுகின்றது. ஆழ்ந்து சிந்தித்தால் ஓர் உண்மை விளங்கும்.

ஒரு மனிதன் அன்றாட நிகழ்ச்சிகளின் பழக்கங்களையும் 'நாகரிகம்' என்ற சொல் குறிப்பிடப்பட்டு வருகின்றது என்பது விளங்கும்.

மானுடவியல் அறிஞர்களைப் போலவே, பக்குவப்பட்ட தனி மனிதனின் மன வளர்ச்சிப் பண்பை நாகரிகம் என்ற சொல்லினால் வள்ளுவரும் பேசுகின்றார்.

'பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்'[2]

சமூகவியல் அறிஞர்கள் நாகரிகத்தையும், பண்பாட்டையும் தனித்தனி வளர்ச்சிகள் என்று கொண்டார்கள். விஞ்ஞானம் வளர்ந்தது முதல், புறவளர்ச்சி கண்ட சமுதாய அமைப்பில் பண்பாட்டைப் பார்க்க முடிவதில்லை. பண்பாடு சிறக்கும் குழுவிடத்தில் (கிராமத்தினர், மலைப்பகுதி வாழ் மக்கள்) புறவளர்ச்சியைக் காண முடிவதில்லை. இப்படிச் சில நூற்றாண்டுகளாக முரண்பாடு நிலைமைகளைப் பார்த்த சமூகவியல் அறிஞர்கள், புறமலர்ச்சியை நாகரிகம் என்றும், அக அழகைப் 'பண்பாடு' என்றும் குறிப்பிட்டு இருவேறுபட்ட வாழ்க்கையை நமக்கு அறிவுறுத்தினர்.

பண்பு - பண்பாடு

தனியொரு மனிதனைப் பற்றிப் பேசுகின்றபோது 'இவன் நல்லவன்' என்றும், இவன் 'நல்ல பண்புடையவன்' என்றும் கூறுகின்றோம். ஒரு குறிப்பிட்ட குழுவை அல்லது குறிப்பிட்ட சமூகத்தைப் 'பண்பட்ட சமூகம்' என்றும் 'பண்பாடு தெரிந்த கூட்டம்' என்றும் குறிப்பிடுகின்றோம். தனிப்பட்டவனிடத்தில் நாம் பார்ப்பது பண்பு. குழுவிடம், சமூகத்திடம் பார்ப்பது பண்பாடு. பண்பாடு என்ற சொல் தனியொருவனுக்கு மேற்பட்ட பெரிய குழுத் தொடர்பான ஒன்று என்ற கருத்தை "The fact of culture - the fact that all societies have "a culture' - is a Universal is human social life. In this sense the concept helps to distinguish between human and non human social life.'[3] என்று கூறுவதன் மூலம் திரு ஜான் பெனட் அவர்கள் வலியுறுத்துவார்.

மனம் விரும்பாத ஒருவர் வீடு தேடிவந்து, அவரை வரவேற்றால் அது பண்பாடு என்று சொல்கிறோம். அந்தச் சூழலில் வரவேற்றவரை 'நல்ல பண்புடையவர்' என்று குறிப்பிடுவதில்லை. மாறாகப் 'பண்பாடு தெரிந்தவர்' என்றே பாராட்டுகிறோம்.

சமூகத்தைச் சார்ந்திருக்கின்ற ஒவ்வொரு தனி மனிதனுக்கும் இருக்க வேண்டிய நற்பண்புகள் இவையென்று வரையறுக்கப்படுகின்றது. இந்த நற்பண்புகள் தன்னைச் சார்ந்திருக்கின்ற ஏனையோர்க்கு நன்மை தருவதாக இருக்க வேண்டும் என்பது சமூக நோக்கமாகும். தனி மனிதன் மழை நீரைப் போலத் தெளிவான வாழ்வைப் பெற வேண்டும். மக்களுக்கு எதிர்கால நம்பிக்கையை ஊட்டவல்ல வளர்ச்சியை மனித சமூகம் காண வேண்டும். இவையிரண்டுக்கும் வழிவகுக்கின்ற நற்பண்புகளின் ஒட்டு மொத்தமான தொகுப்பைப் 'பண்பாடு' என்று சொல்லலாம்.

மக்களால் வரையறுக்கப்படுவது பண்பாடு. வரலாறு மக்களால் மாறிக் கொண்டிருப்பது போல் பண்பாடும் மக்களால் அவ்வப்போது புதுப்பிக்கப்படுகிறது. புகுத்தப்படுகின்ற புதிய பண்பாடு மக்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சியூட்டும் சக்தியுடையதாக இருக்க வேண்டும். மனித சமூகத்திற்குத் தீங்கிழைக்காத நல்ல விதிமுறைகளைக் கொண்டிருக்க வேண்டும். மக்கள் வளர்ச்சிக்கு நன்மை தராத பண்பாடு மக்களால் வரவேற்கப்படுவதில்லை. மாறாகத் துரத்தப்படுகிறது.

கதைகளும் பண்பாடும்

எழுதா இலக்கியமாய் இருந்து பின் எழுதப்பட்ட பாரத இராமாயணக் கதைகள் காலந்தோறும் வளர்ந்த பல்வேறு கிளைக்கதைகளின் சேர்க்கையோடு மிகப்பெரிய காப்பிய வடிவமாகிறது. புராணக் கதைகளுக்கு வரலாறு சொல்வது நோக்கமன்று. இலட்சிய உருவங்களுக்கு உதாரணங்கள் ஆகும்.

இராமாயணம்

குரங்கு முகத் தோற்றத்துடன் கொண்ட கிட்கிந்தா மலைவாசிகளைப் பற்றிய சரித்திரம் ஒருபுறம். இலெமூரியாப் பகுதியின் ஒரு சிறு பகுதியாக இருந்த ஈழ நாட்டின் (இலங்கை) ஒரு பகுதியை ஆண்ட இயக்கரி (இராக்கதர்கள்) கூட்டம் பற்றிய வரலாறு ஒருபுறம். அறிவிலும், அழகிலும், பண்பாட்டிலும் உயர்ந்து விட்டவர்களாக நகரப் பகுதிகளில் வாழ்ந்த தசரத மன்னன் நாட்டு வரலாறு மறுபுறம். இப்படிப் பல்வேறு நிலப் பகுதிகளில் பல்வேறு நிறமும் முக வடிவமும் கொண்டு வாழ்ந்த மக்களின் பல்வேறு பண்பாட்டு ஒழுக்க வாழ்வைப் பேசுவது இராமாயணம்.

இராமாயணம், மகாபாரதம்

இராமாயணக் கதை திராவிடருக்கும், ஆரியருக்கும் இடையே நடந்த தலைமை உரிமைப் போராட்டம் பற்றியது. பாரதக் கதை தனியுடைமை உரிமைப் போராட்டம் பற்றியது. இராமாயணப் போர் வலிமை, தலைமை பற்றிய போர் என்ற காரணத்தால் நிறமும் உருவமும் ஒரு பொருட்டாகக் கருதப்படவில்லை. எனவேதான் குகனை இராமன் சகோதரனாய் ஏற்றுக் கொண்டான். தசரத மன்னனுக்கு ஆயிரம் மனைவியர் என்று பேசப்பட்ட அதே கதையில் தான் இராமன் ஏகபத்தினி விரதனாய்ப் போற்றப்படுகிறான். இந்த முரண்பாடு ஏன்? பண்பாட்டு இடைவெளி நிகழ்ந்த காலக் கதைகளின் தொகுப்பு இராமாயணம் என்பது இதனால் விளங்கும்.


இராமாயணத்தில் சகோதரத்துவப் பண்பாடு போற்றியிருப்பதைப் போல் பாரதத்தில் போற்றப்படவில்லை. பாரதத்தில் இரத்த உறவு கொண்ட சகோதரர்களை ஒருவரை ஒருவர் அழித்துச் சொத்துடைமையை நிலைநாட்டிக் கொள்ளும் பண்பாட்டழிவின் தொடக்கத்தைப் பேசுகின்றது. அரசுரிமைப் பிரச்னை இராமாயணத்தில் பேசப்பட்டாலும், பாரதத்தில் காணப்படும் அரசுரிமைப் பிரச்னையோடு வேறுபட்டது. நாட்டெல்லையை விரிவுபடுத்திக் கொள்வதில் மிக்க கவனம் கொண்டதாக சொத்துடைமைப் பேராசையைப் பற்றிப் பாரதம் குறிப்பிடுகின்றது. புதிய வரலாற்றைத் தோற்றுவிக்கும் புதிய சரித்திர நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டது பாரதம்.

பண்பாட்டுச் சீரழிவின் துவக்கம் பாரத காலம்

பாரதக் கதை நமக்குச் சில வரலாற்றுண்மைகளைத் தெரிவிக்கின்றது. பொருள் சமத்துவமிழக்கின்ற பாண்டவர்கள் சுதந்திரமிழந்து அடிமைகளாகின்றனர். சகோதர பாசம் கௌரவர்களிடையே செத்துப் போகின்றது. நிலவுடைமைப் பிரச்னை ஏற்பட்ட முதல் கால கட்டத்திலேயே சகோதர பாசம் மறுக்கப்பட்டு விட்டது. மறுக்கப்பட்ட சகோதர பாசம் படிப்படியாக வளர்ந்துள்ளது. பொருளாதார வாழ்வை முன் வைத்து வளர்ந்த இந்தப் பிரிவினை உணர்வால் இன்றைய நூற்றாண்டில் சீரழிவுப் பாதை அமைக்கப்பட்டுள்ளது.

பண்பாட்டின் மூன்று கூறுகள்

பண்பாடு சிறக்க வேண்டுமாயின் சமத்துவ சமூகம் விளங்க வேண்டும். அந்த சமத்துவ வாழ்க்கையில் தான் சுதந்திர முழுமையை நாம் பெற்றிருக்க முடியும். அந்தச் சமத்துவ, சுதந்திர சமூக மண்ணில் தான் சகோதரத்துவம் பூத்துக் குலுங்க முடியும்.



இந்தப் பேருண்மையின் மையமாகத் திகழ்வதே பாரதக் கதையாகும். சமத்துவமில்லாத சூழ்நிலையில், சகோதர பாசமும், பாண்டவர்களின் சுதந்திரமும் எப்படி மதிக்கப்பட்டது என்பதை வளர்ந்து காட்டும் பளிங்கு ஓவியம் பாரதம்.

பண்பாட்டின் இரு முகங்கள்

பாஞ்சாலி பாண்டவர்கள் ஐவரை மணமுடித்த கதை, குந்தி நினைத்த சூரியனோடு உறவு கொண்டு கர்ணனைப் பெற்ற கதை, கர்ணனைப் பெற்றபின் யாருக்கும் தெரியாமல் நீரில் விட்ட கதை, கர்ணன் தன் மகன் என்று அறிந்த பின் பிறரறியாமல் மறைத்த கதை, இவை யாவும் ஓர் உண்மையை அடிப்படையாக கொண்டது. தாய் வழியில் இருந்த ஆதிக்கம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வந்த பண்பாட்டையும், கணவனுடைய கட்டுப் பாட்டிற்குள் பெண் தன்னை உட்படுத்திக் கொண்டு விடுகின்ற புதிய பண்பாட்டுப் பிறப்பையும் இணைத்து நின்ற காலம் பாரத காலம். பாரதக் கதை பல தலைமுறை இடைவெளிகளின் வாழ்க்கை ஒழுக்கங்களின் தொகுப்பு ஆகும்.

எனவே பண்பாடு என்பது இரண்டு முகமுடையதாக இருந்தது. பெண் ஆதிக்கத்தின் கீழான சமுதாய அமைப்பு காலத்தில் உலவிய பண்பாட்டு நிலைமைகள் வேறாக இருந்தது. ஆணைச் சார்ந்து பெண் வாழ்ந்து வருகின்ற காலத்தில் உலவிய பண்பாட்டு விதிமுறைகள் மாறாக இருந்தது. என்றாலும் எந்த ஆதிக்கத்தின் கீழும் பண்பாடு முழுமையாகச் சிறப்பதற்கு வாய்ப்பில்லாமலேயே வரலாறு நகர்ந்து கொண்டிருக்கின்றது. என்றாலும் செம்மைப்பட்ட பண்பாட்டுலகை நோக்கி வரலாறு சென்று கொண்டிருக்கிறது என்பது நம் நம்பிக்கையுமாகும்.

பழக்க வழக்கங்கள்

ஒவ்வொரு பழக்க வழக்கமும் பண்பாட்டின் ஒரு கூறாகத் திகழ்வது. கருவிகளின் வளர்ச்சியைச் சார்ந்திருப்பது என்பது மானுடவியலாரின் கருத்து. பல்வேறு புற உலக வளர்ச்சியில் பல்வேறு பழக்க வழக்கங்கள் வாழ்க்கையில் தோன்றின. ஒரு குறிப்பிட்ட மனிதக் குழுவினரிடையே வட்டமிட்டுக் கொண்டிருந்த பழக்க வழக்கங்கள் காலப் போக்கில் வேற்றுநில மக்கள்

குழுவிடையே பரவத் தொடங்கின. பழைமை இலக்கண நூலான தொல் காப்பியமும் இவ்வாழ்க்கை முறைகளை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டும். ஒரு குறிக்கோளுடன், நோக்கத்துடன் தோன்றும் பழக்கம் பின் வழக்கமாகிப், பின் வழக்கம் சடங்காகி, மரபாகி விடும் முழு வளர்ச்சி நிலையைப் பண்பாடு என்கிறோம்.

தொல்காப்பியம் காட்டும் பண்பாட்டுக் கலப்பு

ஐந்து நிலப் பாகுபாடும், ஒவ்வொரு நிலம் சார்ந்த மக்கள் ஒழுக்கமும், குறிப்பிட்ட திணையொழுக்கம் வேற்று நிலம் சென்று புகுவதாகிய திணைமயக்கம் ஆகிய யாவும் பண்டைத் தமிழ் மக்களின் வாழ்க்கை ஒழுக்கங்களைப் பற்றியதும், வாழ்க்கைப் புற உலக வாழ்க்கை வளர்ச்சி பற்றியதும், ஆகும்.

'மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்'

என்ற தொல்காப்பிய நூற்பாவால் ஒவ்வொரு நிலம் வாழ் மக்களும் தாங்கள் வாழ்கின்ற நிலப் பகுதியே மிகப் பெரிய உலகமாகக் கருதியிருந்தனர். தங்கள் நிலப் பகுதியின்றி வேறு நிலப் பகுதியில்லை என்று நம்பியிருந்தனர். வாழ்க்கைத் தேவைப் பொருள்களைக் கருதிப் பயணம் மேற் கொள்கின்ற போது, வேற்று நிலம் உண்டு; வேற்று நிலம் வாழ் மக்கள் வாழ்கிறார்கள்; அவர்கள் பல்வேறு பழக்க வழக்கங்களைக் கொண்டிருக்கின்றார்கள்; என்பன போன்ற செய்திகளைக் கண்டறிகின்றனர். அதேபோல், தத்தம் நிலம் வாழ் உயிரினங்கள், நிலம் விளை பொருள்கள், உற்பத்திப் பொருள்கள், நிலத்துக்குரிய பருவ காலங்கள் ஆகிய யாவும் குறிப்பிட்ட வரையறைக் குட்பட்டு அவரவர் திணைக்குரியதாக்கிக் கொண்டிருந்தனர்.

காலப் போக்கில் மனிதன் நிலம் மாறி இடம் மாறி வாழ வேண்டிய அவசியம் ஏற்படுகின்ற பொழுது மாறுபட்ட சூழ்நிலையிலும் வாழக் கற்றுக் கொண்டவனாகிறான். இடம் மாறி நிலம் மாறி வாழ்கின்ற சூழ்நிலையில் குறிப்பிட்ட நிலம் சார்ந்தவனைச் சுற்றியுள்ள கருப் பொருள்களுள்ளும் 'இடப் பெயர்ச்சி' ஏற்படுகின்றது.

இதனால் மனித சமூகம் பரந்துபட்ட அளவில் மிகப்பெரிய வளர்ச்சியைக் காண்கிறது. ஒரு குழுவாக இருந்த மனிதன் பல குழுக்களின் ஒன்றிணைப்பால் மிகப் பெரிய சமுதாயத்தை உருவாக்கிக் கொண்டவனாகிறான். மனிதன் தன் வாழ்கையின் புற அமைப்பை நாளுக்கு நாள் இவ்வாறு பெரிதுபடுத்திக் கொண்டான். அதையொட்டி சிறிய வட்டத்தில் வளைந்து உலவிக் கொண்டிருந்த அவனுடைய பழக்க வழக்கங்களும், குறுகிய வட்டத்தை அழித்துக் கொண்டு பெரிய வட்டத்தை வரைந்து கொண்டது. இந்தப் பழக்க

வழக்கங்களின் தோற்றம், வளர்ச்சி கலப்பு நிலை பற்றிய வரலாற்றுத் தொகுப்பே 'பண்பாடு' என்று கருதப்பட்டது.

மதமும் பண்பாடும்

கடவுளுக்கு வரலாறு படைத்தவன் மனிதன். அதே மனிதன் தன்னைப் பற்றிய வரலாற்றையும் படைத்துக் கொண்டான். மனித வரலாற்றை விளக்குகின்ற காலப் புத்தகம் சுமக்க முடியாதது. அந்த வரலாற்றில் மதம் பற்றிய வரலாறும் அடங்கும்.

மதம் என்பது ஓர் ஒழுக்கத் தொடர்பான கொள்கை. குறிப்பிட்ட இயக்கத்தின் கொள்கைகளை 'மதம் என்ற சொல்லில் உணர்த்தினர். ஒவ்வொரு இயக்கமும் ஒவ்வொரு மதமாகக் கொண்டனர். ஒவ்வொரு மதமும் வெவ்வேறு பெயரில் இறைவனை அழைத்தனர், என்றாலும் அடிப்படையில் 'ஒழுக்க மேம்பாட்டை' வலியுறுத்துவதில் அனைத்து மதமும் சிறந்திருக்கிறது. 'மதம்' என்ற பின்னணியில் வளர்ந்த இந்தியப் பண்பாடு உலக நாடுகளுக்கு விளக்கமாக இருக்கிறது.

மத அமைப்புகள்

மத இயக்கத்தின் நல்ல நோக்கங்களைத் தவறாகப் பயன்படுத்துவோர் அன்றும் இருந்தனர். இன்றும் இருக்கின்றனர். அவர்களைப் பற்றிய விமர்சனம் இங்கு தேவையில்லை. எம்மதமும் சில உயர் குறிக்கோளை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது. சுய நலமின்மை, பொது நல உணர்வு, மக்கள் தொண்டு, அன்பு பாராட்டால், தியாக மனப்பான்மை, இனியவை பேசல் ஆகிய நற்பண்புகளை வலியுறுத்துவதாகவே மத அமைப்புகள் விளங்க வேண்டும்.

'அது (மதம்) மக்களுக்கு வாய்த்த அபினி[5] ஆதனால் மக்கள் மரபுப் பண்பாட்டின் மயக்கத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

மத அமைப்பின் சீரழிவிற்குக் காரணமாயிருப்பவர்கள் மக்கள் மட்டுமே அல்ல. மாறாக, மத அமைப்பைச் சார்ந்திருக்கக் கூடியவர்களும் ஆவர். 'பிரச்னை என்னவென்றால், எந்த விதமான மதம் நமக்குத் தேவை என்பதே, அஃது அன்பு, சகோதரத்துவம், ஆகியவற்றை சேர்ந்த மதமா? அல்லது அதிகாரம், வெறுப்பு ஆகியவற்றை சேர்ந்த மதமா[6] என்ற வினா எழுகின்றது. எனவே மத அமைப்பைச் சார்ந்திருக்கக் கூடியவர்கள் சமூக நலனையே கருதி வாழும் உத்தமர்களாய் திகழ வேண்டும்.

பெரியார் கொள்கையினால் நிகழ்ந்த பண்பாட்டு மாற்றங்கள்

மதம் பற்றிய மக்களறிவு இன்றைய நூற்றாண்டில் பகுத்தறிவுப் பார்வையில் வளர்ந்து வருகிறது. இந்தத் திருப்பு முனைக்குப் பெரியார் காரணமாகின்றார். மதம் மக்களைக் கோழைகளாக்குகிறது[7] என்று தொடர்ந்து மக்களிடையே அவர் பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்பினார். பெரியார் ஆற்றிய கடவுள் கொள்கை பற்றிய பிரச்சாரமானது மக்களிடையே கடவுள் பற்றிய கருத்துச் சிந்தனையைத் துருவி விடுவதாக இருந்தது. கடவுள்

இருக்கிறாரா? என்பது பற்றிய ஆராய்ச்சி செய்யாமல் மதம் என்ற அமைப்பில் வளர்ந்த பழக்க வழக்கங்கள் பல வாழ்க்கை முன்னேற்றத்துக்குத் தடையாக இருப்பதை மக்கள் புரிந்து செயல்பட்டனர்.

தாலி மண முறையில் ஒரு திருப்பு முனை

நாள் பார்ப்பது; சகுனம் பார்ப்பது; தாலியே மனைவிக்கு வேலி என்று நம்புவது; மங்கலப் பொருளாக மலரையும், தாலியையும், பொட்டையும் கருதுவது; விதவை மறுமணம் சமூகக் குற்றங்களை வளர்க்கும் என்ற தவறான கருத்துப் போக்கு ஆகிய பண்பாட்டுப்பழக்கங்கள் மரபு தொட்டு வருவன என்றாலும்,அவை நிகழ்கால நடைமுறை வாழ்க்கை அமைப்புக்கு பொருந்துவதாக அமையவில்லை என்பதைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிந்தனர். இதன் காரணமாக, ஆங்காங்கு சமூகத்தில் ஒரு புதிய பண்பாட்டுக் குழு ஒன்று தோன்றலாயிற்று.

கயிற்றுத் தாலி தங்கத் தாலியாதல்

பெரியாரின் பகுத்தறிவுப் பாசறையின் தொண்டர்கள் மூலமாகத் தாலி கட்டாது மாலை மாற்றிக் கொள்ளும் திருமண முறை நுழையலாயிற்று. பண்பாட்டில் விளைந்த புதிய சீர்திருத்த மண முறையானது தாலி மண முறையில் நம்பிக்கை கொண்டவர்களிடையேயும் வேறு ஒரு பழக்கத்தை உருவாக்கிற்று.

'தாலி' என்ற மங்கலப் பொருளான 'கயிற்றுத் தாலி' நாளடைவில் மறைந்து 'தங்கத் தாலி' யாய் மாறியது. ஏழ்மை நிலையில் இருப்பவர்களைத் தவிர ஏனைய நடுத்தர வர்க்கக் குடும்பப் பெண்டிரும், உயர்தர வகுப்புப் பெண்டிருமாக நூற்றுக்குத் தொண்ணூறு பேர் இந்தப் புதிய பழக்கப் பாதையில் தங்களை அழைத்துச் சென்று தங்கத்தாலி அணிவதையே மரபாக்கிக் கொண்டு விட்டனர்.

'கயிற்றுத் தாலி' 'தங்கத் தாலி' யாய் மாறிய பழக்கத்துக்கு வேறு காரணமும் உண்டு. பெண்கள் இன்றைய நூற்றாண்டில் வேலை வாய்ப்பைத் தேடிச் சென்று உழைக்கும் மகளிராகி விட்டனர். வெளியுலக உழைப்பும், வீட்டுலக உழைப்பும் மகளிரை நெருக்கிப் பிடித்ததால் வியர்வையிலூறும் கயிற்றுத் தாலியின் பொன்மை நிற அழகைக் காக்க இயலாமல் போகிறது. நேரமின்மை காரணமாகவும், ஓய்வைத் தேடி அலைவதாலும் கயிற்றுத் தாலியின் அழகைக் காப்பாற்றுவது சிரமமான காரியமாகி விடுகிறது. எனவே இந்தப் பெரிய தொல்லையிலிருந்து விடுபடவும், கயிற்றைப் பாதுகாக்க முடியாத மனக்குறையிலிருந்து விலகி அமைதி பெறவும் தங்கத்தாலி அணிகின்ற புதிய பழக்கத்தை விரும்பி வரவேற்றுப் பெண்டிர் பெரும்பாலும் ஏற்றுக் கொண்டனர்.

கயிற்றுத் தாலிக்கு தெய்வ சக்தி இருப்பதாக நம்பிய உணர்வும், கயிற்றுத் தாலி அணிவதில் தான் தமிழரின் பண்பாட்டுச் சிறப்பு முழுமை பெற முடியும்

என்ற நம்பிக்கையும் பெரும்பாலும் இன்று குறைந்து மறைந்து விட்டது என்றே சொல்லலாம்.

குறிக்கோளில் ஏற்பட்ட குறை

'திருமணம் என்பது சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட விபசாரம்' என்று கூறும் பெரியாரின் கருத்து மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாததாக, இதய வலியை உண்டாக்குகின்ற சொற்றொடராக ஆரம்பத்தில் இருந்தாலும் அச்சொற்றொடர்கள் பெண்களைச் சிந்திக்கத் தூண்டுவதாகிய பயன் விளைவித்தது.

'பிடிக்காத ஒருவனோடு சமூக கட்டுப்பாட்டுக்காக தன்னைத் தானே வருத்திக் கொண்டு வாழுகின்ற நிலைமையைப் பெண்கள் ஏன் வளர்த்துக் கொள்ள வேண்டும்? தன்னைச் சுற்றிலும் தானே ஒரு சிறை அறையை ஏன் அமைத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்ன பெரியார் கூற்றின் சரியான நோக்கத்தைப் பெண்கள் புரிந்து கொண்டார்களா? கணவனின் அத்து மீறிய கொடுமைகளுக்குத் தன்னை உட்படுத்திக் கொள்ள வேண்டாம்' என்று பெண்களுக்கு எச்சரித்தார்.

ஆனால் மிகச் சிறிய குறைகளையும் பூதாகரமான குற்றமாகக் கருதிச் சில பெண்கள் தம் கணவனை விகாகரத்து செய்பவர்களாயினர். மிகக் குறுகிய காலத்தில் விவாகரத்து செய்வோர் எண்ணிக்கை நம் நாட்டில் அதிகரித்து வருகின்றது. விவாகரத்து செய்வதும், தம் விருப்பம் போல் பலரோடு வாழ்க்கை நடத்துவதுமான அயல்நாட்டுப் பண்பாட்டொழுக்கம் நம் நாட்டில் பரவிக் கொண்டிருக்கிறது.

பொருள் சேர்க்கும் நோக்கோடு வெளிநாடு செல்லும் இந்திய மக்கள் அந்நாட்டுப் பண்பாட்டைக் கண்டு மனமாற்றமடைகின்றனர். இதனால் சில ஒழுக்கக்கேடான பழக்கங்களையும் தவறில்லை என்ற மனப்பாண்மையை வளர்த்துக் கொள்கிறார்கள்.

இப்படிப் பட்டவர்களின் உறவுகளோடு அங்குமிங்குமாகச் சிலர் வேறான தவறான பழக்கங்களை மேற்கொண்டு வாழத் தொடங்குகின்றார்கள். பல்வேறு பட்ட அரசியல் ஆட்சி அமைப்பின் கீழும் சிதறாமல் பண்பாட்டை வளர்த்துக் கொண்டு வந்த நம்நாடு நம் பண்பாட்டை ஏற்றுமதி செய்வதும், தூர நாடுகளின் பண்பாட்டை இறக்குமதி செய்து நுகர்வதுமாக வணிக அளவிலான பண்பாட்டு நிலைமையே நிகழ் காலத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறது.

குடும்ப அமைப்பு முறையில் பண்பாடு

நம்மறிவுக்கு எட்டிய காலந்தொட்டு குடும்பம் என்ற அமைப்பின் வரலாற்றைப் பார்க்கின்ற பொழுது எத்தனை மாற்றங்களைக் கண்டிருக்கிறது என்று வியக்கத்தக்கதாய் உள்ளது. கூட்டுக் குடும்ப அமைப்பு, தனிக் குடுமப அமைப்பு என்ற இருவேறுபட்ட குடும்ப அமைப்பை நாமறிவோம்.

தனிக்குடும்ப அமைப்பிலும் இரண்டு விதமான உறவுகளைக் காண முடிகிறது. அவை:

1. தனிக்குடும்ப வாழ்க்கையாக இருந்தாலும், உற்றார் உறவினர்களுடனும், மாமன், மாமி இணைப்போடும் உறவு விட்டுப் போகாமல் அடிக்கடி தொடர்பு கொள்ளக்கூடிய பண்பாட்டொழுக்கம் நிலவி வந்த காலம்.
2. மேற்சொன்ன கலந்து உறவு முறை சிறிது சிறிதாக நழுவி, கணவன், மனைவி, பிள்ளைகள் என்ற அளவில் மட்டுமே அமைத்துக் கொண்ட சிறிய குடும்ப அமைப்பு என்பனவாகும்.

தலைமுறைகள்

படித்த பெண்களின் எண்ணிக்கையும், வேலை பார்க்கும் பெண்களின் தொகையும் வளர வளர இல்லற வாழ்க்கையின் கூட்டுக் குடும்ப அமைப்பில் சில சிக்கல்கள் தோன்றலாயிற்று. பெண்கள் விஞ்ஞான அறிவைப் பெறலாயினர். பெற்ற அறிவின் காரணமாக அறிவுக்கும் அறியாமைக்கும் இடையிலான வாழ்கை முறைகளைப் பெண்கள் பிரித்தறியலாயினர். இதனால் பழைய தலைமுறையினரான மாமன், மாமி ஆகியோரின் மத நம்பிக்கைகளை ஏற்றுக் கொண்டு வாழ்க்கை நடத்துவதில் பிரச்னை ஏற்பட்டது. உணவு, உடை ஆகிய அடிப்படைத் தொடர்பானவற்றிலும் பிரச்னை ஏற்படலாயிற்று.

ஒவ்வொரு மதம் சார்ந்த குடும்பத்திலும் ஆண், பெண் ஆகியோரின் ஒழுக்க முறைகளில் ஒவ்வொரு தலை முறை இடைவெளியிலும் ஒற்றுமைப் பண்பு குறைந்து வரத் தொடங்கியது. சிந்தனைகளின் வளர்ச்சி ஒவ்வொரு தலைமுறையிலும் மிக வேகமாக வளர்ந்தது. நேற்றைய பழக்கம் இன்றைய மனிதனிடம் பார்க்க முடிவதில்லை என்று சொல்லுமளவில் பண்பாட்டுக் கலப்பு உலக நாடுகளிடையே மறைமுகமாகவும், நேரடியாகவும் தாக்கம் கண்டது. அவரவர் விருப்பம் போல் பின்பற்றும் பழக்க வழக்கமே பண்பாடு என்று சொல்லிக் கொண்டு திரியலாயினர்.

தனிக் குடும்ப அமைப்பின் நோக்கம்

வேகமான இந்தச் சமூக மாற்றத்தில் ஆண்களை விடப் 'பெண்கள் உலகம்' அதிக அளவில் மாறுதல் கண்டது. அறிவு பெறுகின்ற பெண்கள் தங்கள் விருப்பம்போல் இன்றைய விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப தம் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ள விரும்பினர். மருத்துவ வசதிக்கேற்ப, மருத்துவர் சொற்படி தம் குழந்தைகளை வளர்க்க முனைந்தனர். மாமி சொல்லுகிற பத்தாம் பசலித் தனமான மருத்துவத்தைக் கையாண்டு தன் குழந்தை தொல்லைக்குட்படுவதை விரும்பவில்லை. இந்த நிலைமையில், பெண்கள் உலகத்திலேயே பண்பாட்டுச் சச்சரவுகள் ஏற்படுகின்றன. பெண்களிடையே உலக வாழ்க்கை பற்றிய பலத்த விமர்சனம் உண்டாயிற்று. விமர்சனத்துக்கு இடையில் பெண்கள் ஒன்று சேர்ந்தவர்களும் உண்டு. பிரிந்து சென்று வேறு பண்பாட்டுக் குழுவை உண்டாக்கியவர்களும் உண்டு.

இதன் விளைவாகத்தான் 'தனிக் குடித்தனம்' என்று சொல்லும், 'தனிக் குடும்ப' அமைப்பு முறை தோன்றலாயிற்று. தனிக் குடும்ப அமைப்பு முறையின் நோக்கம் பலவாக இருந்தது. அவற்றுள் குறிப்பிடத் தக்கவை.

1. கணவன், மனைவி உறவான இன்ப வாழ்க்கைக்கு எந்தக் குறுக்கீடும் இல்லாமலிருப்பது.
2. வெளியுலக வாழ்க்கையை இன்ப மயமாக்கிக் கொள்ள நினைப்பது.
3. தம் பிள்ளைகளைக் காலததுக் கேற்ற பழக்க வழக்கங்களுக்குட்பட்டு சுதந்திரமாக வளர்த்க முயல்வது.
4. விஞ்ஞான வளர்ச்சியை பயன்படுத்திக் கொள்வதன் மூலமாக உழைப்பை எளிமைப்படுத்திக் கொள்வது.
5. சொத்துரிமைக்கு எளிதாக வழி தேடிக் கொள்வது போன்றவையாகும்.

சுதந்திரமாய் வாழ வேண்டும்; சமுதாயத்தில் ஒரு தகுதி பெற்று வாழ வேண்டும்; முடிந்தவரை யாருக்கும் தொல்லை கொடுக்காமல் வாழ வேண்டும்: தம் பிள்ளைகளைத் தன்னைவிட மேன்மை நிலைக்கு ஆளாக்க வேண்டும் என்ற உணர்வுகள் இன்று பெண்களிடையே மிக அதிகமாக வளர்ந்து வருவதைப் பார்க்கிறோம். இந்த மன உணர்வுகளை நனவுபடுத்திக் கொள்ள 'தனிக் குடும்ப' அமைப்பு முறை மட்டுமே துணை செய்ய முடியும் என்றும் பெண்கள் நம்பினார்கள்.

தனிக் குடும்ப அமைப்பில் விளைந்த பயன்கள்

இந்த தனிக் குடும்ப அமைப்பினால் சில நன்மைகளும் உண்டு. தீயனவும் உண்டு. நன்மையாவன.

1. 'குடும்ப அமைப்பு' சிதைக்கப்படாமல் காக்கப்பட்டு வருகிறது.
2. நல்ல தலைமுறைகள் உருவாக்கப்படுகின்றன.
3. பெண்களிடையே தன் முயற்சி வளருகிறது.
4. பெண்களிடையே தன்னம்பிக்கை ஊட்டப்படுகிறது.
5. வெளியுலக வாழ்க்கை முறைகளைப் பெண்கள் அறிந்து கொள்ளக் காரணமாகின்றது.
6. ஆண்களும் பெண்களும் உழைப்பில் சம பங்கு ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவம் பெறுகிறார்கள்.

தனிக் குடும்பம் அமைப்பினால் ஏற்படக் கூடிய தீமைகளாவன.

1. விருந்தோம்பல் பண்பு மறக்கப்பட்டு வருகிறது.
2. தலை முறைகளிடையே கலந்து பழகும் பண்பாடு சிதைந்து விடுகிறது.
3. பெண்களிடையே செருக்குணர்வு வளரக் காரணமாகிறது.
4. மனித உறவுகளின் பெரு வட்டம் நாளுக்கு நாள் குறுகி வருகிறது.

இப்படிக் காலச் சூழ்நிலைகளுக்கேற்ப வாழ்க்கை முறைகள் மாறுகின்றன. மாறுகின்ற பழக்க வழக்கப் பண்பாட்டினால் நல்ல விளைவும் தீய விளைவுமாகிய இரண்டு பயனையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

பண்பாட்டுலகில் விதவைகள்

காதல் மண வாழ்வு முறை, இடைப்பட்ட காலத்தில் பண்பாட்டுக்கு எதிர் விரோதமானது என்று கருதப்பட்டது. இக்கருத்து படைப்பிலக் கியங்களாலும், கதைகளாலும், திரைப்படங்களாலும் பெரும்பாலும் மாறி வருவதோடு, திருமணம் என்பது 'கருத்து ஒருமித்தல்' என்று புரிந்து கொள்ளத் தொடங்கி விட்டனர். காதல் மணம் ஒரே இனம், ஒரே குலம் அடிப்படையில் மட்டுமன்றி, சாதி, மதம், நாடு என்ற பாகுபாடுகளையும் மீறி மனம் கலந்து வாழுமாறு மக்கள் மனப் பக்குவமடைந்து வருகின்றனர்.

அதேபோல் 'விதவை மறுமணம்' என்ற சீர்திருத்தச் செயலும். சமூகத்தில் பலருக்கு வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்தியது.

1. விதவைக் கோலம், மறுத்தல்.
2. விதவைகளின் மறுமணம் விரும்புவோர்க்கு ஆதரவு தருதல்.
3. மறுமணம் விரும்பாத விதவைகளுக்கு உடனடியாக வேலை வாய்பபு அளித்தல்.

ஆகிய முக்கிய கொள்கைகளை முன் வைத்துப் பல சீர்திருத்த வாதிகளும், அரசியல் தலைவர்களும் விதவைகளின் மறுவாழ்வு மலர்ச்சிக்காகப் போராடினர். மக்களிடையே இது பற்றிய கருத்தைப் பரப்பும் நோக்குடையவராயினர். சில சீர்திருத்த வாதிகளும், அரசியல் தலைவர்களும் தாங்களே துணிந்து முன்னின்று விதவை மறுமணத்தை நடத்தி அவர்களை வாழ வைத்தனர்.

'கற்பொழுக்கம்' பற்றிய கவலைக்குள்ளான மக்களுக்கு குறிப்பாக ஆண்களுக்குக் கற்பின் இலக்கணம் கற்பிக்கப்பட்டது. (வாழுகின்ற கணவனோடு மன நிறைவுடன் வாழ்க்கை நடத்துதல் கற்பு) கற்பின் இலக்கணம் இதுவென்று கற்பிக்கப்பட்ட பின்னுங்கூட ஆண்கள் சமாதமானம் அடைய முடியாமல் தவித்தனர் என்றாலும் குழந்தை மண முறையில் விதவைகளின் எண்ணிக்கை அதிகரித்த காலத்தில் 'விதவைக் கோலம்' கொண்டு வேதனைப்பட்ட பெண்களே விதவைப் பெண்களின் மறு வாழ்வுக்காக முன் வந்து செயல்பட்டனர். காலத்தின் துணையோடும், துணிந்து முன்னின்று செயல்பட்ட தொண்டர்களின் துணையோடும் மேற்சொன்ன விதவைகள் வாழ்வு நலன் பற்றிய மூன்று கொள்கைகளும் சமூக அளவில் பரவத் தொடங்கி விட்டது.

இன்றைய நூற்றாண்டில் விதவைப் பெண்களில் பெரும்பாலோர் (நூற்றுக்கு எழுபத்தைந்து விழுக்காட்டளவில்) பொட்டு வைப்பதும், பூச் சூடுவதுமாகிய பழக்க வழக்கங்களைத் தொடருகின்றனர். தாலியும், கால்

மெட்டியும் ஆகிய இரண்டு மட்டுமே களையப்படுகின்றன. இதனால் விதவைகள் சமூகத்தில் நல்ல தகுதியுடன் வாழ முடிகிறது.

இவ்வாறு மக்கள் சமுதாயம் பண்பாட்டுலகில் சில மாற்றங்களைக் கண்டது என்று பொதுவாகக் குறிப்பிடுவதை விட, பெண்கள் வாழ்வியலில் பல மாறுதல்கள் நேர்ந்தன என்று நாம் சிறப்பாகக் கூறலாம். பெண்கள் வாழ்வியலில் ஏற்பட்ட வேறுபட்ட பழக்க வழக்கங்களின் காரணமாகச் சமுதாயம் பல முன்னேற்றம் காண முடிந்தது. நல்ல, புதிய அறிவார்ந்த தலை முறைகளின் வளர்ச்சிக்கு வழி கோலியது என்பது குறிப்படத்தக்கதாகும்.

இன்றைய உலக நாடுகளிடையே இந்தியா

வரலாற்றின் அழுக்குகள்

பயிர் வளர்க்கும் உயிர்களின் இடையே அதன் வளர்ச்சியைத் தடுக்கின்ற புல் பூண்டு உயிர்களும் உண்டு. மனிதனையும் ம்னித சமூகத்தையும் வளர்க்கும் பண்பாட்டை அழிக்கும் உதிரிகள் இன்றைய ஜனநாயகத்தில் நடமாடுகின்றனர். கொலை செய்பவர்கள், கொள்ளையடிப்பவர்கள், கற்பழிப்பு நடத்துபவர்கள் இனவெறி, சாதி வெறிப் போரை வளர்ப்பவர்கள் ஆகியோர் சமூக உதிரிகள் ஆவர். இந்த உதிரி இனம் பண்பாட்டைச் சீர் குலைக்கும் முயற்சியில் இறங்கி விட்டன.

மதங்களுக்கு புதிய முகமூடிகள் தோன்றி விட்டன. பட்டம், பதவி ஆகியவற்றின் மீது கொண்ட பேராசையால் போலி மனிதர்களாக உருமாற்றம் கொண்டு நடமாடுகின்றனர். சொத்துரிமைப் பேராசையால் நற்பண்புகளை நச்சுப் பண்பாய் மாற்றி வருகின்றனர். இன்றைய சமூக வளர்ச்சியில் மனிதர்கள் முடுக்கி விடப்பட்ட எந்திர பொம்மைகளாய் வாழ்கின்றனர். இப்படிப்பட்ட புழுக்கச் சூழலில் மனித சமூகம் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

இந்தியாவின் தனித்திறம்

'பல்வேறு வகையான பழக்க வழக்கங்களால் உருப்பெறும் பண்பாடு தன்னைத்தானே ஆதாரமாகக் கொண்டு நிலைத்து நிற்கக் கூடியது. ஆதியில் எந்த அம்சங்கள் ஒன்று சேர்ந்து ஒரு வகையான பண்பாட்டை உருவாக்கினவோ, அந்த அம்சங்களிலேயே சில மாறுபாடுகளை விளைவிப்பதன் மூலம் அது வேறொரு உருவத்தில் விளங்கும் சக்தியாக வாய்ந்ததாகின்றது.'[8]

அந்தச் சக்தியை இன்றைய உலக நாடுகளிடையே இந்தியா பெற்றுள்ளது. மத அமைப்பு முறைகள் மாறிக் கொண்டே இருந்தாலும், மனப் பக்குவம் பெற்று வரும் மக்களிடையே சமூக நலன் கருதி நடை போடுவதாகப் பயணம் சென்று கொண்டிருக்கிறது.

அறிவியல் அடிவானத்தைத் தொட்டுக் கொண்டிருக்குமளவில் வளர்ந்து விட்ட இன்றைய நூற்றாண்டில் மனித இனம், தன் வரலாற்றில் எல்லா

அறிவையும் பெற்று விட்டதாக ஒரு பொய்த் தோற்றத்தைக் காண்கிறது. அவ்வறிவின் முடிவையும் அறிந்து விட்டதாகக் கற்பனை இறுமாப்புக் கொள்கிறது. இந்த பொய்த் தோற்றமும், கற்பனையும் விரோத மனப்பான்மையும், பிடிவாதம் கொண்ட வெறியாட்டத்தையும் உற்பத்தி செய்து விடுகின்றன.[9]

ஆக்கக் கருவிகள் வளர்ச்சி ஒருபுறமும், அழிக்கும் தீயசக்திகளைக் கொண்ட விஞ்ஞானக் கருவிகள் மறுபுறமுமாக இன்று அறிவியல் வளர்ந்திருக்கிறது. இதனால் ஒவ்வொரு நாடும் தங்கள் நாட்டின் பாதுகாப்பு கருதி அணு ஆயுதங்களை உற்பத்தி செய்கின்ற பணியில் ஈடுபட்டு விட்டது. நம் நாடு இந்தப் பணியை மேற்கொண்டாலும், 'உலக சமாதானத்தை முன்னிறுத்தி ஒற்றுமைப் பிரசாரம் செய்து வரும் நற்பணியில் ஈடுபட்டுள்ளது.


உலக நாடுகளின் அழிவை மனதில் கொண்டு உலக ஒருமைப்பாட்டுணர்ச்சியை உலக நாடுகளிடையே வளர்த்து வரும் தெய்வீகப் பணியை இந்தியா ஆற்றி வருகின்றது. உலக நாடுகளிடையே எங்கு பார்த்தாலும் கலவரங்கள்; போராட்டங்கள்; இனச்சண்டை; சாதிச் கண்டை; மத மாற்றங்களின் காரணமாக மனக்குமுறல்; பழிவாங்கும் வெறியுணர்ச்சி; 'அறிவியல் சாதனை கண்ட இந்தயுகம் மனிதர்களின்-மக்கட் கூட்டத்தின் துயரத்தைப் பன்மடங்கு பெருக்கியுள்ளது'.[10]

எனவே, ஒருமைப்பாட்டுணர்ச்சியால் மட்டுமே பண்பாட்டு ஒழுக்கம் சிதைந்து போகாமல் கட்டிக் காக்க முடியும் என்ற உண்மையைப் பண்பாட்டின் பிறப்பிடமான நம்நாடு அறிந்து ஆக்கப்பணியில் ஈடுபட்டு வருகின்றது. இன்றைய இந்திய சனநாயக அரசியல் அமைப்பு அந்த அன்புத் தொண்டில் பெரிதும் முயன்று வருகின்றது.

பண்பாட்டு வளர்ச்சியின் இருமுனைகள்

மனிதன் தன் வாழ்க்கையின் தேவைகளை அடைவதற்கு புற வளர்ச்சி ஊக்குவிக்கின்றது. அவ்வப்போது மனிதன் சமூகத் தேவைகளை அடைந்து சமூகக்குறைகளை அகற்றி, நிறைவு செய்து கொள்கிறான். இதற்காகப் புதிய புதிய வழிமுறைகளைப் பின்பற்றுகின்றான். அவன் பின்பற்றும் புதிய நெறி முறைகள் வெற்றியைத் தேடித் தருமாயின் புதிய நெறிகள் புதிய விதிமுறைகளாக மாற்றப்படுகின்றன.

ஒரு மனிதனின் வளர்ச்சி, உடல் வளர்ச்சி, அறிவு வளர்ச்சி ஆகிய இரண்டையும் பொறுத்தது. இவ்விரண்டில் ஏதாவது ஒரு வளர்ச்சி குன்றினாலும் அவன் முழு மனிதனாகக் கருதப்படுவதில்லை. அதே போல் சமூகப் பண்பாட்டு வளர்ச்சி, அரசியல் வளர்ச்சி, கூட்டுழைப்பு மனப்பான்மை ஆகிய இரண்டின் ஒன்றிணைப்பில் அமைவதாகும்.



பண்பாடு

அரசியல் நிர்வாகம் | மனித உழைப்பில் கூட்டு முயற்சி

அரசியல் திட்டங்கள், செயல்திறன்கள் நீதியுடன் நடைபெறவில்லையாயின் மக்களின் கூட்டுழைப்பு முறை ஒரே சீராக இருப்பினும் பண்பாடு சிறக்காது; அரசியலமைப்பு முறை நேர்வழியுடனிருக்க மக்களிடையே கூட்டுழைப்பு மனப்பான்மை இல்லையேல் அங்கேயும் பண்பாடு வாழ வழியில்லை.

'அரசு மக்களுக்காக
மக்கள் மக்களுக்காக'

என்ற கோட்பாட்டில் இரண்டும் ஒன்றிணைந்து செயல்படுகின்றபோது அச்சமூக அமைப்பில் பண்பாடு செம்மையுற விளங்கும்.

பண்பாடு சிறக்க

உலக நாடுகளில், நம் நாட்டில் பண்பாடு சிறக்க வேண்டுமானால், பண்பாட்டைப்பற்றிய மதிப்பும், மறுமதிப்பீடும் செய்ய வேண்டியது நம் பணியாகும். மனபலத்தை அடிப்படையாகக் கொண்ட சிறந்த பண்பாடு மலர எதிர்கால வாழ்வு உத்தரவாதமுள்ள சமூக அமைப்பை உருவாக்க வேண்டும்; பண்பாட்டின் கரம்பற்றிக் கொண்டு வாழ்க்கைப் படிநிலைகளைத் தாண்டும் ஒவ்வொரு மனிதனும் தன்னைப் பற்றிய சுயவிமர்சனமும், சமூகம் பற்றிய விமர்சனமும் அவ்வப்போது பிறருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். வாழ்க்கையைப் பற்றிய மறுபரிசீலனையை அவ்வப்போது மேற்கொள்ள வேண்டும்.

பண்பாடு - ஒரு வரையறை

பண்பாடு என்பது பண்பு நலம் சார்ந்த வாழ்க்கை; பண்பாடு என்பது தெய்வீகப் பண்பு; பண்பாடு என்பது உலக மக்களைத் தழுவுகின்ற அருள் நோக்கு; பண்பாடு என்பது வாழ்வில் மலராமல் தாழ்வில் வாடாமல் இருக்கும் உயர் பண்பு; பண்பாடு என்பது தன்னைச் சுற்றியுள்ள சமூகம் விரும்புமாறு வாழ்ந்து காட்டும் பண்பு . பண்பாடு என்பது தியாகம். இப்படிப் பண்பாடு பற்றிப் பல்வேறு சொற்களால் பலவாறாகச் சொல்லி விளக்கலாம். சுருங்கச் சொல்லி விளக்குவதாயின் சமூக நன்மை நாடும் மனிதனாய் வாழ்வதில் பண்பாடு சிறக்கிறது. முழுமை பெறுகின்றது.'மனித நேயம்' என்ற சொல்லால் பண்பாடு இன்று விளக்கப்படுகின்றது.

குறிப்புகள்

1. Fairchild Dictionary of Sociology - 83
2. திருக்குறள் எண். 580
3. John.w.Benneh, Social life structure and function 202
4. தொல்காப்பியம், அகம், நூற்பா. 5
5. காரல் மார்க்சு - பிரெடெரிக் ஏங்கெல்சு' "மதத்தைப் பற்றி" 50
6. டாக்டர். எஸ்.ராதாகிருஷ்ணன். மதமும் பண்பாடும் ப. 3
7. பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள், (பதி) வெ. ஆனைமுத்து, சிந்தனையாளர் கழகம், திருச்சிராப்பள்ளி. தொகுதி 2 1974, ப. 1055.
8. ஜான் டேபி, சுதந்திரமும் பண்பாடும் 3
9. டாக்டர். எஸ்.ராதாகிருஷ்ணன். 'மதமும் பண்பாடும்' ப. 18
10. டாக்டர். எஸ்ராதாகிருஷ்ணன். 'மதமும் பண்பாடும்' ப. 241

வள்ளுவரின் பொது ஆட்சிக் கொள்கை

தி. தாமரைச் செல்வி

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் திருக்குறளின் முப்பெரும் பிரிவுகளில் இரண்டாவதாக அமைந்துள்ள பொருட்பாலில்தான் அரசியல் கருத்துக்கள் காணப்படுகின்றன. இந்த அரசியற் கருத்துக்கள் யாவும், அரசனை அடிப்படையாகக் கொண்டே கூறப்பட்டுள்ளன எனல் பொருந்தும். இவற்றுள் 70 அதிகாரங்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் முதல் 25 அதிகாரங்கள் அரசனைப் பற்றியும், அடுத்து 32 அதிகாரங்கள் அரசனுடைய ஆட்சிக்கு அமைந்த ஆறு அங்கங்களைப் பற்றியும், இந்த இரண்டு இயல்களிலும் இடம் பெறாத மீதிக் கருத்துக்களை அடுத்த 13 அதிகாரங்களும் விரித்துரைக்கின்றன என்பர் பரிமேலழகர். இவற்றுள் அரசனுக்குரிய இலக்கணங்களையும், அவன் ஆட்சி செய்யும்போது, அவன் அரசு அலுவலர்களை எவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதையும், அவ்வாறு தேர்ந்தெடுத்த பிறகு அவன் ஆட்சி எவ்வாறு அமைய வேண்டும் என்பதைப் பற்றியும் நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கம். இதன்மூலம், வள்ளுவர் கூறுகின்ற ஆட்சி முறையில் அரசு அலுவலரைத் தேர்ந்தெடுத்து அவர்களை, நிர்வகிக்கும் பொறுப்பு அரசனுக்கு இன்றியமையாதது என்பது புலப்படும்.

'திருக்குறள் ஒரு சுரங்கம்; அவ்வக்கால உலகைப் புரக்கும், பொருட்களை அவ்வப்போது வழங்கும் பெற்றியது. அதனின்றும், இதுகாறும், அறிஞரால் எடுக்கப்பட்ட பொருள் சிலவே; மிகச் சிலவே; இவ்வேளையில் திரண்டு வரும் புது உலகும் இனித் திரளப் போகும் பலவகை உலகங்களும் ஏற்கத்தக்க அடிப்படைப் பொருள்கள் திருக்குறளில் மிடைந்து கிடைக்கின்றன. திருக்குறள் சுரங்கம் வற்றாதது என்பர் திரு.வி.க.[1] அவர் கூற்றிற்கேற்ப திருக்குறளை அகழ்ந்து நோக்கினால் பல்வேறு துறைகள் புலப்படும். அவற்றுள் ஆட்சித்துறையும் ஒன்று. அவ்வாட்சித் துறையில் இடம்பெறும் ஒருசில கூறுகளே இக்கட்டுரையில் இடம் பெறுகின்றன.

ஆட்சிமுறையின் தோற்றம்

முடியாட்சி குடியாட்சியைவிட, முற்பட்ட ஆட்சிமுறை என்று தொன்று தொட்டு நம்பப்பட்டு வருகிறது. அரசன் என்பவன், கடவுளால் உருவாக்கப பட்டவன் என்றும் நம்பினர். இந்தியாவின் அரசன் திருமாலின் அவதாரமாகக் கொள்ளப்பட்டான். 'சப்பானியர்கள் அரசன் கடவுளின் ஓர் ஆட்பேர் என்று நம்புகின்றனர். மேனாடுகளில் நெடுங்காலம் சமயப் பற்றுடைய மக்கள், உலகில்

சமயத்தை நிலைநிறுத்த ஒரு சமயத் தலைவனையும், அரசியலை நிலைநிறுத்த ஓர் அரசனையும் கடவுள் அமைத்தார் என்று எண்ணினார்கள். இக்கொள்கை தெய்வீக அரசுக் கொள்கை எனப்படும்.[2] இந்த தெய்வீக அரசுக் கொள்கையைப் பின்னர் வந்த பகுத்தறிவாதிகள் எதிர்த்தனர். வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு சமயங்கள் தோன்றி கடவுளின் பெயரால் சண்டையிட்டதே அதற்குக் காரணமாகும்.

நாகரிக வளர்ச்சியின் காரணமாகக் கூடி வாழத் தொடங்கிய மனிதன், அவ்வாழ்க்கை முறைக்கேற்றவாறு சில பழக்கவழக்கங்களையும் ஒழுங்கு முறைகளையும் வரையறுத்துக் கொண்டான். வரையறுத்த ஒழுகலாறுகளை அனைவரும் கடைப்பிடித்து வந்தனர். அவ்வாறு கடைப்பிடிக்காமல் இருப்பவர்களை தண்டிக்கவும், விலக்கவும் செய்தனர். அறிந்தும் அறியாமலும் செய்த தவற்றினைத் தண்டிக்க ஒரு தனிமனிதன் இருந்திருக்க மாட்டான். அப்பகுதி மக்கள் யாவரும் ஒன்று கூடி ஒரு அவையை ஏற்படுத்தியிருப்பர். அந்த அவைக்கண் உள்ள உறுப்பினர்களில், வயதாலும், அனுபவத்தாலும், அறிவாலும் மூத்தவரைத் தலைமைப் பொறுப்பு ஏற்க வைத்திருப்பர். இவர்களிடையேயும், கருத்து வேறுபாடுகள் ஏற்படுங்காலத்தில் எல்லோருடைய நம்பிக்கையையும், கீழ்ப்படிதலையும் பெற்ற ஒருவன் அவர்களை ஒருங்கு கூட்டி ஆளத் தொடங்கி இருப்பான் எனலாம்.

'அரசு பிறப்பதற்கு ஏதுவான வேறுசில முக்கியக் காரணங்களும் உண்டு. அவையாவன, உறவு, மதம், தொழில், போர். இவை நான்கும் மனித வாழ்வின் நிலையான அடிப்படைப் போக்குகள். மனிதனின் இயற்கையிலிருந்தும், தேவைகளிலிருந்தும் எழுந்தவை. இவை ஒவ்வொன்றும் அரசு தோன்றுவதற்கு இன்றியமையாத ஒற்றுமையையும், அமைப்பு முறையையும் உருவாக்கின. அரசுக்கு பணிய வேண்டுமானால், மக்கள் தமது பொதுநலத்தையும், தேவைகளையும் உணரும் தன்மை பெற வேண்டும். இதற்கு இந்நான்கும் பெருந்துணை செய்தன. இவையனைத்தும் பழங்கால சமூகக் கூட்டங்களில் இருந்தமையே அரசு தோன்ற ஏதாவது இருந்தது[3] என்பர்.

மேற்சுட்டிய பழமுறையிலிருந்தே அரசு என்ற அமைப்பும், ஆட்சிமுறையும் தோன்றியிருக்கலாம் என எண்ணுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

ஆட்சி வகைகள்

ஆட்சி வகைகளை மூன்று வகையாகப் பகுக்கலாம். அவையாவன, 1. முடியாட்சி, 2. குடியாட்சி, 3. பொது உடைமை ஆட்சி. இவற்றுள் சங்க காலத்திலும், வள்ளுவர் காலத்திலும் இருந்த முடியாட்சி அமைப்பு முறையே இங்குக் குறிப்பிடத்தக்கது.

'சங்க காலத்து அரசர்கள் பெரும்பாலும், தந்தைக்குப் பின் தனயன் என்ற மரபு வழியில் தங்களது அரசுரிமையைப் பெற்றனர். சோழன் நலங்கிள்ளி, முறையாக அரசாட்சி உரிமை கிடைக்கப் பெற்று வந்ததைக் குறிப்பிடுகிறான்.

(புறம் 75:1-3) அரசன் தன் காலத்திலேயே தன் மகனுக்கு இளவரசுப் பட்டம் கட்டி வைப்பான். இளவரசன் தந்தையின் ஆட்சிக்கு உட்பட்ட நாட்டில் வேறொரு பகுதியில் இருந்து கொண்டு தன்னுரிமையுடனும், தந்தையின் துணையுடனும் நாட்டின் ஒரு பகுதியை ஆண்டு, அரசாட்சியில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்று வருவான். அக்காலை, அவன் தந்தையின் படைத்துணையைப் பெற்றோ, பெறாமலோ வேற்று நாட்டின் மீது படையெடுத்துச் சென்று வெற்றி பெறுவதும் உண்டு. அவன் பெற்ற வெற்றிகள், மகனது வெற்றியாகவும், தந்தையின் வெற்றியாகவும், பாராட்டப்பட்டுள்ளன. தந்தையின் காலத்திற்குப் பின் இளவரசன் தந்தையின் நாட்டையும் சேர்த்து ஆளும் அரசன் ஆவான்'[4]

மேலே சுட்டப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் திருக்குறளை நோக்குவோமானால், வள்ளுவர் காலத்திலும் 'முடியாட்சி' முறையே நிலவி இருக்க வேண்டும் என்ற கருத்திற்கு அரண் சேர்க்கின்றன.

'முடியாட்சி' என்பது ஆட்சியின் தலைமையில் ஓர் அரசனைக் கொண்டது. இவ்வரசன், பெரும்பாலும் முன்னைய அரசர்வழி வந்தவனாகவே இருப்பான். ஆயின், பிறப்புரிமை ஒன்றினால் மட்டுமே அவன் அரசனாய் விடுவான் என்று சொல்லுவதற்கில்லை. குடிகள் அவனை ஏற்றதற்கு அறிகுறியாக அவனுக்கு முடிசூட்டி அரசிருக்கை அளிக்க வேண்டும். பிறப்புரிமை உடையவரும், பிறப்புரிமை அற்றவருங்கூட சூழ்ச்சியாலோ, படைவலியாலோ, அரசாட்சியைக் கைக்கொண்டு, தம் உரிமையை மக்கள் மீது திணிப்பதுண்டு. சிலசமயம், ஓர் அரசனிறந்த பின் மக்களாகவே, தாம் விரும்பிய ஒருவனை அரசனாக தேர்ந்தெடுப்பதும் விரும்பாத அரசனை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து வீழ்த்துவதும் உண்டு.'[5]

'சிறுசிறு நாடுகளாக இருக்கும்போது, அரசர்கள் தாங்களே, முழு பொறுப்புகளையும் ஏற்று நடத்தினர். நாடு அளவால் விரியும் போதுதான் அவர்களுக்குக் கீழ் படைத்தலைவர், அமைச்சர், பணியாளர், நீதியுரைப்போர், ஊர், கிராம, நகர வட்டத்தலைவர்கள் பணியாற்றினர். அரசனே முழு உரிமையும் கொண்டு தனது விருப்பப்படி ஆளும் உரிமை உடையவனாக இருந்தால் அம்முடியாட்சி வல்லரசாட்சி (Despotism)என்று பெயர் பெறும். கிரேக்கர் இத்தகைய ஆட்சியைக் குறிக்க வழங்கிய சொல்லே (Tyranny)இப்போது ஆங்கில மொழியில் கோன்மையைக் குறிக்கிறது.[6] அரசன், அமைச்சர் துணை கூட இல்லாமலோ, அவர்களுக்குக் கட்டுப்படாமலோ நின்று, சட்டங்கள் குடிகளின் விருப்பம் ஆகிய எவற்றையும் பாராமல் தான் வைத்தது சட்டம் என ஆண்டால் அது கடுங்கோன்மையாகும்.[7]

அரசன் குடிமக்களுடைய நலன்களையும், தேவைகளையும், நிறைவேற்ற அவன்கீழ் இருக்கும் அமைச்சர்கட்கும் நாட்டு சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்பட்டு ஆண்டால் அவ்வாட்சி நன்முறையில் அமையும். சிறந்த முடியாட்சியாகவும் விளங்கும். இதுவே, வள்ளுவரின் ஆட்சிக்கொள்கையும் ஆகும். அவர் கூறிய அரசியல் கருத்துக்கள் யாவும் இரண்டாயிரம் ஆண்டுகள்

கழித்தும் கூட நடைமுறைப்படுத்தக் கூடிய அளவிற்குச் சிறந்து விளங்குகின்றன எனலாம்.

வள்ளுவரின் ஆட்சிக் கொள்கை

வள்ளுவரின் ஆட்சிக் கொள்கை கு.ச.ஆனந்தனார் அவர்கள் கூறும் கருத்தின் அடிப்படையில் சுட்டப்படுகிறது.

'இன்றைய ஆட்சியியல் கருத்துகளின் அரசு (Government) என்பது மூவகைச் சிறப்புகளைக் கொண்டுள்ளது. அவையாவன, 1. சட்டமியற்று துறை (Legislative) 2. நிர்வாகம் (Executive) 3. முறைசெயல் (Judiciary) பண்டை நாள்களில் மூவகை அதிகாரங்களும் அரசிடமே நிலைபெற்று இருந்தன. முடியாட்சியில் அரசரே தலைவராகவும், முறைசெயலின் (நீதியின்) ஊற்றுக்காலாகவும் சட்டமியற்றும் அமைப்பாகவும் திகழ்ந்தனர். அஃதாவது, அரசுத் தலைமையே (Head of the State) நிர்வாகத் தலைமையாகவும் (Executive) இருந்தது. ஆனால், அரசு என்ற முழுமையான அமைப்பில் ஆட்சித்தலைமையும் ஒரு கூறே. இன்றைய ஆட்சியியல் கோட்பாடுகளுக் கேற்ப, ஒரு நாட்டின் அரசை சட்டமியற்றும் துறை, நிர்வாகம், முறைசெயல் (நீதி) என பகுத்துக் கொள்ளளவில்லை. மாறான இம்மூன்றையும் உள்ளடக்கிய அரசைத் தனியாகப் பகுத்தும், நிர்வாகத் தலைமையை அரசன் அடங்கிய ஓர் அமைப்பாகப் பிரித்துத் தனித்தனிக் கொள்கையை உருவாக்கியும் தருகிறார்.[8]

அரசனுக்குரிய இலக்கணம்

அரசனே ஒரு நாட்டின் ஆட்சி அமைப்புக்கு அடிப்படையாக இருப்பவன். அவனுக்குரிய இலக்கணங்களாக வள்ளுவர் கூறுவன.

1. அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை, ஊக்கம், மடியின்மை, கல்வியுடைமை, ஒரு பொருளை ஆராய்ந்து துணிந்த கருத்துக்களை எடுத்துரைத்தல்.
2. அரசனுக்குரிய தர்மங்களை கடைப்பிடிப்பவனாகவும் , கொலை, களவு முதலியவைகள் நிகழும் போது அவற்றை தடுத்து நிறுத்துபவனாக இருத்தல்.
3. குடிமக்களுக்கு எளியனாகவும், இன்சொலனாதலும் இருத்தல்.
4. தீமையானவற்றை விலக்கி, நன்மையானவற்றை மட்டுமே ஆராய்கின்ற திறனுடையவனாக இருத்தல்.
5. தன் குற்றத்தை நீக்கி, பிறர் குற்றத்தை கண்டிக்கத் தக்கவனாகவும் இருத்தல்.

மேற்சுட்டப்பட்ட இலக்கணங்கள் யாவும் பொருத்தமுற அமைந்த அரசனே சிறந்த அரசனாவான். இவன் தலைமையில் நடைபெறும் ஆட்சியில் நிர்வாகம், நீதித்துறை, ஆட்சிப்பொறுப்பு முதலியவைகள் எவ்வாறு நிகழ்ந்தன என்பது இங்கு சுட்டப்படும்.

ஆட்சிப் பொறுப்பு (Executive)

வள்ளுவர் நோக்கில், ஆட்சிப் பொறுப்பு என்பது, அமைச்சர் படைத்தலைவர், தூதுவர், ஒற்றர் முதலான அரசு அலுவலர்களை நியமித்தல், அவர்களின் செயல்களைக் கவனித்தல் என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும்.

பழைய இலக்கிய நூல்களில் சிலவற்றில், ஐம்பெருங்குழு, எண்பேராயம் ஆகிய அலுவலரைப் பற்றிக் குறிப்புக் காணப்படுகிறது. மதுரைக் காஞ்சியிலும், பிற்காலத்தைச் சார்ந்த சிலம்பு, மேகலை, பெருங்கதை ஆகிய இலக்கிய நூல்களில் இவைப் பற்றிக் கூறப்பட்டுள்ளன.

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களிலிருந்து குறிப்பிட்ட சில உறுப்பினர்கள் இக்குழுக்களில் இருந்தனரெனத் தெரிகிறது. ஐம்பெருங்குழு உறுப்பினர்கள் கீழ்க்குறிக்கப்படுவோர் ஆவர்.

1. புரோகிதர்
2. படைத்தலைவர்
3. தூதுவர்
4. ஒற்றர்
5. அமைச்சர்கள்

எண்பேராயத்தின் உறுப்பினர்கள்:

1. கரணத்தியலவர் அதாவது அரசு கணக்கர்கள்
2. கருமகாரர் அல்லது செயலர்
3. கனகச் சுற்றம் அதாவது அரசியல் கஜானா அலுவலர்
4. கடைகாப்பாளர் அதாவது அரண்மனை காப்போர்
5. நகரமாந்தர் அதாவது நகரில் வாழும் சிறந்த தலைவர்கள்
6. படைத்தலைவர் (காலாட்படையின் தலைவர்கள்)
7. யானைவீரர் (யானைப் படைத் தலைவர்கள்)
8. இவுளி மறவர் அதாவது குதிரைப்படையின் தலைவர்கள்.[9]

மேலே குறிப்பிட்ட அலுவலர்கள் அனைவரும், அரசு அலுவலர்களாக இருந்தனர் என்பது தெளிவு. இதில் குறிப்பிட்டதுபோல், வள்ளுவர் தம் குறளில், அரசு அலுவலர்களை ஐம்பெருங்குழு உறுப்பினர் என்றும், எண்பேராயத்தின் உறுப்பினர் என்றும் எங்கும் குறிப்பிடவில்லை என்பது நோக்கத்தக்கது. வள்ளுவர் தம் குறளால் அறியலாகும் அரசு அலுவலர்கள்.

1. அமைச்சர்கள்
2. தூதர்
3. ஒற்றர்
4. நிலைமக்கள் (படைவீரர்)
5. தலைமக்கள் (படைத்தலைவர்)

என்பவராவார்கள்.

'அமைச்சரும், தூதரும் ஒருவராகவும் இருக்கலாம். வேறாகவும் இருக்கலாம். அமைச்சர், தூதர், ஒற்றர் பற்றித் தனித்தனி அதிகாரங்கள் குறளில் அமைந்துள்ளன. நிலைமக்களும், தலைமக்களும் படையில் பணிபுரியும் அலுவலர்.

' நிலைமக்கள் சால உடைத்து எனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல்' (770)

நிலைமக்களாவார் படைமறவர். தலைமக்களாவார் படைத்தலைரவர். இவ்வாறு குறளில் வெளிப்படப் பேசப்பட்டாரும், வெளிப்படப் பேசப்படாதவரும் ஆகிய அனைவரையும் தேர்தலும், அமர்த்தலும் ஆள்தலுமே அரசனது ஆள்தல் பணியாகும்'[10]

அரசு அலுவலரை நியமித்தல்

அரசு அலுவலரை தேர்ந்தெடுக்கும் முறையினை, தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல் எனும் இரண்டு அதிகாரங்களில் சுட்டுகிறார்.

' அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறம்தெரிந்து தேறப் படும்' (501)

எனும் குறளுக்கு பரிமேலழகர் விளக்கம் கொடுக்கும்போது, அறம், பொருள், இன்பம், உயிரச்சம் என்ற நான்கினையும் வடநூல் மரபைப் பற்றி விளக்கம் தருகிறார். எனினும், போதிய அடிப்படைத் தகுதிகளை உய்த்தறிந்த பிறகே, ஒருவர் அரசுப் பணிக்குரியவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டமையை உணர முடிகிறது.

' பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்' (505)

என்ற குறள் தேர்ந்தெடுப்புப் பணிக்கான மதிப்பீட்டை உணர்த்தும்.

' அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி' (506)

என்ற குறளும் தேர்ந்தெடுப்புப் பணியில் மேற்கொள்ள வேண்டிய ஆழத்தைச் சுட்டும்.

இக்குறட்பாக்களில் கூறப்பட்ட குறள்களின் அடிப்படையில், ஓர் அரசன் அந்நாட்டு அரசு அலுவலரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறு அவன் தேர்ந்தெடுக்காவிடின் அவன் பலவகையான தீமைகளை அனுபவிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். இவ்வாறு ஆராயாமல் தேர்ந்தெடுப் பானானால், அறிவறியார்த் தேறுதல் பேதமை எல்லாம் தரும். (507) வழிமுறை தீரா இடும்பைத் தரும் (508) என அறிவுறுத்துகிறார்.

நன்மையையும், தீமையையும் நன்கு ஆராய்ந்து திறம் அறிந்து ஒருவனை ஒரு வினைக்கண் ஆட்படுத்த வேண்டும். அவ்வாறு தேர்ந்து எடுக்கும் அலுவலனைக் கொண்டுதான் நாட்டின் வருவாயை பெருக்க வேண்டும். அவனைக் கொண்டுதான் நாட்டையும் வளப்படுத்த

வேண்டும்.கொலை, களவு, போர் போன்ற பலவகைக் கேடுகள் சூழும்போது இவ்வலுவலரைக் கொண்டு நீக்குவதே அரசின் கடமையாகும்.

மேலே, சுட்டிய கருத்துக்களைக் கொண்டு, அரசன் தன் ஆட்சியின் கீழ் அமர்த்தப் பெறும் அலுவலர்களை எவ்வாறு 'தெரிந்து தெளிதல்' வேண்டும் என்று வற்புறுத்துவதின் மூலம் அரசு அலுவலரைத் தேர்ந்து எடுக்கும் பணியும், அவர்கள் மக்களுக்கு செய்யக் கூடிய பணியும் எவ்வளவு இன்றியமையாதது என்பது தெளியப்படும். வள்ளுவர் கண்ட அரசன் அறிவும், பண்பும் கொண்டோரை அமைச்சர், தூதுவர், ஒற்றர் முதலான உயர் அரசு அலுவலராக அமர்த்தி நாட்டிற்கு நன்மை தரும் பணியில் செலுத்தி ஆள்தல் வேண்டும் என்பதே ஆகும்.

நிர்வாகத் திறன்

'நிர்வாகத்திறன் என்பது ஒரு குறிப்பிட்ட அமைப்பின் கீழ், குறிப்பிட்ட இலக்கை மக்களின் துணையோடு அடையப் பெறுவதாகும்'.[11] ஒரு நிர்வாகத்தில் தலைமைப் பெற்று பணி செய்வது என்பது மிகவும் கடினமான பணியாகும். யார்யாரை எந்த எந்த வேலைக்கு அமர்த்தலாம். எந்த செயலை யாரிடம் கொடுத்தால் ஒழுங்காக முடிப்பார்கள் போன்ற பலவகைகளிலும் சிந்தனை செய்து, அதற்கேற்ப ஆட்களை நியமித்து வேலை வாங்க வேண்டும். நம் முன்னோர்கள் காலத்தில் ஆண்ட மன்னர்களின் செயல்திறன் அவர்களுடைய போர்த்திறமையிலும், ஆட்சி முறையிலும் விளங்கும். நிர்வாக அமைப்பு என்பது, தனிமனிதனுக்கும் தேவை. சமுதாயத்திற்கும் தேவை. பொருளாதாரத் துறை, அரசியல் துறை போன்ற பல துறைகளிலும் 'நிர்வாகத்திறன்' சரிவர அமைவது இன்றியமையாததாகும். ஒரு நாட்டலோ அல்லது தனிமனித வாழ்க்கையிலோ நிர்வாகத்திறன் என்பது சரிவர அமையாவிட்டால் அந்நாடும் தனிமனிதன் வாழ்க்கையும் பாழ்படும்.

திட்டமிடுதல்

நிர்வாகத்திறனில் இன்றியமையாது இருக்க வேண்டியது, 'திட்டமிடுதல்' என்பதாகும். எந்த ஒரு காரியத்தையும் செய்யத் தொடங்குவதற்கு முன்னர், அச்செயலின் ஆழத்தையும், அதனை எம்முறையில் செய்தால் வெற்றி பெறலாம் என்பதனையும் சிந்தித்து திட்டமிட்டு செய்தால் அச்செயல் வெற்றியுடன் முடியும். திட்டமிடாமல் செய்தால் அச்செயல் சிறப்புறுமா என்பது ஐயமே.

இதனையே வள்ளுவர்,

> *' வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்*
> *வைத்தூறு போலக் கெடும்.'* *(435)*

என்கிறார். மேலும், அவரே, ஒரு செயலை செய்ய வேண்டும் என்று எண்ணினால், அச்செயலை செய்வதற்கு முன்பே நன்கு ஆராய்ந்து சிந்தித்து செய்ய வேண்டும். செயலை தொடங்கிய பின்பு செய்வோம் என்று நினைத்தால்

தவறாகும் (467) என்றும், ஒரு செயலை செய்யத் தொடங்குபவர் அச்செயலை செய்து முடிக்கும் உறுதியுடையவராகவும் இருத்தல் வேண்டும் (666) என்றும் வலியுறுத்துகிறார். இதனால் அரசை நிர்வகிக்கும் பொறுப்பில் உள்ள அரசன், எக்காரியத்தையும் செய்யத் தொடங்குமுன் திட்டமிட்டு அச்செயலை செய்யக் கூடிய திறமை உடையவர்களை தேர்ந்து எடுக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்.

ஒரு திறமையுள்ள வேலையாளைத் தேர்ந்தெடுக்க வேண்டுமானால், அவனைவிட வயதில் பெரியவரையோ அல்லது அறிவில் மூத்தவரையோ கலந்து ஆலோசிக்க வேண்டும். இதனை மனதில் கொண்டே வள்ளுவர் 'பெரியாரைத் துணைகோடல்' எனும் அதிகாரத்தை வகுத்து மேலும் வலியுறுத்துகிறார். அறிஞர்களின் துணையின்றி, ஒரு அரசன் நாட்டை நிர்வகிக்க முடியாது என்பது தெளிவு. பிறருடைய கருத்துக்களைக் கேட்டு மதிப்பு தந்தால் ஒருவனுடைய அதிகாரப் போக்கு அழிகிறது. நற்செயல்களுக்கும் ஆக்கத்திற்கும் வழிவகுக்கிறது எனல் பொருந்தும். இக்கருத்தை அடியொற்றியே வள்ளுவர் பெரியாரைத் துணைகோடல் எனும் அதிகாரத்தை வகுத்து அறிஞர்களின் துணை நிர்வகிக்கும் தலைவனுக்கு இன்றியமையாதது என்பதனை வலியுறுத்துகிறார்.

'பண்டைக் காலத்தில் செயல் அமைப்பு, அதிகார அமைப்பு முறையாக இருந்தது. மன்னராட்சிக் காலத்தில், மன்னனே தலைமைப் பொறுப்பேற்று இருப்பான். மேலிருந்து அதிகாரம் கீழிருப்பவர்களைச் சென்றடையும். இயற்றலும், ஈட்டலும், காத்தலும் காத்த வகுத்தலும் எல்லாம் மன்னன் பொறுப்பே. பிறர் கருத்துக்கு மதிப்புத் தருவதும் தராமல் இருப்பதும் அவன் விருப்பைச் சார்ந்தது. இந்த அமைப்பில் குற்றங்கள் ஏற்பட வாய்ப்பு மிகுதி. கூட்டுறவு அமைப்பு முறையே நன்மை தரும். இதற்குரிய சிந்தனையின் தோற்றுவாயைப் 'பெரியாரைத் துணைகோடல்' அதிகாரத்தில் வெளிப்படுத்தி யுள்ளார்.[12] என்பார் கூற்றும் நோக்கத்தக்கது.

ஒரு செயலை எவ்வாறு திட்டமிட்டு தேர்ந்து எடுக்க வேண்டும் என்பதை தெரிந்து செயல்வகை, வலியறிதல், வினைசெயல்வகை முதலிய அதிகாரங்களில் விளக்குகிறார். ஒரு செயலைச் செய்ய தொடங்குமுன் அச்செயலின் அழிவையும், ஆக்கத்தையும் நன்கு சிந்தித்த பின்னரே செய்யத் தொடங்க வேண்டும் (461) நன்கு தெரிந்த குழுக்களோடு சேர்ந்து அச்செயலை செய்ய வேண்டும்(462) பொருள், கருவி, காலம், வினை, இடம் இந்த ஐந்து சூழல்களையும் நன்கு ஆராய்ந்து செயல்பட வேண்டும்(675) என்று வற்புறுத்துகிறார். ஒரு செயலை திட்டமிட்டு செய்யும்போது, அதனோடு தொடர்புடைய வேறு செயலையும் தேர்ந்து இணைத்து விட்டால் அச்செயல் மேலும் வலிமையடையும்(678) என்கிறார்.

இப்பகுதியில் ஒரு அரசனுக்கு இன்றியமையாது இருக்க வேண்டிய பண்புகளில் நிர்வாகத் திறமையும் ஒன்று. நிர்வகிக்கும் திறமையால் ஏற்படும் நன்மைகளே மேற்சுட்டப் பெற்ற கருத்துக்களாகும்.

சட்டமியற்றல்

சட்டம் என்பது, குடிகளின் உரிமைகளையும், கடமைகளையும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் அல்லது ஒழுங்கு முறை செய்யும் அதிகாரம் உடைய அரசன் அல்லது அரசாங்கம், குடிகள் இன்ன இன்ன முறைகளில் நடந்து கொள்ள வேண்டும் என்றும், அதனை மீறி நடந்தால் இன்ன தண்டனை உண்டென்றும் வரையறை செய்வது ஆகும். இங்கு, சுட்டப்படும் சட்டம் என்ற சொல்லோ, நீதி என்ற சொல்லோ நேரடியாக வள்ளுவத்தில் எங்கும் சுட்டப்பெறவில்லை. இன்றைய அரசியல் அமைப்பானது, சட்டத்துறை, நீதித்துறை, நிர்வாகத் துறை எனும் அடிப்படையில் இயங்கி வருகிறது. இதனை ஒட்டிய கருத்துக்கள் வள்ளுவத்தில் இடம் பெறுகின்றன.

'மக்கள் வாழ்விற்கான சட்டங்களை இயற்றுவது சட்டத்துறை. அவற்றைச் செயல்படுத்துவது நிர்வாகத்துறை. இயற்றப்படும் சட்டங்கள் சரியா இல்லையா என்பதை ஆராயவும், செயல்படுத்தும்போது தவறுகள் ஏற்படின் அவற்றைத் தவிர்க்கவும் சட்டங்களை மீறும்போது அவற்றிற்காகத் தண்டிக்கவும் முற்படுவது நீதித்துறை என்று கூறுவர்.'[13]

சமூகத்தில் தீமைகள் விளையக் கூடாது என்பதாலும், செம்மை தேவை என்பதாலும் இயற்றப்படுவதுதான் சட்டம். இயற்றப்பட்ட சட்டத்தை முறையாக அரசன் செலுத்துகிறானா என்பதே இன்றியமையாதது. இதுவே நீதித்துறையின் பணியும் ஆகும். அரசனுடைய கடமைகளுள் ஒன்றாக முறைசெய்தல் என்பது சுட்டப்படுகிறது. இதனை இறைமாட்சி அதிகாரத்தில்,

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்' *(388)*

என்கிறார். இந்த முறைசெய்தலில் இன்றியமையாததாக போற்றப்படுவது குற்றங்கடிதல் ஆகும். இதனைதான்,

'குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்' *(549)*

என்கிறார். மேலும் அவரை, சமூகத்தில் கொலை செய்யக்கூட அஞ்சாத மனஉறுதி படைத்தவர்கள் உள்ளனர். அவர்களை தண்டித்தல் அரசனின் கடமையாகும்(550) என்று வலியுறுத்துகிறார். குற்றம் செய்தவன் கண்டிப்பாக தண்டிக்கப்பட வேண்டியவன். தண்டனைக்குரியவனுடைய தகுதி அறிந்து தண்டனைக் கொடுத்தல் கூடாது. குற்றத்தின் தன்மை அறிந்தே தண்டித்தல் வேண்டும். இதனைதான்,

'ஓர்ந்து கண்ணோடா திறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்து செய்வ.:.தே முறை' *(541)*

என்ற குறள் சுட்டுகிறது.'யார் மாட்டும் கண்ணோட்டம் கொள்ளாது இருந்தால்தான் 'Justice is Blind' என்ற நியதி சிறப்புப் பெறும். நீதிமன்றத்தில் நீதிதேவியின் கண்கள் கட்டப்பட்டு இருப்பது, குறியீடாக இதனைத்தான் உணர்த்துகிறது'[14] என்பார் கூற்றும் வலிவுடையதாக்குகிறது.

குற்றம் செய்தவனுக்கு நீதி வழங்குகையில், குடிமக்களிடையே வேறுபாடு காட்டுதல் கூடாது. அனைவரையும் சமமாக எண்ணிதான் தண்டனை வழங்க வேண்டும். சமமான முறையிலும், எளிமையாகவும் நீதி வழங்க வேண்டும். காண்பதற்கு எளிமையுடையவனாகவும், இன்சொல் பேசுபவனாகவும் அரசு புரிகின்ற அரசன் நடுவுநிலைமை தவறாது இருத்தல் அவசியம். இதனையே,

'சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி' *(118)*

எனும் குறள் சுட்டும்.

தண்டனை வழங்கும் போது அவ்ன் செய்த குற்றத்திற்குத் தக்க தண்டனை வழங்க வேண்டும். அவன் செய்த குற்றம், சூழல், நோக்கம், மனநிலை போன்ற பலவழிகளிலும் அக்குற்றத்தை ஆராய்ந்து அதற்குத் தக நீதி வழங்க வேண்டும் என்பது வள்ளுவம் (561) இத் தண்டனையினைக் கூட குற்றம் புரிந்தவன் வருந்தும்படி கொடுக்காமல் அவன், மறுமுறையும் அக்குற்றத்தைச் செய்யாமல் தன்னைத் திருத்திக் கொள்ள வாய்ப்பு ஏற்படும்படி அளித்தல் சிறப்பு என்கிறது வள்ளுவம்.(562)

சட்டமியற்றலும், அச்சட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வரும்போது அரசன் எவ்வெவ் முறைகளில் நடந்து கொள்ள வேண்டும் என்பதை இன்றைய சட்டவியல் வல்லுநர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்துக்களை அன்றே வள்ளுவர் கூறியுள்ளார் என்ற கருத்து ஏற்புடைத்தே.

வள்ளுவர் கூறும் பொது ஆட்சிக்கொள்கை நடைமுறைகளை ஓர் அரசன் அன்றும் சரி இன்றும் பின்பற்றி நடந்தால், அவ்வாட்சி செங்கோலாட்சியாக அமையும். கொடுங்கோலாட்சி என்பதற்கே இடமிருக்காது. குடிமக்கள் யாவரும் மன்னரைப் போற்றி மகிழ்வர். இதனையே,

'வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி' *(542)*

என்ற குறள் தெளிவாகச் சுட்டும்.

பெறப்பட்ட செய்திகள்

1. அரசு என்ற அமைப்பு சமூகம் தோன்ற அடிப்படையாக அமைந்த மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்டது. இது அவர்களுடைய தற்காப்புக்காகவும் ஏற்படுத்தப்பட்டது எனலாம்.
2. பண்டைக் காலத்தில் 'முடியாட்சி' நிலவியது.
3. அரசனுக்குரிய இலக்கணம் சுட்டப்படுகிறது.
4. அரசன் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு அவனே அரசு அலுவலர்களை தேர்ந்தெடுத்து நியமிக்கும் பணியை மேற்கொண்டான்.
5. ஓர் அரசனுக்கு இருக்க வேண்டிய திறமைகளுள் இன்றியமையாதது நிர்வாகத் திறமையாகும்.

6. ஒரு செயலை எவ்வாறு திட்டமிட்டு ஆராய்ந்து அறிஞர்களின் துணைகொண்டு அதனை செயல்படுத்த வேண்டும் என்பதும் சுட்டப்படுகிறது.
7. சமுதாயத்தில் தீங்குகள் ஏற்படாமல் இருப்பதற்கு இயற்றப்பட்டதே சட்டமாகும்.
8. குற்றம் செய்தவர்கள் மறுமுறையும் அக்குற்றம் செய்யாமல் திருந்தி வாழும் விதமாக தண்டனை அளிக்கப்படல் வேண்டும்.
9. சட்டத்தையும், நீதியையும் சரிவரக் கடைப்பிடித்து நடுவுநிலைமையோடு அரசு புரியும் அரசாட்சியே சிறந்து விளங்கும்.
10. வள்ளுவரின் ஆட்சிக் கொள்கையைப் பின்பற்றி ஒவ்வொரு அரசும் நடைபெற்றால் நாடு வளமுற்று சிறக்கும்.

குறிப்புகள்

1. மு. வரதராசனார், திருக்குறள் அல்லது வாழ்க்கை விளக்கம், திரு.வி.க. அணிந்துரை. பக்.9-10.
2. கா. அப்பாத்துரை, குடியாட்சி, பக்.2.
3. மோ. கிளாரன்சு மு.டி.டி. பெலிக்ஸ் - அரசாங்கத்தின் வரலாறு, பக்.3.
4. தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, தமிழ்நாட்டு வரலாறு - சங்க காலம் அரசியல், பக்.531.
5. கா. அப்பாத்துரை, குடியாட்சி, பக்.19.
6. மேற்படி. பக்.20.
7. மேற்படி. பக்.20.
8. கு.ச. ஆனந்தன், திருக்குறளின் உண்மைப் பொருள், பக்.304.
9. கே.கே. பிள்ளை, தமிழக வரலாறும் பண்பாடும், 'பக்.167-168.
10. தி.முருகரத்தினம், குறள் கூறும் இறைமாட்சி, பக்.119.
11. நா. உஷாதேவி, 'வள்ளுவர் காட்டும் நிர்வாகத்திறன்' செந்தமிழ்ச் செல்வி நவம்பர் 1988 பக்.90.
12. மேற்படி, பக்.94.
13. பக்கிரிசங்கர், 'வள்ளுவர் கண்ட சட்டமும் நீதியும்' - வள்ளுவர் வகுத்த அரசியல், பக்.15-16.
14. மேற்படி. பக்.127.

துணை நூற்பட்டியல்

1. ஆண்டியப்பன், தே, நாடும் வீடும், வானதி பதிப்பகம், சென்னை, 1978.
2. இராமகிருட்டிணன், எசு, திருக்குறள் ஒரு சமுதாயப் பார்வை, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1980.
3. ------- இந்தியப் பண்பாடும் தமிழரும், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1971.
4. கதிரேச செட்டியார், மு பி. ஸ்ரீ இராமானுசாச்சாரி, பி.ஸ்ரீ (தமிழ் மொழிபெயர்ப்பு) கௌடல்யம், பொருணூல், முதல்பகுதி, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1979.
5. ------- கௌடல்யம், பொருணூல், இரண்டாம் பகுதி, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1980.
6. கைலாசபதி. க. பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், மக்கள் வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1978.
7. சிதம்பரனார். சாமி, வள்ளுவர் வாழ்ந்த தமிழகம், இலக்கிய நிலையம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1987.
8. முருகரத்தினம். தி, (பதிப்பாசிரியர்) வள்ளுவர் வகுத்த அரசியல், மதுரைப் பல்கலைக் கழகம், 1974.
9. ------, குறள் கூறும் அரசு, மதுரைப் பல்கலைக் கழகம், 1982.
10. ------, குறள் கண்ட பொருள் வாழ்வு, மதுரைப் பல்கலைக் கழகம், 1973.

ஆங்கில நூல்கள்

1. Agamudai Nambi, Management Philosophy of Thiruvalluvar in Public Administration, Annam Private Ltd., Sivagangai, First Edition, 1987.
2. Thirumathi Sornammal Endowment Lectures on Thirukkural, Part-I, University of Madras, 1971.

இந்தியப் பண்பாட்டில் பழந்தமிழர் விழாக்கள் மற்றும் பொழுதுபோக்குகளின் தாக்கம்

சி. ஏ. முத்துக்கிருஷ்ணன்

விழாக்களும் பொழுதுபோக்குகளும் மக்கள் வாழ்வின் இன்றியமையாத பகுதிகளாகும். விழாக்கள் இன்பத்தின் அடிப்படையிலும், பொழுதுபோக்குகள் துன்பம் மற்றும் வேறு சில காரணங்களாலும் அமைகின்றன. பழந்தமிழர் கொண்டாடிய விழாக்களும் மேற்கொண்ட பொழுதுபோக்குகளும் அவர்களின் பண்பாடுகள், வாழ்வியல் முறைகள் சில சமுதாயக் கோட்பாடுகள் போன்றவற்றை வெளிப்படுத்துகின்றன. இவை இந்தியப் பண்பாட்டில் குறிப்பிடத் தக்க தாக்கங்களை ஏற்படுததியுள்ளன.

தடயங்கள்

விழாக்களும் பொழுதுபோக்குகளும் செயல்முறை நிகழ்ச்சிகளாகும். இவை எப்படி இருந்தன என்பதை ஓவியங்களையும் சிற்பங்களையுங் கொண்டு எளிதில் முடிவு செய்யலாம். ஆனால் பழந்தமிழரின் சிற்பமோ ஓவியமோ ஒன்றுகூடக் கிடைக்கவில்லை. பழந்தமிழர் இலக்கியங்களில் விழாக்கள் மற்றும் பொழுதுபோக்குகள் பற்றிக் கூறப்படும் கருத்துக்களைக் கொண்டு இவை பழந்தமிழர் பண்பாட்டு வரலாற்றில் எந்த இடத்தைப் பெற்றிருந்தன என்பதைத் தெளிவாகக் கூற முடிகிறது. கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் வாழ்ந்த மக்கள் இங்கு பழந்தமிழர் என்று குறிக்கப்படுகின்றனர்.

இந்தியப் பண்பாட்டில் தமிழர் விழாக்களின் தாக்கம்

விழாக்களின் தோற்றம்

சடங்குகளிலிருந்து விழாக்கள் தோன்றின என்பது மானிடவியலார் கருத்து[1] சடங்குகள் என்பன சிறுசிறு செய்கைகள். இச்செய்கைகள் நம்பிக்கை, அன்பு, காதல், பயம், பக்தி, மரியாதை, எதிர்கால வாழ்வில் நன்மை நாடல், வீரவுணர்வு போன்றவற்றின் அடிப்படையில் அவற்றிற்குரிய உணர்ச்சிப் பெருக்கத்துடன் காண்போர் உள்ளத்தை ஈர்க்கும் முறையில் செய்யப்பட்டன. இச்சடங்குகள் நாம் எண்ணிப் பார்க்க இயலாத பழைமை உடையவை என்று ஜே.ஜி. பிரேஸர் கூறுகிறார்.[2]

நம்பிக்கை

நம்பிக்கையின் அடிப்படையில் உலகில் எண்ணிறந்த சடங்குகள் செய்யப்பட்டன; இன்றும் செய்யப்படுகின்றன. நியூ கினியாவின் 'காய்' இன மக்களும், இரஷ்யாவின் 'லெட்டிஷ்' உழவர்களும் பயிர்களுக்கருகில் மரக்கிளைகளில் கொடிகளால் ஊஞ்சல் கட்டி உயர உயர ஆடினால் பயிர்களும் உயரமாக வளரும் என நம்பினர் என்றும், நொண்டியடித்து நடனமாடினால் பயிர் உயரமாக வளரும் என்று இலுசீனிய மக்கள் நம்பினர் என்றும் பிரேஸர் குறிப்பிடுகிறார்.[3]

அன்பு

அன்பின் அடிப்படையிலும் சடங்குகள் செய்யப்பட்டன. திருமணம் நடைபெற்றபோது மக்கட்பேற்றையுடைய மகளிர் நால்வர் மணமக்கள் மீது நீரும், அரளிப் பூவும் நெல்லும் சேர்த்துத் தூவி வாழ்த்தினர்.[4] மணமக்கள் நிறை வளம் பெற்றுக் கற்புடன் நீண்ட காலம் வாழ வேண்டும் என்ற அன்பின் அடிப்படையில் இச்சடங்கு செய்யப்பட்டது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்ததாகக் கூறப்படும் ஆதிச்சநல்லூர் முதுமக்கள் தாழிகளில் எலும்புக் கூடுகள், மெருகிட்ட மட்பாண்டங்கள், பொன்னணிகலன்கள், பொன் வாய்ப்பூட்டுகள், சில இரும்புக் கருவிகள் முதலியவை அகழ்வராய்ச்சியினரால் கண்டெடுக்கப்பட்டன என்று கே.கே. பிள்ளை கூறுகிறார்.[5] சாவுக்குப் பின்னும் வாழ்வுண்டு என்று மக்கள் நம்பினர்.[6] சாவுக்குப்பின் வாழும் வாழ்வில் தங்கள் உறவினர் துன்பமடையக் கூடாது என்று செத்தவர் மீதிருந்த அன்பின் காரணமாக அவரைப் புதைத்த தாழிக்குள் கருவிகளையும், அணிகலன்களையும் வைத்தனர். இச்சடங்குகள் அன்பின் அடிப்படையில் செய்யப்பட்டன. எகிப்திய பிரமிடுகளுக்குள் மனித வாழ்வுக்குரிய பொருட்களும், விலையுயர்ந்த நகைகளும் வைக்கப்பட்டதும் இதே அடிப்படையில்தான்.

காதல்

திருமணமான பெண்டிர் நீராடி, அறுகு, சிறுபூளை, நெல் முதலியவற்றைத் தூவி தெய்வத்தைத் தொழும் சடங்கினை கணவனுடன் பிரியாது வாழ வேண்டும் என்ற நோக்கில் காதலின் அடிப்படையில் மேற்கொண்டனர். கண்ணகி பிரிந்த கணவனை விரைவில் பெறவேண்டும் என்பதற்காக அவள் தோழி தேவந்தி கோவிலுக்குச் சென்று இச்சடங்கினைச் செய்தாள்.[7]

பயம்

பயத்தின் அடிப்படையில் பல சடங்குகள் ஏற்பட்டுள்ளன. சங்ககால மக்கள் பேய்கள், கெட்ட ஆவிகள், துர்தேவதைகள் ஆகியவற்றுக்குப் பயந்தார்கள் என்று கே.கே.பிள்ளை கூறுகிறார்.[8] போர்க்களத்தில் பேய்கள் பிணந்தின்னும் [9] என்றும் புண்பட்ட வீரர்களின் புண்ணைத் தோண்டித் தின்னும்[10] என்றும் பயந்தனர். புண்பட்ட வீரர்களைப் பேய்களிடமிருந்து காக்கச் சில சடங்குகளைச் செய்தனர். பேய்கள் புண்பட்ட வீரர்களை

அணுகாதிருக்க மகளிர் வீட்டின் முன்கூரையில் வேப்பிலையை செருகி வைத்தனர்; வெண்சிறுகடுகினைத் தூவி வைத்தனர், ஆம்பற் குழலை ஊதி அகிலைப் புகைத்தனர்.[11]

பக்தி

வழிபாடும் சடங்காகவே இருந்தது. மகளிர் தழையுடை அணிந்து முத்துக்களையும், வலம்புரிச் சங்கினையும் சொரிந்து கடல் தெய்வத்தை வழிபட்டனர்.[12] தெய்வத்தின் முன் பலவித மலர்களைத் தூவினர்;[13] பாடினர்; பலி கொடுத்தனர். செந்தினையைக் குருதியுடன் கலந்து தூவினர்.[14] தெய்வத்தின் மீது உள்ள பக்தியின் அடிப்படையில் இப்படிப்பட்ட சடங்குகளைச்செய்தனர்.

மரியாதை

சாவுக்குப் பின்னும் வாழ்வுண்டு என்று கருதியதால் இறந்தவர்களிடம் மக்கள் ஒரு தனிமரியாதை செலுத்தினர். இறந்தவர் உறவினராக இருந்தால் அவரிடம் அன்பும், பாசமும், இரக்கமும் காட்டினர். சமுதாயத்தின் பொது நன்மைக்காகச் செத்திருந்தால் ஊர் மக்கள் பலரும் அவரிடம் உயர்ந்த மரியாதை செலுத்தினர். அவருக்காகக் கல் நட்டு வீர வணக்கமும், வழிபாடும் செய்தனர். அப்போது நடுகல்லுக்கு மயிற்றோகை சூட்டி, கள் படைத்துக் கைதொழுதனர்.[15] கணவனின் நடுகல்லை நாள்தோறும் மகளொருத்தி கைதொழுததையும் (புற.306) வீரனொருவனுக்கு ஊரார் நடுகல் விழாவெடுத்ததையும் (புற.232) நோக்கும்பொழுது பாசம், மரியாதை இவற்றின் அடிப்படையில் நடுகற் சடங்குகள் எழுந்தன எனத் தெரிகிறது.

எதிர்கால வாழ்வில் நன்மை நாடல்

மக்கள் வளமுடன் வாழ உணவுப் பொருட்களின் பெருக்கம் தேவை. நிலம் மிகுதியான விளைபொருட்களைத் தர வேண்டும் என்று விரும்பினர். பெண்ணின் மகப்பேற்று வளமும் நிலத்தின் விளைதிறன் வளமும் தொடர்புடையதெனவும் ஒன்றினால் ஒன்றைத் தூண்டி விடலாம் எனவும் நம்பினர்.[16] அரப்பா புதைபொருட்களில் ஒரு செவ்வக முத்திரையில் பெண்ணின் பிறப்புறுப்பிலிருந்து செடியொன்று வெளிவரும் நிலையில் பொறிக்கப்பட்ட உருவத்தை ஜே.மார்ஷல் குறிப்பிடுகிறார்.[17] 'பெண்ணின் முலை செழிப்பைக் குறிக்கும் (fertility symbol) உறுப்பாகும்' என்றும், 'செழிப்பைத் தெய்வங்களுக்கு செழுமையான மார்பகங்கள் இருப்பதைச் சிற்பங்களில் காணலாம்' என்றும் பி.எல்.சாமி கூறுகிறார்.[18] நிலத்தையும் பெண்ணையும் தொடர்பு படுத்திய இந்த நம்பிக்கையின் அடிப்படையில் சில வேளாண் சடங்குகள் தோன்றின. வேளாண் நிலங்களில் ஆண் பெண் உடலுறவுச் செயல்கள் நிலத்தின் விளைவைப் பெருக்கும் என நினைத்தனர்.[19] நிலத்துக்கு விளைவைத் தரும் மழை நீர் பெண்ணின் மலட்டுத் தன்மையை நீக்கி மகப் பேறளிக்கும் என்று நம்பி மலடான பெண்கள் நிர்வாண உடலை மழையில் நனைத்துக் கொண்டனர்.[20] மழை மலட்டுத் தன்மையை போக்குவதாக

நம்பியதால் மகப் பேறுடையவர்கள் பலி தூவிக் கடவுளை வேண்ட மழை பெய்யும் என்று கருதியதைப் புறநானூற்றுப் பாடலால் அறிய முடிகிறது.[21]

வீரவுணர்வு

சங்க காலம் தமிழ் நாட்டின் வீரயுகம் ஆகும். போரில் வீரங்காட்டிக் களப்பட்ட வீரனின் வீரச் செயல்களையும் அவன் பெயரையும் பொறித்துக் கல் நடுவது சடங்காக இருந்தது. குழந்தை இறந்தபோதும் ஊன் தடி பிறந்தபோதும் அதை வாளால் கீறிப் புதைப்பது வீரவுணர்வின் அடிப்படையில் எழுந்த சடங்காகும்.[22]

சடங்குகளின் சமுதாயப் பொதுமை

இவ்வாறு தனிமனிதர்கள் செய்த சடங்குகள் எல்லோர்க்கும் பரவிச் சமுதாயப் பொதுமை பெற்றன 'தனிமனித வழக்கங்களே காலப் போக்கில் சமுதாய வழக்கங்களாக உருப்பெற்று தலைமுறை தலைமுறையாக இடையறாது நிலைத்து வாழ்வு பெறுகின்றன' என்று க.காந்தி கூறுகிறார்.[23]

சடங்குகளின் தொகுப்பே விழா

வயல் வெளிகளிலும், களஞ்சியங்களிலும், களங்களிலும் குடியானவர்கள் செய்த சடங்குகளே அரசுகள் தோன்றியபின் நாட்டுக்கே பொதுவான பெரும் விழாக்கள் ஆயின என்றும்,[24] புராதன எகிப்தில் மதச் சடங்குகள் இவ்வாறு ஒருங்கிணைந்து தேசியத் திருவிழாவாக உருப்பெற்றன என்றும் பிரேஸர் கூறுகிறார்.[25] சடங்குகளின் ஒன்றிணைக்கப்பட்ட கூட்டுத் தொகுதிதான் விழா என அழைக்கப்பட்டது. ஆண்டுகள் பல ஆக ஆக இதற்குப்பின் இது எனச் சடங்குகள் முறை செய்யப்பட்டும், மக்கள் பலரால் ஒன்று கூடிச் செய்யப்பட்டும் விழாக்கள் உருப்பெற்றன. சடங்குகள் தொகுக்கப்பட்டு விழாக்களானபோது சடங்குகளின் பழைய செய்முறைகள் - அமைப்புக்கள் மாறி விழாக்கள் ஆயின.[26]

சடங்கிற்கும் விழாவுக்கும் வேறுபாடு

விழாவில் சடங்குகள் உண்டு. ஆனால் சடங்குகளின் தொகுதி மட்டும் விழாவாகிவிடாது. வெறியாட்டு சடங்குகளின் தொகுதிதான். ஆனால் வெறியாட்டு விழாவாகாது. சடங்குகளின் தொகுப்புடன், சூழ்நிலை, சடங்குகளைச் செய்வோர் மற்றும் காண்போர் மனநிலை, செய்கை, சடங்குகளின் காரணங்கள் இவற்றைப் பொறுத்து விழா அமைந்தது. இத்தோடு சடங்குகள் கலை வடிவம் பெற்று மக்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தபோது விழாவாக முழுமை அடைந்தன.

சமய விழாக்கள்

சமயங்களின் தோற்றம்

கடவுளைப் பற்றிய கருத்து உருவாகாத காலத்தில் மனிதன் மனிதன் போலச் செயல் மூலமாகத் தனக்கு வேண்டியதைப் பெற முயற்சி செய்தான்.[27]

மோரிசு இனப் பெண்கள் உருளைக் கிழங்குத் தோட்டத்தில் தங்கள் உடலை அசைத்து நடனமிடுவர். அவர்கள் ஆடுவதைப் போலக் காற்றடித்து மழை பெய்து செடி முளைத்துக் கிழங்குகள் விளைவு பெருகும் என்று நம்பினர். இந்தப் போலச் செயல் அவர்களுக்குள் ஒரு விளைவை (Effect) உண்டாக்கி விடுகிறது. தங்களின் போலச் செயலால்தான் பயிர் நன்றாக வளர்வதாக நம்புகின்றனர். அதனால் பயிர்த் தொழிலில் மேலும் கவனம் செலுத்துகிறார்கள். அவர்கள் கவனம் செலுத்துவதால்தான் உண்மையிலேயே பயிர் செழித்து வளர்கிறது என்று தாம்ஸன் கூறுகிறார்.[28] வேளாண் சமுதாயத்தில் இந்தப் போலச் செயலுக்கு தெய்வ சக்தி என்று பெயர் கொடுக்கப்பட்டது.[29] இந்த நம்பிக்கை, போலச் செயல்களைப் புனிதமான சடங்குகளாகக் கொண்டது. இந்தச் சடங்குகளும் அவை பற்றிய நம்பிக்கைகளும் சமயங்களைத் தோற்றுவித்தன. பிற்கால நாகரிக வளர்ச்சியில் போலச் செயல்களின் முக்கியத்துவம் மறக்கப்பட்டு சமயங்கள் நிலைபெறலாயின.[30]

சமய விழாக்களின் காரணம்

மக்கள் வேட்டை, வேளாண் தொழில்களில் தங்களுக்கு வருவாயளித்ததாக நம்பிய தெய்வத்துக்கு நன்றிக் கடனாற்ற விழைந்தனர்.[31] அதுவே சமய விழாக்களாக உருப்பெற்றன. வெற்றி பெறுவதற்குத் தெய்வத்தின் அருள் வேண்டும் என்று நம்பினர் என்பதை

'கலையமர் செல்வி கடனுணி னல்லது
சிலையமர் வென்றி கொடுப்போ ளல்லள்' *(சிலப்.12:16,17)*

என்பதாலும் அறியலாம்.

விழாக்களால் வெளிப்படும் பண்பாடுகள்

தைந்நீராடல்

தைந்நீராடல் மகளிரால் மட்டும் மேற்கொள்ளப்பட்ட ஒரு நோன்பாகும். சிறுமியரும், கன்னியரும் இவ்விழாக் கொண்டாடுவது பெருவழக்கமா யிருந்தது. இந்நோன்பு மார்கழியில் தொடங்கியது என்று க.வெள்ளை வாரணரும்,[32] பொ.வெ. சோமசுந்தரமும்,[33] நச்சினார்க் கினியரும்,[34] கூறுகின்றனர். 'பனிப்படுபைதல் விடுதலைப் பருவத்து' (பரி 11:75) என்பதால் இந்நோன்பை மார்கழி முதல்நாளில் தொடங்கி தை முதல் நாளில் விழாவுடன் முடிப்பர் எனக் கொள்ளலாம். மார்கழி மாதம் முழுவதும் நோன்பிருந்து நீராடினாலும் தையில் நீராடியதோடு நோன்பு விழாவுடன் முற்றுப் பெறுவதால் இதற்குத் தைந்நீராடல் என்று பெயர் வந்தது.

நோன்பு நோற்கின்ற காலங்களில் பிறர் மனைகளுக்குச் சென்று மகளிர் பாடினர். அம்மனைகளில் உணவைப் பிச்சையாக ஏற்பது நோன்பின் ஒரு சடங்காகும். அந்த உணவைப் பசித்திருக்கும் ஏழையர்க்கு அளித்தபின் தாம் உண்பர்.[35] இன்று இந்தியாவின் பல்வேறு விழாக் கொண்டாட்டங்களில் ஏழைகளுக்கு உணவு அளிக்கப்படுகிறது. விழாவின் போது பிறரையும்

மகிழ்வித்துத் தாங்களும் மகிழ வேண்டும் என்ற இந்தச் சிறந்த பண்பாடு தைந்நீராடல் என்ற சங்க காலப் பெண்களின் விழாவிலிருந்து மற்ற இந்திய விழாக்களுக்குச் சென்றிருக்கிறது எனலாம்.

காமன் விழா

இல்லறத்தில் கணவனும் மனைவியும் ஈருடல் ஓருயிராய் வாழ்வதும், 'தானே அவளேயாய்' வாழ்வதும் தமிழர் பண்பாடு. மணமுறிவுகளும், மறுமணங்களும் வேறு பல நாடுகளில் மலிந்து காணப்படும் இந்நாளில் தமிழரின் இப்பண்பாடு சிறந்ததொன்றாகப் போற்றப்படுகிறது.

காமனுக்கு விழாவெடுத்த செய்திகள் இலக்கியங்களில் அங்கங்கே காணப்படுகின்றன. காமன் நோன்பின் முடிவில் மகளிர் நீராடிக் காமன் கோட்டம் சென்று வழிபட்டனர். கணவனுடன் பிரியாது வாழவேண்டும் என்று வேண்டிக் கொண்டனர்.[36]

> *'ஆனா விருப்போடு அணி அய்ர்ப, காமற்கு*
> *வேனில் விருந்து எதிர் கொண்டு.* (*கலி. 92*)

என்பதாலும், விஞ்சை வீரன் தன் காதலியுடன் காமக் கடவுளுக்கு விருந்தாட்டயர்ந்தான் என்று இளங்கோவடிகள் கூறுவதாலும் (சிலப் 6:1-4) காமன் விழாவன்று கணவனும் மனைவியும் பெரும் படையல் செய்து காமனை வழிபட்டனர் என்று தெரிகிறது. 'காமவேள் விழவாயிற் கலங்குவள் பெரிதென' (கலி 24:27) என்பதால் கணவன் பிரிந்திருக்கும்போது மனைவி காமன் விழாச் செய்வதில்லை என்றும் அப்போது அவள் பெரிதும் வருந்தினாள் என்றும் தெரிகிறது. கணவன் உடன் இல்லை என்றாள் கடவுள் விழாவானாலும் மகளிர் அதைக் கைவிடும் இன்றைய இந்தியப் பண்பாடு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழரின் விழாவில் காணப்படுவதும்

> *'இம்மை மாறி மறுமை ஆயினும்*
> *நீயா கியர் என் கணவனை'* (*குறுந்.49.*)

என்று இலக்கியங்கள் அப்பண்பாட்டுக்கு வலிமை சேர்ப்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இந்திர விழா

இந்திர விழா நாட்டு மக்கள் எல்லோரும் கலந்து கொண்டு கொண்டாடிய ஒரு மாபெரும் விழாவாகும். இந்திர விழாக் கொண்டாட்டத்தை வால்மீகியும், காளிதாசரும் தத்தம் நூலில் குறிப்பிடுகின்றனர் என்று உ.வே.சாமிநாதையர் குறிப்பிடுகிறார்.[37] 'மேலையாரிய நாடுகளில் இந்திர வணக்கம் இருந்ததில்லை' என்று மாக்ஸ்முல்லார் கூறுவார் என்று ஞா.தேவநேயன் குறிப்பிடுகிறார்[38] ஆரியர்கள் அவர்கள் குடியேறிய நாட்டு மக்களின் வாழ்க்கை முறைகளையும் எளிதில் கற்றுக்கொண்டு தங்களுடையதாகச் செய்து வந்தனர்.[39] எனவே வேதகால ஆரியர் இந்திர வணக்கத்தை வடநாட்டுக் திராவிடமிருந்து பின்பற்றியிருக்க வேண்டும்.[40] இந்திர விழாச் சடங்குகள் ஆகம வழிபாட்டு

முறைச் சடங்குகளும், பழந் தமிழர் வழிபாட்டு முறைச் சடங்குகளும் கலந்ததாகும்.

இந்திர விழா நாளன்று முதுபெரும் பெண்டிர் நாளங்காடிப் பூதத்துக்குப் புழுக்கலும் பூவும், பொங்கற் சோறும் சொரிந்து குரவையாடி நாட்டு மக்கள் அனைவரும் பசி, பிணி, பகை நீங்கி வளமுடன் வாழ்க என்று வேண்டினர். படை மறவர்கள் நாளங்காடிப் பூதத்தின் பலிபீடத்துக்குச் சென்று 'எம் அரசனுக்கு வரும் துன்பத்தை நீக்கி வெற்றியைத் தருக ' என வேண்டினர்.[41] சிலர் தலையரிந்து உயிர்ப் பலியூட்டினர்.[42] முது பெண்டிர் தெய்வத்துக்கு விழாவெடுத்து வேண்டும் போது தங்களுக்காக வேண்டிக் கொள்ளாது நாட்டு மக்கள் அனைவருக்காக வேண்டிக் கொண்டனர். இந்தப் பண்பாடு மற்றவர்க்காகவும் நாம் வாழ வேண்டும் என்ற இந்தியப் பண்பாட்டுடன் ஒப்புநோக்கத் தக்கது.

'தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே' (புறம். 182)

'உண்டாலம்ம இவ் வுலகம்'என்ற இலக்கியக் கருத்துக்கள் அப்பண்பாட்டுக்கு வலிமை சேர்த்தன.

மன்னன் வெற்றியடைய வேண்டும் என்பதற்காக வீரர் தம் தலையரிந்து தங்களையே பலியிட்டுக் கொண்டது சாதாரண நிகழ்ச்சி அல்ல. இது மிகக் கொடுமையான நிகழ்ச்சிதான் என்றாலும் அந்த வீரர்களின் உள்ள உறுதி எண்ணிப் பார்க்கத் தக்கது. மன்னன் மீது உள்ள தனிப்பட்ட அன்பின் காரணமாக அந்த வீரர்கள் தங்கள் தலையை அரிந்து கொண்டிருக்க முடியாது. மன்னன் சமுதாயத் தலைவன். அவன் வெற்றியடைந்தால் நாட்டு மக்கள் பாதுகாப்புடன் வாழ்வர் என்ற பொது நன்மைக்காகத்தான் அவர்கள் தங்களைப் பலியிட்டுக் கொண்டனர்.

சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் போர் நடைபெற்றபோது இந்திய வீரர் சிலர் தங்களைப் பலியிட்டுக் கொண்டு பகைவர்களின் இலக்குகளை அழித்தனர். இந்தியாவின் இந்த உயிர்த் தியாகப் பண்பாட்டுக்கு தலையரிந்து பலியிட்டுக் கொண்ட தமிழரின் தியாகச் செயல்கள் முன்மாதிரியாக அமைந்தன.

திருமண விழா

அன்றைய சமுதாயத்தில் ஒருதார மண முறையும் பலதார மணமுறையும் வழக்கத்தில் இருந்தன. களவின் வழிவந்த கற்பு என்றும் களவின் வழி வாராக் கற்பு என்றும் இரு மண முறைகளைத் தொல்காப்பியம் காட்டுகிறது. இவை தவிர 'மறையோர் தேயத்து மன்றல் எட்டு (தொல். கற். 89) என்று ஆரியர் முறைத் திருமணங்கள் எட்டையும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இவை பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்திருவம், ஆசுரம் இராக்கதம், பைசாசம் என்பனவாகும் என்று உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இவற்றல் கந்திருவம் தவிரப் பிற ஏழும் பொருளியல் அடிப்படையில்

நடைபெற்றவையாகும்.[43] ஆனால் தொல்காப்பியம் காட்டிய இரு தமிழர் மணமுறைகளும் பொருள் அடிப்படையில் அமைந்தவையல்ல. காந்திருவம் என்பது ஆணும் பெண்ணும் கூடும் கூட்டமே தவிர அதற்குப் பின் அவர்கள் கணவன் மனைவியராய் வாழ வேண்டும் என்பதில்லை. இன்றைய இந்தியாவில் ஆரிய முறைத் திருமணங்கள் எட்டும் வழக்கற்றுப் போயின. தொல்காப்பியர் கூறிய கருத்தொருமித்த காதலர் திருமணமும் பெரியோர் முடிவு செய்யும் ஏற்பாட்டுத் திருமணமும்தான் பெரு வழக்காக இருக்கின்றன. பெரும்பாலும் இந்தியா முழுவதும் பழக்கத்தில் உள்ள இந்த இரு திருமண முறைகளும் இந்தியப் பண்பாட்டியலுக்குத் தமிழர் தந்த நன்கொடையாகும்.

திருமணம் முடிந்ததும், மக்களைப் பெற்ற மங்கலமுடைய பெண்கள் நால்வர் மணமக்களைச் சுற்றி நின்று கற்பில் வழுவாது கணவர்க்கு இன்பம் நல்கி, அவனைப் பேணுவாயாக என்று சொல்லி, புனித நீரோடு பூக்களையும் நெல்லையும் சேர்த்து மணமக்கள் மீது தூவி வாழ்த்தினர்.[44] நீரும், மலரும், நெல்லும் வளத்துக்கு அடையாளமாகும். மணமக்கள்மீது இவற்றைத் தூவி வாழ்த்துவது வேறு எந்த நாட்டிலும் பழக்கத்தில் இல்லை. தற்கால இந்தியாவில் பல இனத்தவரிடமும் உள்ள இந்தப் பழக்கம் தமிழர் இந்தியப் பண்பாட்டிற் வழங்கிய இன்றியமையாத பகுதியாகும்.

சமுதாய விழாக்கள்

பூந்தொடை விழா

வீரயுகமாகிய அக்காலத்தில் ஆடவர் அனைவரும் போர் செய்யக் கற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயத்திலிருந்தனர். மன்னன் நாட்டிலுள்ள இளைஞர்களுக்குப் போர்ப் பயிற்சி அளிக்கும் 'போரவை' என்ற அமைப்பை ஏற்படுத்தியிருந்தான். போரவைக் கோப்பெருநற்கிள்ளி என்ற சோழ மன்னன் போரவைக்குத் தானே தலைமை ஏற்றுப் போர்ப் பயிற்சியளித்தான் என்று கே.கே.பிள்ளை கூறுகிறார்.[45] இக்காலத்தில் போர்ப் பயிற்சிக் கல்லூரி (Military College) அமைக்கப்படுவதும் அங்கு இளைஞர்களுக்கு போர்ப் பயிற்சி அளிக்கப்படுவதும் அந்நாளில் தமிழர் போரவை அமைத்துப் போர்ப் பயிற்சியளித்த முறையுடன் எண்ணிப் பார்க்கத் தக்கதாகும்.

புதுப்புனல் விழா

ஆற்றில் நீர் பெருகி வரவேண்டும் என்பதற்காக உலகின் பல பகுதிகளிலும் வாழ்ந்த பல்வேறு இன மக்களும் விழாவும் வேறுபல சடங்குகளும் செய்தனர். ஆற்றில் வெள்ளம் பெருகிவர வேண்டும் என்பதற்காக ஆடை அணிகலன்களால் கன்னியொருத்தியை அழகுசெய்து அவளை ஆற்று நீரில் வீசிக் காவு கொடுத்தனர்.[46] ஆனால் தமிழ் நாட்டில் ஆற்று வெள்ளம் பெருகி வர வேண்டி தங்கத்தாலான நத்தை, நண்டு, இறவு, வாளை முதலியவற்றை ஆற்றில் விட்டு 'நாடு விளைவதாக' என்றனர்.[47] சமுதாயம் வளம் பெறுவதற்காகப் புதுப்புனலைப் போற்றி வரவேற்கும் விழாக்கள் இந்தியாவின் பல இடங்களிலும் நடைபெறுகின்றன. சமுதாயம் வளம்

பெறுவதற்காகத் தங்கள் கைப் பொருளை நீரில் இழக்கும் இப்பண்பாடு தமிழரிடமிருந்து இந்தியாவின் பல இடங்களுககுப் பரவி இந்தியப் பண்பாடாக மலர்ந்துள்ளது.

நடுகல் விழா

அன்பு, பாசம் என்ற உணர்வுகள் தமிழர்களுக்கு மிக்கிருந்தன என்பதை இலக்கியங்களில் பரக்கக் காணப்படுகிறது. அத்தோடு வீரவுணர்வு தமிழக அரசியலிலும், தனிமனித வாழ்விலும் அடிப்படையாக இருந்தது. தங்களுடன் வாழ்ந்து மறைந்த பெரு வீரர்களுககு அன்பு, பாசம் இவற்றின் காரணமாக நினைவுச் சின்னம் ஏற்படுத்தும் முறையிலும், அவர்களது செயற்கரிய வீரச் செயல்களைப் பாராட்டும் முறையிலும் மறைந்த வீரர்களின் அடையாளமாகக் கல்லை நடும் வழக்கம் தோன்றியது. பெருமையும், புகழும், வீரமும் கொண்டவர்களுக்குக் கல் நடும் வழக்கம் இருந்தது என்ற குறிப்பு தொல்காப்பியத்தில் காணப்படுகிறது.[48] இந்தக் கல்லை வீரக்கல் என்றும் குறிப்பிட்டனர்.[49] வீர யுக காலமான அந்நாளில் மக்கள் வீரத்தை உயிரினும் மேலாக மதித்தனர். எனவே உயிரை விடுத்து வீரத்தை நிலைநிறுத்திய வீரனைப் பாராட்டி அவனுக்கு நினைவுக்கல் நட்ட நிகழ்ச்சியை விழாவாகக் கொண்டாடினர். ஆண்டுக்கொரு முறை வரும் நடுகல் நட்ட நினைவு நாளையும் விழாவாகக் கொண்டாடினர்.[50]

பொது வாழ்வில் ஈடுபட்டுச் சமுதாய மேம்பாட்டுக்காகப் பாடுபடும் சான்றோர் சமுதாயப் பகைவர்களால் உயிரிழக்கின்றனர். நாட்டைக் காக்க வீரத்துடன்ட போர் புரிந்து அருஞ்செயல் ஆற்றிய வீரர் பலர் போரில் மடிகின்றனர். இப்படிப்பட்ட சான்றோர், வீரர் போன்றோரின் குடும்பத்தினரை மரியாதை செய்வதும், பொதுவிடங்களில் அவர்களுக்குச் சிலையெடுப்பதும், ஆண்டுக்கொரு முறை அவர் இறந்த நாளில் விழாவெடுப்பதும் இன்று இந்தியாவில் பரவலாக நடைபெற்று வருகிறது. அந்நாளில் தமிழர்களிடம் இருந்த நடுகல் விழாவெடுத்து நன்றி செய்யும் பழக்கம் இன்று இந்தியாவின் பொதுப் பண்பாடாக வளர்ந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

இந்தியப் பண்பாட்டில் பொழுதுபோக்குகளின் தாக்கம்

பொழுதுபோக்கின் தோற்றம்

பொழுதுபோக்கு, நாகரிகமும் பண்பாடும் தோன்றுவதற்கு முன்பாகவே மனிதனிடம் தோன்றிவிட்டது. காடு மேடெல்லாம் துரத்தி வேட்டையாடி விலங்கைத் தின்ற மனிதன் களைப்பால் இளைப்பாற நினைத்தான். விலங்குகளின் தொல்லைக்குப் பயந்து மரத்தின் நீண்ட கிளையில் படுத்து இளைப்பாறினான். அப்போது காற்றினால் கிளை மேலும் கீழும் ஆடியது. அவனுக்கு அது மகிழ்ச்சியைக் கொடுத்தது. அந்த மகிழ்ச்சிக்காக நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவன் மரக்கிளையைத் தானே ஆட்டி அதில் அமர்ந்து ஆடினான். மனித வாழ்க்கையில் அன்றே பொழுதுபோக்குத் தோன்றி விட்டது.

பொழுதுபோக்கு என்பது யாது?

பொழுதைப் போக்குவது அல்லது பொழுதைப் போக்க உதவுவது பொழுதுபோக்கு ஆகும். பொழுது போக்கினான் என்றால் காலங்கழித்தான் என்று பொருளாகிறது. மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை காலத்துடன் தொடர்புடையவனாக இருக்கிறான். காலத்துடன் தொடர்பில்லாமல் மனிதனால் ஒரு நொடி கூட இருக்க முடியாது. ஆனால் உடலும் உள்ளமும் காலத்துடன் இணைந்து போகாததால் உள்ளம் ஒய்ந்து விட்டதை பொழுதின்மீது ஏற்றி மனிதன் பொழுதுபோகவில்லை என்கிறான். மனித உள்ளத்துக்கும் காலத்துக்கும்தான் தொடர்பு இருக்கிறது. மனிதன் தன் வழக்கமான அன்றாடப் பணிகள் முடிந்தபின் காலம் கொன்னே கழியாதிருக்க வேறு சில பணிகளில் தன்னை ஈடுபடுத்திப் பயன் துய்க்கிறான். அப்போது அவன் ஈடுபடும் மாற்றுப் பணி எதுவாக இருந்தாலும் அதைப் பொழுதுபோக்கு எனலாம். பொழுதுபோக்கு (Pastime) என்பது 'காலத்தைக் கடத்த உதவும் ஒன்று' என்று சேம்பர் ஆங்கில அகராதி குறிப்பிடுகிறது.[51]

மனவாதை (Mental torture)

நேரம் போகவில்லை என்பது மிகக் கொடுமையானது. இது ஒரு மனவாதை ஆகும். இந்த மனவாதையை சமுதாயத்தில் பலரும் பல நேரங்களில் அனுபவிக்கின்றனர்.

பொழுதுபோக்கின் பணி

காலத்துடன் தொடர்பு கொள்ள முடியாமல் வதைப்படுகின்ற மனமானது பொழுதுபோக்கில் ஈடுபடுகிறது. அப்போது பொழுதுபோக்கு உள்ளத்தைக் காலத்துடன் தொடர்புபடுத்தி விடுகிறது. உண்மையில் பொழுதுபோக்கு பொழுதைப் போக்குவதில்லை. உள்ளத்தையும் காலத்தையும் தொடர்புபடுத்தி உள்ளம் மகிழும் வகையில் பொழுதைப் போக்க உள்ளத்துக்கு உதவுகிறது. இவ்வாறு பொழுதைத் தாம் போக்காது உள்ளம் பொழுதைப் போக்க உதவுவது பொழுது போக்கின் பணியாகும்.

பொழுதுபோக்கில் ஈடுபடத் தூண்டும் காரணங்கள்

1. செல்வமிகுதி

மக்களைப் பொழுதுபோக்கில் ஈடுபடத் தூண்டும் காரணங்களை ஐந்தாகப் பிரிக்கலாம். செல்வந்தர்கள் குடும்பப் பணிகள் ஆற்ற வேலைக்காரர் பலரை வைத்துக் கொள்வர். மேலும் இயந்திரங்களாலும் தங்கள் வேலைகளை எளிதில் முடித்துக் கொள்வர். ஆகையால் செல்வந்தர்களுக்குப் பொழுது நிறையக் கிடைக்கிறது. ஆகையால், ஒவ்வொரு நாளும் பொழுது போகவில்லை என்ற மனவுணர்ச்சியில் சிக்கித் தவிக்கிறார்கள். பொழுது போகவில்லையே எதைச் செய்வது என்று மனம் அல்லல் படும்போது இவர்கள் பொழுதுபோக்குகளில் ஈடுபடுகிறார்கள். எனவே செல்வமிகுதி மனிதன் பொழுதுபோக்குகளை நாடத் தூண்டும் ஒரு காரணமாகிறது.

2. மனச் சலிப்பு

ஒரு பணியைத் தொடர்ந்து செய்வதால் அப்பணி மனத்தைச் சோர்வடையச் செய்து களைப்பையும் எரிச்சலையும் தருகிறது. இந்த எரிச்சலும், சோர்வும் கொண்ட மனநிலைதான் மனச்சலிப்பு (Boredom) ஆகும். பொழுதுபோக்கில் ஈடுபடும்போது மனச்சலிப்பு மறைந்து மனமகிழ்ச்சி கிடைக்கிறது. எனவே, மனச்சலிப்பு மனிதனைப் பொழுதுபோக்கில் ஈடுபடத் தூண்டும் காரணங்களில் ஒன்றாக இருக்கிறது.

3. மனக்கவலை

குடும்பச் சூழ்நிலைகளாலும் சமுதாயச் சிக்கல்களாலும் மனிதனுக்கு அவ்வப்போது பெருத்த மனக்கவலைகள் உண்டாகின்றன. இக்கவலைகள் பல மாதங்கள் - ஏன் பல ஆண்டுகள்கூட மனத்தில் நின்று நிலைத்து மனத்தை அலைக்கழிக்கின்றன. கவலை மனத்தில் நின்று மனிதனை வேறெதும் செய்யவிடாது தடுத்து விடுகிறது. உள்ளத்தால் ஒரு நேரத்தில் ஒன்றைத்தான் நினைக்க முடியும். ஒன்றை நினைக்கும் போது பிற எல்லாவற்றிலிருந்தும் உள்ளம் விடுபடுகிறது. உள்ளம் பொழுதுபோக்கைப் பற்றி நிற்கும்போது ஏற்கனவே அங்கு நின்ற கவலை உள்ளத்திலிருந்து அகன்று விடுகிறது. பொழுதுபோக்கு முடிந்ததும் மீண்டும் கவலைகள் உள்ளத்தைக் கவ்வுகின்றன. மறுபடி பொழுதுபோக்கில் ஈடுபடும்போது உள்ளம் கவலையை மறக்கிறது. தொடர்ந்து பொழுதுபோக்கில் ஈடுபடும்போது உள்ளம் நிரந்தரமாகக் கவலையை மறந்து விடுகிறது. எனவே மனக்கவலை என்பதும் மனிதனைப் பொழுதுபோக்கில் ஈடுபடத் தூண்டும் ஒரு காரணமாக அமைகிறது.

4. காத்திருத்தல்

ஏதாவது ஒன்றுக்காக மனிதன் காத்திருக்கும்போது உள்ளம் ஒரு நிலையிலில்லாது அலைக்கழிக்கப்படுவதால் காத்திருத்தல் உள்ளத்துக்குத் தருகிற ஒரு துன்பமாகும். காத்திருக்கும் நேரத்தில் பொழுதுபோக்கில் ஈடுபட்டால் அது காத்திருக்க வேண்டிய நேரத்தை நிரப்புகிறது. காத்திருத்தலால் அனுபவிக்க வேண்டிய மனத்துன்பத்தை மக்கள் அனுபவிக்காமல் தப்புவிக்கிறது. எனவே காத்திருத்தல் என்பதும் மக்களைப் பொழுதுபோக்கில் ஈடுபடத் தூண்டும் ஒரு காரணமாக அமைகிறது.

5. மகிழ்ச்சியுறல்

குறிக்கோள் ஏதுமின்றி மனமகிழ்ச்சிக்காக மட்டுமே மனிதன் பொழுதுபோக்குகளில் ஈடுபடுவதும் உண்டு. மற்றவர்கள் பொழுது போக்கினால் மகிழ்ச்சி அடைவதைக் காணும் மனிதன் தானும் அந்த மகிழ்ச்சி அடைவதற்காக அந்தப் பொழுதுபோக்கில் கலந்து கொள்கிறான். எனவே மகிழ்ச்சியுறல் என்பதும் மனிதனைப் பொழுதுபோக்கில் ஈடுபடத் தூண்டும் காரணமாக அமைகிறது.

பொழுதுபோக்குகளால் வெளிப்படும் பண்பாடுகள்

மகளிர் பொழுதுபோக்கு - ஓரையாட்டம்

'ஓரையாட்டம்' என்பது அந்நாளில் மகளிர் பொழுதுபோக்காக ஆடிய விளையாட்டாகும். ஓரையாட்டும் மகளிரைக் கண்ட கடற்கரை நண்டுகள் அஞ்சி மிக வேகமாகக் கடலுள் சென்றன[53] என்றும் ஓரையாடுவோர் அவைகளைப் பிடித்தாட்ட அவை துன்புற்றன என்றும் வருகின்ற குறிப்புகளிலிருந்து ஓரையாட்டம் கடற்கரையில் நிகழ்த்தப்பட்டது எனத் தெரிகிறது. ஓரையாடும் மகளிர் கூட்டமாக மருதநில நீர்நிலைகளின் கரையில் ஓடித் திரிந்து பூக்களைச் சேர்த்தனர்[54] என்ற குறிப்பும் காணப்படுகிறது. எனவே கடற்கரை மட்டுமல்லாது ஏரி குளம் போன்ற நீர்த் தேக்கங்களின் கரைமீதும் மகளிரின் ஓரையாட்டம் நடைபெற்றது எனத் தெரிகிறது. ஓரை - 'பஞ்சாய்ப் பாவை கொண்டு மகளிராடும் விளையாட்டு' என்று பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் கூறுகிறார்.[55] 'தாதிற் செய்த தண்பனிப் பாவை' என்றவிடத்து 'பூந்தாது முதலிய பொடிகளாற் செய்யப்பட்ட குளிர்ச்சியையுடைய விளையாட்டுப் பாவை' என உ.வே.சாமிநாதையர் பொருள் கூறுகிறார்.[56] ஓரை என்பதை மகளிரின் விளையாட்டுப் பாவை எனச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்க் கலைச்சொல்லகராதி கூறுகிறது.[57] இவைகளிலிருந்து ஓரையாட்டத்தில் கையினாற் செய்யப்பட்ட பாவை ஒன்றை மகளிர் விளையாடப் பயன்படுத்தினர் என்று தெரிகிறது. பஞ்சாய் என்பது ஒரு வகைக் கோரைப் புல் என்று பி.எல்.சாமி தெரிக்கிறார்.[58] இதைக் கிழித்துக் கசக்கினால் மெல்லிய பஞ்சு போன்ற நார் கிடைத்தது.[59] இதனால்தான் இக்கோரைக்குப் பஞ்சாய் அல்லது பைஞ்சாய் எனப் பெயர் வந்தது. ஓரைப் பாவையைக் பஞ்சாய்க் கோரைப் புல்லால் செய்ததோடு மலர்களில் தோற்றும் மகரந்தப் பொடியாலும் மகளிர் செய்தனர்.[60]

பாவையிடம் பேரன்பு

ஓரையாடும் மகளிர் தங்கள் பாவையிடம் பேரன்பு கொண்டிருந்தனர். அதைக் குழந்தையாக வளர்ப்பதும் திருமணம் செய்து பார்ப்பதும் உயிராகப் போற்றுவதும் மகளிர்க்கு இயல்பாக இருந்தது.[61] கருவுருங் காலத்துப் பரத்தையிற் பிரிந்த தலைவனோடு ஊடிய தலைவியிடம் 'இக்காலத்து நீ ஊடியிருக்கலாமா? என்று தோழி கேட்டபோது, நான் தலைவனுக்குக் களவுக் காலத்திலேயே பஞ்சாய்ப் பாவை ஈன்று கொடுத்தேன், நீ வாளா போ' என்றாள் தலைவி.[62] தோழியொருத்தி தலைவியைக் குறியிடத்து நிறுத்தி வந்து தலைவனிடம் பேசும்போது அன்புடன் வளர்த்த எங்கள் பாவையைப் படுக்க வைத்து வந்திருக்கிறோம். இரவு வரின் என் மகளாகிய அப்பாவையின் நெற்றியை நாரைகள் மிதித்து விடும். நாங்கள் விரைந்து போக வேண்டும். தலைவியைச் சீக்கிரம் அனுப்புக என்றாள்.[63] 'களவுக் காலத்திதேயே பஞ்சாய்ப் பாவை ஈன்று கொடுத்தேன்' என்று பெற்ற மகவுக்கு இணையாகப் பாவையைத் தலைவி குறிப்பதிலிருந்தும், பாவை நுதலை என்று சொல்லாது, என் மகள்

நுதலை நாரை மிதித்து விடும் நாங்கள் விரைந்து செல்ல வேண்டும் என்ற தோழியின் கூற்றாலும் மகளிர் ஓரைப் பாவையைப் பெற்றெடுத்த குழந்தைக்கு இணையாகப் போற்றினார் என்பது தெரிகிறது.

இந்தியப் பண்பாட்டில் அன்பு

அன்பு என்பது தெய்விகப் பண்பு. அப்பண்பு மக்களிடையே இல்லாதபோது - அல்லது குறைவாக இருந்தபோது புத்தர், மகாவீரர் போன்றோர் தோன்றி 'அன்பாயிரு' என்று மக்களுக்கு எடுத்துக் கூறினர். ஆனால், அந்நாளில் தமிழ் நாட்டு விளையாட்டு மகளிடம் கூட அன்பெனும் பண்பு நிறைவாக இருந்தது. விளையாட்டுப் பாவையைக் கூட பெற்றெடுத்த மகவாகப் போற்றி அன்பு செய்தனர். தமிழர்களின் இப்பண்பு பின்னாளில் இந்தியர்களிடையே பரவி இந்தியப் பண்பாடாகியது என்று கொள்ளலாம்.

சிற்றில்

ஆற்றங்கரை மணலிலும்,[64] தெரு மணலிலும்,[65] நீராடு துறை அருகேயுள்ள மணலிலும்,[66] கடற்கரைச் சோலையிடத்தும்[67] மகளிர் மணலால் சிறிய வீடுகளைக் கட்டி விளையாடுவது சிற்றில் விளையாட்டு ஆகும். மகளிர் சிற்றிலிழைத்து விளையாடும் இடத்துக்கு அவர்தம் காதலரும் வருதல் உண்டு. ஆடவர்க்குத் தலைமை அளிக்கின்ற ஆண்வழிச் சமுதாயம் அந்நாளில் நடைமுறையில் இருந்தது என்றாலும் இல்லத்திலேயே பெண்களுக்குத்தான் தலைமை இடம் அளிக்கப்பட்டது என்பதைத் தலைவன் சிற்றிலுக்கு வந்து வணங்கத் தலைவிக்குக் குற்றேவல் புரிந்தான் என்பதாலும்,[68] எம்மனை வந்து இம்மனையறம் புரியலாமே என்று கெஞ்சுவதாலும் [69] இல்லில் நான் தங்கிச் செல்லலாமா என்று பணிந்து கேட்பதாலும்[70] உணர முடிகிறது. சமுதாயத்தில் தலைமை பெற்றிருந்த ஆண்மை இல்லறத்திலே பெண்மையை அடி தழுவிச் சென்ற நிலையை சிற்றில் விளையாட்டு ஒரு செய்தியாகத் தெரிவிக்கிறது.

இந்தியாவின் இல்லறப் பண்பாடு

பிற நாடுகளில் இல்லற முறிவுகளும், மறுமணம் புரிவதும் மிகுந்த எண்ணிக்கையில் நடைபெறுகின்றன. ஆனால் இந்தியாவில் இல்லற முறிவுகள் வெகுசிலவாகவே இருக்கின்றன. ஆண்மை தலைமை பெற்ற ஆண்வழிச் சமுதாயமாக இருந்தாலும் இல்லறத்தில் பெண்மைக்குத் தலைமை கொடுத்து ஆண்மை அடங்கிப் போய்க் குடும்பத்தைக் கோயிலாக்குவது இந்தியப் பண்பாடு. இப்பண்பாட்டைத் தமிழரிடமிருந்து மற்றவர்கள் ஏற்றனர் என்பதற்குச் சிற்றில் விளையாட்டு சான்றாக உள்ளது.

நுண்கலைகளும் பண்பாடும்

இசை, நடனம், நாடகம், ஓவியம், சிற்பம் போன்ற நுண்கலைகள் மக்கள் வாழ்வில் குறிப்பிடத்தக்க இடத்தை பெற்றுள்ளன. இசையும், நடனமும் மக்கள் உள்ளத்தைப் பண்படுத்துகின்றன. தமிழர் இசையும் நடனமும் தனித்தன்மை வாய்ந்தவை. பரதர் என்பவரின் வடமொழி நாட்டிய சாஸ்திரத்தில் தென்னாட்டு

ஆடற்கலை 'தட்சிண மார்க்கம்' என்று கூறப்படுகிறது.[71] இவை தமிழரிடமிருந்து இந்தியாவின் எல்லாப் பகுதிகளுக்கும் பரவின. உலகில் வேறெந்த ஆரிய இனத்தவரிடமும் காணப்படாத நடன முறைகளும் இசைப் பண்களும் இந்தியாவின் வட பகுதியில் வாழும் மக்களிடம் காணப்படுகின்றன. எனவே தென்பகுதியில் வாழும் தமிழர்களிடமிருந்து அவர்கள் இப்பண்களையும், நாட்டிய முறைகளையும் கற்றனர் எனல் வேண்டும். இவ்வாறு மக்கள் பண்பாட்டின் சின்னங்களாக விளங்குவனமும், ஆதி நாளில் தமிழர்களுக்கே சொந்தமானவையுமான இசைப் பண்களும், நாட்டிய முறைகளும் இன்று இந்தியா முழுதும் பரவி இந்தியப் பண்பாட்டின் சின்னங்களாக விளங்குகின்றன.

பொதுநிலைப் பண்பாடுகள்

ஒற்றுமை

இனக் குழுக்கள், நாட்டுப் பிரிவுகள், வேந்தர்கள், குறுநில மன்னர்கள் போன்றோர்களின் கருத்து வேறுபாடுகள் முதலியவற்றால் பிரிந்து நின்ற சமுதாயம் விழாக்களின் கொண்டாட்டத்தில் ஒன்றுபட்டது. ஊர் மக்கள் அனைவரும் இணைந்து விழாக் கொண்டாடினார்கள். ஊர்ப் பொது நிகழ்ச்சிகளில் ஒற்றுமையாய்ச் செயல்படக் கூடிய பண்பை இது வளர்த்தது.

விருந்தோம்பல்

வெளியூரிலிருந்து திருவிழாக் காண வந்த மக்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் வண்ணம் விழாச் செய்வோர் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை ஏற்படுத்திக் கொடுத்தனர். அவர்களுக்காகப் பொது இடத்திலே சோறு சமைத்து வழங்கப்பட்டது. விருந்தோம்பும் பண்பாடு மறைந்துவிடாமல் விழாக்கள் நிலைக்கச் செய்தன.

மன்னிப்பு

மன்னனின் பிறந்தநாள் விழாவான பெருமங்கல விழாவின்போது சிறைப்பட்ட பிறநாட்டு மன்னர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.[72] தான் கொண்டாடி மகிழ்வுடன் இருக்கும் நாளில் (பிறந்த நாள்) பிறரும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நாட்டு மக்களுக்கெல்லாம் உணவளித்தான் மன்னன். அத்தோடு, பகைவர்க்கும் மகிழ்வளிக்கும் முறையில் அவர்களின் பகையை மறந்து மன்னித்து சிறை வீடு செய்தான். பகைவரையும் மன்னிக்கும் பண்பாடு தமிழரின் பெருந்தன்மையைக் காட்டுகிறது.

பொதுநலம்

புதுப்புனல் விழாவின்போது ஆற்றில் பொன் மீன், சந்தனம்,அகில், உணவுப் பொருள் முதலியவற்றை விட்டு 'தண்ணீர் குறையாது பெருகுக' எனறு வேண்டினர்.[73] நீர் பெருகி நிலம் விளைந்து பொதுமக்கள் வளம் பெறத் தனியார்

தங்கள் கைப்பொருளை நீரில் இழந்தனர். இவ்வாறு பொருளுடையோர் பொதுநலம் பேணுவது தமிழரின் சிறந்த பண்பாடாகும். நோன்பிருந்து தைந்நீராடிய கன்னியர் 'இவ்வுலகத்தில் நல்ல மழை பொழிக என வேண்டியதும்[74] பொது நலம் வேண்டியதே ஆகும்.

முடிவுரை

ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழைந்தபோது வட இந்தியாவில் திராவிடர்கள் வாழ்ந்தனர் என்று ஆக்ஸ்போர்டைச் சேர்ந்த பேராசிரியர் பர்ரேர், கே.கே.பிள்ளை மற்றும் வேறுபல ஆராய்ச்சியாளர் போன்றோர் கருத்து வெளியிட்டுள்ளனர்.[75] வேறெந்த ஆரிய நாட்டிலும் கொண்டாடப் படாத விழாக்களும் மேற்கொள்ளப்படாத பொழுது போக்குகளும் இங்கு சுட்டப்பட்டு அவற்றிலிருந்து வெளிப்பட்ட சிறந்த பண்பாடுகள் காட்டப்பட்டன. இப்பண்பாடுகள் இன்று இந்தியாவின் எல்லாப் பகுதி மக்களிடமும் காணப்படுகின்றன. எனவே இந்தியப் பண்பாட்டில் பழந்தமிழரின் விழாக்களும் பொழுதுபோக்குகளும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பது தெளிவாகிறது. மேலும் சங்க காலத்தில் தமிழ் நாட்டுடன் தொடர்பு கொண்டிருந்த சீனா, உரோம், இலங்கை, கடாரம், மலேயா, ஜாவா போன்ற நாடுகளில் தமிழர்களின் பண்பாட்டுத் தாக்கம் எந்த அளவு இருக்கிறது என்பதை ஆய்வு செய்ய இக்கட்டுரை தூண்டுகோலாக அமைகிறது.

குறிப்புகள்

1. Lewies.H. Morgan., Ancient Society. p. 82
2. "How old they were we cannot even guess ...... that form an extremely remote antiquity'.
   Frazer.J.G., The Golden bough. Vol. I. Part V, p.107
3. "The "kai' of New Guinea swing to and fro on reeds suspended from the branches of trees in order to promote the grown of the crops, in like manner Lattish peasants in Russia devote their leisure to swinging in spring and early summer for the express purpose of making the flex grow as high as they swing in the air'
   Frazer.J.G., The Golden bough. Vol. I, Part V, p.107
4. அகநா.: 86 :15, 16
5. 'மனித எலும்புக் கூடுகள், உரல்கள், மெருகிட்ட மட்பாண்டங்கள் இரும்பாலான சில கருவிகள், பொன்னாலும், வெங்கலத்தாலும் செய்யப்பட்ட அணிகலன்கள் பொன் வாய்ப்பூட்டுகள் சிறுவேல்கள் ஆகியவை அடங்கிய தாழிகள் ஆதிச்ச நல்லூரில் கிடைத்துள்ளன.'
   பிள்ளை.கே.கே., தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும். பக்.34
6. "Closely allied to religious faith in the belief in life after death. References to this are found in the sangam classics'
   Pillai K.K., A Social History of the Tamils, p. 522
7. சிலம்பு 9:55-61
8. "Belief in ghosts demons was common. Numerous references are found in the Sangam works to the dread of the people from these evil spirits.'
   Pillai.K.K., A Social History of the Tamils., p. 524
9. பட்டின. 259, 260
10. புறநா. 62 : 2-4
11. புறநா. 281 :1-9
12. அகநா. 201:5-7
13. அகநா. 114:1-3
14. அகநா. 22:9,10
15. புறநா. 306:3,4, 232:3,4
16. "The main point is that human fertility particularly female fertility and natural fertility belong to the same order of Existances. In other words

human reproduction and agricultural production are linked up. Therefore by contagion or by imitation the one can influence the other'. Depiprasad Chotopadhyaya, "Lokayata' pp.286,287

17. Marshal.J. "Mohenjodaro and the Indus Civilization'., p. 52
18. சாமி.பி.எல்., 'தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு', பக்.144,145
19. Depiprasad Chotopadhyaya,"Logayata' p. 319.
20. Ibid. p. 290.
21. புறநா. 143:1-3
22. புறநா. 74:1,2
23. காந்தி.க., 'தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்'. பக். 12.
24. Frazer.J.G., "The Golden bough'. Vol.I, Part V, p. 50.
25. Ibid.
26. Sivathambi, K., "Drama in ancient Tamil Society', p. 274.
27. Thomson.G., "Religion', p. 9.
28. Thomson., "Studies in ancient Greek Society', Vol.I. p. 440.
29. Frazer.J.G., "The Golden bough', Vol.II. Part IV, p. 31.
30. Depiprasad Chotopadhyaya., "Logayata'. p. 229.
31. Lewis.H. Morgan., "Ancient Society', p. 82.
32. வெள்ளைவாரணர்.க., 'சங்ககாலத் தமிழ் மக்கள்; ப. 94.
33. சோமசுந்தரம். பொ.வே., 'குறிஞ்சிக்கலி', உரை. ப. 96.
34. நச்சினார்க்கினியர். பரிபா.11:75 உரை.
35. கலி. 59: 16,17
36. சிலம்பு. 9: 59-62
37. சாமிநாதையர்,உ.வே. 'சிலப்பதிகாரமும் அரும்பதவுரையும்' பக். 172
38. தேவநேயன்.ஞா., 'பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும்' பக். 99.
39. Gonde.J., "Change and Continuity in Indian Religion' Quoted by Sivathambi. K., Drama in Ancient Tamil Society. p. 164
40. தேவநேயன்.ஞா., 'பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும். பக். 99.
41. சிலம்பு 5: 68-75
42. சிலம்பு 5: 76-88
43. Lewis.H.Morgan. "Ancient Society'. p. 399.
44. அகநா. 86: 1-17
45. Pillai.K.K., "A Social History of the Tamils'. p. 325.
46. Frazer.J.G. "The Golden bough'. Vol. II. Part IV. p. 38.
47. பரி 10: 85, 86
48. தொல். புறத். 63.

49. வேங்கடசாமி. சீனி., 'ஆராய்ச்சி'. அக்டோபர். 1969. பக். 190.
50. வானமாமலை.நா., 'செங்கம் நடுகற்கள்' ஆராய்ச்சி. அக்டோபர். 1972. பக். 135.
51. "Chamber's 20th Century Dictionary'. p. 789.
52. குறு. 401:3,4.
53. குறு. 316: 3-6.
54. கலி. 75: 1-4.
55. நற்றி. 682, உரை
56. குறு. 48, உரை.
57. தமிழ் லெக்ஸிகன் பக்.629.
58. சாமி.பி.எல்., 'சங்க நூல்களில் பஞ்சாய்' செந்தமிழ்ச் செல்வி, பக். 523.
59. பெரும்பா. 217, 218.
60. குறு. 48:1, அகநா. 392:6.
61 சாமிநாதையர்.உ.வே. குறு. 114. உரை.
62. ஐங். 155:4,5
63. குறு. 114.
64. பரி. 20,23.
65. கலி. 51: 1,2
66. கலி. 114:15
67. குறு. 326: 2,3
68. கலி. 76: 1,2
69. அகநா. 230: 8-10.
70. அகநா. 110: 10-20.
71. Pillai.K.K., "A Social History of the Tamils'. Vol.I. p. 452.
72. பரி. 16: 52-55
73. பரி. 11:80
74. சிலம்பு. 27: 225-230.
75. கே.கே.பிள்ளை., 'தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும்' பக்.40.

இந்திய விவசாய வளர்ச்சியில் தமிழர்களின் பங்கு

து. வெங்கடராமன்

அ) விவசாயம்

விவசாயத்தின் தோற்றம்

'விவசாயம்' என்பது மனிதனின் தேவைக்கென மண்ணில் இருந்து செடிகளை வளர்த்தலின் மூலமாக, உணவு மற்ற பொருட்களையும் உற்பத்தி செய்யும் ஒரு முக்கிய தொழில் துறையாகும்.

விவசாயமானது மனிதனின் அடிப்படை செயல்முறையாகும். அவை பயிர் தொழிலைச் சார்ந்தவைகள் மட்டுமின்றி, வீட்டில் விலங்கினங்களையும் வளர்த்தலாகும். ஆதலால் விவசாய நிலமானது, மனிதனின் மூலாதார வளமாக இருப்பதால், அவைகளின் வாயிலாக மனிதர்களின் அடிப்படைத் தேவைகளான உண்ண உணவு, உடுக்க உடை முதலியவைகள் பெறப்படுகின்றன.

விவசாயத்தின் வளர்ச்சி

தொடக்க காலத்தில் மனிதன் காட்டுமிராண்டித்தனமாக மிருகங்களை வேட்டையாடியும் செடிகளிலிருந்து பழங்களைச் சேகரித்தும் தன்னுடைய வாழ்க்கை முறையினை அமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தான். வேட்டையாடுவதிலிருந்து மந்தைத் தொழிலுக்கு மாறிய மனிதன் பின்னர் மண்ணைக் கிளறும் விவசாயி ஆக மாறினான் என்று தொல்பொருள் ஆய்வாளர்கள் ஆராய்ந்து கூறுகின்றனர். தொடக்க காலத்தில் இவன் உழவனாக பூமியில் ஈடுபட்டு, அதன் பின்னர் அவைகளின் மூலமாகத் தனக்குத் தேவையானவைகளை அதிகமாக பெறத் தொடங்கினான்.

சரித்திரகால இடஆய்வுகளை ஆராய்ந்து, பயிர்தொழிலுக்கும், பெரிய பன்றிகளுக்கும் இடையே சம்மந்தம் இருப்பதாகக் கருதி பெரிய பன்றிகளின் மூலமாகத் தோண்டப்பட்ட குழிகளில் செடிகள் செழிப்பாக வளர்ந்தது எனத் தொல்பொருள் ஆய்வாளர்கள் ஆராய்ந்து கூறுகின்றனர்.

சந்தேகத்திற்கு இடமின்றி இவர்களுடைய ஆய்வின் முடிவுகள் தெரிவிப்பது என்னவென்றால் மனிதன் உழவனாக முதன் முதலாக மண்ணைக் கிளறி, அவைகளிலிருந்து விதைகளையோ அல்லது செடிகளையோ எடுக்க, பழக்கப்படுத்திக் கொண்டான். மண்ணைக் கிளறியதால், மணல் வளம் பெருகி அதிக விளைச்சலை கொடுக்க ஆரம்பித்தது. பின்னர் நாட்கள் நகர்ந்து மக்கள் தொகை பெருகியதால், மனிதனின் தேவைகளும் பெருகியது. அப்பொழுது மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள, இயற்கை அவனுக்கு

விவசாயச் செயல் முறைகளை மட்டுமே அளித்திருந்தது. பின்னர் நாளுக்கு நாள் புதுமையான அறிவியல் தொழில் நுட்பங்கள் வளரவளர, அவை விவசாயச் செயல்முறைகளுக்கு பயன்படுத்தப்பட்டு விவசாயப் புரட்சி துவங்கியது. இதன் காரணமாக, விவசாய செயல்முறைகளுக்கும், நவீன கருவிகள் கையாளப்பட்டு, உற்பத்தித் திறனைப் பெருக்கி, பெருகும் மக்கள் தொகையின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

விவசாயத்தின் இயல்பு

விவசாயமானது, மனிதனின் அன்றாட அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து வைப்பதாகும். இவை உலகமெங்கும் பரவிக் கிடக்கும் இயற்கை வளமான பூமியினைச் சார்ந்திருப்பதால், இது உலகமெங்கிலுமே முக்கிய தொழிலாகத் திகழ்கிறது.

மண்ணைக் கிளறி உழுவது, விதைவிதைத்து, நீர்பாய்ச்சுவது, கிளைகளைப் பிடுங்கி உரமிடுவது ஆகியவைகள் விவசாய தொழிலில் அடிப்படை செயல்முறைகளாகும். ஆதலால் மனிதன் இத்தொழிலை செய்தமையால் அவன் 'விவசாயி' என அழைக்கப்பட்டான்.

'உழவு' எனும் பெயர், உழுதல் காரணமாகத் தோன்றியதாகலாம். 'உழுதல்' என்பது இடைவிடாது முயலும் மெய்ம்முயற்சியைக் குறிக்கும். மழை, பனி, வெயில் என்று வேறுபாடு பார்க்காமல், தொல்லைகள் அனைத்தும் பொருட்படுத்தாது நெற்றி வியர்வை நிலத்தில் விழ, இடைவிடாது காலையிலிருந்து மாலை வரை உழைக்கும் மெய்ம் முயற்சி இப்பயிர்த் தொழிலுக்கு வேண்டப்படுவதாதலின், இத் தொழிலை, 'உழவு' என்றும் இதைச் செய்பவன் 'உழவன்' என்றும் அழைத்தனர். ஆதலால், அவனுக்கு 'உழவன்' அல்லது 'விவசாயி' என்று பெயர். மேலும் அவன் செய்யும் தொழிலுக்குப் பெயராகி வந்தமையால், அவன் அவ்வாறு அழைக்கப்பட்டான்.

உழவு வேலை கடுமையானது, காலவரையரையின்றி நாற்று நடுவது, களையெடுப்பது, நீர்பாய்ச்சுவது, அறுவடை செய்வது முதலியவைகளாகும். எல்லாவற்றையும் உரிய காலத்தில் செய்தால்தான் மனிதனின் உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கும். இல்லாவிடில் மகசூல் குன்றிவிடும். இதனாலேயே அந்நாளில் 'உழுவதன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது' என்ற பழமொழியும், 'எண்ணிப்பார் குடித்தனத்தை, எண்ணாமல் பார் வெள்ளாமையை' என்ற பழமொழியும் விவசாயிகளுக்கு அறிவுரை அளிப்பதைப் போல அந்நாளில் வழங்கி வந்தன.

விவசாய வேலை சலிப்புத் தட்டுவதன்று, விவசாயத்தில் ஈடுபடுபவர்களை அது ஈர்த்துக் கொள்ளக்கூடியது.

விவசாயத்தில் முக்கியத்துவம்

விவசாயமானது, மனிதர்கள், விலங்கினங்கள் பசியின்றி உயிர்வாழ மண்ணில் விதைவிதைத்து பயிர்தொழில் செய்யும் ஒரு தொழிலாகும்.

மனிதனின் அன்றாட வாழ்க்கைக்கும் பிழைப்பிற்கும் அடிப்படைத் தேவையானது உணவு, உடை, நீர் மற்றும் இருப்பிடமாகும். பயிர்த்தொழிலின் மூலம் உணவினைப் பெற்றுக் கொள்ளலாம். அவை இல்லையெனில் மனிதன் உயிர்வாழ முடியாது. ஆதலால் விவசாயமானது முக்கிய தொழிலாகும்.

மக்களின் வாழ்க்கைக்கு விவசாயமானது முதுகெலும்பு போன்றது. நாட்டின் அரசியல் பொருளாதார வாழ்க்கையினை நிலைப்படுத்துவதில் விவசாயம் முக்கிய பங்கினை வகிக்கின்றது. விவசாயத்தில் ஈடுபடும் மக்கள் உண்மை, நேர்மை, அன்பு, அமைதி, ஒற்றுமை உடையவர்கள் ஆவார்கள். உழவர்களின் மகிழ்ச்சியும், அவர்களின் வளர்ச்சியும், நிலையான அரசியல் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஒரு முக்கிய ஆதாரமாகும்.

விவசாயத்தின் கிளைகள்

உலகெங்கிலும் உணவுப்பொருட்களை பயிர் செய்வது, தொழிற்துறைகளைச் சார்ந்த பயிர்களை உற்பத்தி செய்வது முதலியவைகள் விவசாயத்தின் முக்கிய கிளைகளாகும். இவ்விவசாய முறை 'உழுது பயிரிடத்தக்க' (Arable farming) விவசாய முறை என அழைக்கப்படும்.

விலங்குகள் சார்ந்த வேளாண்மைத் துறையுடன், உணவு பொருட்கள், தொழில் துறையினைச் சார்ந்த பொருட்கள் ஆகியவைகளை உற்பத்தி செய்யும் வேளாண்மை முறை கலவை விவசாய முறையாகும்(Mixed farming). இம்முறையானது, உழுது பயிரிடத்தக்க விவசாயம், பழச்செடிகளை வளர்த்தல், காய்கறித் தோட்ட செடிகளை வளர்த்தல், பால் பண்ணை தொழில் (Dairy farming) முக்கியமாகும். இத்தொழிலானது பாலுக்காகவும், பால்பொருட்களுக்காகவும் ஆடு, மாடுகளை வளர்த்தலாகும்.

விவசாயத்தின் கிளையான ஒன்று காய்கறி செடிகளை வளர்த்தலாகும். இதனை சந்தைவாணிகக் காய்கறிப் பண்ணை (Truck farming) அல்லது காய்கறித் தோட்ட முறை (Vegetable farming) என்றும் அழைக்கலாம்.

விவசாயத்தின் மற்றொரு கிளையானது தோட்டக்கலையாகும் (Horti Culture). இது திராட்சைப் பழசெடி வகைகளை வளர்த்தலாகும்.

திட்டமிட்டு மரங்களை வளர்க்கும் விவசாயத் தொழில் முறைக்கு மரவளர்ப்புக் கலை அல்லது காடுவளர்ப்புக்கலை (Silviculture) என்று பெயர்.

பட்டுப்பூச்சிகளுக்காக, முசுக்கொட்டை மரம் (Mulberry tree) வளர்த்தலுக்கு, 'பட்டுப்புழு வளர்ப்பு முறை' (Sericulture) என்று பெயர்.

தேனி வளர்ப்பு (Bee-Keeping or Apiculture) முறையானது விவசாயத்தின் மற்றொரு கிளையாகும். இவை தேனிக்கள், தேனை சேகரிக்க, பூச்செடிகளை வளர்த்தலாகும்.

உயிரினங்களை வளர்த்தல் (Fauni culture) என்பது மற்ற விலங்குகளையும், வீட்டு விலங்குகளையும் வளர்த்தலாகும்.

மீன் வளர்த்தலும் (Fini culture) விவசாயத்தின் கிளையாக கருதப்படுகின்றது. ஏனெனில் மீன்கள் நீர்ப்பாசன வயல்களில் கிடைக்கின்றன.

விவசாயத்தின் ஒவ்வொரு கிளைகளுக்கும் அதற்குத் தேவையான இயற்கையமைப்பும், பொருளாதார நிலைமையும், விவசாயத்தின் சரியான நிர்வாகத்திற்கும், அதன் வளர்ச்சிக்கும் உதவி புரிகின்றன.

ஆ) வானவியலும் விவசாயமும்

பண்டைய தமிழ்நாட்டில், தமிழர்கள் வானவியலில் மிகுந்த புலமை பெற்றிருந்தனர். ஆதலால் அவர்கள் வானவியல் விஞ்ஞான அனுபவத்தினை முன்னோடியாக வைத்து, விவசாய வளர்ச்சியினை மேற்கொண்டு பலவகைப் பயிர் தொழில்களை, பலகால கட்டத்தில் செய்து வந்தனர்.

வானவியலை ஒரு கலையாக வளர்த்ததால், பல வகையான பயிர்த்தொழில்களை பல கால கட்டத்தில் செய்து, உற்பத்தியினைப் பெருக்கி மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர்.

மொகஞ்சதாரோ முத்திரைகளிற் கிடைத்த குறிப்புகள் தமிழர்களின் வானவியல் புலமைக்கு ஒரு சான்றாக விளங்குகின்றது.

பண்டைத் தமிழரின் வானியற் புலமையினைத் தெரிவிக்கும் வகையில், சங்கத்தொகை நூல்கள் சிலவற்றில் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. பதிற்றுப்பத்து, புறநானூறு, பரிபாடல் என்னும் மூன்று தொகை நூல்களிலும் பல வாணியற் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. இதில் அவர்கள் ஆழ்ந்த வாணியல் விஞ்ஞான அறிவும், அனுபவமும் பெற்றிருந்தார்கள் எனக் கூறப்படுகின்றது.

வானவில், உருவாகும் மேகங்கள், தோன்றும் இடிகள், மின்னல்கள், காற்றின்திசை, தோன்றும் நட்சத்திரங்கள், திதி, கிழமை, சூரிய சந்திர கிரகணங்கள், பூச்சிகள், மாத வானிலையில் தோன்றும் மாற்றங்கள், மிருகங்களில் தோன்றும் நடத்தை முறைகள் ஆகியவைகளின் நிலைகள், நிமித்தங்கள், அறிகுறிகள் ஆகியவைகளை ஒப்பிட்டு ஆராய்ந்து, தெளிந்து மழையினை எதிர்பார்த்து, விவசாயத்தையும், அதன் செயல்முறைகளையும் மேற்கொண்டனர்.

மேகங்கள்

முகில் கூட்டங்களின் போக்கையும், அமைப்பினையும் வைத்து மழை வரும் நாளைக் குறிப்பிட்டு விவசாயம் செய்து வந்தனர். 'அடிவானம் கருக்கினால் அப்பொழுதே மழை, ஆகாயம் மணற் கொளித்திருந்தால் அப்பொழுதே மழை' என மேகங்கள் மாறும் தன்மையினை வைத்தும், 'மாரி அடைக்கில் ஏரி உடைக்கும்' என்று மேகக்கூட்டங்களின் போக்கினை வைத்தும் மழை வருவதை முன்பே கணக்கிட்டனர்.

மழை

தமிழர்கள் பருவகாலத்திற்கேற்ப விதைகளை விதைத்து விவசாயத்தை மேற்கொண்டனர். 'வெள்ளி வடக்கே தோன்றினால் மழை, தெற்க்கே தோன்றினால் மழையில்லை' என்ற பழமொழியிலிருந்து தமிழர்கள் மிகுந்த

வானிலை அனுபவம் பெற்றிருந்தனர் என்பது தெரிகின்றது. 'காலமறிந்து பெய்யாத மழையும், நேரமறிந்து உண்ணாத உணவும் சரியல்ல' என்ற பழமொழியிலிருந்து தமிழர்களின் வானிலை அனுபவத்தினை நன்கு அறியமுடிகிறது.

மின்னல்

'மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை' என்ற மின்னலை நிமித்தமாக வைத்து வேளாண்மையை மேற்கொண்டிருந்தனர். 'ஆடி மாதம் அடி மின்னலைப் பார்த்துப் பட்டறை திற, ஐப்பசி மாதம் அடி மின்னலைப் பார்த்துப் பட்டறை திற' என மாதங்களுக்கு தக்கவாறும் 'பொழுதுக்கால் மின்னல், விடியற்காலை மழை' என மின்னலை வைத்தும் வேளாண்மை செய்து வந்தனர்.

இடி

'கோடை இடியும் மாரி மின்னலும் மழை அதிகம், மாரி இடியும் கோடை மின்னலும் மழையில்லை' என இடியினை வைத்து மழை வருவதைக் கணக்கிட்டனர். 'ஐப்பசி மாதம் இடி இடித்தால் கிணற்று அடியில் அருகு முளைக்கும்' என்றும்; 'துலா இடிக்கிறது பிடிடா ஏற்றத்தை' என ஏர் உழுவதற்குக்கூட இடிக்கின்ற இடியினை சம்மந்தப்படுத்தி தமிழர்கள் விவசாயத்தை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

காற்று

காற்றின் வேகத்தினையும், அதன் போக்கினையும் வைத்து தமிழர்கள் வேளாண்மை செய்து வந்தனர். 'தென்றலும் வாடையும் சிறக்கும் பயிர்கள்' என தென்றல் காற்றின் சிறப்பினை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

'ஆடிக்கீழ் காற்றும், ஆவணி மேல் காற்றும் அடித்தால் சொப்பனத்தில் மழையில்லை' எனவும் 'வடகாற்றிடிக்க வந்தது மழையே' என வடகாற்றினால் விளையும் நன்மையினை மேற்கொண்டும் விவசாய செயல் முறைகளை மேற்கொண்டனர்.

வானவில்

தமிழர்களின் விவசாய வளர்ச்சிக்கு வானவில்லும் முக்கிய பங்கினை வகித்தது. 'அந்திகிழக்கு, அதிகாலை மேற்கு கொரடு போட்டால் வராத மழை வரும்' என வானவில் தோன்றும் திசைகளுக்கேற்ப மழை வருவதைக் கணக்கிட்டு வைத்தனர்.

'மேல்தலை வில்லு, கீழ்தலை மழை, கீழ் தலை, வில்லு மேல்தலை வெள்ளம்' என வானவில் தோன்றும் அமைப்பிற்கேற்ப மழைவருவதைக் கணக்கிட்டு, எதிர்பார்த்தனர். மேலும், 'ஆனி மாதம் கொரடு போட்டால் அடுத்த மாதம் மழையற்றது' என மாதத்தையும், வானவில்லையும் ஒப்பிட்டு, மழை வராததையும் குறிப்பிடுவது தமிழர்களின் வானவியல் அறிவிற்கு ஒரு சான்றாகும்.

உயிரினங்கள்

விலங்குகள், பறவையினங்கள் ஆகியவைகளின் நடத்தை முறைகளைப் பார்த்து மழை வருவதை எதிர்ப்பார்த்தனர்.

'சிங்கம் முழுங்கினால் எங்கும் பயிருண்டு' என்றும், 'மயில் தோகையினை விரித்து ஆடினால் மழை வரும்' என்றும், 'தும்பி பறந்தால் தூரத்தில் மழை', 'அந்தி ஈசல் பூத்தால் அடை மழைக்கு இலட்சணம்', 'கொக்கு மேடேறினால் மழை பெய்யும்','தவளை கத்தினால் தானே மழை' என்றும், தமிழர்கள் பல வகையான பழமொழிகளைப் பேச்சு வழக்கில் வழங்கி விவசாய செயல் முறைகளை மேற்கொண்டனர்.

வெவ்வேறு மாதங்களில் வானிலை

வெவ்வேறு மாதங்களில் நிலவும் வானிலைக்கேற்ப மழையின் தன்மையினை தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

'சித்திரை மழை சின்னப்படுத்தும்', 'ஆனி அடைச்சாரல் ஆவனி முச்சாரல்', புரட்டாசி பெருமழை, ஐப்பசி அடை மழை, 'கார்த்திகை கனமழை', என்று பல்வேறு மாதங்களில் பொழியும் மழையின் தன்மைக்கேற்ப பயிர் தொழிலைச் செய்து வந்தனர்.

நத்திரம், திதி, கிழமை, கிரகணம்

நத்திரம், திதி, கிழமை, கிரகணம் ஆகியவைகள் விவசாய வளர்ச்சிக்கு முக்கிய பங்கை வகித்து வந்திருக்கின்றன.

'சனிக்கிழமை சாயங்காலம் மழை தொடுத்தால் பயிர்களுக்கு பிணிதரும் பலன் மிக உண்டாகும்', 'அஸ்வினி சர்வ நாசனம்', 'பரணி பேய்ந்தால் தரணி மழை', 'மூல மழை பெய்தால் நவதானியத்துக்குக் கேடு', 'விசாகத்தால் மழை பெய்தால் பயிர்களுக்கு புல் உண்டாகும்', ஸ்வாதி சுக்கிரன் ஓயா மழை' போன்ற பழமொழிகளை வழங்கி தமிழர்கள் விவசாயத்தினைப் பேணி வளர்த்து வந்தனர் என்பது நன்கு தெரியவருகின்றது.

இ) நிலத்தின் வகைகளும் அதனைச் சார்ந்த பயிர்த்தொழிலும்

நிலப்பரப்பென்பது ஒரே வகையில் இல்லாமல் மலை, காடு, வயல், கடற்கரை, பாலைவனம் ஆகிய வகைகளில் அமைந்த இயற்கைத் தன்மையோடு காணப்படுகின்றது. இந்த இயற்கையமைப்பிற்கு ஏற்றபடியும், அவ்விடங்களில் வளரும் மரங்கள், செடி, கொடிகள், பூண்டு முதலியவற்றின் சிறப்புகளாலும் பண்டைத் தமிழர் அவற்றை குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்னும் ஐவகை நிலங்களாக பகுத்தனர்.

ஐவகை நிலங்களின் இயற்கை வளத்திற்கேற்ப அந்நிலத்து மக்களில் வேளாண்மை வளர்ச்சியும், தொழில் முறைகளும் சார்ந்து இருந்தது. நிலத்தின் தன்மைக்கேற்பவும், செய்யும் தொழில்கேற்பவும் மக்கள் தங்களது வாழ்க்கை முறையினை மாற்றி அமைத்து கொண்டனர்.

குறிஞ்சி நிலம்

மலையும், மலை சார்ந்த இடமும் குறிஞ்சி நிலம் எனப்படும். குறிஞ்சி நிலம் மலை நாடு எனப்பட்டது. மலை நாட்டில் வாழ்ந்த மக்கள் குறவர், மலை வாழ்நர் எனப்படுவர். குறவரது ஊர் சிறுகுடி எனப்பெயர் பெற்றது.

இவர்கள் தோரை நெல், ஐவனம் என்னும் நெல், மூங்கில் நெல், மிளகு, வள்ளிக்கிழங்கு, பலா, வாழை, கவலைக்கிழங்கு முதலியவைகளைப் பயிர் செய்தனர்.

குறிஞ்சி நிலத்தில் சந்தனம், தேக்கு, அகில், மூங்கில் ஆகிய மரங்கள் குறிஞ்சி நில மக்களால் வளர்க்கப்பட்டன.

மலையில் வாழ்ந்த மக்கள் மலை நெல், மூங்கிலரிசி, தினை என்பனவற்றையும், பலவகைக் கிழங்குகளையும் தங்களது உணவுக்காக பயிர் செய்தனர். குறிஞ்சி நிலத்தில் விளையும் தானியங்களில் முக்கியமானது தினையாகும்.

முல்லை நிலம்

மலை நிலத்தே மக்கள் பெருகியதால், மக்கள் காடுகளில் வாழத் தொடங்கினர். அதனால் காடும், காடு சூழ்ந்த இடமும் முல்லை நிலம் எனப்பட்டன. இந்நிலத்திற்கு இடை நிலம் எனும் பெயரும் உண்டு. இந்நிலம் குறிஞ்சி, பாலை ஆகிய மென்மையான நிலங்களுக்கும் இடைப்பட்ட இயல்புடையதானதால் இடைநிலம் என்னும் பெயரையும் பெற்றது. இந்நிலத்தில் வாழ்ந்த மக்கள் இடையர் எனப்பட்டனர்.

வரகு, சாமை, முதிரை ஆகிய உணவுப்பொருட்களை இந்நிலத்து மக்கள் பயிர் செய்தனர்.

இந்நிலத்து மக்களின் முக்கிய தொழில் கால்நடைகளை மேய்த்தலும், பால் பண்ணைத்தொழிலுமாகும். பால் பண்ணைத் தொழில் முல்லை நிலத்தில் சிறப்புற்று விளங்கியது.

மருத நிலம்

முல்லை நிலத்துக்கும், நெய்தல் நிலத்துக்கும், கடற்கரைக்கும் இடையே இருந்த நிலப்பரப்பு வயல்களாக இருந்தன. வயல்களாக விளங்கிய அந்நிலப்பரப்பே மருத நிலமாகும். இந்நிலத்தில் வாழ்ந்த மக்கள் உழவர் என்றும் வெள்ளாளர் என்றும் அழைக்கப்பட்டனர். மருத நிலத்தை பணை என்றும் அதிகமாக அழைக்கப்பட்டன. பணை என்பது வளமான நிலத்தை அல்லது வளமான மண்ணைக் குறிக்கும்.

இந்நிலத்து மக்கள் பழங்காலந்த தொட்டே ஏர் உழுவதும் மற்றும் பயிர்த்தொழில் செய்யும் முறைகள் ஆகியவைகளையும் நன்கு அறிந்திருந்தனர். வெள்ள நீரை இவர்கள் வயல்களுக்குப் பயன்படுத்தியதால் இவர்கள் வெள்ளாளர் என்றும் 'களாமர்' என்றும் அழைக்கப்பட்டனர். களம்

என்றால் வயல் என்று பொருள். மனிதர்களின் நாகரிக வளர்ச்சியானது மருத நிலத்திலிருந்துதான் ஆரம்பமானதாகும்.

இந்நிலத்தவர்களுக்கு விவசாயம் முக்கிய தொழிலாக இருந்தது. ஏர் உழுவதற்கு ஏர்கலப்பை பயன்படுத்தப்பட்டன.

மருத நிலத்தில் நெல்லும் அதனை சார்ந்த வகைகளும், கிழங்கு வகைகளும் பருப்பு வகைகளுடன் அதிகமாக பயிரிடப்பட்டன. இந்நிலத்தில் பால்பண்ணைத் தொழில் வளர்ச்சியடைந்த போதிலும், விவசாயத் தொழில் முக்கிய தொழிலாக நடைபெற்று வந்தது.

நெய்தல் நிலம்

நெய்தல் நிலம் என்பது கடலும், கடல் சார்ந்த நிலப்பகுதியுமாகும். நெய்தல் நிலத்து மக்கள் ஆரோக்கியத்துடனும், வலிமையுடனும் இருந்தனர்.

மீன் பிடித்தலும், உப்பு தயாரித்தலும் முக்கியத் தொழிலாக இருந்தன.

பாலை நிலம்

பாலை நிலம், மனிதன் குடியேறி வாழ்வதற்கு ஏற்புடைதன்று. முட்களும், புதர்களும் நிறைந்த பெருங்காடுகள் பாலை நிலப்பகுதியைச் சேர்ந்தவையாகும். பாலைநிலத்து மக்களுக்கு மறவர், வேடர் என்னும் பெயர்களும் உண்டு. பிற்காலத்தில் இம்மக்கள் குறும்பு என்னும் குடிசைகளில் வாழ்ந்தமையால், குறும்பர் எனும் பெயரையும் பெற்றனர் (சீவகசிந்தாமணி 1076). மேலும் இந்நிலத்து மக்கள் எயினர், மறவர், வேடர், எயிற்றியர் எனும் பெயர்களையும் பெற்றிருந்தனர்.

கொள்ளையடித்தல், திருடுதல் தவிர முக்கிய குறிப்பிட்ட தொழில் என்று இந்நிலத்து மக்களுக்கு இல்லை.

ஈ) தமிழர்களின் காலத்தில் விவசாயத்தின் நிலை

சங்ககாலத்தில் (கி.பி.3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.2ஆம் நூற்றாண்டு வரை) விவசாயமானது மக்களின் முக்கிய தொழிலாக இருந்து வந்தது. ஆறுகளான காவேரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை, தாமிரபரணியும் தமிழ் மண்ணை வளமானதாக்கி விவசாய வளர்ச்சிக்கு வழி கோலியது. மக்கள் விவசாயத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து விவசாய பணிகளில் ஈடுபட்டுப் பலவகையான பயிர்த்தொழில்களை செய்துவந்தனர்.

விவசாயமானது கடின உழைப்பு மிக்கத் தொழில். ஆனால் அதுவே மற்ற தொழில்களைக் காட்டிலும் சிறந்த தொழில்களாக விளங்குகின்றது. கலாச்சார வளர்ச்சிக்கு விவசாயிகள் மையமாக விளங்குபவர்கள். திருவள்ளுவரும் தமது திருக்குறளில் 'மன்னர்களின் புகழுக்கு வேளாண்மையே காரணம்' என்று கூறியுள்ளார்.

நெற்களங்களைப் பற்றியும், உழவர்கள் உழுங்கால் எழும் மங்கலப் பாடல்கள், மகிழ்ச்சி ஆரவாரங்கள் ஆகியன பற்றியும், அறுவடை பற்றியும் மலைபடுகடாம் (449–479) எடுத்துரைக்கிறது.

அமைதிக்காலங்களில் போர்வீரர்கள் உழவுக்கு துணை போகுமாறு பணிக்கப்பட்டமை பற்றிப் பதிற்றுப்பத்துக் (22) குறிப்பிடுகின்றது.

சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்கள் (கி.பி. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6ஆம் நூற்றாண்டு) நீரை சேமிக்கும் முறைகள் பற்றியும், மண்ணை வளப்படுத்தும் முறைகளைப் பற்றியும், மக்களின் வாழ்க்கையினை மேம்படுத்தும் முறைகளைப் பற்றியும் மன்னர்களுக்குப் புலவர்கள் எடுத்துரைத்தனர்.

'அரசர்களின் வெற்றி வாகைக்கும், மன்னர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் உழவர்கள்தான் காரணம் என்று இளங்கோ அடிகள் (2ஆம் நூற்றாண்டு) கூறுகின்றார்.

பல்லவர்களும் (3ஆம் நூற்றாண்டு முதல் 10ஆம் நூற்றாண்டு வரை) விவசாயத்தின் மீது மிகுந்த அக்கறையும், நாட்டமும் செலுத்தி வந்தனர். விவசாய நிலங்களும், வெற்று நிலங்களும் குழி, வேலி என்று அளந்து வைத்தனர். அரசு நிலங்களை 'அடை நிலம்' என்றும், தனியார் நிலங்களை 'பயல் நிலம்' என்றும் வழங்கி வந்தனர். அரசு நிலங்களை, விவசாயிகளுக்கு நேரிடையாக வழங்கி, வேளாண்மைத் தொழில் செய்வதற்கு ஊக்கம் அளிக்கப்பட்டது.

சோழர்கள் காலத்தில் (கி.பி. 10ஆம் நூற்றாண்டு முதல் 12ஆம் நூற்றாண்டு வரை) வாழ்ந்த பெருவாரியான மக்கள் எளிய குடியானவ முறை வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். அவர்களது முக்கிய முதன்மைத் தொழில் வேளாண்மைத் தொழிலாகவே இருந்து வந்தது. காவிரியும் அதன் கிளையாறுகளும், சோழ நாட்டை வளம் கொழிக்க செழிக்கச் செய்து, 'சோழ நாடு சோறுடைத்த நாடு' என வழங்கச் செய்தது. வளம்நிறைந்த வண்டல் மண் சோழ நாட்டின் செடி கொடிகள், வயல்கள் முதலியவைகளை செழிக்கச் செய்ததால், பச்சைப்பசேல் என்று பசுமை மாறாத காட்சிகள் கண்ணுக்குக் களிப்பை ஏற்படுத்தியது. தொடர்ந்து பாய்ந்து வந்த காவேரியின் கிளையாறுகளால், விவசாய செயல்முறைகள் அதிகரித்தன. அதனால், சோழ நாடு 'பொன்னி நாடு' என்று வழங்கலாயிற்று. சோழநாட்டின் பொற்கால ஆட்சிக்குக் காவிரியாறு முதுகெலும்பாக விளங்கியதால் அந்நாட்டின் அரசியல் பொருளாதாரமும், வாழ்ந்த மக்களின் பொருளாதாரமும் மேன்மையடைந்தது.

மக்களின் முக்கிய தொழில் வேளாண்மையாக இருந்த போதிலும், அதற்கு 'அடுத்தப்படியாக பால் பண்ணைத் தொழில் மேன்மை யடைந்திருந்தது.

நிலத்தை 'நீர்நிலம்', 'கொல்லை', 'நத்தம்', 'காடு' என்று வகுக்கப்பட்டருந்தது. நிலத்தை 'குழிமா' 'வேலி' என்று அளந்து, அடையாளக் கல்லை நட்டு வைத்திருந்தார்கள். நிலத்தை நிலத்தின் வளத்திற்கேற்பவும், நீரின் வளத்திற்கேற்பவும் நிலத்தைப் பிரித்திருந்தனர்.

கி.பி. 13ஆம் நூற்றாண்டு முதல் 14ஆம் நூற்றாண்டு வரை இருந்த பாண்டியர் காலத்தில் தாமிர பரணி ஆறு பாய்ந்தமையால் பாண்டியநாடு வேளாண்மைத் துறையில் உயர்ந்த நிலையில் இருந்து வந்தது.

ஆண்களும், பெண்களும் சேர்ந்து வேளாண்மைச் செயல்களில் ஈடுபட்டு வந்தனர்.

தமிழர்களின் நான்கு காலங்களில் நாயக்கர் காலம் (கி.பி. 15ஆம் நூற்றாண்டு முதல் 17ஆம் நூற்றாண்டு வரை) முக்கியமானதாகும்.

மற்ற தமிழர்களின் காலங்களைப்போலவே வேளாண்மை செயல்முறைகள் இக்காலத்தில் பின்பற்றப்பட்டன. வேளாண்மையினை, நிலத்தின் சொந்தக்காரர்கள் சொந்தமாகவே விவசாயம் செய்து வந்தனர். நிலத்தின் வரியினைக் கட்டுவதில், விவசாயிகள் அனைவரும் சேர்ந்து கட்டிவந்தனர். மாட்டு உரம், பயிர்களுக்கு உரமாக இட்டு வந்தனர். பால் பண்ணைத் தொழிலும் இவர்கள் காலத்தில் நல்ல முறையில் நடந்துவந்தன. தமிழ் மன்னர்களாகிய சேர, சோழ, பாண்டிய மன்னர்கள், வேளாண்மை குலத்தில் பெண் எடுத்து, பெண் கொடுத்ததின் மூலம் வேளாண்மையினை வளர்த்து அதனை உயர்ந்த நிலையில் வைத்திருந்தனர்.

உ) விவசாயத்தின் செயல்முறைகள்

நிலம் தேர்ந்தெடுப்பு

வேளாண்மை செய்வதற்கு நிலத்தை தேர்தெடுப்பதில் தமிழர்கள் மிகுந்த அக்கறை செலுத்தி வந்தனர். நிலத்தை தேர்தெடுப்பதற்கு செம்மண் நிலம், வண்டல் மண் நிலம், கரிசல்மண் நிலம் ஆகிய வகையான நிலத்தையே தேர்ந்தெடுத்தனர். 'கானி தேடினும் கரிசல் தேடு' என்றும் 'களரை நம்பிக் கெட்டவனுமில்லை மணலை நம்பி வாழ்ந்தவனுமில்லை', 'ஆயிரம் பயிர் செய்தாலும் அலுத்து போகாது செம்மண் நிலம்' என்று நிலத்தின் தன்மையினைப் பற்றிய பழமொழிகளை வழங்கி வந்தனர். நிலத்தைத் தேர்தெடுப்பதில் மட்டுமின்றி, நிலத்திற்கு ஏற்ற பயிர் தொழிலும் செய்து வந்தனர்.

உழுதல்

எருதின் உதவி கொண்டு நிலத்தை நன்கு உழுதனர். 'வெண்ணைப்போல உழவு குன்னுப்போல் விளையும்' என்று நிலத்தை, விதைப்பதற்கு முன் நன்கு உழுதனர். 'அகல உழுவதைவிட, ஆழ உழுவதே மேல்' என்று நிலத்தை

ஆழமாக உழுதனர். நிலத்திற்கு ஏற்றாற்போல், 'நஞ்சைக்கு ஏழு உழவு, புஞ்சைக்கு நாலு உழவு' என்று காய்ந்த நிலத்தை ஏழு முறையும், புஞ்ச நிலத்தை நான்கு முறையும் உழுதனர். நிலத்தை உழுவதில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். 'மணலுழுது வாழ்ந்தவனுமில்லை, மண்ணுழுது கெட்டவனுமில்லை' என்று நிலத்திற்கேற்ப உழவு முறைகளைக் கையாண்டனர்.

விவசாய செயற்பாடுகள்

சங்ககாலத்து நூலாகிய பொரும்பாணாற்றுப் படை (கி.மு. 2ஆம் நூற்றாண்டுக்கு முன்) விவசாய செயல்முறைகளை நன்கு விவரிக்கின்றது. எருதைக் கொண்டு நிலத்தை உழுவதும், நிலத்தைச் சமன்படுத்துவதும், நெற்கதிர்களை போர் அடிக்கும் இடத்திற்குக்கொண்டு செல்வதும், நெற்கதிரிகளை போர் அடிக்கும் இடத்திற்குக் கொண்டு சென்று, நெற்களை பிரிப்பதும் விவரிக்கின்றது.

இரண்டு வகையான விவசாயிகள் இருக்கின்றார்கள். ஒன்று குத்தகைக்குப் பயிர் செய்பவர்களும், வெள்ளாளர்கள், அல்லது நிலவுரிமை மேலாளர் ஆகியவர்கள் ஆவார்கள். அரசு குடுமபங்களுடன் பெண் கொடுத்து பெண் எடுக்கும் மேதகவுரிமையினை வெள்ளாளர்கள் பெற்றிருந்தனர். வெள்ளாளர்கள் நிலத்தை நேரிடையாக உழாமல் ஆட்களை அமர்த்தி நிலத்தை உழுவர். நாற்று நடுதல், களையெடுத்தல், கிழங்குகளை தோண்டியெடுத்தல் முதலிய செயல்களை பெண்கள் செய்வர். உண்மையில் சொல்லப்போனால் வேளார்கள் விவசாய செயல்முறைகளை நிர்வகித்து மேற்பார்வையிடுபவர் ஆவார்கள். இம்மாதிரியான விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் உள்ள மாறுபாடு கொண்ட விவசாயமானது தென்னிந்தியாவில் இன்றும் நடைபெறுகிறது. ஏர் உழும் காலத்தில், நிலத்தின் சொந்தக்காரர் நிழலுக்குக்குடை பிடித்து வரப்பின் மேல் நின்று மண் உழுதலை மேற்பார்வையிடுவதை இன்றும் காணலாம்.

நாற்று நடுதல் விவுசாயத்தின் முக்கிய செயல்முறையாகும். கிணற்றிலிருந்தும், ஏரிகளிலிருந்தும் நீரை எடுத்து வயல்களுக்கு நீரைப் பாய்ச்சி வந்தனர். சில உழவர்கள் கிராமியப்பாடல்களைப் பாடிக்கொண்டே குளத்திலிருந்து நீரை எடுத்து வயல்களுக்குப் பாய்ச்சுவர். ஏற்றத்தின் உதவி கொண்டும், எருதுகளின் உதவி கொண்டும் கிணற்றிலிருந்து நீரை வயல்களுக்குப் பாய்ச்சி வந்தனர்.

சங்ககாலத்து நூலாகிய பட்டினப்பாலையிலும், சிலப்பதிகாரத்திலும் (கி.பி. 2ஆம் நூற்றாண்டு) பல முறையான விவசாய செயல்முறைகளை வர்ணித்திருக்கின்றனர்.

அதிகமான மழைபொழிந்தால், விவசாயிகள் மகிழ்ச்சியடைவர். மழையினை சந்தோஷத்துடன் வாத்தியங்களுடன் முழங்கி வரவேற்பர். ஆற்றின் கரைகளில் ஏதேனும் நீர் கசிவு ஏற்பட்டால் வாத்தியத்தினை முழங்கி

மக்களுக்குத் தெரிவிப்பர். பின்னர் அனைவரும் அவ்விடத்திற்கு விரைந்து சென்று நீர் கசிவினை சரி செய்வர். ஓய்வின்றி வேலை செய்யும் வேளாளர்களின் சோர்வினை போக்குவதற்காக, அவர்களது மனைவிமார்கள் அவர்களுக்கு கஞ்சி நீரைக் கொடுத்து உற்சாகப்படுத்துவர். இவ்வாறு விவசாயிகள் ஓய்வின்றி உழைத்தால் அதிகப்படியான விளைச்சலைக் காண முடிந்தது. வேளாளர்கள் தங்களது வயலில் விளைந்த தாணியங்களை சிறிதளவு மற்றவர்களுக்கு கொடுத்து உதவி வந்தனர். அதிக்கபடியான தாணியங்களை மாட்டு வண்டியில் ஏற்றி நாட்டின் மற்ற பாகங்களுக்குக் கொண்டு சென்று விற்று வந்தனர், என்பதற்கு சான்றுகள் உள்ளன. இம்மாதிரியான வாணிபத்தால் விவசாயிகளின் வாழ்க்கை செழிப்புற்று மக்கள் நல்ல நிலையில் இருந்து வந்ததாக சீவகசிந்தாமணி கூறுகின்றது.

சிலப்பதிகாரத்திலுள்ள நாடுகாண் காதையில் விவசாய செயல்முறைகளைப் பற்றி நன்கு சொல்லப்பட்டிருக்கின்றது. சூரிய ஒளியில் நாள்முழுதும் வேலை செய்ததால் வேளாளர்களின் கரங்கள் கருமையடைந்திருந்ததாகவும், அவர்கள் நிலச்சொந்தக்காரர்களுடன் வயலுக்கு விரைந்து வந்ததாகவும் அவர்களின் ஆரவார கூச்சல் வெகுதொலைவில் கேட்டதாகவும் கூறுகின்றது. மேலும் வயலில் குடிபோதையில் பெண்கள் பாட்டுப்பாடி வேலை செய்வதை, அந்த வழியாக செல்லும் வழிபோக்கர்கள் கேட்டுக்கொண்டே செல்வார்கள். வேளாளர்களின் அகன்ற தோள்களும், விரிந்த மார்பும் மண்ணுடன் காணப்படும். வயலில் வேலை செய்யும் பெண்கள், வெண்கலச் சிலைப்போல வசீகரமாகக் காணப்பட்டார்கள். அவர்களின் கொண்டையில் பூவிற்குப் பதில் சேற்றிலிருந்த இளம் நெற்கதிர்கள் காணப்பட்டன. உழவர்கள் ஏர் உழுது கொண்டே பாடல்களைப்பாடினர். எருதுகளைக் கொண்டு, நெற்கதிர்களில் இருந்து நெற்களைப் பிரிக்கும்போது பாட்டுகளைப் பாடினார்கள். விவசாய பாடல்களைப் பாடுபவர்கள், மண் படிந்த வாத்தியங்களுடன் மகிழ்ச்சியுடன் பாடுவர். இதனை அவ்வழியாகச் சென்ற வழிப்போக்கர்கள் கேட்டுக்கொண்டே செல்வார்கள் என சிலப்பதிகாரம் விரித்துரைக்கின்றது.

பயிர் செய்தல்

பயிர் செய்வதில் பலவகையான ரகங்களில் நெற்பயிர்களே முதலிடமும், தானியங்கள் இரண்டாவது இடமும், காய்கறிகள் மூன்றாவது இடமும் வகித்தன. இவையனைத்தும் அனைத்து மக்களின் மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கு போதுமானதாக இருந்தன. இவை மக்களின் உடலுக்கு உறுதியினையும், ஊட்டத்தினையும் கொடுத்து அவர்களை நீடுழி வாழச்செய்தது.

தமிழர்களின் காலமான சங்ககாலம் முதல் நாயக்கர் காலம் வரை விவசாய நிலங்கள் அதிகமாக இருந்ததால் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள முடிந்தது.

வண்டல் மண் பதிந்த வளமான காவிரியாற்றில் நெல்லே முக்கிய பொருளாகப் பயிரிடப்பட்டது. ராகி, கரும்பு, மிளகு, இஞ்சி, வள்ளிக்கிழங்கு, பருத்தி முதலியனவும் பயிரிடப்பட்டது.

உலர்ந்த நிலத்தில் திணை, சாமை, ராகி பயிர்கள் முதலியன பயிரிடப்பட்டன. மேலும் பதினெட்டு ரகமான பருப்பு வகைகளும் தினை வகைகளும் பயிரிடப்பட்டன.

நெற்களுக்கு அடுத்தாற்போல் வாணிகப்பயிர்களான வாழைப்பழம், பருத்தி, கரும்பு முதலியன பயிரிடப்பட்டது.

பலா மரம், மாமரம், தென்னை மரம் முதலிய மரங்கள் பல தேவைகளுக்காகப் பயிரிடப்பட்டது. தேக்கு மரமும், சந்தன மரமும் காடுகளில் வளர்த்தனர்.

பல்லவர்கள் காலத்திலும், பாண்டியர்கள் காலத்திலும், நீர்ப்பாசன வசதிகளைக் கொண்டு அதிகப்படியான நிலங்களில் நெற்களை பயிர் செய்தனர். எள்ளு, கரும்பு முதலியன நீர்ப்பாசன உதவி கொண்டு அதிகப்படியான நிலங்களில் பயிர் செய்தனர்.

விவசாயம் நன்கு வளர்ச்சியடைந்திருந்தது. நெற்கதிர்கள் யானைகள் நின்றால் மறைக்கும் அளவிற்கு வளர்ந்திருந்தது. ஒவ்வொரு கதிரிலும் முன்னூறு நெற்கள் இருந்தது.

சோழர்கள் காலத்திலும் நெல்லுக்கு அடுத்தப்படியாக தினை, வரகு, எள்ளு, பயிறு, குருவை, கரும்பு, மருக்கொழுந்து, கருணை, மஞ்சள், இஞ்சி, இளநீர், வாழை, பூசனி முதலியன பயிரிடப்பட்டன.

மாமரம், பலாமரம், எலுமிச்சை, நெல், குலாவிருலி, இலுப்பை, தென்னை, பாக்கு முதலியன அதிக அளவில் பயிரிடப்பட்டது.

நாயக்கர்கள் காலத்தில் எட்டு வகைகளாக நெல் இரகங்கள் பயிரிடப்பட்டது. அவை சித்திரை வாரி, கருஞ்சிறை, வாளன், சிறைமீட்டான், மணல்வாரி, செஞ்சம்பா, பொற்பாலை, கத்தூரிவாணன், பூம்பாளை, கருங்குறுவை, புனுகுசம்பா முதலியனவாகும். நெல் பயிரிடுவதே நாயக்கர்களின் முக்கிய தொழிலாக இருந்து வந்தது. நெல்லுக்கு அடுத்தபடியாக உணவுப் பயிர்கள், பருப்பு வகைகள், காய்கறிகள் அதிக அளவில் பயிரிடப்பட்டன.

உரம்

தமிழர்கள் பயிர்களுக்கு உரம் இடுவதில் மிகுந்த அக்கறை செலுத்தி வந்தனர். உழவுத் தொழிலில் உரமிடுவதின் அவசியத்தை, 'எருகுழையின்றி ஏர் பிடியாதே' என்னும் பழமொழியிலிருந்து தெரிகிறது.

களை எடுத்தல் நீர் பாய்ச்சுதல், உரம் இடுதல் ஆகியவற்றின் இன்றியமையாமையைத் திருக்குறள் (1037, 1038) எடுத்துரைக்கின்றது.

'ஒரு பலம் புழுதி கால்பலம் ஆகின்ற வரைக்கும் நிலத்தைக் காயவிட வேண்டும். அவ்வாறு செய்தால் ஒரு பிடி எருவும் இல்லாமலே பயிர் நன்றாகச் செழித்து விளையும் (1037) என்று குறள் கூறுகிறது.

'ஏரினும் நன்றால் எரு இடுதல்; கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு'

இக்குறளின் (1038) மூலம், ஏர் உழுவதைவிட எரு இடுவது நல்லது; களை கட்ட பிறகு, நீர் பாய்ச்சுவதைவிடக் காவல் காத்தல் நல்லது. ஆகையால் இவை எல்லாவற்றையும் விடாமல் செய்வதே உழவன் கடமை என்கின்றார்.

'ஆட்டுரம் ஓராண்டு நிற்கும், மாட்டுரம் ஆறாண்டு நிற்கும்' என உரமிடும் முறையினைக் காலத்தினால் கணக்கிட்டு பயிர்களுக்கு ஏற்றாற்போல் ஆட்டுரம், மாட்டுரம், குப்பைக் கூளங்கள், இலை தழைகள், புற்றுமணல், வேப்பம் புண்ணாக்கு, மீன் உரம், சாம்பல் எரு, கழிவு பொருட்கள், காய்ந்த இரத்தம், எலும்பு உரம் முதலியவைகளை உரமாக அக்காலத்தில் இருந்தே பயன்படுத்தி வந்தனர். 'மாட்டெரு புஞ்சைக்கு, தழையெரு நஞ்சைக்கு' என நிலத்திற்குத் தக்கவாறு உரமிடும் முறையினைக் கையாண்டிருந்தனர்.

பயிர்களுக்கு ஆட்டுரத்தையும், நெற்பயிர்களுக்கு ஆவாரை இலை தழைச்சத்தையும், புற்று மணல், ஆற்றுவண்டல் முதலியவைகளையும் இட்டு வந்தனர்.

'ஈரம் போகாமல் எருவை மூடு', காய்ந்த எரு காசுக்கு உதவாது' என எருவைப்பேணி உரமுடும் முறையினைக் கையாண்டிருந்தனர்.

மக்கள் தொகைப் பெருகத்திற்கேற்ப விவசாயமும் விஞ்ஞானமும் வளர்ச்சியடைய தற்பொழுது இரசாயன உரங்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

யூரியா, சூப்பர் பாஸ்பேட், அமோனியம் நைட்டிரேட், கால்சியம், அமோனியம் சல்பேட், நைட்டிரேட் முதலிய இரசாயன உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

ஊ) நீர்ப்பாசன வளர்ச்சி

விவசாய வளர்ச்சியினை மேம்படுத்தவும், நிலத்தை நன்கு உழுது பயன்படுத்தவும், பாசன முறை முக்கிய பங்கினை வகிக்கின்றது. பருவகாலங்களிலும், நம்பமுடியாத மழைக்காலங்களிலும் நீரின்றி பயிர்த்தொழில் பாதிக்கும்பொழுது பாசன வசதி தேவைப்படுகின்றது. இதனால் செயற்கையாக பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதையே 'பாசன முறை' என்று அழைக்கலாம்.

தமிழர்கள் நீர்ப்பாசனத்தின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்திருந்தனர். அதனால் 'நீரின்றி அமையாது உலகு' என்னும் முதுமொழி அவர்களின் சொல்வழக்கில் இருந்து வந்தது. 'நீரோட்டம்தான் விவசாயியின் இரத்த ஓட்டம்'

என்று நீரோட்டத்தையும், விவசாயின் இரத்த ஓட்டத்தையும் ஒன்றாக ஒப்பிட்டு கூறியிருப்பது, நீர்ப்பாசனத்தின் முக்கியத்துவத்தை நன்கு தெரிவிக்கின்றது.

நிலத்தின் தன்மையைப் பொருத்தும், மணலைப் பொருத்தும், நிலத்தடி நீருக்கேற்பவும், பலவகையான பயிர்களுக்குத் தேவையான நீரைப் பொருத்தும், நீர்ப்பாசன முறைகளை விவசாயிகள் மேற்கொண்டனர்:

நீர்ப்பாசன முறைகளான ஏரிப்பாசனமும், கிணற்றுப்பாசனமும் கால்வாய்ப் பாசனமும் மற்றும் பாசன முறைகளை நான்கு வகைகளாகப் பிரித்து விவசாயம் செய்து வந்தனர். சங்ககாலத்தில் ஏரிப்பாசனமும் கிணற்றுப் பாசனமும் பயிர்களுக்குத் தேவையான நீரைக் கொடுத்து வந்தது. இக்காலத்தில் ஏரிப்பாசனத்தைவிட கிணற்றுப்பாசனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்திருந்ததால், பெரிய கிணறுகள் தோண்டப்பட்டு, அதன் நீரை பாசனத்திற்குப் பயன்படுத்தினர்.

சங்க காலத்தில் வாழ்ந்த அரசர்களைப்போலவே, பல்லவர் காலத்தில் ஆட்சி செய்த அரசர்கள் விவசாயத்திற்காக நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்தினர். மேலும் விவசாய வளங்களை மேம்படுத்துவதற்காக அதிகமான குளங்களை இவர்கள் வெட்டினர். முதலாம் மகேந்திரவர்மனின் பெயரன் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பரமேஸ்வரா என்னும் குளத்தை வெட்டினான். 'திரையானேறி' எனும் ஏரியை கி.பி. எட்டாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் வாழ்ந்த நந்திவர்ம பல்லவன் கட்டியதாக அதன் கல்வெட்டு கூடுகின்றது. 'உத்திரமேருரிலுள்ள வைரமேக ஏரி ஒரு பல்லவ அரசனால் கட்டப்பட்டது.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தந்திவிக்கிரமவாமன் என்னும் அரசன் வடஆற்காட்டிலுள்ள கூடியமல்லம் எனுமிடத்தில் ஒரு குளத்தை வெட்டினான். கங்கப் பல்லவ வம்சத்தில் வந்த காம்பவர்மன் என்னும் அரசன் உக்கல் என்னுமிடத்தில் ஒரு ஏரியைக் கட்டினான். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் கனகவல்லி என்னும் ஏரி சோழபுரத்தில் கட்டியதாகக் கல்வெட்டுக்கள் செப்புகின்றன. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பின்பாதியில், காவேரிப்பாக்கம் எனும் ஏரி நிறுவப்பட்டது. இந்த ஏரியின் கரையானது வடக்கும் கிழக்குமாக 6.4 கிலோ மீட்டர் பரப்பளவு உள்ளவாறு தோண்டப்பட்டது. ஆற்காட்டில் உள்ள சித்திரமேக் ஏரியும், தண்டலத்திலுள்ள மதகும் இதே காலத்தில்தான் கட்டப்பட்டன.

குளத்தின் மூலமாக நீர்ப்பாசன வசதி பெற்ற நிலங்களை இருபத்தைந்து பகுதிகளாகப் பிரித்திருந்தனர். அவற்றில் பொது மக்களின் தேவைக்காக ஐந்து பயன்படுத்தப்பட்டது. விவசாய வளங்களை மேம்படுத்துவதற்காக அதிகப்படியான நிலங்கள் நீர்ப்பாசன வசதியின் கீழ் கொண்டுவரப்பட்டது ஏரிப்பாசனம் தமிழர்களின் நீர்ப்பாசன வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக மட்டுமின்றி, உடனடியான பாசன நீர்த் தேவையினை இட்டு நிரப்பி விவசாய வளர்ச்சிகளை மேம்படுத்தியது.

சோழர்கள் காலத்தில் அதிகமான மக்கள் எளிய விவசாய வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். விவசாயமே அவர்களின் முக்கிய தொழிலாக இருந்து வந்தது. நீர்ப்பாசன வசதிகளை அதிகரிப்பதற்காகச் சோழர்கள் வீரநாரண ஏரி, சோழவாரி ஏரி, கண்டராதித்தப்பேரேரி, மதுராந்தகப்பேரேரி போன்ற ஏரிகளை விவசாய நிலங்களைப் பெருக்குவதற்காக வெட்டினர்.

விவசாய முறைகளுக்காக ஆறுகளின் குறுக்கே அணைக்கட்டுகளைக் கட்டி நீண்ட ஆறுகளை வெட்டியது. தமிழர்களின் பெருமைப் படக்கூடிய சாதனைகளுள் ஒன்றாகும்.

சோழநாட்டு அரசனான கரிகால் வளவனும் (கி.பி.190) அவன் வழிவந்தவர்களும் நீர்ப்பாசன வசதிக்காக காவேரியிலிருந்த வெண்ணார், அரசில்லார் போன்ற ஆறுகளைக்கட்டினர். காவிரி மற்றும், அதன் கிளை ஆறுகளின் குறுக்கே அணைக் கட்டுகளையும், கால்வாய்களையும் கட்டியதால் அதிக மாநிலங்களில் நீர்ப்பாசன வசதிகளை செய்ய முடிந்தது. காவிரியின் இரு கரைகளிலும் வெள்ளம் தடை புரண்டு ஓடாது இருக்கக் கட்டப்பபெற்றப் புகழ்வாய்ந்த கல்லணை என்னும் அணைக்கட்டு 329 மீட்டர் நீளமும், 12 முதல் 18 மீட்டர் அகலமும் கொண்டதாகச் சோழர்கள் கட்டினர். காவிரியின் கீழ் பெரியதலக்காட்டு அணைக்கட்டு கி.பி. பத்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

வீரமார்த்தாண்டம், உய்யங்கொண்டான், முடிகொண்டான் போன்ற கால்வாய்கள் கி.பி. பத்தாம் நூற்றாண்டுக்கும் பதினோறாம் நூற்றாண்டுக்கும் இடையில் கட்டப்பட்டது. மொத்தத்தில் முழுவதுமாக சோழர்காலத்தில் நீர்ப்பாசன வசதி நன்கு வளர்ச்சியடைந்திருந்தது.

பாண்டியர்கள் காலத்தில் கிணற்றுப்பாசனம், ஏரிப்பாசனம் ஆகியவைகள் நன்கு செழிப்புற்றிருந்தது. மேலும் பாண்டிய நாட்டின் பரிசாக வைகை ஆறும், தாமிரபரணி ஆறும் அந்நாட்டில் மண்ணைச்செழிப்புறச் செய்து அதிகப்படியான விளை நிலங்களை வேளாண்மைக்கெனப் பயன்படச் செய்தது.

நாயக்கர்களின் ஆட்சிக் காலத்தில் நீர்ப்பாசன வசதிகள் மாறுபடாமல் அப்படியே இருந்தது. இயற்கை மற்றும் செயற்கை நீர்ப்பாசன முறைகள் விவசாயத்திற்கென மேற்கொள்ளப்பட்டன. கிணறுகள், குளங்கள், கால்வாய்கள், நீர்த்தேக்கங்கள் தேவையான இடங்களில் கட்டப்பட்டன. ஏற்றங்களின் மூலமும் நீர்ப்பாசன வசதி நடைபெற்றது.

ஏரி பராமரிப்பு

கிராம மக்கள் மன்றம், முக்கியமாக அதன் செயலாட்சிக்குழு, ஏரி மேற்பார்வை குழு (ஏரி வாரியம்) போன்றவைகள் நீர்ப்பாசன வேலைகளைப் பராமரிப்பு செய்து வந்தன. இவை ஏரிகளையும், அணைக்கட்டுக்களையும் பழுது பார்க்கவும், தூர்வாரி ஏரிநீரைச் சரியானபடி பயிர்களுக்குப் பாய்ச்சவும் உதவின.

ஏரிகளைப் பராமரிக்க வேண்டிய செலவுக்கென ஏரிப்பட்டி எனும் இறையிலி நிலங்கள் இருந்ததாகத் தெரியவருகின்றன.

ஏ) விவசாய முன்னேற்றத்தால் வளர்ச்சி பெற்ற கலையும், கட்டிடக்கலைகளும்

தென்னிந்திய அரசு தனக்கே உரித்தான சரித்திரமும், கலாச்சாரமும் கொண்டிருக்கிறது. ஏனெனில் வடஇந்தியாவும், தென்னிந்தியாவும் அடர்ந்த காடுகளால் பிரிக்கப்பட்டிருந்ததால் தென்னிந்தியாவின் கலாச்சாரமும் நன்கு தனித்து வளர்ச்சி பெற முடிந்தது.

தென்னிந்தியாவின் சரித்திர காலம்தான் புகழ் பெற்ற காலம் என்று தமிழ் மன்னர்கள் தெரிவிக்கின்றார்கள். இவர்கள் தென்னிந்தியாவின் முரண்பாடான தனியரசு நாடுகளை ஒன்றாகி புதிய நீர்ப்பாசனங்களைக் கட்டுவித்து விவசாய வளர்ச்சிகளை மேம்படுத்தி வந்தனர். விவசாய வளர்ச்சியினால் நாடு நல்ல நிலையில் வளர்ச்சியடைந்தது. இதனால் கலையும், கட்டிடக்கலையும் நாட்டில் பூத்துக்குலுங்கியது. பெரிய கோவில்கள் கட்டப்பட்டன. அழகான உருவங்கள், கடவுள் சிலைகள் முதலியன மரம், கல், வெண்கலம் முதலியவற்றால் வடித்தெடுக்கப்பட்டது. அரண்மனைகளும், அழகான கட்டிங்களும், வீடுகளும், மரத்தின் உதவி கொண்டு கட்டப்பட்டது.

தமிழர்களின், விவசாய வளர்ச்சியினால் கலையும், கட்டிடக்கலைகளும் வளர்ச்சி பெற்றன என்று சங்க இலக்கியத்தின் சான்றுகள் செப்புகின்றன. தமிழர்கள் பலவகையான தொழில்களைப் பின்பற்றி வந்ததாக சங்க இலக்கியங்கள் இயம்புகின்றன. விவசாயிகளைத் தவிர, இடையர்கள், வேடுவர்கள், மீனவர்கள், உப்பு தயாரிப்பவர்கள் ஆவார்கள். கிராம கைவினைஞர்களான குயவர்கள், தச்சர்கள், தறி நெய்பவர்கள், மற்றும் செருப்பு தைப்பவர்கள் ஆவார்கள்.

கிராமங்களிலும், நகரங்களிலும் நல்ல முறையில் கட்டிடங்கள் கட்டியிருந்ததற்கு சங்க இலக்கிய சான்றுகள் சாற்றுகின்றன. சுட்டகல், சுண்ணாம்பு முதலியவைகள் கட்டிடங்கள் கட்டப் பயன்படுத்தப்பட்டன என்றும், அதில் மரங்கள்தான் அதிகப்படியாக பயன்படுத்தப்பட்டன என்று தெரிகின்றது. கேரளாவிலும், ஜப்பானிலும் உள்ளதுபோல் மரங்களைப் பயன்படுத்தி அழகான வீடுகளும், அரண்மனைகளும் கட்டப்பட்டன. அவை ஜப்பானிலுள்ள, கீயோடோவில் (kyoto) நீஜோவின் (Nijo)

வீடுகளைச்சுற்றி வாயில் கட்டியிருந்ததாக மதுரைக்காஞ்சியின் மூலமாகத் தெரியவருகின்றது. துறைமுக நகரத்தில் பல அடுக்கு மாடிகளும், பண்டகசாலைகளும், கலங்கரை விளக்கமும் கட்டியிருந்தாக பெரும் பாணாற்றுப்படை கூறுகின்றது. போற்றதக்க நகரங்களில் சாலைகளை ஒட்டினார் போல் கடைகள் இருந்ததாகவும், அங்கு பல மாட்டுவண்டிகள் நின்றிருந்ததாகவும் 'நற்றிணை' கூறுகின்றது. புகழ்பெற்ற நகரங்களில்

ஆறுகளைப் போன்று அகன்ற, பெரிய தெருக்கள் இருந்ததாக 'நெடுநெல் வாடை' கூறுகின்றது. (Stein, B.Essays on Southern India P.15) பல்லவர்கள் தங்களது ஆட்சிக்காலத்தில் கற்கோவில் கட்டிடங்களை கட்டுவித்தனர். அவர்கள் காஞ்சிபுரத்தில் கைலாசநாதர் கோவிலையும், மகாபலிபுரத்தில் கடற்கரைக் கோவிலையும் கட்டுவித்தனர்.

சித்தானவாசல்

கி.பி.ஆறாம் (அல்லது) ஏழாம் நூற்றாண்டில் புதுக்கோட்டையிலுள்ள சித்தானவாசலில், ஜைனர்களுக்கான வழிபாட்டிடமாக கற்களைச் செதுக்கி சதுரமாகக் கட்டப்பட்டது. இந்த முன் கூடத்தின் சுவர்களில் அழகிய ஓவியங்கள் தீட்டப்பட்டன. இவை அஜந்தா குகை ஓவியங்களை ஒத்திருக்கிறது. இந்த அறையின் உட்கூறையில், தாமரைத்தடாகத்தில் விலங்குகள் நீர் அருந்துவதைப் போல வரையப்பட்டுள்ளது.

மகாபலிபுரம்

மகாபலிபுரத்தில் குகைக்கோவில்கள் கற்களால் செதுக்கப்பட்டுள்ளது. இதில் திருமூர்த்திக் கடவுள் முக்கியமானவர் ஆவார். இங்குள்ள மூன்று அறைகளிலும் கடவுளின் உருவங்கள் காணப்படுகின்றன. குகைக்கோவிலில் துர்கா தேவி, மகிசாசுரன் என்ற அசுரனிடம் போரிடுவதைப் போன்று வடிக்கப் பட்டுள்ளது. அவற்றில் முக்கியமானது வராஹா ஆகும். இவற்றின் கற்தூண்களைச் சிங்கள் குனிந்து தாங்குவதைப் போல் வரையப்பட்டுள்ளது. இவற்றில் லட்சுமியும், துர்காவும், வராஹாவும், திருவிகர்மாவும் செதுக்கப்பட்டிருக்கின்றன.

மேலும் பூமியிலிருந்து கங்கை நீர் வருவதைப்போல இங்குள்ள பாறையில் செதுக்கப்பட்டிருக்கிறது. கடுந்துறவிகள் தியானிப்பதைப் போலவும், யாத்திரியர்கள், மிருகங்கள் முதலியன அந்த புனித நீரை சுற்றி மகிழ்ச்சியுடன் நிற்பதைப் போன்று செதுக்கப்பட்டிருக்கின்றது.

கங்கை நீர் போகும் பாதையில் முனிவர்கள், பாம்புகள், மிருகங்கள் முதலியன வரிசையாக இருப்பதைப் போன்று செதுக்கப்பட்டிருக்கின்றன. தென்னிந்தியாவின் காட்டில் தனித்து விடப்பட்டிருந்த மிருகங்களான மான், சிங்கம் மட்டுமே இதில் செதுக்கப்பட்டிருந்தது. புலிகள் செதுக்கப்படவில்லை.

ஹலிகார் கால்நடை (Hallikar Cattle)

தென்னிந்தியாவில் சிறப்புப் பெற்றிருக்கின்ற கால்நடை ஹலிகார் கால்நடையாகும். மகாபலிபுரத்திலுள்ள சிலைகளில் ஒன்றான கோபி குகையில், கிருஷ்ணர் பாலைக் கறப்பதுபோல் சிற்பம் செதுக்கப்பட்டிருக்கின்றது. கிருஷ்ணர் பாலைக் கறக்கும் இந்த கால்நடையானது ஹலிகார் இனத்தைச் சார்ந்தவையாகும். இந்தச் சிற்பம் 7ஆம்

நூற்றாண்டுக்காலத்திய பல்லவ காலத்திற்கு ஒத்துப்போகின்றது. இதில் செதுக்கியிருக்கும் மாட்டின் இரு கொம்புகள் நீண்டு பின் வளைந்து இருக்கின்றது.

இதிலிருந்து ஹலிகார் கால்நடை பண்டைய இனத்தைச் சார்ந்ததாகத் தெரிய வருகின்றது. கர்நாடகத்திலுள்ள 'ஹோல்பிட்' கோவிலில் கிருஷ்ணர் கோவர்த்தன மலையைத் தாங்கியிருப்பது போலச் சிற்பம் செதுக்கப்பட்டிருக்கின்றது. அக் கோவர்த்தன மலையின் அடியில் ஒதுங்கியிருக்கும் பசுக்கள் ஹலிகார் இனத்தைச் சார்ந்தவையாகும்.

சோழர்கள் காலத்தில் தஞ்சையிலுள்ள பிரகதீசுவரர் ஆலயம் கட்டப்பெற்றது. விக்கிரமச்சோழர் (கி.பி.318) சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோவிலையும், ஸ்ரீரங்கத்திலுள்ள அரங்கநாதர் கோவிலையும் புதுப்பித்தார். இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி.1135 முதல் கி.பி.1173 வரை) பரதநாட்டிய சாத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு, சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோவிலில், நர்த்தனம் ஆடுவது போன்ற பல சிலைகளைச் செதுக்கினார்.

காவிரியாற்றின் குறுக்கே, தஞ்சை அருகில் அணைக்கட்டு கட்டப்பட்டு இருப்பதானது சோழர்களின் பெருமையைக் குறிப்பதாக உள்ளது.

கோவில்கள், மாளிகைகள் கட்டியவிதங்கள், சிற்பங்கள் செதுக்கிய விதங்கள் ஆகியவற்றிலிருந்து கலையும், கட்டிடக் கலையும் உயர்ந்த நிலையிலிருந்தது என்பது தெரியவருகின்றது.

பாண்டியர்கள் காலத்திலும், நாயக்கர்கள் காலத்திலும், கலையும், கட்டிடக்கலையும் அதிக அளவில் வளர்ச்சிப் பெற்றிருந்தது. மக்களின் சமூகக் கலாச்சார வாழ்க்கைக்கு கோவில்கள் பெரும்பங்கை வகித்தன. கோவில்கள் மக்கள் வசிக்கும் மையப்பகுதியிலிருந்தன. திருவிழாக்காலங்களில் மண்டபங்களில் பக்தர்களின் கூட்டம் நிறைந்திருந்தது. கோவிலுக்கருகில் உள்ள குளங்களில் பக்தர்கள் புனித நீராடினர்.கோவிலின்,கருவறை யினை ஒட்டினாற்போல் கடைகள் வரிசையாக இருந்தது. அங்கு மாலைகள் விற்கப்பட்டன. மாலைப் பொழுதில், விஷ்ணு, சிவா முதலிய கடவுளுக்கு மக்கள் விளக்கை ஏற்றிப் பக்தி பரவசத்துடன் பிரார்த்தனை செய்து வந்தனர்.

சங்க காலம் முதல் இருபதாம் நூற்றாண்டு வரை கலையும், கட்டிடக் கலையும் வளர்ச்சியடைந்து, புதிய கட்டிடக்கலை அணுகுமுறை புகுத்தப்பட்டது. பருப்பொருள் சார்ந்த கலாச்சாரம் உயர்ந்த நிலையில் இருந்தது. புதிய ஆரிய நிலைகளும் பழைய ஆரிய நிலைகளும் இணைந்து ஆன்ம வளர்ச்சி முன்னேற்றத்திற்கு அடிகோலியது. சமூக மக்கள் அனைவரும் இணைந்து, மகிழ்ச்சியுடன் இருந்ததாக பல தமிழ் இலக்கிய நூல்கள் தெரிவிக்கின்றன. எல்லா வகையான கலை, கட்டிடக் கலை வளர்ச்சிகளுக்கு விவசாயமானது அடிப்படைக் காரணியாகும். இவை யனைத்தும் விவசாய வளர்ச்சியினால் மட்டுமே உருப்பெற்றது.

ஏ) முடிவுரை

மக்கள் தொகைப் பெருகி, தொழிற்புரட்சி ஆரம்பமானதும், அடர்ந்த காடுகளையும், நீண்டு வளர்ந்த பெரிய மரங்களையும் வெட்டிக் காடுகளை அழித்தனர். காடுகளை அழித்ததால், வானிலையில் மாறுதல் ஏற்பட்டது. மழையானது காலம் தவறி பொழியத் தொடங்கியதால் விவசாயமானது பெரிதும் பாதிக்கப்பட்டது. அதனால் வறட்சி தாண்டவமாடியது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இந்நிலை மாறவேண்டுமென்றால், காடுகளை உருவாக்கி, காலநிலையினை சீர்செய்து அதிக மழையினை பொழியும்படி செய்யவேண்டும். விவசாய செயல் முறைகளை அதிகரித்து, பயனற்ற நிலங்களை விவசாய செயல்முறைகளுக்கு கொண்டு வரவேண்டும்.

வேளாண்மைத் தொழிலில் மக்கள் ஈடுபடாமல் இருந்தால் மக்கள் பெரிதும் அவதியுறுவர். மக்களின் மகிழ்ச்சி பெரிதும் பாதிக்கப்படும். நாட்டின் வளர்ச்சியினையும், மக்கள் வளர்ச்சியினையும் வேளாண்மைத் தொழிலின் மூலமே பெறமுடியும்.

ஒரு நாட்டின் விவசாயம் வளர்ச்சியடைந்தால் நாடு எந்த நிலையிலிருக்கும் என்பதை

'கார்நடக்கும் படிநடக்கும் காராளர் தம்முடைய
ஏர்நடக்கும் எனில் புகழ்சால் இயலிசை நாடகம் நடக்கும்
சீர் நடக்கும் திறம்நடக்கும் திருவறத்தின் செயல்நடக்கும்
பார்நடக்கும் படைநடக்கும் பசிநெருங்கமாட்டாதே'

என்ற பாடல் எடுத்துரைக்கிறது.

மழைக்காலத்தில் விவசாய செயல்களான ஏர் உழுதல், நாற்று நடுதல், அறுவடை செய்தல் முதலிய செயல்கள் நடந்தால், நாடும் மக்களும் நலம் பெறுவர். மக்கள் மகிழ்ச்சியுடன் ஆடல் பாடலுடன் வாழ்க்கை முறையினை நடத்திச் செல்வர். நாட்டின் வளர்ச்சி நிலைகள் நல்ல நிலையில் இருக்கும். திருவரங்கக் கடவுள் ஆசிகளுடன் நாடு முன்னேறும், மக்கள் பசி, பட்டினியின்றி வாழ்க்கை நடத்துவர்.

சுதந்திரப் போராட்டத்தில் தமிழர்களின் பங்கு

வே. தில்லைநாயகம்

முன்னுரை

சொல்லும் பொருளும்: சுதந்திரப்போராட்டத்தில் தமிழர்களின் பங்கு என்ற கட்டுரைத் தலைப்பு சுதந்திரப்போராட்டத்தில் தமிழர்களின் பங்கு காண்பது போலவும், சுதந்திரப் போராட்ட தமிழர்களின் சாதனைகளை அறிவது போலவும் இருபொருள்பட இருக்கிறது. இரண்டையும் இணைத்து இனிமை காணலாம்.

1.தமிழர், 2.போராட்டம் 3.சுதந்திரம், மற்றும் 4.பங்கு என்ற நான்கு சிறப்புச் சொற்கள் தலைப்பின் தகைமை அறிய உதவும்.

தமிழர்: 'தமிழ்' என்ற சொல் ஒரு புதிராகவே இருக்கிறது. கடந்த 25 நூற்றாண்டுகளாய் இதற்கு அறிவியல் அடிப்படை விளக்கம் தரப்படவில்லை. எனினும் இச்சொல் வடவேங்கடம் தென் குமரிப் பரப்பில் வழங்கும் – விளங்கும் – மொழியையும் இலக்கியத்தையும் குறிக்கிறது.

சகிப்புத்தன்மை, தவப்பாங்கு, தூய்மை நோக்கு, பகுத்துண் மரபுத் தன்னடக்கம் தாங்கிய பண்பு–நாகரிகம் பாராட்டும் பண்பினரைக் குறிக்க, தமிழர் என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

'தமிழன் என்றொரு இனமுண்டு,
தனியே அவர்க்கொரு குணமுண்டு,
அமிழ்தம் அவனுடைய மொழியாகும்
அன்பே அவனுடைய வழியாகும்'

என்று தமிழர் பண்பை நான்கு வரிகளில் நயம்பட நவின்றுள்ளார் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை.

போராட்டம்: போராட்டம் என்ற சொல் கைகலப்பு, கடும் எதிர்ப்பு, அயரா அரும்பாடு, விடாப்பிடி, எதிர்ப்பு, முயற்சி, துடிதுடிப்பாட்டம் என்று பொருள்படும்.

சுதந்திரம்: சுதந்திரம் என்ற சொல் தன்னுரிமை, குடியாட்சி உரிமை, குடியாண்மை, பயனுரிமை, தடையற்ற செயலுரிமை,தடையற்ற இயக்கம் என்று பொருள்படும்.

பங்கு: பங்கு என்ற சொல் தொழிற்கூறு, கடமைக்கூறு, வாழ்க்கைப் பங்கு என்று பொருள்படும்.

போராட்டம்: முன்கண்ட நான்கு சொற்களையும் இணைத்துப் பார்த்தால் என்ன போராட்டம் என்று தெரியவரும். இதன்படி அயலார் பிடியிலிருந்து, ஆங்கிலேயர் பிடிப்பிலிருந்து–கலாச்சாரம், பொருளாதாரம், அரசியல், சமூகம் முதலிய துறைகளில் விடுதலை காணும் – பேணும்–முயற்சி சுதந்திரப் போராட்டப் பொருளாகக் கொள்ளலாம்.

இந்தியாவிற்கு ஐரோப்பியர்கள் வருகையிலிருந்து – கி.பி.1498இல் போர்ச்சுக்கீசியர் வருகை. 1600இல் ஆங்கிலேயர் வருகை, 1620இல் ஆலந்தியர் வருகை, 1616இல் டேனியர்கள் வருகை 1664 இல் பிரெஞ்சுக்காரர் வருகை தந்த காலங்களிலிருந்து – சொல்லில் விவரிக்கவொண்ணாத அளவுக்கு இந்தியா கொள்ளையடிக்கப்பட்டது.

ஆங்கிலேயர் தொடர்பாக ஏற்பட்ட அரசியல் ஒற்றுமை, ஐரோப்பியர் தொடர்பாக காணப்பட்ட பொருளாதாரச் சுரண்டல், மேற்கத்திய கருத்துகளோடு வந்த ஆங்கில மொழி–இலக்கிய அறிமுகம், அடக்கி ஒடுக்கப்பட்டவர்களிடையே ஏற்பட்ட சமூக சமயக் குமுறல், போக்குவரத்து வசதி, கருத்துப் பரிமாற்ற வாய்ப்பு, வெளிநாட்டுத் தொடர்பு, தேசிய எழுச்சி எண்ணம்–சொல்–செயல் முதலியன அடக்கி ஆள்பவர்களிடமிருந்து அரசியல், பொருளாதாரம், சமூகம், கலாச்சாரம் முதலிய துறைகளில் விடுதலை காணும் விருப்பம் போராட்டமாகியது.

போராட்டம் எப்படி என்ற கேள்வி எழும்போது முதலில் காலக்கணக்கு வருகிறது.அதாவது வெள்ளையரை முதன் முதலாக எதிர்த்தது யார் என்ற கேள்வி எழுகிறது. தமிழ் நாட்டில் பூழித்தேவர் (1755–1761) இராச முத்து வடுகநாத பெரிய உடையத்தேவர்(1772),இராணி வேலுநாச்சியார்(1780–1800), பாஞ்சாலக்குறிஞ்சி கட்டபொம்மன் (1799) திண்டுக்கல் கோபாலநாயக்கர் (1800–1801), மருதுபாண்டியர் (1800–1801) முதலியோர் முன் நிற்கின்றனர்.

இரண்டாவதாக இடம் கருதினால் தெற்கா, கிழக்கா, வடக்கா, மேற்கா என்ற கேள்வி எழுகிறது. காலத்தால் முந்தியோர் இடத்தாலும் முந்தினர் என்பது பொருத்தமாகிறது.

மூன்றாவதாக போராட்டமுறை வருகிறது. ஆயுதப்போராட்டமா அகிம்சைப் போராட்டமா என்ற கேள்வி எழுகிறது. முதலில் ஆயுதம், அடுத்து அகிம்சை என்று தெரிகிறது.

நான்காவதாக போராட்டத்தில் பங்குகொண்டவர்கள் பற்றிய கேள்வி எழுகிறது. முதலிலே அரசுரிமை இழந்த அரசர்கள், அடுத்து அதிகாரம் இழந்த சமீன்தார்கள், கொடுத்து உரிமை இழந்த பொது மக்கள் வருகிறார்கள்.

தமிழர் போராட்டம்: தக்க தகவல்கள் கிடையாமை, காணக்கிடைக்காமை காரணமாக கிடைத்த மூலங்களில் இருந்து எறும்பு சேகரித்தது போல பல்வேறு வழிகளில் தேடிப்பிடித்துத் தொகுத்த, கருத்து 1. போராளிகளின் பங்கு, 2 நிறுவனங்களின் பங்கு, 3 அச்சுத்துறையினரின் பங்கு, 4 இலக்கிய வகைகளின்

பங்கு, 5 சமூகத்தின் பங்கு, 6 தலைவர்களின் பங்கு மற்றும் 7 தமிழர் பங்கு பற்றி களஞ்சியத் தேவை என்று 7 தலைப்புகளில் தரப்படுகிறது. இதில் எது முதலில் எது அடுத்தது என்பது நியதிப்படுத்துவது இயலாது; அப்படி முயல்வது இடியாப்பத்தில் ஆரம்ப இழை முடிவு இழை காண முயல்வது போலாகும்.

போராளிகளின் பங்கு: போராளி என்ற சொல் பொருதுகிற, மோதுகிற, போராடும் குணம் கொண்டவர் என்று பொருள். தன்னைச்சுற்றி என்ன நடக்கிறது என்று உணர்பவர் ஏதாவது தவறு நடந்தால் அது சமூகத்தைப் பாதிப்பது உணர்ந்தால் சிலிர்த்து எழுந்து தவறு செய்தவரை தண்டிக்கும் முறையில் செயற்படுவது இயற்கை.

அதிகாரம் தவறானவழியில் தகாத முறையில் பயன்படுத்தப் படுவதின் காரணமாக பொருளாதாரச் சுரண்டல், சமூகத்தாழ்வு, கலாச்சாரக் கட்டாயம் காரணமாக அடக்கி வைக்கப்பட்டவர்களும் கொடுமைக்கு ஆளானவர்களும் எதிர்ப்பாளராகிறார்கள். சிந்தனையால், சொல்லால், செயலால் துணிச்சலாகப் பழகிவிட்டவர்கள், ஆயுதம் வைத்திருப்பவர்கள் புரட்சிப் பதாகையைத் தாங்கி போராட்டத்தில் புகுந்து விடுகிறார்கள்.

புலி மனிதர்: ஒரு கட்டத்தில் பாளையக் காரர்களும், சமீன்தார்களும் போராட்டத்திற்கு தலைமை ஏற்றார்கள். இம்முறையிலே 1755–1761 காலக்கட்டத்தில் ஆங்கிலேயர்களுக்கு எதிராகத் தமிழ் நாட்டின் புலி மனிதர் – பூழித்தேவர் – பொங்கி எழுந்தார்.

சிவகங்கைச் சிறுத்தை: ஆங்கிலேயருக்கு எதிராகப் போரிட்ட இராசா முத்து வடுகநாத பெரிய உடைய தேவர் 1722 சூன் 25ஆம் நாள் ஆங்கிலேயர்களுடன் 'மோதி போர்க்களத்தில் மாண்டார்.

1780 முதல் 1800 வரை சிவகங்கையை அரசாண்ட இராணி வேலு நாச்சியார் ஆங்கிலேயருக்கு எதிராகப் போரிட்டார். ஆங்கிலேயரை எதிர்த்த முதல் வீராங்கனை இவர்தான். எனினும் இன்னும் இச்செய்தி இதுவரை தெளிவாக்கப்படவில்லை.

குறிச்சிக் குரிசில்: தமிழ் நாட்டில் தெலுங்கு மானியதாரராக விளங்கிய வீரபாண்டிய கட்டபொம்மன் 1799இல் ஆங்கிலேயருக்கு எதிராக ஆர்த்தெழுந்தார். நிரந்தர உள்ளார்ந்த உரசலுக்குக் காரணமாக கப்பம் கட்டுவது தொடர்பாகப் பூசல் பூத்தது.

புதுக்கோட்டை மன்னர் விசய இரகுநாத தொண்டமானும் அவரது திவான் முத்துவயிரவ அம்பலக்காரரும் சேர்ந்து செய்த துரோகத்தால் கட்டபொம்மன் பிடிபட்டார். 1799 அக்டோபர் 17ஆம் நாள் கயத்தாற்றில் தூக்கிலிடப்பட்டார்.

திண்டுக்கல் தீரர்: விருபாச்சி பாளையக்காரரும், பல களங்கள் கண்டவரும், திண்டுக்கல் தீரருமான கோபால நாயக்கர் 1800–1801 ஆங்கிலேயப் படைகளுடன் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்.

மருதுபாண்டியர் மறம்: 1801 ஜுன் 16 இல் சீரங்கம் கோயில் மதிலிலும் திருச்சிக் கோட்டை நவாப் அரண்மனை வாசல் மதிலிலும் மருதுபாண்டியர் ஆணை ஒன்று காணப்பட்டது. இதில் ஆங்கிலேயருக்கு எதிராக இந்திய தேசபக்தியுள்ள அனைவரும் ஆர்த்தெழுமாறு வேண்டப்பட்டிருந்தது. அச்சமயத்தில் அரசியல் நோய்க் காரணங்கள் ஆராயப்பட்டு இந்திய எழுச்சியின் குறிக்கோளை முதன் முதலாக எடுத்துரைத்தது இதுவாகத்தான் இருக்கும்.

வாஞ்சியின் வஞ்சினம்: சுதேசி கப்பல் முயற்சி தொடங்கிய வ.உ.சிதம்பரம்பிள்ளையைத் தண்டித்த ஆங்கிலேயத் தண்டலர் ஆஷ் துரையை வாஞ்சிநாதன் 1911 ஜுன் 17ஆம் நாள் வஞ்சினம் தீர்க்கச் சுட்டுக்கொன்றார். இதன் தொடர்பாக 13 தமிழ் இளைஞர்கள் சதியில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுத் தண்டனைக்காளாயினர்.

நிறுவனங்களின் பங்கு: நிறுவனம் என்ற சொல் நிறுவுதல், நிலையம், பொது நோக்கத்துக்கான அமைப்பு, நிலையான ஒழுங்கமைப்பு முறை என்று பொருள் படும். இங்கு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட நிறுவனங்கள் என்று பொருள் படும்.

குறிப்பிட்ட அக்கறை கொண்ட செய்திகளைப் பற்றி விவாதிக்க, அமைப்பாக இயங்க, பொதுநல முன்னேற்றத்தைக் கருதிச் செயல்பட அமைகின்றன நிறுவனங்கள். இம்முறையிலே கலாச்சாரம், கல்வி, இலக்கியம், அரசியல், சமயம், சமூகம் தொடர்பான பல நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. சீர்ன்றுக்குச் சில.

சுதந்திரப்போராட்டத்தின் தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட சில நிறுவனங்களைக் காண்போம். 1828 இராசா இராம்மோகன்ராய் (1772–1833) முயற்சியில் கல்கத்தாவில் பிரம்ம சமாசம் 1828ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

1837 சமீன்தார்கள் சங்கம், கல்கத்தா நிலச்சுவான்தார்கள் சங்கம்.

1843 வங்காள பிரிட்டானிய இந்தியர் சங்கம்.

1850 சென்னையில் காசுலு நரசிம்மலு செட்டியார் முயற்சியில் பிறப்பிடத்தார் சங்கம்.

1851 இந்தியப் பிரிட்டானிய இந்தியர் சங்கம்.

1856 இலண்டனில் தாதாபாய் நவ்ரோசி முயற்சியில் கிழக்கு இந்தியச் சங்கம்.

1861 விதவை மறுமணச் சங்கம்.

1870 சென்னை சுதந்திரச் சிந்தனையர் சங்கம்.

1876 பூனாவில் நீதிபதி இரானடே (1852–1904) முயற்சியில் சர்வசனிக் சபா.

1875 சுவாமி தயானந்தர் (1824–1883) முயற்சியில் பம்பாயில் ஆர்ய சமாஜம்.

1876 கல்கத்தாவில் சுதேந்திரநாத் பானர்சி–ஆனந்தமோகன் முயற்சியில் இந்தியதேசிய சங்கம்.

1881 சென்னை மகாசபை சங்கம்–திவான் பகதூர் இரகுநாதராவ் முயற்சி

1885 இந்திய தேசிய ஒன்றியம் – கியூம் முயற்சி

1904 சாவர்க்கர் முயற்சியில் அபிநவ பாரத்

1905 அரவிந்தர் தம்பி பரிந்திரகுமார் கோஷ் முயற்சியில் கல்கத்தாவிலும் டாக்காவிலும் அனுசீலன் சமிதி. இந்திய ஊழியர் சங்கம், பம்பாய்– கோகலே முயற்சி.

1906 இந்திய ஒடுக்கப்பட்டோர் சங்கம்

1913 ஐக்கிய அமெரிக்க நாட்டு சான்பிரான்சிசுகோவில் லாலா அர்தயாள் முயற்சியில் கதர் கட்சி.

1916 பூரண சுயராச்சியத்திற்காக பம்பாயில் பால கங்காதரதிலக் (1856–1920) முயற்சியில் சுயாட்சி மன்றம், சென்னையில் அன்னிபெசன்ட் முயற்சியில் சுயாட்சி மன்றம்.

இந்திய தேசிய காங்கிரசு: அகில இந்திய காங்கிரசு கருத்தை முதலில் வெளியிட்டது யார் என்று சொல்வது சிக்கலான வேலை.

1877 சனவரி முதல் நாள் அரசுப்பதவி சட்டப்படி விக்டோரியா இராணியை இந்தியச் சக்கரவர்த்தினியாக அறிவிக்க தில்லியில் கூடிய வெருங்கொலுவிருக்கை என்று ஒரு கருத்து.

தில்லிக்கொலுவிருக்கை சுரேந்திரநாத் பானர்சிக்கு இந்திய மாநாடு கருத்தைத் தந்திருக்கலாம் என்று ஒரு கருத்து.

சென்னையில் கூடிய பிரம்மஞான சங்கக் கூட்டத்திற்கு வந்த 17 இந்தியர்கள் முயற்சியில் காங்கிரசு கருத்துத் தோன்றியது என்று 'இந்தியச் சுதந்திரம் எப்படி உருவாயிற்று' என்ற பெசண்ட் எழுதிய நூலில் குறிப்பிடப பட்டுள்ளது. எனினும் இதற்கு போதிய ஆதாரம் இல்லை.

சென்னை மகாசன சபையினர்–திவான் பகதூர் இரகுநாத ராவ், இரங்கய்ய நாயுடு, ஆனந்தாச்சார்லு, சுப்பிரமணிய அய்யர் முதலியோர்– இரகுநாத ராவ் வீட்டில் காங்கிரசு நிறுவ 1884ல் முடிவு செய்தனர் என்று ஒரு கருத்து.

அகில இந்திய நிறுவனம் அமைக்க ஒரே சமயத்தில் பல இந்தியர்கள் சிந்தித்துள்ளனர். எனினும் கியூம் முயற்சிக்கு முன் யாரும் ஒரு உருப்படியான உருவம் தரமுடியவில்லை.

பிரிட்டனில் எதிர்க்கட்சி இயங்குவது போல, இந்தியாவிலும் அமைய வேண்டும் என்று டப்ரின் பிரபுவின் அறிவுரைப்படி கியூம் தொடங்கினார் என்று ஒரு கருத்து.

அகில இந்திய நிறுவனம் ஒன்று இல்லாவிட்டால் இந்திய தேசிய இயக்கம் வன்முறையில் இறங்கி விடும்; எனவே இதற்காக அமைதியாக

அரசியலமைப்பு முறையில் இந்தியர்களின்–சிறப்பாக படித்தவர்களின் கருத்தை வெளியிட – ஒரு நிறுவனம் தேவை என கியூமும் பிற ஆங்கிலேய அதிகாரிகளும் நினைத்துச் செயல்பட்டனர்; அதாவது பாதுகாப்பான ஒருவழிக்கதவு அல்லது இடிகடத்தி தேவை என்ற முறையில் இம்முயற்சி நடந்தது என்பது ஒரு கருத்து.

நாட்டு நலத்தில் அக்கறை கொண்ட இந்தியர் அப்போதைய அரசியல் நிலவரத்தில் அதிகாரப் பகைமை கொள்வதைத் தவிர்க்க கியூமுடன் ஒத்துழைத்தனர்.

காங்கிரசில் தமிழர்: கடந்த அறுபதாண்டுகளாக–1885 முதல் 1955 வரையிலான–காங்கிரசு மாநாட்டு நடவடிக்கைகளைக் கவனித்தால் 8 மாநாடுகள் தான் தமிழ்நாட்டில் நடந்தேறியுள்ளன. அந்த விவரங்களை– வரிசை எண், மாநாட்டு எண், ஆண்டு, மாநாட்டுத் தலைவர், மாநாட்டுச் செயலர்கள், வரவேற்புக்குழுத் தலைவர், பேராளர்கள்எண்ணிக்கை, பார்வையாளர்கள் எண்ணிக்கை என்ற வரிசையில் விவரங்களைக் கீழே காணலாம்.

1/3/1887, பத்ருதீன் தயாப்சி, இராசா சர்.டி.யாதவராவீ, 607, பேராளர்கள், 3,000 பார்வையாளர்கள்.

2/10/1893, ஆல்பிரட்வெட், பி இரங்கய்யநாயுடு, 1,163,4,00.

3/14/1898, ஆனந்தமோகன், போசு, கியூம்–வாச்சா, சுப்பாராவிபந்துலு, 614, விவரமில்லை.

4/19/1903, லாலா மோகன் கோஷ், கியூம்–வாச்சா, நவாப் சய்யதுமுகமது சாகிப்பகதூர், 538, 5,500.

5/23(2),1908, இராசு, பிகாரி, கோஷ், வாச்சா–காரே, திவான்பகதூர், கிருஷ்ணசாமி ராவ், 626, விவரமில்லை.

6/29/1914, பூபேந்திர பாசு, என்.சுப்பாராவீ–நவாப் சய்யது முகமது பகதூர், 866, விவரமில்லை.

7/44/1927, எம்.ஏ.அன்சாரி, சனாப் சாகிப் குரேசி–சவகர்லால் நேரு–சுபாசு சந்திர போசு, 2694, விவரமில்லை.

8/60/1955, யு என் தேபர், அம்புசம் அம்மாள்.

சுயாட்சி மன்றங்கள்: 1914இல் முதல் உலகப் போர் தொடங்கியது. போர் நடவடிக்கைகளில் அரசாங்கத்திற்கு அனுசரணையாய் இருந்தால் போருக்குப் பின்னால் கணிசமான பலன் கிடைக்கும் என்ற தவறான நம்பிக்கையில் அரசை ஆதரித்தனர். மிதவாதிகள் காங்கிரசுக்கு வெளியே தேசீய இயக்கத்தை முடுக்கி விட்டால்தான் ஏதாவது பலன் கிடைக்கும் என்று அதற்கான முயற்சியில் ஈடுபட்டனர் தீவிரவாதிகள்.

இதன் காரணமாக 1916இல் வடக்கே திலகர் தலைமையில் ஒரு சுயாட்சிமன்றமும் தெற்கே அன்னிபெசன்ட் சுப்பிரமணிய ஐயர் முயற்சியில்

ஒரு சுயாட்சி மன்றமும் தோன்றின. விரைவில் இரண்டும் இணைந்தன. போருக்குப் பின்னால் சுயாட்சி அரசமைப்பு பற்றி பிரசாரம் செய்தன.

அரசாங்கத்திடமிருந்து ஏதாவது பெற வேண்டுமெனில் இருசாராரும் இணைந்து செயல்பட வேண்டுமென மிதவாதிகள் உணர்ந்தனர். அன்னிபெசன்டின் முயற்சியில் மிதவாதிகளும் தீவிரவாதிகளும் 1916இல் இலட்சுமணபுரி மாநாட்டில் இணைந்தனர். 1917இல் கல்கத்தாவில் நடந்த காங்கிரசு மாநாட்டிற்கு அன்னிபெசன்ட் காங்கிரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். சுயாட்சி அதன் குறிக்கோளாயிற்று.

சுயராச்சியக் கட்சி: ஒத்துழையாமை இயக்கம் நிறுத்தி வைக்கப்பட்ட பின்பு, காந்தியடிகள் கைதான பின்பு வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தல்களில் கலந்து கொள்வதா இல்லையா என்று கேள்வி எழுந்தது.

சித்தரஞ்சன்தாசு, மோதிலால் நேரு முதலியோர் சட்டமன்றங்கள் சென்று திருத்துவோம் அல்லது ஒழிப்போம் என்று வாதிட்டனர். இராசாசி, இராசேந்திரப்பிரசாத் முதலியோர் மாற்றம் விரும்பாத காந்தி வழிப் பழமைவாதிகள் அதை எதிர்த்தனர். 1922 கயா மாநாட்டில் சட்டமன்ற புகுதலை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மோதிலால் நேரு, சித்தரஞ்சன்தாசு முதலியோர் காங்கிரசில் இருந்து விலகி, காங்கிரசு கிலாபத்–சுயராச்சியக் கட்சி தொடங்கினர். 1923இல் வரும்தேர்தல்களில் போரிடத் தயாராயினர்; ஆதரவு பெற்றனர்.

1923இல் தில்லியில் நடந்த சிறப்பு மாநாட்டில் சுயராச்சியக் கட்சியினர் தொடர்ந்து காங்கிரசில் இருக்க வேண்டுமென்றும் சட்டமன்றம் செல்ல விழைவோர் அவர்கள் பெயரில் கலந்து கொள்ளலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

1923இல் நடந்த தேர்தலில் கலந்து கொண்டு மத்திய சட்டப் பேரவைக்கான 145 இடங்களில் 48 இடங்களைப் பிடித்தனர் சுயராச்சியக் கட்சியினர்.

காங்கிரசு அமைச்சரவை: 1935 இந்திய அரசியல் சட்டப்படி 1937இல் மாகாணச் சட்டப் பேரவைகளுக்கு தேர்தல் நடந்தது. சென்னை,பீகார், ஐக்கிய மாகாணம், ஒரிசா, பம்பாய், மத்திய மாகாணம் முதலிய மாகாணங்களில் காங்கிரசு பெரு வெற்றி பெற்றது. இதுவரை சட்ட மன்றங்கள் புகுதலை எதிர்த்தே வந்த இராசாசி சென்னை மாகாணப் பிரதமரானார்.

இந்திய தேசீய இராணுவம்: 1939/1940இல் இந்திய தேசிய காங்கிரசுத் தலைவராக இருந்த சுபாசு சந்திரபோசு காந்தியடிகளோடு கொண்ட கருத்து மாறுபாடு காரணமாக காங்கிரசை விட்டு விலகினார். முன்னேற்ற அணிக் கட்சி கண்டார். சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டு வீட்டுக் காவலில் இருந்த போசு 1941 சனவரி 16ஆம் நாள் தலைமறைவானார்; பெர்லின் சென்றார்; பிரிட்டானியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கினார்.

1942 செப்டம்பர் 1ஆம் நாள் இந்திய சுதந்திர மன்றச் சார்பில் இந்திய தேசிய இராணுவம் நிறுவப்பட்டது. இந்திய சுதந்திரம் காண்பது இதன் குறிக்கோளாயிற்று. சப்பானில் தங்கி தென்கிழக்கு ஆசியாவில் இந்தியர்களின் நலனைப் பேணி வந்த புரட்சியாளர் இராசு பீகாரி போசுவின் அழைப்பின் பேரில் இந்திய தேசிய இராணுவத் தலைமையை 1943 சூலை 4ஆம் நாள் சிங்கப்பூரில் ஏற்றார் சுபாசு போசு.

1945 ஆகஸ்டில் சப்பான் சரணடைந்தது. இந்திய தேசிய இராணுவத்தில் இருந்த 25 ஆயிரம் வீரர்கள் ஆங்கிலேயரிடம் அகப்பட்டனர். அரசாங்கத்திற்கு எதிராகப் போரிட்டதாக குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்கப் பெற்றனர்.

இந்திய தேசிய இராணுவத்தில் இருந்த ஏறத்தாழ 3,000 தமிழர்கள் தொடர்பான விவரங்களை தமிழ்நாடு அரசாங்கத்தின் சார்பில் 1973ல் வெளியான தமிழ்நாடு சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்ற நூலில் காணலாம். இதில் தமிழ்ப் புத்தகாலய கண முத்தையா 2வது படைத் தலைவராக 3 ஆண்டுகள் பணியாற்றியது ஒரு செய்தியாகும்.

அச்சுத் துறையினர் பங்கு

பொது மக்களுக்குத் தேவையான அக்கறையான நிகழ்கால தலைப்புச் செய்திகளைத் தக்க முறையில் நாட்டு நலம் கருதி எல்லோரையும ஈர்க்கும் வகையில் எழுதும்போதுதான் அச்சுத் துறையின் பணி முன்னேறுகிறது.

அச்சுத் துறை மூலம் மக்களின் எண்ணங்களும் எழுச்சிகளும் பரவ வாய்ப்பு ஏற்பட்டது. இதன் காரணமாக ஆங்கிலத்திலும் பல்வேறு மொழிகளிலும் செய்தித் தாள்களும் பிற பருவ இதழ்களும் தொடங்கப்பட்டன. 1875இல் இம்முறையில் 448 இதழ்கள் இயங்கினவாம்.

பெரும்பாலும் எல்லா இதழ்களுமே ஆங்கிலேயருக்கு எதிராக– ஆங்கிலேயரின் இனச்செருக்கு, தனியாரின் தவறான நடவடிக்கை, சமயப்பழிப்பு மற்றும் பொருளாதாரச் சுரண்டல் முதலியவைகளை விளக்கி எழுதி வந்தன.

சர் ஜான் லாரென்சு (1864–69) காலத்தில் இந்திய அச்சுத்துறையை அடக்கி வைக்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் 1867 ஆண்டில் அச்சகம் மற்றும் நூல்கள் பதிவுச் சட்டம் கொண்டுவரப்பட்டது. 1878இல் லிட்டன் பிரவு முயற்சியில் மொழி இதழ்களின் வளர்ச்சியை முறிப்பதற்கென்றே நாட்டு மொழிச் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தார்.

தமிழ் இதழ்கள்: இத்தனை கட்டுப்பாடுகளையும் கடந்து தமிழர்கள் அச்சுத்துறையில் முன்னணியில் இருந்தனர். 1867 சட்டப்படி பதிவு செய்யப்பட்டு அரசாங்க இதழில் வெளியாகும் புத்தகப் பதிவாளர் வெளியிடும் நூல்கள் மற்றும் இதழ்கள் பட்டியலைப் பார்த்தால் இது புலனாகும். சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட சில தமிழ் இதழ்களைப் பற்றிய செய்திகளைக் காணலாம்.

1844 கிரசன்ட்–ஆங்கில வார இதழ் – சேலம் பகடாலு நரசிம்ம செட்டியார் வெளியீடு.

1855 தினவர்த்தமானி

1877 சுதேச அபிமானி–வார இதழ்–சேலம்பகடாலு நரசிம்ம செட்டியார் வெளியீடு.

1878 இந்து–வார இதழ்–ஜி. சுப்பிரமணிய ஐயர், 1889 ஏப்ரல் 1 முதல் தினசரி.

1882 சுதேச மித்திரன் – வார இதழ்–ஜி. சுப்பிர்மணிய ஐயர், 1889 முதல் தினசரி

1886 இந்து சன பூஷிணி

1896 லோகோபகாரி – வாரஇதழ் – சென்னை நடராச ஐயர் – விசாலாட்சி அம்மையார் – வயித்தியநாத ஐயர் – கோ. வடிவேலு செட்டியார் – பரலி சு நெல்லையப்பர் – சாமி சிதம்பரனார் முதலியோர் முயற்சி.

1905 சக்கரவர்த்தினி – மாத இதழ் – பாரதியார்.

1913 ஞானபானு – சுப்பிரமணிய சிவாவின் மனைவி மீனாட்சி அம்மாள்.

1916 பெண் கல்வி – பாரதியாரின் மனைவி செல்லம்மாள்.

1916 திராவிடன் – தமிழ் வார இதழ்

1917 ஜஸ்டிஸ்–ஆங்கில வார இதழ்–தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தின் சார்பில் ஆர்க்காடு இராமசாமி முதலியார் ஆசிரியர்.

1917 தேசபக்தன் – திரு. வி. க.

1920 நவசக்தி – திரு. வி. க.

1922 தமிழ்நாடு – வார இதழ், சேலம் வரதராசுலு நாயுடு

1922 சுயராஜ்யா – சென்னை நாளிதழ் – தமிழ்,தெலுங்கு மற்றும் ஆங்கிலம்–டிங்கட்டூர் பிரகாசம் முயற்சி

1925 குடியரசு – வார இதழ் – பெரியார்.

1926 ஆனந்த விகடன் – சென்னை வார இதழ்–இட்டா கோவிந்தராசுலு நாயுடு. 1928 பிப்ரவரி முதல் எஸ்.எஸ்.வாசன்.

1931 காந்தி – டி.எஸ். சொக்கலிங்கம்.

1933 தினமணி – சதானந்தம் – சொக்கலிங்கம்;கோயங்கா–சிவராமன்.

1935 விடுதலை–பெரியார்.

1938 பாரததேவி – பக்தவச்சலம்

1944 தினசரி – டி. எஸ். சொக்கலிங்கம்.

தமிழிதழ்கள் வரலாறு: மா. சு. சம்பந்தம் எழுதிய 'தமிழ் இதழியல் வரலாறு' (1987) என்ற நூல் தமிழ் இதழ்களின் வாழ்வு வகை, ஆசிரியர், வெளியிடுவோர் முதலிய விவரங்களை விதந்தோதுகிறது.

அடக்குமுறை: அரசாங்கத்திற்கு எதிராக எழுதும் இதழ்களை துன்புறுத்துவது அரசாங்கத்தின் குறிப்பாய் இருந்தது. இதழ் தொடங்கும் போதே ஈடுகாணம் கேட்டது, ஏதாவதொரு காரணம் கூறிஅதை பறிமுதல் செய்வது, ஈடுகாணத் தொகையை உயர்த்துவது வாடிக்கையாய் இருந்தது.

1919இல் தேசபக்தன், தொடங்கும்போது ரூ.1000 ஈடுகாணம் கேட்க்பபட்டது; அடுத்து அது பறிமுதல் செய்யப்பட்டது; தொடுத்து ரூ.5000 கேட்கப்பட்டது.

1929இல் உத்தமபாளையத்தில் இருந்து 'பாரதி' இதழ் நடத்திய நாராயணசாமி செட்டியார் அரசுக்கு எதிராக எழுதியதாக 9 மாதம் சிறைத்தண்டனை பெற்றார். துரப்பாக்கம் சீனிவாசனும், உதவியாளர் எழுதிய கட்டுரைக்காக வா. வே. சு. ஐயரும் தண்டிக்கப்பட்டனர். 1913இல் வெளியான 'ஞான பானுவும்' 1916இல் வெளியான 'பெண்கல்வி'யும் அரசின் அடக்கு முறையைத் தவிர்க்க சுப்பிரமணிய சிவாவின் மனைவி மீனாட்சிஅம்மாள் பெயரிலும் சுப்பிரமணிய பாரதியாரின் மனைவி செல்லம்மாள் பெயரிலும் பதிவு செய்யப்பட்டன.

1931இல் உப்பு சத்தியாக்கிரகம் சட்ட மறுப்புப் போராட்டமாக மாறிய போது நாட்டுமொழிச் சட்டம் நாட்டு மொழி இதழ்களை நலியச் செய்தது. 1931 சூலையில் இந்தியா முழுமையிலும் வெளியான 131 இதழ்களிடமிருந்து ஈடுகாணமாக ரூ.2,50,000 (இரண்டரை இலட்சங்கள் வசூலிக்கப்பட்டது).

அச்சகத் துறையினர் சிலர்: அச்சுத்துறையினர் சிலரின் பெயர் அகர வரிசையில் காணலாம்.

> *சி. என். அண்ணாதுரை., சி. பா. ஆதித்தன், ஈ. வெ. இராமசாமி, ஆற்காடு இராமசாமி முதலியார், நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை, 'கல்கி' டாக்டர் ஆற்காடு கிருஷ்ணசாமி, ஆரணி குப்புசாமி முதலியார், வை.மு.கோதைநாயகி, இராம்நாத் கோயங்கா, சா. சதானந்தம், டி.கே.சிதம்பரநாத முதலியார், உ. சிதம்பரம்பிள்ளை, அ.நா.சிவராமன், சுத்தானந்த பாரதியார், ஜி.சுப்பிரமணிய ஐயர், சுப்பிரமணிய சிவா சுப்பிரமணிய பாரதியார், சுப்பிரமணிய யோகியார், டி.என் சேஷாசலம், ச.சொக்கலிங்கம், நாரண துரைக்கண்ணன், திரு.வி.க. நமச்சிவாய முதலியார், பகடால நரசிம்மலு நாயுடு, நாராயணசாமி செட்டியார், பரலி.சு நெல்லையப்பர், பக்தவத்சலம், பிரகாசம், பி.ஸ்ரீ புதுமைப்பித்தன், ம.பொ.சி, மறைமலையடிகள், வரதராசுலு நாயுடு, வ.வெ.சு அய்யர், ப.ஜீவானந்தம்.*

ஆகியோரின் இதழியல் பணி சுதந்திரப் போராட்ட வரலாற்றில் குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலேய ஆட்சியின்போது மேற்கத்திய கருத்து வளர்ச்சியுடன் அறிமுகமாகிய ஆங்கில இலக்கியம் இந்தியர்களின் இதயங்களிலே எழுச்சியை ஏற்படுத்தியது. மொழியை-இலக்கியத்தை ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் பயன்படுத்த முனைந்தனர். சுதந்திரப் போராட்டத்தில் இலக்கியமும் இடம் பெற்றது.

கவிதை: கவிதை என்பது உயர்கருத்தின் உயர்சொற் சந்த யாப்பு, உயர்நிலை உணர்ச்சியின் சார்ந்த சொற்கோப்பு, கவிதைத் தொகுதி, செய்யுட்கலை என்று பொருள்படும்.

சுதந்திரப் போராட்ட முன்னோடியாக சின்னச்சாமி சுப்பிரமணிய பாரதியார்-இலக்கியத் துறையில்- கவிதைப்படியில்- இறங்கினார். இவருக்கு மொழியும் இலக்கியமும் ஒரு வாழ்வு முறையாக, நாட்டுநலக் குறிக்கோளாக இருந்தது. எனவே தாய்த் திருநாட்டை பாரத மாதாவாகவும் தமிழை தமிழ்த் தாயாகவும் உருவகப் படுத்தினார். புரட்சி ஏற்படாவிட்டாலும், கலாச்சார, சமூக, பொருளாதார மாற்றத்தால் அரசியல் விடுதலை காண முயன்றார். எனவே தன் கருத்தை பாமர மனிதனும் புரிந்து கொள்ளக் கூடிய எளிய சொற்கள், பணிவான நடை, வழக்கிலுள்ள சந்த லயம் கொண்டு கவிதைகளை மழையாகப் பொழிந்தார். இவை சுதேசமித்திரன், விவேகபானு, இந்தியா, சக்கரவர்த்தினி, கர்மயோகி, விஜயா, பெண்கல்வி முதலிய இதழ்கள் வழி வெள்ளமாக பிரவகித்தார். இது மக்களுக்கு தேசிய உணர்வையும் அயலாருக்கு எதிராகப் போராடும் திறத்தையும் ஊட்டின. இதனால் இவருக்கு பெயரும் புகழும் வந்தன; ஆனால் இறுதி காலத்தில் போற்றப்படாமல் புலம்புவா ரில்லாமல் மறைந்தார்.

பாரதியை பாராட்டுபவரும் மாணவருமான பாரதிதாசன் பாரதியின் பின்னணியாக வந்தார். கதர் இராட்டினப் பாட்டு என்ற தலைப்பில் கதர் முயற்சியை மெச்சி, பாராட்டி, புகழ்ந்து பாடினார். பிற்காலத்தில் அவர் சமுதாய சீர்திருத்தத்திலும் பகுத்தறிவிலும் மூழ்கினார்.

நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்களுடைய எளிய, இனிய, உயிர்ப்பூட்டும் பாடல்கள் மக்கள் மனதை மருவின. பாரதியாருக்கு அடுத்து மக்கள் மனதில் நிறைந்தார். அவர் வாழ்நாள் முழுதும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். இதனாலேயே அரசவைக் கவிஞர் ஆனார்.

'தேசக் கொடியின் சிறப்பை சிறிதே இங்கு ஆசைப் பெருக்கால் அறைகின்றேன்' என்ற தேசியக் கொடியின் சிறப்பை எடுத்துக் கொடுத்து சுதந்திரப் போராட்ட முயற்சியில் ஈடுபாடு காட்டினார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

சமூகம், அரசியல், பொருளாதாரம், நீதித் துறை, காவல் துறை, சிறைத் துறை முதலிய துறைகளில் எவ்வாறு ஆங்கிலேய ஆதிக்கம் ஆர்ப்பரித்துக் கொண்டு இருக்கிறது என்பதை சுயசரிதையில் செப்பியிருக்கிறார் வ.உ.சிதம்பரம் பிள்ளை.

'நானோர் தொழிலாளி; ஒரு நாய்க்குறும் சுகமேனும் வாய்க்கும் வழியில்லை' என்று அறிமுகம் செய்து கொண்டு தொழிலாளர் இயக்கம் சார்ந்த ஜீவானந்தம் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார். அந்நியர் ஆதிக்கத்தில் தொழிலாளர் படும் துயரத்தை துல்லியமாகப் பாடி வந்தார்.

'அகில பாரத்தில் வாழும் யாவரும் சமானமே;
ஆரியர் திராவிடர் இசுலாமியர் கிறித்துவர்

பகைமை அச்சம் அடிமையின்றி பலருமொத்து,
பரமசக்தி மைந்தராக உரிமை கொண்டு வாழுவோம்'-

என்ற இந்திய ஒருமைப் பாட்டை எடுத்துரைத்து சுதந்திரப் போராட்ட ஈடுபாடு காட்டினார் சுத்தானந்த பாரதியார்.

மேலும் திரு.வி.க., ச.து.சு. யோகி, இராய சொக்கலிங்கம் எஸ்.டி.சுந்தரம், கொத்தமங்கலம் சுப்பு போன்ற பலர் சுதந்திரத்திற்காக தமது எழுத்துக்களைப் பெரும் படைக்கருவிகளாகப் பயன்படுத்தினர்.

நாடகம்: நாடகம் என்ற சொல் மேடை நடிப்பு, நாடகம், நாடகக் கதை நாடகக் கலை, நாடக இலக்கியம் என்று பொருள்படும். நீண்ட காலம் புராண இதிகாசக் கதைகள் கிராமப் புறங்களில் தெருக்கூத்தாக நடந்து வந்தன. தேசிய இயக்கத்தின் தொடர்பால் வீர சிவாஜி, இராசா தேசிங்கு, கட்டபொம்மன், ஊமைத்துரை, சிவகங்கை உடன்பிறப்புகள் முதலியோர் கதைகள் நடிக்கப்பட்டன.

1894 இல் ஸ்ரீஆர்ய சபா-கா. கோபாலாச்சாரி என்னும் தமிழாசிரியர் எழுதிய நாடகம் இந்திய தேசிய காங்கிரசு இயக்கத்தின் தேவை, நடப்பு, சிறப்பு முதலியவைகளை விளக்கவே எழுதப்பட்டது. இதில் அக்காலத்திற்கேற்ப நாடகப் பாத்திரங்கள் சம்ஸ்கிருதம், தமிழ், பெர்சியம் மற்றும் ஆங்கிலச் சொற்களை மணிப் பிரவாளமாக பிரயோகிப்பதாக அமைந்திருந்தன.

1924 இல் மதுரை ஒரிசினல் சிறுவர் குழு மூலம் பாவலர் தி.பொ கிருஷ்ணசாமி எழுதிய 'கதரின் வெற்றி', 'பதிபக்தி', 'பம்பாய் மெயில்', 'கவர்னர் கப்' முதலிய நாடகங்கள் மேடையேறின. 1930 இல் நாக்பூரில் நடந்த கொடிப் போராட்டத்தைப் பற்றி 'தேசியக் கொடி' என்ற நாடகம் மேடையேறியது.

ஸ்காட்லாந்து மன்னர் இராபர்ட் புரூசு கதையைத் தழுவி வெங்களத்தூர் சாமிநாத சர்மா எழுதிய 'பாணபுரத்து வீரன்' என்ற நாடகம் சுதந்திரப் போராட்டத்தை விளக்கியது. இதனால் அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு ஆளாகியது. இதைச் சிறிது மாற்றி டி.கே.எஸ். உடன் பிறப்புகள் 'பதி பக்தி' என்று நடித்து வந்தனர்.

சத்தியமூர்த்தி, இ. கிருட்டின ஐயர், எப்.ஜீ.நடேச ஐயர், எஸ்.எஸ். விசுவதை தாசு, எஸ்.டி.சுந்தரம், டி.கே.எஸ். உடன்பிறப்புகள் முதலியோர் தேசிய நாடக மேடையை மேன்மைப் படுத்தினர்.

புனை கதை: புனைகதை என்ற சொல் போலி, புனைவு, கற்பனைப் பொருள், புனைகூற்று, புதினம், கற்பனை இலக்கியம் என்று பொருள்படும். இலக்கியத்தின் பிறிதொரு பகுதியான இதுவும் தேசிய இயக்கத்தால் திறம்பட பயன்படுத்தப் பட்டது.

100 புதினங்களுக்கும் அதிகமாக 'ஜகன்மோகினி' இதழ் மூலம் எழுதிப் புகழ் பெற்ற வை.மு.கோதைநாயகி காந்தியக் கொள்கைகளைப் பரப்பினார்

அவருக்குப் பிடித்த வானக்குயில் என்ற பாத்திரம் ஆசிரியரின் காங்கிரசுத் தொண்டர் பணியைப் பிரதிபலிப்பது போல இருந்தது.

இராசாசியுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட கல்கி, பெண்கள் விடுதலை பற்றியும் மது விலக்கு பற்றியும் 'தியாகபூமி' என்ற புதினம் வழியாக ஆனந்த விகடன் இதழில் தொடர்கதையாக எழுதினார். கல்கியின் மற்றொரு புதினமான 'அலை ஓசை' 1936-48 கால அரசியல் நிலையை, கராச்சி, தில்லி, கல்கத்தா, சென்னை போன்ற நகர நடப்புகளை விளக்கியது.

இரண்டாம் உலகப் போரின்போது பர்மாவில் இந்திய தேசிய இராணுவ நடவடிக்கைகளை நெஞ்சின் அலைகள் என்ற நூலில் விளக்குகிறார் அகிலன்.

புதினத்தின் ஒரு பிரிவாக முன்னேறிய சிறுகதைகள் இலக்கியமும் தேசிய அபிலாசைகளை விளக்கப் பயன்படுத்தப்பட்டன. வ.வே.சு.ஐயர், கல்கி, அகிலன், செல்லையா, புதுமைப்பித்தன், இராசாசி, இராமய்யா, நாரண துரைக்கண்ணன் முதலியோர் இதில் சிறப்புப் பெற்றனர்.

பொழிவுகள்: பொழிவு என்பது எடுத்துக் கொண்ட பொருள் கேட்பவர் மனதில் பதியும்படி எதுகை, மோனை, சந்தச் செறிவுடன் பேசும்போது சொற்பொழிவு-பொழிவு என்று பெயர் பெறுவதைக் குறிக்கிறது. இல்க்கியத்தில் ஒரு பிரிவாக இயங்குகிறது.

இராசாசி, சத்தியமூர்த்தி, சிதம்பரம் பிள்ளை, செங்கல்வராயன், திரு.வி.க., பெரியார், ம.பொ.சி., முத்துராமலிங்கத் தேவர், வரதராசுலு நாயுடு முதலியோரின் பொழிவுகள் சுதந்திரப் போராட்டத்தின் போது அன்னியர்களுக்கு எதிராக ஆவேசமூட்டின. இதற்காக அவர்கள் சிறையில் வாடியது நாமறிவோம். இதில் திரு.வி.க., பெரியார் பொழிவுகள் நூல்களாக வந்து விட்டன. பிறர் பொழிவுகள் நூலாக வந்தால் படிப்பார் பயன்படுவர்.

கட்டுரைகள்: கட்டுரை என்பது கட்டி உரைத்தல் எனப் பொருள்படும். அதாவது செய்யுளாக, நாடகமாக, கதையாக, முடங்கலாக, பொழிவாக இல்லாமல் உரைநடையில் உரைப்பார் கருத்தாக்கம் காட்டுவது கட்டுரையின் பாற்படும். இந்த இலக்கியப் பிரிவும் சுதந்திரப் போராட்டத்தில் கையாளப் பட்டது.

அறிவுக்கடல், இந்தியா, காந்தி, குடியரசு, சக்கரவர்த்தினி, சுதேசமித்திரன், சுதேசாபிமானி, சுயராச்யா, ஞானபானு, தமிழ்நாடு, தினசரி, தினமணி, தினவர்த்தமானி, தேசபக்தன், நவசக்தி, பாரததேவி, பாரதி முதலிய இதழ்களில் வந்த கட்டுரைகள் சுதந்திரப் போராட்டத்தைச் சூடுபிடிக்கச் செய்தன. இதில் பல கட்டுரைகள் நூலுருவில் வந்து விட்டன. இன்னும் பல நூலுருவில் வந்தால் நல்ல பயன் தரும்.

திரைப்படம்: திரையில் ஓடுபடமாக எடுத்துக் கொண்ட கருத்தை விளக்குவது திரைப்படம் என்று பெயர் பெறுகிறது. ஆரம்ப காலத்தில் ஒலியின்றி படஓட்டம் மட்டும் இருந்தது. பின்னால் ஒலி சேர்ந்தது. இது அறிவியல் - தொழில் நுணுக்க விளைவாகும். இதையும் தேசிய இயக்கம் திறம்பட பயன்படுத்தியது.

1931 இல் முதல் தமிழ்த் திரைப்படம் காளிதாஸ் வெளியானது. 1936 'மேனகா' வந்தது. இதில் சமூக சீர்திருத்தம் வலியுறுத்தப்பட்டது; மக்கள் ஆதரவு பெற்றது.

1937 இல் அரிசனங்கள் கோயில் நுழைவு பற்றி விளக்கி சுப்பிரமணியம் இயக்கத்தில் 'பாலயோகினி' வெளி வந்தது; 1940 இல் 'பக்த சேதா'வை வெளியிட்டார்; அடுத்து காந்தியக் கொள்கை விளக்க 'சேதா சதனம்' வெளியிட்டார்.

ஆனந்த விகடனில் கல்கியால் தொடர் கதையாக எழுதப்பட்ட 'தியாகபூமி' சுப்பிரமணியம் இயக்கத்தால் திரைப்படமானது. இதில் தேசிய இயக்கம் திறம்பட விளக்கப்பட்டிருந்தது. மகத்தான ஆதரவு தந்தனர் மக்கள். அரசாங்கம் அதை தடையுத்தரவால் தடுத்தது.

இந்த இலக்கிய முயற்சிகள் எல்லாம் மக்களிடையே பெரும் வரவேற்புப் பெற்றது. தாங்கள் எண்ணியது, சொல்ல விரும்பியது, அச்சில் காணும்போது கனிந்தனர்; ஆதரவு நல்கினர் மக்கள்.

சமூகத்தின் பங்கு

கல்வி: மெக்காலே பிரபு அறிமுகப்படுத்திய ஆங்கிலக் கல்வி முறைமையை எதிர்த்து தேசியக் கல்வி முறை வேண்டுமென்றார் காந்தியடிகள். இம்முறையில் ஆதாரக் கல்வி என்ற பெயரில் தாய் மொழிக் கல்வியை தொழிற் கல்வியுடன் இணைத்து மனிதனின் உடம்பு, மனம், ஆன்மா மூன்றையும் வளர்க்கும் முயற்சி தொடங்கியது.

இம்முறையில் பல கல்வி நிலையங்கள்–காந்தியடிகளின் முயற்சியில் குசராத் வித்யாபீடம், பீகார் வித்யாபீடம்(இராசேந்திரப் பிரசாத்) தில்லி ஜமியா மிலியா இசுலாமியா (ஜாகீர் உசேன்), காசி வித்யாபீடம் (மதன் மோகன் மாளவியா), விசுவபாரதி(தாகூர்) மகளிர் வித்யாபீடம்(கார்வே) முதலிய நிலையங்கள்–வடக்கே தோற்றுவிக்கப்பட்டன; வளர்ந்தன; வாழ்கின்றன.

தமிழ் வித்யாபீடம் ஏதும் ஏற்படவில்லை. 1925இல் இராசாசி நிறுவிய திருச்செங்கோடு காந்தி ஆசிரமம், வ. வெ. சு. ஐயர் நடத்திய சேரன்மாதேவி பாரதுவாச ஆசிரமம், 1930இல் டாகடர் முத்து இலட்சுமிரெட்டி நிறுவிய அடையாறு அவ்வைவிடுதி, சகஜாநந்தா நிறுவிய சிதம்பரம் நந்தனார் பள்ளி–விடுதி, சென்னை பிரம்மஞான சபை ஏற்படுத்திய தேசிய பள்ளி, அருண்டேல் தேசியக் கல்வி வளர்ச்சி மன்றம் ஆகியன புதிய கல்வி நிறுவனங்களாக அமைந்தன.

1929 இல் இராசா அண்ணாமலை செட்டியார் நன்கொடையால் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உருவாகியது.

1805 முதல் 1938 வரை கல்வித்தொடர்பான 30 பருவ இதழ்கள் தமிழ்நாட்டில் வெளிவந்துள்ளன.

மகளிர் முன்னேற்றம்: மகளிர் தொடர்பான கல்வி, குடும்ப நிர்வாகம் பால்ய விவாகத் தடை, விதவையர் மறுமணம், கலப்புத் திருமணம் பற்றி 1865 முதல் 1937 வரை 30 பருவ இதழ்கள் பலபட எழுதியுள்ளன.

1889இல் பம்பாயில் நடந்த காங்கிரசு மாநாட்டில் இந்து பத்திராதிபர் சுப்பிரமணிய ஐயர் முயற்சியில் ஒரு விதவைத் திருமணம் நடந்தது. இப்பெருமை பெற்ற பெண் ஐயரின் திருமகள் ஆவார்; சுயசாதியின் எதிர்ப்பைத் தவிர்க்க பம்பாயில் நடத்தினார் திருமணத்தை.

திருமணம் நடந்த 30 நாள்களுக்குள் தன் கணவரை இழந்தது 9 வயது பெண் ஒன்று. இத்தகு சிறுமையை தன் குடும்பத்திலேயே கண்ட பெரியார் விதவைத் திருமண முயற்சியில் ஈடுபட்டார். 1921 குடிக்கணக்குப்படி 15 முதல் 20 வயதிற்குள்ளான 174 இலட்சம் பெண்கள் விதவைகளாக வாடுவதை எடுத்துக்காட்டிப் போராடினார். பேச்சோடு நிற்பதில்லை பெரியார் எப்போதும், இம்முறையிலே கணவனை இழந்த பெண் வயது முதிர்ந்ததும் திருமணம் செய்து வைத்தார்.

டாக்டர் முத்து இலட்சுமி ரெட்டி முயற்சியில் சட்டபூர்வமாக தேவதாசி முறைமை ஒழிக்கப்பட்டது . இதற்கு ஆதரவாக 1868 முதல் இந்தியா முழுமையும் நடந்த முயற்சிகளை எடுத்துக்கூறி ஆதரவளித்தார் பெரியார்.

காலப்போக்கில் தேசிய இயக்கத்தின் ஆதரவில், தன்மான இயக்க ஆதரவில் கலப்புமணம் இன்று நடைமுறையாகி விட்டது.

மதுவிலக்கு: தேசிய இயக்கத்தின் நிர்மாணத் திட்டங்களில் ஒன்றான மதுவிலக்கு இருபுறமும் கூர்மையான கத்திபோல பயன்படுத்தப்பட்டது. ஒருபுறம் இந்தியா கெடுவது தடுக்கப்பட்டது; மறுபுறம் அன்னிய அரசாங்கத்திற்கு பொருள் இழப்பு ஏற்பட வழிவகுத்தது.

1921 இல் பெரியார் மதுவிலக்குப் பிரசார இயக்கத்தில் ஈடுபட்டு ஒரு மாதம் தண்டனை பெற்றார். சிறை மீண்டதும் மனைவி நாகம்மாள் மற்றும் தங்கை கண்ணம்மாள் முதலியோரோடு மறியல் செய்து சிறை சென்றார். அரசாங்கத்தடை உத்தரவு நீக்கப்பட்ட பின்பு தான் மறியல் நின்றது.

மதுவிலக்கு முயற்சியின் முனைப்புக் காரணமாக கள்ளிறக்க விட்டிருந்த 500 தென்னைகளை அடியோடு வெட்டிச் சாய்க்கச் செய்தார் பெரியார் என்ற செய்தி அவர் மதுவிலக்கில் கொண்டிருந்த நம்பிக்கையை நவில்கிறது.

சென்னை சட்டசபையிலே மதுவிலக்குத் தொடர்பாக ஆர்வம் காட்டினார் சத்தியமூர்த்தி. 1928 செப்டம்பரில் மதுவிலக்கு பற்றி திட்டவட்டமான கொள்கை பற்றியும், மதுவிலக்கு அமுலுக்கு வருவதற்கான தேதி குறிக்கும்படியும் அப்போதைய ஆயத்துறை அமைச்சர் முத்தையா முதலியாரை சட்டசபையிலே வற்புறுத்தினர் சத்தியமூர்த்தி .

1937இல் காங்கிரசு அமைச்சரவைப் பொறுப்பேற்றும் இராசாசி மதுவிலக்கு முயற்சியைச் சட்டப்பூர்வமாக்கினார்.

தொழில் வளர்ச்சி: இந்தியத் தொழில் வளர்ச்சிக்கு எதிராகவே இயங்கி வந்தனர் ஆங்கிலேயர். மூலப் பொருள்களைக் கொடுத்துவிட்டு ஆக்கிய பொருள்களை வாங்கு நாடாகவே இந்தியா இருக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்து வந்தனர்.

தாதாபாய் நவ்ரோசி, இரானடே முதலிய தேசபக்தர்கள், பொருளாதார வல்லுநர்கள் முயற்சியில் இந்திய தேசிய காங்கிரசு ஆதரவில் 1905 இல் இந்திய தொழில் மாநாடு நடந்தேறியது. சுதேசி இயக்கம் வலுத்தது. ஒருபுறம் சொந்த நாட்டு முயற்சிக்கு முருக்கேற்றியது. மறுபுறம் அந்நியச் சரக்குக்கு மறுப்பு வளர்த்தது.

ஆங்கிலேயருக்கு மூலப் பொருள்களை விற்றுவந்த பார்சி, குசராத்திய வாணிகர்கள் பம்பாயைச் சுற்றித் துணி ஆலைகளைத் தொடங்கினர். பம்பாயைச் சுற்றிய பருத்தி விவசாயமும் பம்பாய் துறைமுக வசதிகளும் இதற்கு ஆதரவாய் இருந்தன.

1907இல் பம்பாயில் இருந்து ஒரு பார்சி ஜெம்செட்ஜி டாட்டா துணிந்து சாக்கி (ஜெம் செட்பூர்)யில் டாடா இரும்பு மற்றும் உருக்கு நிறுவனம் தொடங்கினார். தூரத்தைப் பற்றிக் கவலைப்படாமல் மூலப்பொருள் கிடைப்பு, தொழில் இருப்பு, விற்பனை வாய்ப்புக் கருதி செயல்பட்டார்; சிறப்புப் பெற்றார்.

தெற்கே, தமிழ்நாட்டிலே இத்தகு முயற்சி நடக்கவில்லை. (ஆங்கிலேய நாட்டுத் துணிகளை அதிக அளவில் இறக்குமதி செய்து விற்று வந்த) சர். பி. டி. தியாகராயச் செட்டியார் போன்று பெரும் வணிகர்கள், சமீன்தார்கள், மிராசுதார்கள், நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் இருந்தும் பெருந் தொழில் தொடங்கப்படவில்லை என்பது கருதுதற்குரியது.

பாங்கி முறைமை: உள்நாட்டு தொழில் வளர்ச்சியும் வாணிகமும் இன்றையப் பாங்கி முறைமை உதவியை நாடியது; தேவைப்பட்டது. இத்தேவையைப் பூர்த்தி செய்ய 1881 இல் அவந்தி வாணிகப் பாங்கி இந்தியர் முயற்சியில் தொடங்கப்பட்டது.

1905இல் முனைப்புப் பெற்ற சுதேசி இயக்கம் மேற்கிந்தியாவில் பாங்கிகள் தொடங்க வாய்ப்பு நல்கியது. இச்சமயம் பாங்க் ஆப் இந்தியா, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா முதலிய பாங்கிகள் தோன்றின; வளர்ந்தன.

1906 அக்டோபர் 20ஆம் நாள் பிரிட்டானிய தொடர்புடன் சென்னையில் நடைபெற்று வந்த ஆர்புத்நாட் பாங்கி மூடப்பட்டது. அதில் பணம் போட்டு வைத்திருந்தவர்கள் வழக்கறிஞர் வி. கிருஷ்ணசாமி ஐயர் உதவி கொண்டு ஆர்புத் நாட்டை தண்டனைப் பெறச் செய்தனர். ஆனால் பணம் கிடைக்கவில்லை.

நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் முனைப்பில் இராசா சர் அண்ணாமலை செட்டியார் ஆதரவில் இந்தியன் பாங்கி சென்னையில் தொடங்கப்பட்டது. மெர்க்கண்டைல் பாங்கி, இந்தியன் ஓவர்சிஸ் பாங்கி முதலியன தொடர்ந்தன.

தொழிலாளர் நலம்: 1908 இல் தூத்துக்குடி கோரஸ் ஆலையில் முதல் தொழிலாளர் வேலை நிறுத்தம் நடந்தது. இதற்குக் காரணம் சிதம்பரம் பிள்ளைதான் என்று அரசாங்கம் நம்பியது. அவருக்கு இரட்டை ஆயுள் தண்டனை கிடைத்ததற்கு இது ஒரு காரணம் ஆகும்.

1918 ஏப்ரல் 27ஆம் நாள் முதல் தொழிலாளர் சங்கம் தொடங்கப்பட்டது. இதற்கு முன்னின்று முயன்றவர்கள் திரு.வி.க. குட்டிகேசவபிள்ளை, ஜி. சலபதி செட்டியார், இராமாஞ்சலு நாயுடு, பி. பி. வாடியா முதலியோர். பிற்காலத்தில் சிதம்பரம் பிள்ளை, இராசாசி, அன்னிபெசன்ட், வரதராசலு நாயுடு, கஸ்தூரி ஐயங்கார், சர்க்கரை செட்டியார், சிங்காரவேலு செட்டியார் முதலியோர் இதில் ஈடுபாடு காட்டினர்.

1920இல் நேரு முதலியோர் முயற்சியில் அகில இந்தியத் தொழிலாளர் காங்கிரசு தோற்றுவிக்கப் பட்டது. இது சுதந்திரம் அடையும் வரை இந்திய தேசிய காங்கிரசுடன் இணைந்து இயங்கியது.

தோழர் சிங்காரவேலு செட்டியார் வாழ்நாள் முழுதும் தொழிலாளர் இயக்கத் தலைவராக, முன்னணி பொதுவுடைமை இயக்கத் தலைவராகத் திகழ்ந்தார். தென்னிந்திய இருப்புப் பாரை தொழிலாளர் வேலை நிறுத்தத் தொடர்பாக ஆறுமாதம் சிறை சென்றார். இவர் குடியரசு, இளந்தமிழன், இந்து முதலிய இதழ்களில் தொடர்ந்து எழுதி வந்தார். 1923 இல் இவரே தொழிலாளர் உழவர் கெசட் என்ற இதழைத் தொடங்கி நடத்தினார். சிறிது காலத்தில் அரசாங்க அடக்கு முறையால் நின்று போனது.

தமிழ் மொழி: தொடக்க காலம் முதலே தேசிய இயக்கம் தாய் மொழியை மதித்தது; பாராட்டியது; வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் பயன்படுத்த வேண்டுமென பாடுபட்டது. ஆங்கிலேய ஆதிக்கத்திற்கெதிராக தாய் மொழியை பயன்படுத்தியது.

தேசிய இயக்கத்தின் எக்காளம் கேட்டு ஆழ் துயிலில் ஆழ்ந்திருந்த தமிழர் விழித்தெழுந்த போது சம்ஸ்கிருதம், பாரசீகம், உருது, போர்ச்சுகீசியம், ஆங்கிலம், தெலுங்கு, மராத்தி முதலிய பிற மொழிச் சங்கிலிகளால் தமிழ்த்தாய் பிணைக்கப் பட்டிருப்பது பார்த்தனர். அதே வேளையில் வெளிநாட்டிலிருந்து வந்த வீரமாமுனிவர், கால்டுவெல், போப் முதலிய கிறித்துவப் பாதிரியார்கள் தமிழ் தன் சொந்தக் காலில் நிற்கும் தகுதி வாய்ந்தது எனப் பாராட்டக் கேட்டனர்.

புரட்சிப் பதாகையை ஏந்தி முன்னேறினார் மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை (1855-1897). தமிழ்த்தாய் வாழ்த்து மூலம். தொடர்ந்து அறிஞர்களும் ஆர்வலர்களும் முன்னேறினர். அப்பாத்துரைப் பிள்ளை, சிதம்பரம் பிள்ளை, சிவராச பிள்ளை, சீனிவாச பிள்ளை, சுப்பிரமணிய சிவா, சுப்பிரமணிய பாரதியார், சூரியநாராயண சாஸ்திரியார், செல்வ கேசவராய முதலியார், சோமசுந்தர பாரதியார், திரு.வி.க., நமச்சிவாய முதலியார், பூரணலிங்கம் பிள்ளை, பெரியார், மகிழ்நன், மறைமலையடிகள், மாணிக்க நாயகர்,

வெங்கடசாமி நாட்டார், வெங்கடாசலம் பிள்ளை, வேங்கடராசலு ரெட்டியார், வேதநாயகம் பிள்ளை முதலியோர் அதில் இடம் பெறுகின்றனர்.

தமிழை அறிய வைக்க, புரிய வைக்க, புகழ்ந்து பாட, போற்றி வணங்க செந்தமிழ் (1902-), செந்தமிழ்ச் செல்வி (1923-), தமிழ்ப் பொழில் (1925-) முதலிய இதழ்கள் வெளிவந்தன.

'எங்கும் தமிழ்; எப்போதும் தமிழ்; எதிலும் தமிழ்' என்ற முயற்சியில் முழுமையாக ஈடுபட்டனர்.

சமயம்: 19ஆம் நூற்றாண்டிலே சமய சமூக இயக்கம் விழிப்பு ஏற்பட்டது. இராசாராம் மோகன் ராய் (1774-1833), சுவாமி தயானந்த சரசுவதி (1825-1883), இராமகிருஷ்ண பரமஹம்சர் (1833-1888) முதலியோர் வடக்கில் வழிகாட்டினர்.

தெற்கில் இராமலிங்க சுவாமிகள் (1823-1874) மனித நேயம், கொடுங்கோன்மையில் இருந்து விடுதலை, பசிப்பிணி தீர்ப்பு முதலியவைகளைப் போதித்தார். இதற்காக மூன்று நிறுவனங்கள் நிறுவினார். இவருடைய பாடல்கள் தொடர்பாக அருட்பாவா மருட்பாவா என்ற பிரச்சினை அறமன்றம் வரை சென்று சுவாமிகளுக்குச் சாதகமாக முடிந்தது. சாதி சமய வித்தியாசங்களுக்கு முரண்களுக்கு எதிரான இவர் எழுப்பிய கவிதைக் கண்டனம் வரவேற்புக்குரியது; வாழ்த்திப் போற்றுவதற்குரியதாகும்.

கிறித்தவராகப் பிறந்த மாயூரம் வேதநாயகம் பிள்ளை மக்களிடையே ஒற்றுமை, சமய சகிப்பு வேண்டி சர்வ சமய சமரசக் கீர்த்தனங்கள் எழுதினார். அந்த காலத்தில் மாவட்ட நடுவராக இருந்து அனுபவ மூலம் அறிந்த அன்னியரின் நிர்வாகச் சீர்கேடுகள் அறமன்றக் குறைபாடுகள் முதலியவைகளைக் கண்டித்துப் பேசினார்; எழுதினார்.

பிரமணராகப் பிறந்த கோபால கிருஷ்ண பாரதியார் - சேக்கிழார் கதையில் சிறிது மாற்றம் செய்து - நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள் எழுதினார். அதில் பிராமண நிலக்கிழார்கள் அவர்களது பண்ணையில் பணியாற்றும் அரிசனங்களைக் கொடுமைப் படுத்துவதை கண்டித்து எழுதினார். இது வர்க்கப் போராட்டத்தை வளர்க்கும் என்று வாதிட்டனர் மேல்குடியினர்.

தலைவர்களின் பங்கு

தலைவர் என்ற சொல் முன்னுக்குப் போகிறவர். தலைமையாளர், கட்சியின் முதனிலையாளர் என்று பொருள். இங்கு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு, வழிகாட்டிய முன்னோடிகளைக் குறிப்பதாகும்.

பகடால பாபு: முன்னோடிகளில் முதல்வராகத் திகழ்கிறார் சேலம் பகடால நமசிம்மலு நாயுடு (1854-1922). ஈரோட்டில் பிறந்து தமிழும் தெலுங்கும் கற்று ஆசிரியரானார். ஆசிரியராய் இருந்து கொண்டே சேலம் 'சுதேசாபிமானி' இதழ் தொடங்கினார். அரசாங்கத்திற்கெதிராக எழுதினார். இதனால் ஆசிரியர் வேலையை விட வேண்டியதாயிற்று.

பின் கோயம்புத்தூரில் அச்சகம் ஒன்று நிறுவினார். 'கோயம்புத்தூர் அபிமானி' மற்றும் 'கோயம்புத்தூர் கலாநிதி' தொடங்கினார். அரசாங்க அலுவலகங்களிலும் அறமன்றங்களிலும் இந்தியர்களை விலக்கி வைப்பதை கண்டித்து எழுதி வந்தார்.

கோயம்புத்தூரில் சி.எஸ்.டபிள்யு ஆலையும் போத்தனூரில் சர்க்கரை ஆலையும் தொடங்குவதற்காகப் பாடுபட்டார்.

ரூ.10,000 செலவில் கோயம்புத்தூரில் விக்டோரியா நகர மண்டபம் கட்டி முடித்து மக்கள் பயன்படுத்த கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைத்தார்.

சீரங்கம் சென்று வசித்தபோது சீரங்க ஸ்தல பூஷணி தொடங்கி நடத்தினார்.

சென்னை பிரம்மஞான சங்கம் தொடங்குவதிலும் மதுரை தமிழ்ச் சங்கம் தொடங்குவதிலும் தொடர்பு கொண்டு இருந்தார்.

1900 இல் வெளியான ஆயிரம் பக்கங்கள் கொண்ட 'வேளாண்மை நூல்', 1921இல் வெளியான 'தட்சிண இந்திய சரித்திரம்' உள்பட 94 நூல்களை வெளியிட்டு இருக்கிறார் என்றால் வியப்பாக இருக்கும். ஆனால் அது உண்மை!

கப்பலோட்டிய தமிழன்: தொழிலில் வழக்குரைஞராகத் திகழ்ந்த சிதம்பரம் பிள்ளை (1872-1936) சுதேசி இயக்கத்தில் ஈடுபட்டார். பேச்சோடு நிற்காது செயலில் இறங்கினார். ஒட்டப் பிடாரத்தில் இருந்த தன் நிலத்தை விற்ற பணத்தையும் தெரிந்தவர்களிடம் பெற்ற பங்குத் தொகையையும் கொண்டு சுதேசி நீராவிக் கப்பல் சங்கம் தொடங்கினார். தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே ஓடிக் கொண்டிருந்த சப்பான் கப்பல் ஒன்றை வாங்கினார். பிரிட்டானிய நீராவிக் கப்பல் சங்கத்துடன் போட்டியிட்டார்.

சிறிது காலத்தில் பிரிட்டானியக் கப்பல் வருவாய் குறைந்து நிறுத்த வேண்டியதாயிற்று. இதனால் ஆத்திரம் அடைந்தனர் ஆங்கிலேயர். சுதேசிப் போராட்டத்தில் அரசுப் பகைமைப் பாராட்டினர் என்று குற்றம் சாட்டி தண்டித்து கோயம்புத்தூர் சிறையில் அடைத்தனர். சுதேசி சங்கம் மூடப்பட்டது. போட்டியிட்ட பிரிட்டானிய சங்கத்திடமே கப்பலை விற்க வேண்டியதாயிற்று.

இதற்குக் காரணமாய் இருந்த மாவட்ட குற்ற நடுவர்-இந்திய நிர்வாகப் பணியர்-ஆஷ் துரைமேல் ஆத்திரம் கொண்டார்; சுட்டு மாய்த்தார் வாஞ்சிநாதன்!

சட்ட மன்றச் சதுரர்: 'பெரியவர்கள், பெரும் பெரியவர்கள் நாட்டு முன்னேற்றத்திற்காக பல வழிகளில் பணிபுரிந்துள்ளனர். இவருக்கு முன்னால், இவருக்குப் பின்னால் பலர் சட்ட மன்றங்களில் பல சாதித்துள்ளனர். எனினும் இந்தியச் சட்டமன்ற குடியாட்சி முறையை உருவாக்கினவர் ஒருவர் உண்டென்றால் அவர் சத்தியமூர்த்தி' - என்கிறார் சத்திய மூர்த்தி வாழ்க்கை வரலாறு(1887-1941) எழுதிய பார்த்தசாரதி.

ஒருமுகச் சிந்தனையாக சட்ட மன்றத்தைப் பிடிப்பதற்காக, சட்ட மன்றத்தின் உள்ளிருந்து போராடுவதற்காக நாட்டின் நலம் நாடி அதிகாரத்தைப் பிடிப்பதற்காகப் போராடினார். ஆரம்பத்தில் அவரை ஏளனம் செய்தவர்கள் பின்பு பாராட்டினார்கள்.

மூதறிஞர்: இராசாசி என்றும் காந்தியின் மனச்சாட்சிக் காவலர் என்றும் மூதறிஞர் என்றும் அழைக்கப்படுகிறவரின் இயற்பெயர் சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் (1879-1972). வழக்குரைஞர் வேலையைத் துறந்து தேசிய இயக்கத்தில் சேர்ந்தார். அவருடைய் அறிவாலும் புலமையாலும் காந்தியடிகளோடு நெருக்கம் பெற்றார். காங்கிரசில் இருந்த போதும், வெளியேறிய போதும் அவர் கருத்து மாறுபாடுகளுக்கு மத்தியில்தான் வாழ்ந்து வந்தார்.

1923 இல் கயாவில் சட்டமன்றம் செல்லுவது பற்றி விவாதிக்கப்பட்ட போது இராசாசி, இராசேந்திரப் பிரசாத், சர்தார் படேல் முதலியோர் அதை எதிர்த்தனர். இங்குதான் அவர் விவாதத் திறமை விளங்கியது; தொடர்ந்தது.

1936-37 ஆண்டுகளில் இலட்சுமணபுரி, பெயசுப்பூர் மாநாடுகளில் 1935 ஆண்டைய இந்திய அரசாங்கச் சட்டப்படி சட்டமன்றம் செல்லுவது குறித்து கேள்வி எழுந்தபோது நேரு, போசு, ஜெயப்பிரகாசர் முதலிய இடது சாரியினர் அதை எதிர்த்தனர். இராசாசி, பட்டேல் முதலியோர் அரசியலமைப்பில் சேர்ந்து அதைச் சேதப்படுத்துவோம் எனச் செப்பினர்.

1937இல் தேர்தலில் போட்டியிட்டு பெரும்பான்மையாக வெற்றி பெற்ற போது சென்னை மாகாணப் பிரதமரானார்.

1941 செப்டம்பரில் பூனாவில் கூடிய காங்கிரசு மாநாட்டில் மத்திய சட்டசபை உறுப்பினர்களுக்கு பொறுப்பான இடைக்கால தேசிய அரசாங்கம் அமைக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்தார். மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் அத்தீர்மானம் தோற்கடிக்கப் பட்டது. இதன் காரணமாக தன்போக்கில் செல்வதற்காக காங்கிரசிலிருந்து இராஜினாமா செய்து வெளியேறினார்.

எனினும் ஏற்றுக் கொண்ட கொள்கைகளுக்காக மனமாரப் பாடுபட்டார். இம்முறையில் 1930 மார்ச் 12 இல் காந்தியடிகள் உப்புச் சத்தியாக்கிரக முயற்சியில் தண்டி யாத்திரை சென்றதைப் பின்பற்றி இராசாசியும் உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டார். உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் திருச்சியிலிருந்து 1930 ஏப்ரல் 13ஆம் நாள் புறப்பட்டு ஏப்ரல் 30ஆம் நாள் வேதாரண்யம் சேர்ந்தார். சர்தார் வேதரத்தினம் பிள்ளை, திருவண்ணாமலை அண்ணாமலைப் பிள்ளை, கே.எஸ்.சுப்ரமண்யம், க.சந்தானம், வயித்திய நாத ஐயர், மட்டப்பாறை வெங்கட்டராம ஐயர், பந்துலு ஐயர், என்.எஸ்.வரதாச்சாரி முதலியோர்களுடன் கைதாகி சிறை சென்றார்.

சுதந்திரம் பெற்றதும் மவுண்ட்பேட்டன் பிரபு பதவி விலகியதைத் தொடர்ந்து முதல் இந்தியத் தலைமை ஆளுநராகப் பொறுப்பேற்றார். இந்திய குடிமகன் யாரும் எதிர்பார்க்கக்கூடிய தலைமைப் பதவியை ஏற்றார்.

பெரியார்: ஒரு பெரியாருக்கு இருக்க வேண்டிய தன்மைகள் என்ன? 1. அவரைப்பற்றி உலகத்தார் தப்பபிப்ராயம் கொள்ள வேண்டும். 2. அவரது கொள்கைகள் எங்கும் கண்டிக்கப்பட வேண்டும். 3. அவர் வையவும் சபிக்கவும் பட வேண்டும். இத்தகைய மூன்று தன்மைகளயும் பெற்ற ஈ.வெ.இராமசாமி அவர்கள் பெரியார் என்றழைக்கப்பட வேண்டும் என்று கூறி 1928 இல் திருநெல்வேலியில் பெரியாரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார் இரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார். பிறகு 1938 நவம்பர் 13இல் சென்னையில் நடந்த தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில் ஈ.வெ.ரா.வின் பெயருக்கு முன் 'பெரியார்' என்னும் அடைமொழி கொடுத்து அழைக்கப்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தால் ஈர்க்கப்பட்டு காங்கிரசில் சேர்ந்து முழுமனதுடன் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார். இதற்காக 1919இல் ஈரோடு நகராட்சி மன்ற தலைவர் பதவியையும் மற்றும் 29 கவுரவப் பதவிகளையும் துறந்தார்.

தமிழ்நாட்டு பட்டித் தொட்டிகளில், நகரங்களில் கதர் விற்பனையில் ஈடுபட்டார். இப்படி இவர் 1921இல் விருதுநகர் கதர் விற்பனையில் ஈடுபட்டிருந்தபோது 19 வயதான காமராசரும் பிற்காலத்தில் ஜீவானந்தம் என்று அழைக்கப்பட்ட மூக்காண்டியும் அவருக்கு உதவி செய்தனர்.

அடுத்து சுதேசி இயக்கத்தின் ஒரு பகுதியாக தீண்டாமை ஒழிப்பு முயற்சியில் முனைப்பாகச் செயல்பட்டார். தீண்டாமை இந்து சமூகத்தின் சாபம் என்று பிரச்சாரம் செய்து வந்தார்.

இத்தகு பணியின் சிறப்பால் தமிழ்நாடு காங்கிரசுக் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். இச்சமயம் திருவாங்கூர் சமஸ்தானத்தில் - வைக்கத்தில் - சாதி இந்துகள் வாழும் பகுதியில் அரிசனங்கள் நடக்கக்கூடாது; பார்க்கக்கூடாது என்ற கொடுமை நடந்து கொண்டிருந்தது. இதை எதிர்த்து வைக்கம் கோவிலுக்குள் அரிசனங்களை அழைத்துச் செல்ல முடிவு செய்தார். இதைக் கேள்விப்பட்டு, தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்தில் ஈடுபடுங்கள்; நேரடி நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என்று தந்தி கொடுத்தார் காந்தியடிகள். தந்தியைப் புறக்கணித்து விட்டு தொண்டர்களுடன் சாதி இந்துக்கள் தெருவில் நுழைந்ததும் கைது செய்யப்பட்டார். சிறைவாசம் ஏற்றார்.

1925 இல் காஞ்சிபுரத்தில் நடந்த அரசியல் மாநாட்டில் சேரன்மாதேவியில் வ.வே.சு. ஐயரால் நடத்தப்படும் பாரத்துவாச ஆசிரமத்தில் பிராமணரல்லாத மாணவர்கள் ஒதுக்கி வைப்பதையும் அரசாங்கத்தில் பிராமணர்கள் ஆதிக்கத்தை அகற்ற வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டும் என்றும் தீர்மானம் கொண்டு வந்தார் பெரியார். பிராமணர்கள் பெரும்பான்மையாயிருந்த தலைமை இதை மறுத்தது. அன்று மாலையே சுயமரியாதை இயக்கம் தொடங்குவதாக அறிவித்தார் பெரியார்.

எனினும் அவர் காங்கிரசில் தொடர்ந்து பணியாற்றினார். 'குடியரசு இதழ்' தொடங்கினார். அதில் சர்க்கா உள்ள தேசியக் கொடியை ஏந்திய பாரதமாதா படமும் 'மகாத்மா காந்தி வாழ்க' என்று சொற்றொடரும் தலைப்பாகத் திகழ்ந்தன. இதில் விதவை மணம், சடங்கில்லாத் திருமணம், இதை எதிர்த்த பிராமணரல்லாத மடாதிபதி கண்டிப்பு, நாத்திகவாதம் ஆகிய கருத்துக்களைத் தாங்கி இவ்விதழ் வெளிவந்தது.

இந்து சமயக் கொடுமைகளை எதிர்த்து அவர் ஒரு நாத்திகரானார்; நாத்திகராகவே வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தார். அவர் சிலையை வைக்கும்போது அதன் கீழ் 'கடவுள் இல்லை; கடவுளைப் படைத்தவன் அயோக்கியன்; கடவுளை நம்புகிறவன் முட்டாள்; கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி' என்று எழுதி வைக்கும்படி கட்டாயப் படுத்தினார்.

உருசியாவுக்குப் போவதற்கு முன்பே அவர் இயற்பொருள் வாதியாக வாழ்ந்தார். 'குடியரசு' இதழில் தோழர் சிங்காரவேலு செட்டியார் எழுதும் சமூகப் பொதுவுடைமை, பொதுவுடைமை, இயற்பொருள்வாதம் தொடர்பான கட்டுரைகளை வெளியிட்டு வந்தார்.

1931 இல் விருதுநகர் மாநாட்டில் 'பொதுவுடைமை நமது குறிக்கோள்; நாட்டில் சமூகப் பொதுவுடைமைக் கொள்கைகள் மேலோங்க வேண்டும். விதி, கடவுள் போன்றவை மக்கள் மனதிலிருந்து மாற்றப்பட வேண்டும்' என்று தீர்மானம் நிறைவேற்றச் செய்தார்.

1932 இல் உருசியா முதலிய மேற்கத்திய நாடுகளுக்குப் போய்த் திரும்பியதும் சமூகப் பொதுவுடைமை இயக்கத்தைத் தொடங்கினார். இம்முயற்சியில், ஆங்கிலேய ஆட்சியிலிருந்து விடுபட வேண்டும். தொழிற்சாலை, போக்குவரத்து முதலியன சமூக உடைமையாக வேண்டும். சுதேச சமஸ்தானங்கள் ஒழிக்கப்பட வேண்டும். உழவர்-தொழிலாளர் ஆட்சி மலர வேண்டும் என்று பேசினார்; எழுதினார். இதற்காக 9 மாதங்கள் சிறைவாசம் சென்றார்.

1937 மற்றும் 1952இல் இராசாசியால் கட்டாயமாகப் புகுத்தப்பட்ட இந்திப் படிப்பை எதிர்த்தார் பெரியார். மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார் போன்ற அறிஞர்கள் அதை ஆதரித்தனர். பொது மக்களும் ஆதரவு தந்தனர்.

'ஒரு புதிராகவே விளங்குகிறார் பெரியார் பலருக்கு. அவர் பிராமணீயத்தை எதிர்த்து வந்தாலும் பிராமணர்களை வெறுப்பதில்லை. சொல்லப்போனால் பிராமணர் பலர் அவரின் நெருங்கிய நண்பர்கள்; உண்மையில் பிராமணீயச் சடங்குகளைத்தான் சாடினார் அவர்; அவருடைய வசையுரை சக்தி வாய்ந்தது; அதைக் கேட்கும் பிராமணர்கள் அதனால் புண்படுவதில்லை; மாறாக நாம் இவ்வளவு முட்டாள்தனமாகவா இருக்கிறோம் என்று ஆச்சரியப்படுவர். சுருங்கச் சொன்னால் நம்பிக்கையிலும் செயல்களிலும், சொந்த வாழ்க்கையிலும் முரண்பாடுகள் இருந்தாலும் நமது

அண்மைக் காலத்தில் ஐயத்திற்கிடமின்றி பெரியார் ஒரு தலைசிறந்த சீர்திருத்த வாதியாகத்தான் திகழ்கிறார்' என்று கருத்துரைக்கிறார் இராமமூர்த்தி.

கர்ம வீரர்: வரதராசுலு நாயுடு, திரு.வி.க., பெரியார், சத்தியமூர்த்தி போன்றவர்களின் பேச்சாற்றலால் ஆயிரக்கணக்கானவர்கள் ஈர்க்கப்பட்டது போலவே பொது வாழ்வில் அன்று காமராசரும் ஈர்க்கப்பட்டவர். எனினும் இவ்வாறு ஈர்த்தவர்களின் பேச்சாற்றலை அவர் பெறாதது ஒரு முரண்பாடுதான். அவர் குறைந்த பேச்சும் நிறைந்த செயலாற்றலும் கொண்ட ஒரு பெரிய கர்ம வீரராகவே வாழ்ந்தார்(1903-1975).

1921இல் விருதுநகரில் 19 வயது இளைஞராக பெரியார் கதர் விற்பனையில் ஈடுபாடு கொண்டார்; உதவினார். இதை மாற்றுவதற்காக திருவனந்தபுரத்திலிருக்கும் தம்பியிடம் அனுப்பி வைத்தார் மாமா கருப்பையா காமராசை. அங்கு வைக்கம் அரிசனப் போராட்டத்தில் பெரியாருடன் கலந்து கொண்டார். இதனால் திருப்பி அழைக்கப்பட்டார் விருதுநகருக்கு. விருதுநகர் திரும்பியதும் தமிழ்நாடு முழுதும் காங்கிரசுக் கூட்டங்கள் நடக்க ஏற்பாடு செய்து வந்தார். உப்பு சத்தியாக்கிரக மறியலில் ஈடுபட்டு இரண்டாண்டுகள் சிறை சென்றார்.

சிறையிலிருந்து திரும்பியதும் மிதவாதிகளும் தீவிரவாதிகளும் இணைந்து இராசாசியைத் தலைவராகவும் சத்தியமூர்த்தியைத் துணைத் தலைவராகவும் கொண்ட காங்கிரசுக் குழுவில் இராமநாதபுர மாவட்டப் பிரதிநிதியாக இடம் பெற்றார் காமராசர். பக்தவத்சலமும் எஸ்.டி.எஸ். இராசனும் மாவட்டப் பிரதிநிதிகளாக இக்குழுவில் சேர்ந்தனர்.

வெல்லிங்கடன் பிரபு (1931-36) தலைமை ஆளுநரானதும் காந்தி இர்வின் ஒப்பந்தம் கைவிடப் பட்டது. வட்டமேசை மாநாட்டில் எவ்விதப் பயனும் ஏற்படவில்லை. காந்தி கைது செய்யப்பட்டார். இச்சமயம் காமராசரும் கைதாகி வேலூர் சிறை சென்றார். திரும்பியதும் பல வழக்குகளில் சிக்க வைக்கப் பட்டார்; துன்பங்கள் அனுபவித்தார்.

1936 இல் சத்தியமூர்த்தி தமிழ்நாடு காங்கிரசுக் குழுத் தலைவரானார். காமராசர் செயலாளர்களில் ஒருவரானார். அடுத்து நடந்த தேர்தலில் சாத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1940 இல் காங்கிரசில் சேர்ந்த 21 ஆண்டுகளில், 37 வயதில் தமிழ்நாடு காங்கிரசு தலைவரானார். தலைவராய் இருந்த சத்தியமூர்த்தி செயலாளராகி தொண்டரைக் கவுரவப் படுத்தினார். அன்றிருந்து கடைசி வரை தமிழ்நாடு காங்கிரசு தலைவராக இருந்தார்.

1942 இல் 'வெள்ளையரே வெளியேறு' இயக்கத் தொடர்பாக தமிழ்நாடு முழுதும் எழுச்சி ஏற்பட ஏற்பாடு செய்துவிட்டு விருதுநகர் விரைந்து சரணடைந்தார். மூன்றாண்டுகள் தண்டனை பெற்று வேலூர்ச் சிறை சென்றார்.

சிறை மீண்டதும் காங்கிரசு செயற்குழுவை சீரமைத்தார். சுயநலவாதிகளை வெளியேற்றினார். பலத்த எதிர்ப்புக்கிடையே இராசாசியை

காங்கிரசில் சேர்த்தார். 1946 தேர்தலில் திறம்படி செயற்பட்டு சென்னை சட்டமன்றத்திற்கான 205 இடங்களில் 165 இடங்களை காங்கிரசு கைப்பற்றச் செய்தார். அருப்புக் கோட்டைத் தொகுதியில் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரகாசம் முதலமைச்சராக ஏற்பாடு செய்தார். ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரும், பி.எஸ்.குமாரசாமி ராசாவும் இராச கோபாலாச்சாரியும் இவர் முயற்சியில்தான் முதலமைச்சர்களாகினர்.

1954 முதல் 63 வரை மூன்று முறை முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு தமிழ்நாட்டு மக்களுக்குத் தன்னாலானதை எல்லாம் செய்தார். இதனால்தான் காங்கிரசை எதிர்த்து வந்த பெரியார் இவரைத் தேர்தலில் ஆதரித்து வெற்றி பெறச் செய்தார்; பச்சைத் தமிழன் என்று பாராட்டினார்.

முடிவுரை

ஆதார நூல்கள் இல்லை: சுதந்திரப் போராட்டத்தில் தமிழர் பங்கு என்பது பற்றி அதிகாரபூர்வமான ஆதாரபூர்வமான நூல்கள் இல்லை என்பது வருந்துதற்குரியது. அங்குமிங்கும் சில மேம்போக்கான குறிப்புகள் மட்டுமே வெளிவந்துள்ளன.

களஞ்சியம் வேண்டும்: எனவே நூற்றொகையின் ஈற்றியல் குறிப்பாக வரும் இந்திய தேசிய காங்கிரசு களஞ்சியம் போல ஆதாரபூர்வமான களஞ்சியம் கொண்டு வரவேண்டியது அவசியம்.

பயன்பட்ட நூல்கள்

நூல்கள்—தமிழ்

ஆவடி காங்கிரசு, திருச்சி பாரத் பப்ளிஷர்ஸ், 1955.

இந்திய சுதந்திரப் போர், அரியலூர் எல் சபாபதி, 1976.

இந்திய விடுதலை இயக்கம் – க. தங்கவேலு (இந்திய வரலாறு, பகுதி3, பக்கங்கள் 403–482).

இராவண காவியம், புலவர் குழந்தை, 1946.

கர்மராஜ் ஒரு சரித்திரம் , முருகுதனுஷ்கோடி

தமிழ் இதழியல் வரலாறு, மா. சு. சம்பந்தம், 1987.

தமிழக மாவட்ட நூல் வரிசை–20 நூல்களில் விடுதலைப் போராட்ட வீரர்கள் பட்டியல் (மணிமேகலைப் பிரசுரம், சென்னை).

தேசியம் வளர்த்த தமிழ், க. திரவியம் 1974.

புரட்சியாளர் பெரியார், நெ.து. சுந்தரவடிவேலு, 1980.

விடுதலைப்போரில் தமிழ் வளர்ந்த கதை, ம.பொ.சிவஞானம், 1970.

நூல்கள் — ஆங்கிலம்

At the threshold of life, Satyamurthi, 1951.

Freedom struggle and the Dravidian Movement, P. Ramamurthi, 1987.

History of the Congress, Pattabi Sitaramayya Satyamurthi, 1979, R. Parthasarathi, 1935.

Who's Who Freedom fighters of Tamilnadu, (3 Volumes), The Government of Tamilnadu, 1973.

கட்டுரைகள்—ஆங்கிலம்

Early Freedom Fighters of Tamilnadu, K. Rajayyan (the proceedings of 5th International Conference-Seminar of Tamil studies, 1981, Madurai-Volume I: Section: Pages 51-71).

Modern Literature 1850-1977, V. Veerasami, Cultural Heritage of the Tamils, 1981 28-41 IITS.

Modern Literature-Journalism, Thanga Manian Literary Heritage of the Tamils, 1981 IITS.

Modern Histroy of India and Indian Culture, G. Frankman Unique Advanced General studies, 1988 141-240.

National Literature, K. Pandurangan Literary Heritage of the Tamils, 1981 IITS.

பயன்தரு நூல்கள்

All through the Gandhian era, A. S. Iyengar, 1950.

Annie Besant, C. P. Ramasami Iyer.

British exploitation of India and its people, R. C. Dutt.

British - The Magnificient Exploiters of India Surinder Nath Gupta, S. Chand & Co. Delhi and Madras.

History of the Press in India, S. Natarajan.

How India wrought for freedom, Annie Besant.

Indian Economics, Hather and Beri.

Indian Revolutionary Movement in USA, L. P. Mathur S. Chand & Co.

Indian since the advent of the British a descriptive chronology, J. S. Sharma, S. Chand.

Indian struggle for freedom, 3 volumes, J. S. sharma, S. Chand, Kasturi Ranga Iyenkar, V. K. Narasimhan.

Labour in Madras, B. P. Wadia.

Politics of South India, J. C. Bakeı.

Politics of South India and Social contradictions Irschick.

Rise and growth of economic nationalism in India Bipin chandra.

Role of Central legislature in the Freedom struggle, Manoranjan Jha, 1972 Sivasami Iyer, K. Chandrasekaran.

Social background of Indian nationalism, A. R. Desai.

Social factors in the birth and growth of Indian National Congress Movement, R. P. Dua.

South Indian Revolution-the first war of Independance, 1800-01, K. Rajayyan.

Srinivasa Iyengar, K. R. R. Sastry.

Srinivasa Sastri, T. N. Jagadisan.

Subramania Iyer, S. A. Govindarajan.

களஞ்சியங்கள்

1. Encyclopaedia of India's struggle for Freedom, J. S. Sharma (S. Chand).
2. Encyclopeadia of the Indian National Congress, 1885-1983-25 volumes A. M. Zaidi (S.Chand & Co)

சமூகப் பெண் சீர்திருத்தவாதிகள்

பொன்மணி வைரமுத்து,

சீர்திருத்தமும் பெண்களும்

பெண்ணுரிமை போற்றப்பட்டு, பெண்ணுரிமைக் குரல்கள் உயர்ந்து வருகின்ற இந்நூற்றாண்டில் சமூக மாற்றத்திற்கான பெண்களின் பணி குறித்து ஆராய்வது பொருத்தமான ஒன்று. மனையறத்தை மாட்சிமைப்படுத்தும் பெண்ணினத்திற்கு சமூகத்தின் சீர்கேடுகளை நீக்கிச் சமூகத்தைத் தூய்மைப்படுத்தும் வல்லமை இயல்பாகவே அமைந்திருக்கிறது. பிரெஞ்சு, ரஷ்யப் புரட்சிக்குப் பிறகே சீர்திருத்தம் என்ற சொல் வழக்கிற்கு வந்தது. சீர்திருத்தம் என்ற சொல்லாட்சி உருவாவதற்கு முன்பே உலகின் பல்வேறு பகுதிகளிலும் பெண் சீர்திருத்தவாதிகள் இருந்து வந்திருக்கின்றனர். சமூகம், சமயம், அரசியல், கலை, இலக்கியம் போன்ற பல்வேறு துறைகளில் தம் உழைப்பை நல்கியுள்ளனர்.

'பெண்கள் கட்டாயம் கல்வி பெற வேண்டும் (என்றும்) வீட்டிற்கு வெளியில் சமூகப் பணிக்காக இரண்டு மணி நேரம் அவர்கள் செலவு செய்ய வேண்டும்'.[1] என திருமதி.கமல் பாலகிருஷ்ணா என்ற சமூகப் பணியாளர் கூறுவது போன்று வீடு, கணவன், குழந்தைகள் என்ற வட்டத்திற்குள்ளேயே அடங்கிவிடாமல் வீட்டிற்கு வெளியில் சமூக நலனுக்காகவும் நேரம் ஒதுக்க வேண்டும் என்ற எண்ணம் பெண்களிடையில் எழுந்துள்ளது.

'தற்காத்துத் தற்கொண்டார் பேணித் தகைசான்ற
சொற்காத்து சோர்விலாள் பெண்'.[2]

என்ற வள்ளுவர் கருத்திற்குமேல் சமூக உருவாக்கப் பணிகளில் பங்கெடுத்துக் கொள்பவளாக பெண் இருக்க வேண்டும்.

'கலிய ழிப்பது பெண்க ளறமடா'.[3]

'திலக வாணுத லார்எங்கள் பாரத தேசமோங்க உழைத்திடல்
வேண்டுமாம்'[4]

என்று பாரதி பாடிய 'கலியழித்து' வினைகளாற்றலும் 'தேசமோங்க உழைத்தலும்' என வரும் தொடர்கள் சமூகச் சீர்திருத்தத்தையே குறிக்கின்றன.

சீர்திருத்தம் – சொல் விளக்கம்

சீர்திருத்தம் என்ற பொருள் தரும் ஆங்கிலச் சொல்லிற்கு சீர்திருத்தம், சீர்திருத்தவாதம் என்று பொருள் கூறுகிறது சென்னைப் பல்கலைக் கழக ஆங்கிலத் தமிழ் அகராதி.[5]

சீர்திருத்தம் – பொருள் விளக்கம்

ஏதேனும் ஒரு வகையில் முழுமையற்று அல்லலுறுவதே சமூகத்தின் இருப்பாக உள்ளது. முறையான பணிகள் முடங்கியும், முறைகேடுகள் தோன்றியும், வலிமை குன்றியும் சமூகம் குழப்பமான நிலையினை அடையும்போது அதனை நெறிப்படுத்தவும் நேர்ப்படுத்தவும் பல சமூகப் பணியாளர்கள் முயன்று வந்திருக்கின்றார்கள். பண்பாடு, நாகரிகம் சார்ந்த அனைத்து வாழ்வியல் நிலைகளிலும் முன்னேற்றம் தரத்தக்க மாறுதல்களைப் புகுத்துவதே சீர்திருத்தமாயிருந்தது. நெறி இழப்புகள் எவ்வெப்போது நேர்ந்தனவோ அவ்வப்போது பல சீர்திருத்தவாதிகள் தோன்றினர். ஆண்களைப் போலவே பல பெண்களும் இத்தகைய சமூக சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டனர்.

சமூகப் பெண் சீர்திருத்தவாதிகள்

சமூகத்தில் தங்கள் நிலையினை முதலில் சீர்திருத்திக் கொண்டு கல்வியும், ஞானமும், சுதந்திரமும் பெற்று பிறகு சமூகத்தைச் சீர்திருத்தி வந்த பெண்களைச் சமூக சீர்திருத்தவாதிகள் என்று அழைப்பது பொருந்தும். பெண்கல்வி, விதவை மறுமணம், குழந்தை திருமணத்திற்கு எதிர்ப்பு, மூட வழக்கங்களை மாற்றுதல், விலங்குகள் நலம், ஊனமுற்றவர் நலம், சுதந்திரப் போராட்டத்தில் பங்கு, போர்களில் நிவாரணப் பணி எனப் பல நோக்கங்களைக் கொண்டவா களாகவே பெண் சமூகப் பணியாளர்கள் அமைகின்றனர். அரசியலும் பெண்ணும் எண்ணெயும் தண்ணீரும் போல என்ற பழைய வழக்கத்தை மாற்றி விஜயலட்சுமி பண்டிட், சரோஜினி வரதப்பன், இந்திரா காந்தி, மார்கிரட் ஆல்வா போன்றோரும் மற்றும் பலரும் அரசியல் மூலம் நாட்டுப்பணி புரிந்தனர்; புரிந்து வருகின்றனர். கல்வி, அறிவு, சமூக உணர்வு என்ற நிலைகளில் தம்மைத் திருத்திக் கொண்டவர்களும் சீர்திருத்தவாதிகளே என்ற உண்மையின் அடிப்படையில் இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

பழங்காலந் தொட்டே மாதர்கள் தங்கள் உரிமைகளைக் கண்டிக்கும் சமூகத்தைக் கண்டித்தும் பல நீதிகளை எடுத்துச் சொல்லியும் வந்துள்ளனர். வேதகாலந் தொட்டு சமயம், சமூகம், அரசியல், இலக்கியம் எனப் பல துறைகளில் மாறுதல் விழைந்தும், பாடியும் பேசியும் வந்தனர். மக்களைச் சீர்திருத்தும் பணிகளில் ஈடுபட்டனர். பெண்ணுரிமை பேணுநரும், மக்கள் நலம் காக்க விழைந்தவரும் சீர்திருத்தவாதிகளாயிருந்தனர்.

வேதகாலம்

வேதகாலத்திலும் வேதகாலத்திற்கு முன்பும் வாழ்ந்த பெண்கள் ஆண்களைப் போலவே அனைத்துத் துறைகளிலும் சமூக சுதந்திரமும் உயர் பெருமையும் கொண்டவர்களாகத் திகழ்ந்தனர். ஆழ்ந்த கல்வியும், அறிவாற்றலும், கற்றோர் அவையில் முன்னிலை வகிக்கும் திறனும் கொண்டவர்களாகத் திகழ்ந்தனர். சனகனின் சபையில் அமைக்கப்பட்ட புகழ் வாய்ந்த ஒரு தத்துவக் கலந்துரையாடலில் கார்க்கியும், யாக்ஞவல்யரின்

மனைவி மைத்ரேயியும் வரவேற்கப்பட்டனர். வேதக் கல்வி, போர் முறை, கலையறிவு அரசியல் போன்றவற்றில் வல்லவர்களாக விளங்கினர். சமூகத்தின் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்பதற்குரியவர்களாகிப் பெண்கள் அன்று இருந்தனர்.

ரிக் வேதத்தில் கேலா என்னும் அரசனின் மனைவியான விஸ்பலா, கணவனுக்கு உதவியாகப் போரிட்டு இழந்த காலுக்குப் பதிலாக செயற்கைக் காலைப் பொருத்திக் கொண்ட செய்தி குறிப்பிடப்படுகிறது.[6] வில்லேந்திப் போர் புரிந்த பெண்கள் வேதத்தில் குறிப்பிடப்படுகிறார்கள். திருமணத்திற்குரிய தகுதியாகக் கல்வியைக் கருதியதால் பெண்கல்வி சிறந்திருந்தது. கல்வியால் சிந்தனையும், மாறுதல்களை காண விழையும் போக்கும் இயல்பானது.

'குடும்பப் பணிகளில் பெண்களுக்குச் சுதந்திரம் கிடையாது'[7]

என்றும், 'மந்திரங்களைப் பெண்கள் சொல்லக் கூடாது'[8] என்றும் மனு கூறியதை வேத காலப் பெண்கள் மாற்றியமைத்திருக்கிறார்கள். வேள்விக் காலங்களில் தலைவி, தலைவனோடிருந்து மந்திரத்திலோ, ஸ்வரத்திலோ தவறு நேர்ந்தால் திருத்தும் செய்திகள் கூறப்படுகின்றன. கார்க்கி, மைத்ரேயி, காத்யாயினி, கோஷா, லோபமுத்ரா, சரசுவதி, சுபலா, இந்திராணி போன்ற பெண்கள், தத்துவம், சமயம், சமூகம் போன்ற நிலைகளில் தம் உழைப்பைத் தந்தனர். பிற்காலத்தில் தோன்றிய பெண் சீர்திருத்தவாதிகளுக்கு முன்னோடிகளாக இவர்களையே கருத முடிகிறது.

புத்தர்காலம்

ஆண்கள் மட்டும் துறவிகளாகச் சேர்ந்த புத்த சங்கத்தில் பெண்களும் துறவிகளாகச் சேர்ந்தனர். புத்தரின் சிற்றன்னை மகாபிரஜாவதி கௌதமி தலைமையில் நூற்றுக்கணக்கான பெண்கள் துறவுக் கோலத்தோடு புத்த சமயத்தில் சேர்ந்ததாகக் கூறப்படுகிறது. பெண்களால் புத்த சமயத்தில் சேர்ந்தது சீர்திருத்தமாக இஃது அமைந்தது. மூத்த பௌத்த பிக்குணிகள் 'தேரிகள்' என்று அழைக்கப்பட்டனர். வெறுத்துப் போன வீட்டு வாழ்க்கை, வறுமை, பிற இழப்பு காரணமாகத் துறவறம் பூண்டனர். தேரிகளில் கேமா, படாசாரா, பக்தா, கிஸாகௌதமி, விசாதா போன்றோர் பௌத்த இலக்கியத்தை யும் தத்துவத்தையும் வளப்படுத்தத் தொண்டாற்றியிருப்பதாகக் கூறுவர்.[9]

'அடுப்பின் மேல் வைக்கப்பட்ட பாத்திரத்தில் வறுக்கப்பட்ட
உலர்ந்த காயைப் போல புலன் ஆசைகள் தீர்ந்து விட்டன'[10]

என்று பாடுகிறாள் ஒரு தேரி. துறவு ஆண்களுக்குரியது என்ற நிலையை மாற்றி பெண்களுக்குரியதாகப் புத்தர்காலத்துப் பெண்கள் திருத்தினர்.

காதாசப்தசதி

கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த நூலாகிய காதாசப்தசதியில் சமூகம் பற்றிச் சிந்திக்கும் பெண்களை அறிய முடிகிறது. அனுலச்சி, ரேகா, ரோஹா, ரேவாநாதா, பிரவரதா, மாதவி, சரசுவதி, போன்ற பெண்கள் தம்காலச் சமூக நிலையினையும் மக்களின் இன்ப துன்பங்களையும் உணர்வு ததும்ப

வடித்துள்ளனர். தம் துயரம் உணர்ந்து மக்கள் துயரத்தை எடுத்துப்பாடி தீர்வு விழையும் போக்கு சீர்திருத்தத்தின் பால் சார்ந்ததாகும்.

உலக நாடுகளில் சீர்திருத்தம் விழைந்த பெண்கள்

உலக நாடுகள் பலவற்றிலும் தத்தம் சமூகத்தை முன்னேற்றவும், மாற்றவும் விழைந்த பெண் சமூகப் பணியாளர்கள் பலர். அவர்களுள் ஒரு சிலரை நாட்டின் வழி அறிந்து கொள்வது பொருத்தமாயிருக்கும்.

இஸ்ரேல்

இஸ்ரேலின் ஈப்ருமொழி இலக்கியத்தில் தேசிய அளவிலும் மொழியளவிலும் மாறுதல்களைச் செய்த பெண்களைப் பார்க்க முடிகிறது. ஈப்ருமொர்ழி பெண் பாற் கவிஞரான 'தெபொரா' இஸ்ரேலின் தேசிய இனத்திற்குச் சிதைவு நிகழாதபடி தடுத்து ஒரு தேசிய இனத்தைக் கட்டிக் காத்தவராகக் கூறப்படுகிறார். நாட்டை முன்னின்று நடத்தப் பெண்கள் முன் வர வேண்டும் என்று பாடுகிறார். கி.பி. முதல் நூற்றாண்டில் ரோம் நாட்டில் படையெடுப்பை எதிர்த்து பிரிட்டனைப் பாதுகாக்கப் போராடிய 'பாடிசியால்', கி.பி.15 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய பிரான்ஸ் நாட்டு வீராங்களை 'ஜோன்ஆப்ஆர்க்'கும் போல தெபொரா விளங்குவதாக பெ.சு.மணி [11], என்பார் குறிப்பிடுகிறார். நாட்டுப் பற்றும் தெய்வப்பற்றும் கொண்ட வீராங்கனையாக தெபொரா குறிப்பிடப்படுகிறார். அவ்வப்போது பல பெண்கள் இஸ்ரேலின் முன்னேற்றத்திற்கும் மறு மாற்றத்திற்கும் உழைத்திருக்கிறார்கள்.

லெஸ்போஸ்

லெஸ்போஸில் காதல்கவிதைகள் எழுதிக் கொண்டிருந்த சாப்போ சிறந்த தேசிய சீர்திருத்தவாதியாகவும் இலக்கிய சீர்திருத்தவாதியாகவும் திகழ்கிறார். நிலப்பிரபுத்துவ வம்சம் செய்த சதியில் சாப்போ சிசிலிக்கு நாடு கடத்தப் பட்டதாகக் கூறுவர்.

'வாழ் நரம்புகளில் சுற்று கனத்த ஒலி எழுப்பி மீட்டப்
புதுமையான இறகைக் கண்டுபிடித்தவள் சாப்போ'[12]

இவள் மகளிர்க்கென்று பல கழகங்களை நிறுவியவள். 'சாபிக்' என்ற யாப்பு இப்பெண்ணால் செல்வாக்குப் பெற்றதாகக் கூறுவர்.

கிரேக்கப் பெண்கவி டெலிசில்லா கி.மு. 5ல் ஸ்பார்ட்டாவை எதிர்த்து, வீர மகளிர் அணிவகுப்பிற்குத் தலைமை தாங்கியதாகக் கூறுவர்.

சீனா

சீன அரசில் மஞ்சு ராஜ்ய வம்சத்தை ஒழிக்க அரசுப் புரட்சி சங்கங்களை ஏற்படுத்தியவராக 'சியூசீன்' என்ற சீனப்பெண் குறிப்பிடப்படுகிறார். கலாசாலைகளை உருவாக்கிய இந்த சீன மாது பெண்ணடிமை, மக்களடிமை நிலைகளுக்காக அஞ்சாமல் குரல் கொடுத்தவர். இவர் நடத்தி வந்த 'ஷாப்சிங்'

என்ற பாடசாலை படைச்சாலையாகவும் இருந்தது. மஞ்சுப் படையால் 'ஷங்கங்' நகர மண்டபத்தில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட சியூசீன் சிறந்த சீனப்பெண் சீர்திருத்தவாதி ஆவார்.

'விடிய நல்லொளி காணுதி நன்றே'[13]

எனும் பாரதி பாடியது சியூ சீன்னைக் குறித்தேயாகும்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (மஞ்சு) அரசாங்கம் மடிந்தபிறகு சான்–யாட்–சென் தலைமையில் இயங்கிய பெண் 'கவ்வூஜின்'. பெண்களை முடக்கிய பழைய மரபுகள் தகர்த்து குடும்ப வட்டமே புரட்சிக்கு விரோதம் என்று குரல் கொடுத்தவர் இந்தப் பெண்கவி.

'இந்த வாளோடுதான்
நான்
இரவிலும் உறங்குகிறேன்
இதுவரை
சீனப்பெண்களின் ரத்தம்
தேசத்திற்காய்ச் சிந்தியதில்லை
இதோ நான்
இதோ என்வாள்'[14]

என்று எழுதிய க்வ்வூஜின் முப்பதாவது வயதில் ஒரு போர்ப்பாசறையில் கொல்லப்பட்டார்.

ஈரான்

ஈரானில் கோமேனியின் கொடுமையை எதிர்த்துக் கொடி பிடித்தவர்களில் மார்ஜியா அகமதி 'ஊஸ்கூயி' என்ற பெண்கவியைக் கூறலாம். ஓர் ஆசிரியையாக இருந்து கொரில்லா இயக்கத்தில் வளர்ந்து சர்வாதிகார ஆட்சியால் சுட்டுக் கொல்லப்பட்ட புரட்சிப் பெண் ஆவார்.

'துயரங்களை (யும்)
சுமந்து பழகிய நான்
இப்போது
துப்பாக்கியைச் சுமக்கப் பழகிக் கொண்டேன்'[15]

என்று எழுதுகிறார் இந்தப் பெண்கவி. யூகோஸ்லாவோகியாவைச் சேர்ந்த அன்னை தெரசா உலக நாடுகள் அனைத்திற்குமான சமூகப் பணிகளை கருணையோடும் அன்போடும் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. மனிதநேயம் கொண்டவராக நோயாளிகள், மனநிலை சரியில்லாத வர்களுக்கு உதவும் அவர்பணி உலகத்தையே தன்பால் திருப்புவதாக அமைந்துள்ளது. ஆர்மீனிய மக்கள் நல்வாழ்விற்காக நற்பணி புரிந்து கொண்டிருக்கும் அன்னை தெரசாவை உலக முதன்மைப் பெண் சமூகப் பணியாளர் என்றே கூறலாம். உலக நாடுகளைப் போல் இந்தியாவின் பல மாநிலங்களிலும் பல பெண்கள் சமூகப் பணிகளில் ஈடுபட்டனர்.

இந்தியாவின் பெண் சீர்திருத்தவாதிகள்

சுதந்திரப் போராட்டத்திற்கு முன்னும் பின்னும் சமூக மாற்றப் பணிகளில் பெண்கள் மனமுவந்து ஈடுபட்டனர்.

தன் கண்முன்னே கண்ட சீரழிவுகளை முடிந்தவரை நீக்க முனைந்தனர். சுதந்திரப் போராட்டக் காலத்தில் ஆங்காங்கே மாநிலங்களில் தோன்றிய கிளர்ச்சிகளில் கலகங்களினால் மக்கள் அல்லலுற்றபோது தம்மாலான பணிகளை ஆண்களைப்போலவே பெண்களும் ஆற்றினர். தனியாகவோ சங்கங்களின் மூலமாகவோ சமூக மறுபடைப்புகளில் ஈடுபட்டனர்.

மகாராட்டிரப் பெண்கள் அரசியலிலும் பொது நிர்வாகத்திலும் சிறந்தவர்களாக இருந்தனர். குஜராத்தி, சௌராட்டிரப் பெண்கள் சமய சமூகப் பண்பாட்டு வளர்ச்சிக்குப் பெரிதும் பணிபுரிந்து வந்துள்ளனர். கிழக்கிந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் சமூக, அரசியல் பெருமைகளைப் பெற்றவர்களாகப் பெண்கள் இருந்தனர். சமயப்பணி புரிந்த பெண்களாக கேரளாவில் சமயப் பெண் பணியாளர்கள் விளங்கினர். கர்நாடகாவில் சென்னம்மா, மல்லம்மா, கிட்டூர் சென்னம்மா போன்றோர் குறிப்பிடத்தக்க பெண்மணிகளாக விளங்கினர்.

சிவாஜியின் தாய் ஜீஜாபாய் சமயம், மரபு, கல்வி முதலியவற்றை தன் மகனுக்குக் கற்பித்தார். ஆங்கிலப் படைகளை எதிர்த்த ராணி லட்சுமிபாய் அரசியலில் குறிப்பிடத் தக்கவர்களாக விளங்கினார். இல்லறத்திலிருந்து கொண்டே துறவியாய் வாழ்ந்த சாரதாதேவியாரின் வாழ்க்கைப் பல பெண்களுக்கு முன் மாதிரியாக அமைந்தது. வெளிநாட்டுப் பெண்மணியாக இருந்தபோதிலும் இந்தியாவின் சுதந்திரத்திற்காகவும் இந்தியப் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்ட விவேகானந்தரின் சீடப்பெண் நிவேதிதாவின் பங்கு பெரும்பங்கு ஆகும்.

மகாத்மா காந்தியின் சீடப் பெண்ணான சரோஜினி நாயுடு அரசியல் விடுதலைக்காகக் குரல் கொடுத்தவர். மேடைகளில் முழக்கமிட்டவர். அரசியல் தலைவராக இருந்தவர். பல பதவிகள் வகித்தவர். இவர் வாழ்நாளில் பெரும்பகுதி அரசியல் தொண்டிலும் சமூகத் தொண்டிலுமே கழிந்ததாகக் கூறப்படுகிறது. தன் கணவரின் அரசியல் போராட்டங்களுக்காகவே வாழ்நாள் முழுவதையும் செலவழித்தவர் கமலாநேரு. இந்தியப் பெண்மணியாக இல்லையென்றாலும் இந்திய விடுதலைக்காகப் பாடுபட்டவர் அன்னிபெசண்ட் ஆவர். பெண்களின் முன்னேற்றம் சுயாட்சி இயக்கம் தொடர்பாகத் தம் பணிகளை அமைத்துக்கொண்டார். திருமதி. எம். சந்திரசேகர் போன்றோர் அரசியலில் தலை சிறந்தோராகத் திகழ்ந்தனர். 'இந்தியாவின் தலை சிறந்த பெண்களின் தொகுப்பு' என்ற ஆங்கிலநூல் சீர்திருத்தவாதிகளைக் கூறிச் செல்கிறது. தன் நிர்வாகத்தினால், அரசியலால் நாட்டைச் சீர்திருத்திய இந்திராகாந்தியை அரசியல் சீர்திருத்தவாதி என்றே கூறலாம்.

'என்ன மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், எந்த மொழியைச் சேர்ந்தவராக இருந்தாலும் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும்

நாமெல்லாம் ஒரு தேசத்தின் மக்கள்'. என்று பேசியவர் ஆவர். கடின உழைப்பும் தேசத்திற்குத் தொண்டும் செய்தவர். அறிவியல் தொழில் நுட்பத்துறை, விண்வெளி ஆய்வு, மின்னணுவியல் மற்றும் அனைத்து அறிவியல் தொடர்பான அமைச்சுப் பொறுப்பினை ஏற்று நடத்தினார். செயற்கைக்கோள் ஆய்வுத் திட்டம் இவருடைய ஆட்சியில் தான் நடைபெற்றது.[17] ஒரிசா மாநிலத்தில் புவனேஸ்வரத்தில் சுற்றுப்பயணம் செய்து பொதுக் கூட்டத்தில் பேசும்போது,

> *'நாட்டு நலனுக்காக என் ஒவ்வொரு சொட்டுக் குருதியையும் கொடுக்க அணியமாக உள்ளேன். நாட்டிற்காக என் உயிர் போவதாக இருந்தால் அதை நான் பெருமையாகக் கருதுவேன். என் உடலின் ஒவ்வொரு துளி குருதியும் இந்நாட்டின் வளர்ச்சிக்கு நல்கப்படும்'*[18]

என்று கூறியது போன்றே நாட்டு நலனுக்காக உயிர்விட்ட நங்கை இவர்.

தேச முன்னேற்றத்திற்குப் படிகள் அமைப்பது போலும் சமூக நிர்மாணப்பணிகளில் பெண்கள் ஈடுபட்டனர். பல சங்கங்களின் மூலம் தங்கள் பணிகளை ஆற்றினர். அபிதா அகமத் பேகம் என்பவர் பங்களாதேஷ் போரில் நிவாரண நிதி திரட்டி படைவீரர் மருத்துவமனைகளுக்கு வழங்கியதாகக் கூறப்படுகிறது. இயற்கையான நில அழிவு வெள்ள அழிவுகளால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நிதி திரட்டி வழங்கி இருக்கிறார். பம்பாயைச் சேர்ந்த சுசீலா சங்கர் சிறந்த சீர்திருத்தவாதி. தாழ்த்தப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்தவர்.

> *'ஒரு சோஷலிச சமுதாயத்தில் உழைப்பின் எல்லா நிலைகளிலும் பெண்கள் பங்கு பெறுவது அவர்கள் முன்னேற்றத்திற்கு ஒரு படிக்கல்லாக அமையும்'.*[19]

என்ற கருத்திற்கேற்ப பல துறைகளிலும் பெண்கள் (சமூக) மாறுதலுக்கான போராட்டங்களிலும் பணிகளிலும் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். ஈடுபட்டு வருகிறார்கள். பாண்டிச்சேரி 'ஆரோவில்' சமூக உருவாக்கப் பணியில் ஈடுபட்டிருக்கும் கவிஞர் மீனாட்சி குறிப்பிடத்தக்கவர். இந்தியாவின் பிற மாநிலங்களைப் போன்றே தமிழ்நாட்டிலும் சீர்திருத்த சிந்தை கொண்ட பெண்கள் சங்க காலந்தொட்டு இருந்து வந்திருக்கின்றார்கள்.

தமிழ்நாட்டில் பெண் சீர்திருத்தவாதிகள்

தமிழகத்தில் சில கால கட்டத்தில் சமூக நலம் விழைந்த பெண்கள் வாழ்ந்தனர். சங்க காலம், பக்தி இலக்கிய காலம், ஐரோப்பியர் வருகைக்குப் பிற்பட்ட காலம், இக்காலம் என தமிழ்நாட்டின் சில கால கட்டங்களில் சீர்திருத்த சிந்தை கொண்ட மூதாட்டியர் வாழ்ந்தனர்.

சங்க காலம்

சமூக உணர்வு கொண்ட சங்க காலப் பெண்களுள் ஒளவையை முதன்மையாகக் குறிப்பிடலாம். மக்களுக்கான அறிவுரைகளை அரசர் களுக்கான நீதிகளையும், வாழும் நெறிகளையும் பாடிச் சென்றவராக ஒளவை

கருதப்படுகிறார். அரசர்களுக்கிடையே இருந்த பகையுணர்வை நீக்குதல், அவர்களுடைய அறியாமையைக் கண்டித்தல், இளைய தலைமுறைக்கு நீதி கூறல், வருங்காலத்திற்கு செய்திகள் கூறுதல் என்று இலக்கியத்தின் வாயிலாக நிறைவான சமூகப்பணியை ஔவை ஆற்றியிருக்கிறார். நாடு தன்னுள் வாழும் மக்களாலே உயர்வு பெறுகிறது என்று முற்போக்குச் சிந்தனையை ஔவை அன்றே கொண்டு

'எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே'[20]

என்று பாடியது வியத்தற்குரிய சமூக சிந்தனையாகும். மக்களுக்குப் பயன்படும் எளிய வாழ்க்கை நூல்களையே அவர் படைத்தார். சமூகம் எப்படி இருக்க வேண்டும் என்று விழைந்தாரோ அவ்விழைவுகளே அவர்தம் நூல்களாக அமைந்தன.

பக்தி இலக்கிய காலமும் சோழர் காலமும்

இவ்விரண்டு காலங்களிலுமே சமயம் வழி சீர்திருத்தம் புரிந்த பெண்களையே பார்க்க முடிகிறது. மக்கள் பணியும் சமயப் பணியும் ஆற்றியவர்களாகக் காரைக்கால் அம்மையாரைக் குறிப்பிடலாம். சிவனைப் பற்றிய 101 பாடல்களை அற்புதத் திருவந்தாதியாகப் பாடியுள்ளார். பாண்டியன் மனைவி மங்கையற்கரசியும், சுந்தரரின் தாய் இசைஞானியாரும் சமயப் பணியாற்றிய பெண்மணிகள். 63 நாயன்மார்களில் இம்மூவரும் இடம் பெறுகின்றனர்.

சோழர் காலத்தில் செம்பியன் மாதேவி, குந்தவை போன்ற அரசியல் குடும்பத்தைச் சேர்ந்தப் பெண்கள் பலரும் கோயில்களுக்காகவும் மருத்துவச்சாலைகளுக்காவும் தம் நிலங்களை மானியங்களுக்காகவும் எழுதி வைத்து சமயப் பணியும் மக்கள் பணியும் புரிந்தனர்.

இதிகாச காலத்தில் இல்லத்திற்கு அடங்கி வாழ்ந்த அல்லது இல்லறத்திற்குக் கட்டுப்பட்ட பெண்களையே பார்க்க முடிகிறது. வெளியில் வந்து மக்கள் தொண்டாற்றிய பெண்கள் பெரும்பாலும் இதிகாச காலத்தில் காண இயலவில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டும் இருபதாம் நூற்றாண்டும்

சுதந்திரப் போராட்ட காலத்திலும் சுதந்திரத்திற்குப் பிறகும் பல பெண்கள் சமூகப் பணியாளர்களாக இருந்தனர். திருமதி. ருக்மணி லட்சுமிபதி உப்புச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டு கைதானார். ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன் மிகச் சிறந்த கல்வியாளராகவும் சமூக சீர்திருத்தவாதியாகவும் விளங்கியவர். குழந்தை மணத்தைக் கண்டித்தவர். திருமணத்திற்குரிய வயதை அதிகரிக்கக் கோரியவர். விதவை மறுமணத்தை ஆதரித்தப் பேசியவர். சென்னை சேவாசதனத்தை நிறுவிய லேடி வெங்கட சுப்பாராவ் குறிப்பிடத்தக்கவர். டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி பெண்கள் முன்னேற்றத்திற்குப் பல சங்கங்களை நிறுவினார். தேவதாசி ஒழிப்பு முறைக்காகக் குரல் கொடுத்தார். ஸ்ரீமதி

அம்புஜம்மாளின் சீனிவாச நிலையம் பல அனாதைப் பெண்களுக்குப் புகலிடமாகவும், பல சீர்திருத்தங்களின் உறைவிடமாகவும் இருந்தது. ஸ்ரீமதி அம்மு சுவாமிநாதன் சமூக முன்னேற்ற நிறுவனங்களை நிறுவினார். கலைப்பண்பாட்டுத் துறையில் ருக்மணி தேவியின் பணி மறக்க இயலாதது. இந்தியக் கலைகளின் கழகமாக கலாசேத்ராவை உருவாக்கியவர் அவர். அடையாறைச் சேர்ந்த மந்தாகிருஷ்ணமூர்த்தி சுதந்திரப் போராட்ட நிவாரணப் பணிகளில் உதவியவர்.

சுயமரியாதை இயக்கத்தில் பெண்கள்

சுயமரியாதை இயக்கத்தின் வேலைத் திட்டங்களில் பெண் விடுதலையும், அதற்காகப் பெண்கள் போராட முன்வர வேண்டும் என்ற கொள்கையை பிரச்சாரம் செய்வதும் மிக முக்கியமானதாகும். கடவுள், மதம், சாத்திரங்கள், சம்பிரதாயங்கள் ஆகியவை எவ்வாறு பெண் விடுதலைக்கு எதிரானவை என்பதை சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்ட பெண்கள் பொதுக் கூட்டங்கள் நடத்தியும், போட்டங்கள் நடத்தி சிறை சென்றும், தங்கள் வாழ்வில் நடைமுறைப்படுத்தியும் வந்தனர்.

1. 1929 இல் சென்னை அருகே செங்கல்பட்டில் நடந்த சுயமரியாதை மாநாட்டைத் துவக்கி வைத்தவர் டி.எஸ். குஞ்சிதம் அம்மையார்.

2. 1931 இல் விருதுநகரில் நடந்த மூன்றாவது சுயமரியாதை மாநாட்டை துவக்கி வைத்தவர் இந்திராணி பாலசுப்பிரமணியம்.

3. 1933 இல் தஞ்சை மாவட்ட சுயமரியாதை மாநாட்டைத் துவக்கி வைத்தவர் எஸ். நீலாவதி.

4. 1937 இல் திருநெல்வேலி மாவட்ட மூன்றாவது ஆதி திராவிடர் மாநாட்டுக்குத் தலைமை வகித்தவர் மீனாம்பாள் சிவராஜ்.

5. 1938 இல் மதுரையில் நடந்த சுயமரியாதை மாநாட்டை துவக்கி வைத்தவர் ராஜம்மாள்.

பொது உடைமைக் கொள்கையை வலியுறுத்தும் பிரச்சாரகர்களாக செயல்பட்டவர்கள் ஆர். அன்னபூரணி, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்.

இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பெண்களே நேரடியாக போராட்டக் களத்தில் குதித்து கைதானார்கள், டாக்டர் தர்மாம்பாள், மூவலூர் ராமாமிர்தம் அம்மையார், பட்டம்மாள், சீதம்மாள் ஆகியோர் முதல் போராட்ட அணியில் இடம் பெற்று சிறை சென்றனர்.

'எங்கள் மொழியின் வளர்ச்சிக்கும், நாட்டின் உயர்வுக்கும் எந்த சங்கடத்தையும் நாங்கள் தாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். இதிலே தலையிடுவதற்கு எங்கள் கணவர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. அதற்காக அவர்கள் கவலைப்படுவர்களும் அல்ல' (குடிஅரசு 1938, நவம்பர்5) இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டு கைக் குழந்தையுடன் சிறைசென்ற ஒரு பெண், அரசு வழக்கறிஞரிடம் இப்படி பதில் கூறியுள்ளார் எனில் சுயமரியாதை இயக்கப்

பெண்களின் சீர்திருத்தப் போக்கும் தியாகமும், துணிவும் தமிழக வரலாற்றில் இடம்பெறக் கூடியவை என்பது புலனாகும் .

'சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்த பெண்களுக்குத்தான் எத்தனை ஆற்றல். பெண்கள் மாநாட்டைத் தனியாகவும் உண்மையான சமத்துவ உணர்வுடனும் அவர்களே நடத்துகிறார்கள். வேறு இயக்கங்களிலே ஆண்களின் நடவடிக்கைகளுக்குப் பின்னால்தான் பெண்கள் இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய இயக்கத்திலோ - பெண்கள் சுதந்திரமான குழுவாக செயல்படுகிறார்கள். ஆண்களுடன் சுமத்துவத்தைக் காட்டி - இயக்கப் பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்கிறார்கள் என்று சிங்காரவேலர் குறிப்பிட்டுள்ளதும் இங்கு நினைவு கூரத்தக்கதாகும். தந்தை பெரியாரின் மறைவுக்குப்பின் அவரது இயக்கத்தை தலைமையேற்று நடத்திய அன்னை மணியம்மையார் இதற்குத் தகுந்த சான்றாகத் திகழ்ந்தார்.

தென்னாட்டு மக்களின் சமூக சீர்திருத்தத்துக்கு உழைத்த ஈடு இணையற்ற தலைவர் ஈ.வெ.ரா. அவர்களுக்கு 1938 இல் சென்னையில் நடந்த முற்போக்கு பெண்கள் சங்க மாநாட்டில் 'பெரியார் ' என்ற பட்டத்தைப் பெண்கள் அளித்து 'தந்தை பெரியார் வாழ்க' என முழக்கமிட்டுப் பெருமைப்படுத்தினர்.

பெண் சமூகப் பணியாளர்கள்

திருமதி. சீதாபாய் இராமசாமி தன் பெயரை சாரதா அம்மையாரின் நினைவாக சாரதாப்ரியா என்று மாற்றிக் கொண்டவர். சேலத்தில் பாலமந்திர், அனாதை இல்லம், சாரதா கல்லூரி போன்றவற்றை நிறுவியவர்.

சகோதரி சுப்புலட்சுமி அடிப்படைக் கல்வியை வற்புறுத்தியவர்.

'சிறுபொழுதிலிருந்தே தன் வாழ்க்கை இன்னது என்பதை
பெண்கள் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்'.[21]

என்றும், மனிதப் பிரச்னைகளில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் பெண் சமூகப் பணியாளர்கள் அனைவருமே கூறி வந்திருக்கின்றார்கள். சம்பாலட்சுமி, வெங்கடாசலம்மா, செல்லம்மாள் போன்றோரும் சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர்கள்.

அவினாசிலிங்கம் மகளிர் கல்லூரி முதல்வராகிய ராஜம்மாள் தேவதாஸ் பல சங்கங்களில் உறுப்பினர். அரசு குழு, சமூக நலம், உணவு, உடல் நலம், கல்வி சார்ந்த பல அமைப்புகளோடு தொடர்பு கொண்டவர். மருத்துவத் துறையைச் சார்ந்த லலிதா காமேஸ்வரனும், அரசியல் துறையைச் சார்ந்த மரகதம் சந்திர சேகரும், டாக்டர். திருமதி. பத்மா ராமமூர்த்தியும் சிறந்த சமூகப் பணியாளர்கள். கவியரசி சௌந்தர கைலாசம் சமயப் பணிபுரிந்து வரும் சமூக நலப் பணியாளராக இருக்கிறார்.

திருமதி. சரோஜினி வரதப்பன் சுதந்திரப் போராட்டக்காலத்திலேயே தன் சமூகப் பணியைத் தொடங்கியவர். எண்ணற்ற பெண்கள் நல அமைப்புக்களை உருவாக்கியதில் இவருக்குப் பெரும்பங்குண்டு. மகாத்மாவின் எண்ணங் களைப் பரப்பியவர். போர்க்காலங்களில் தேசிய எழுச்சியோடு நிதி

திரட்டியவர். அரசியலில் தொடர்ந்து இருந்து வருபவர். இந்தியப் பெண்கள் சுதந்திரத்திற்கு செயலாளராக புது தில்லியைச் சார்ந்த சமூக நலக் குழுவிலும் பணியாற்றியவர். குழந்தைநலம், பெண்கள் நலக் குழுவில் உறுப்பினராக இருந்தவர்; இருந்து வருபவர். இன்றும் பெண்கள் நலத்திற்கு உழைத்து கொண்டருப்பவர். திருமதி தாரா செரியன் திறம்பட சமூகப் பணிகளை ஆற்றி வருபவர். கோயமுத்தூரைச் சேர்ந்த சரோஜினி வரதராஜன் மக்கள் பார்வையில் மாறுதல் ஏதும் ஏற்பட்டாலொழிய சீர்திருத்தம் ஏதும் நடக்க வாய்ப்பில்லை என்றவர். டாக்டர் சௌந்தரம் ராமச் சந்திரன் காந்தியின் கொள்கைகளைப் பரப்பியவர். முத்து லட்சுமி ரெட்டி புற்று நோய் நிலையத்தையும் மஞ்சுபாய் பாலமந்திரையும் ஏற்படுத்தியவர். காது கேளாதோர் ஊமையர் பள்ளி நடத்தியிருக்கிறார். மாதர் சங்க அமைப்புகளும் அவற்றின்வழி சமூகத்திற்கு பணிபுரியும் பெண்களும் இருந்து வருகின்றனர். ஏழை எளிய மக்கள் நடுவில் கல்வி, சுகாதாரம், பொது அறிவு புகட்டுதல், பெண்கள் நலம், முதியோர் கல்வி என்று தாங்கள் ஆற்றும் செயல்கள் மூலம் மக்கள் மாற்ற முயன்று வருகின்றனர். ஜனதா மாதர் சங்கத்தில் உழைத்து வரும் மைதிலி சிவராமன் பாராட்டிற் குரியவர். சென்னைக் கடற்கரைப் பகுதிகளில் பாதிப்பிற்குள்ளான செம்படவர்களுக்கு உதவியது, விலைவாசி உயர்வை எதிர்ப்பது பெண்களை இழிவு செய்யும் இதழ்களை எரிப்பது என்று இவர்தம் மாதர் சங்கத்தினர் திறம்படப் பணி செய்து வருகின்றனர்.

சட்ட நுட்பங்களையும் பெண்ணுரிமைகளையும் விளக்கும் சில மாத இதழ்களை சில மாதர் அமைப்புகள் நடத்தி வருகின்றன. ராணி மேரிக் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் சரசுவதி உரிமை ஊர்வலங்கள் பல நடத்தியும் அநீதிகளுக்கு எதிராகக் கண்டனக் குரல் எழுப்பியும் போராடி வருபவர். தமிழகத்தின் பெண் சீர்திருத்தவாதிகளின் நிலை குறித்து சமூக நல சேவகி ஜெயா அருணாசலம் அவர்களைப் பேட்டி கண்டபோது 'முதலில் பெண்கள் தாழ்வு மனப்பான்மையை அகற்ற வேண்டும். பல காரியங்களை சமூகத்திற்கு ஆற்ற நினைக்கும் பெண்களுக்குள் முதலில் ஒற்றுமை வேண்டும். மனித உரிமைப் போராட்டத்தில் பெண்களும் பங்கு பெற வேண்டும். பிற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் தான் ஓரளவிற்கு வெற்றிகரமாக சீர்திருத்தப்பணி செய்ய இயலுகிறது. தமிழகத்தின் பெண் சீர்திருத்தவாதிகள் தங்கள் முயற்சியில் ஓரளவிற்கு வெற்றி பெற்று வருகிறார்கள்'[22] என்று கூறினார்.

தமிழகத்தில் நேரும் தடைகள்

வட இந்தியாவைப் போல் தமிழகத்தில் பெண் சமூகப் பணியாளர்கள் எண்ணிக்கையில் அதிகம் இல்லை. வீட்டைப் பார்க்காமல் நாட்டுப் பணி எதற்கு என்று சாடி பெண்களை அடக்கி வைத்து விடும் குடும்பத்தினர் தமிழ்நாட்டின் அதிகம். அன்பு கொண்டோர் இடும் தளைகளாக இருப்பதனால் பெண்களால் மீறமுடியவில்லை. மேலும் கல்வி கற்றுப் பணிபுரியும் பெண்களுக்கு இல்லறம் அலுவலகம் என்ற இரண்டு

இடங்களிலும் உழைப்புச் சுரண்டல் நேர்வதனால் உடல் நலங் குன்றியவர்கள் மனநலம் குன்றியவர்கள் தென்படுகின்றார்கள். சமூக சீர்திருத்தக்கேடுகளை களைய அவர்களுக்கு ஆர்வமிருந்தாலும் சமூகப் பணிபுரிய இயலவில்லை. ஆண்களும் இல்லற உழைப்பில் பங்கு கொள்வதன் மூலம் பெண்களின் நேரத்தில் ஒரு பகுதி மீதப்பட்டு அது சமூகப் பணிக்காக அமையலாம். வீட்டிலுள்ள வயதான பெண்கள் இத்தகு காரியங்களில் எதிர்ப்பு தெரிவிக்காமல் இருப்பது நல்லது. அரசாங்கம் குழந்தை காப்பகங்கள் ஏற்படுத்துதல், குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல் என்பனவற்றின் மூலம் பெண்களுக்குள் வளமான சிந்தனைகள் வளர வழி செய்யலாம். சமையல் குறிப்புகள், தையல் பின்னல் வேலைகள் மட்டுமே நடத்திக் கொண்டிருக்கும் மாதர் சங்கங்கள் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். வெளியில் வந்து சமூகப் பணிபுரியும் பெண்களை இழிவாகப் பேசுதல் பெருங்குற்றமாக்கப்பட வேண்டும். இந்நிலைகள் உருவாகுமேயானால் ஒப்பில்லாத சமூகமாக இம்மண்ணில் சமூகம் ஒவ்வொன்றும் அமையும்.

குறிப்புகள்

1. Vashista. B.K., Encyclopaedia of Women in India, Praveen Encyclopaedia, Publication, New Delhi, 1976.P.215
2. திருக்குறள்
3. பாரதியார், பாரதியார் பாடல்கள், பூம்புகார் பதிப்பகம், சென்னை. 1986. ப. 210.
4. பாரதியார், மேற்படிநூல், ப.209.
5. English - Tamil Dictionary, University of Madras p. 820.

Vashista. B.K., Encyclopaedia of Women in India, Praveen Encyclopaedia, Publication, New Delhi, 1976.P.215

7. Ibid., Preface.
8. Ibid., Preface.
9. மணி.பெ.சு., சங்ககால ஔவையாரும் உலகப் பெண்பாற் புலவர்களும், நியூ செஞ்சுரி வெளியீடு, சென்னை, 1977. ப.62
10. மணி.பெ.சு. மேற்படி நூல், ப.71
11. மணி. பெ. சு. மேற்படி நூல், ப.315
12. மணி. பெ. சு. மேற்படி நூல், ப.325
13. பாரதியார், பாரதியார் பாடல்கள், பூம்புகார் பதிப்பகம், சென்னை, 1986, ப. 212.
14. வைரமுத்து, எல்லா நதியிலும் என் ஓடம், கலைஞர் பதிப்பகம், சென்னை 1989, ப.8
15. மேற்படிநூல். ப.5.
16. Vashista. B.K., Encyclopaedia of Women in India, Praveen Encyclopaedia, Publication, New Delhi, P.59.
17. வேல்முருகன், பாவலர், அன்னை இந்திரா ஒரு வெள்ளைப்புறா, முத்துப் பதிப்பகம், விழுப்புரம். 1984.இ ப.116.
18. மேற்படி நூல் ப.70.
19. தேன்மொழி, சங்கம் (இ) சென்னை 1988. பக்.12,13.
20. புறம், 187.
21. Vashista. B.K., Encyclopaedia of Women in India, Praveen Encyclopaedia Publication, New Delhi, P.330.

தெக்கன்களரி – தென் குமரியின் வீர விளையாட்டுகள்

எஸ். பத்மநாபன்

மனிதனின் நல்வாழ்விற்கு உதவுகின்ற எல்லா செயல்களும் தொழில்களும் பாரத நாட்டில் 'கலை' எனப்பட்டன. உழவு, நெசவு, வாணிபம், பொறியியல், மருத்துவம் முதலிய தொழில்கள் யாவும் பாரத நாட்டில் கலைகளாகக் கருதப்பட்டன. அறுபத்தி நான்கு கலைகளின் தோற்றம் இதுதான். அந்த அறுபத்தி நான்கு கலைகளையும் தெய்வீகமாகக் கருதுவது பாரத நாட்டு மரபு. பாரத நாட்டில் கலையும் விஞ்ஞானமும் ஒன்றாகக் கருதப்பட்டன. அறுபத்தி நான்கு கலைகளில் சில கலைகள் மனிதனை மகிழ வைக்கும். சில கலைகள் அவனை காத்து நிற்கும். மகிழ வைக்கும் கலை 'நுண்கலை' என்றும், காத்து நிற்கும் கலை 'போர்க்கலை' என்றும் வழங்கப்பட்டன. மனிதன் தோன்றிய அன்றே போர்க்கலையும் தோன்றியது எனலாம். மிருகங்களிடமிருந்தும் பகைவர்களிடமிருந்தும் தன்னைக் காத்துக் கொள்ள அவன் போர்க்கலையை பயில வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது. இடத்திற்குத் தகுந்தவாறு போர்க்கலைகள் எழுந்தன.

கிரேக்க நாட்டில் மார்ஸ் என்ற தேவனை போர்க்கலைகளின் தெய்வமாகக் கருதினர். பாரத நாட்டில் நுண்கலைகளின் அதிதேவதை கலைமகளாகவும், போர்க்கலைகளின் அதிதேவதை துர்க்கையாகவும் கருதப்பட்டனர். பாரத யுத்தம் தொடங்கு முன்னர் பார்த்திபன் துர்க்கையை வழிபட்டதாக மகாபாரதம் கூறுகின்றது. இராவணனோடு போருக்குப் புறப்படும் முன்னர் இராமபிரான் துர்க்கையை வணங்கியதாக இராமாயணம் எடுத்துரைக்கின்றது. நவராத்திரி விழாவின் கடைசி நாள் விஜயதசமி அல்லது வெற்றிவிழா என்று அழைக்கப்படுகிறது. தொல்காப்பியர் காலத்தில் கொற்றவை போர் தெய்வமாக வணங்கப்பட்ட செய்தியை தொல்காப்பிய புறத்திணையியல் சூத்திரம் கூறுகின்றது.[1] திருமுருகாற்றுப்படை முருகனை 'வெற்றி வேல் போர்க் கொற்றவை சிறுவ, இழை அணி சிறப்பிற் பழையாள் குழவி, வானோர் வணங்குவில் தானைத்தலைவ'[2] என்று அழைக்கின்றது. சிவபெருமான் போர்க் கலைகளின் நுட்பங்களை தமது தேவிக்கு உணர்த்த, தேவி அதனை முருகனுக்குக் கூற, முருகன் அதனை அகத்தியருக்கு எடுத்துரைத்த செய்தியை குமரி மாவட்டத்திலே கிடைத்த 'ஆதிநூல்' என்ற ஏட்டுச்சுவடி ஒன்று கூறுகின்றது.

'மங்கல உலகம் போற்றும் வைத்தியநாதன்
தன்பால் சங்கரி கேட்ட சாரம் சண்முகன் அறிந்த பின்னர்
தங்க அகத்தினுக்கு ஓத...'

முருகன் மலைக்குறவர்களோடு சிலம்ப வீச்சு ஆடி வள்ளியம்மையாரை கவர்ந்து செல்லும் 'குறவர் படுகளம்' என்ற போர் நிகழ்ச்சியை குமரி மாவட்டத்திலுள்ள வேளிமலை குமாரகோவில் திருக்கல்யாண விழாவின்போது நாம் இன்றும் கண்டு களிக்கலாம்.[3] வேலவன், சிலம்பன், தண்டாயுதபாணி என்ற முருகனின் நாமங்கள் போர்க்கலையோடு கொற்றவை மைந்தன் கொண்ட தொடர்பினை உறுதிப்படுத்துகின்றன.

போர், காதல் இரண்டையும் பண்டைய தமிழர்கள் இரு கண்களாகக் கருதினார். சங்ககால இலக்கியங்களில் புறத்திணை வீரத்தின் சிறப்பினையும் அகத்திணை காதலின் சிறப்பினையும் எடுத்துரைக்கின்றன. புறநானூற்றுப் பாடல் ஒன்று துடியன், பாணன், பறையன், கடம்பன் என்ற நான்கு இன்த்தவர்களை குறிப்பிடுகின்றது.[4] அவர்களுள் துடியனும், பறையனும் முரசறைந்து ஆணைகளை அறிவிக்கும் பணியினை செய்தனர். பாணன் என்போன் இசைக்கலைஞன். கடம்பன் போரைத் தொழிலாகக் கொண்டவன் என்று டாக்டர் கே.கே. பிள்ளை குறிப்பிடுகிறார்.[5]

பண்டைய தமிழ் இலக்கியங்களில் தமிழனின் போர் வீரம் பற்றி பல குறிப்புக்கள் காணக் கிடைக்கின்றன. அவை பண்டைய தமிழகத்தை வீரத்தின் விளைநிலமாகச் சித்தரித்துள்ளன. பொருளீட்டல், போர் செய்தல், நாடு காத்தல் என்ற மூன்று கடமைகளையும் பண்டைய தமிழர்கள் தங்கள் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். எந்தத்தொழிலை மேற்கொண் டிருந்தாலும் போர்க காலங்களில் தங்கள் நாடு காக்க தமிழர்கள் ஆயுதமேந்தி போரிடுவது வழக்கமாக இருந்தது. போர்க்களத்தில் ஏற்பட்ட காயங்களை வீரத்தின் சின்னமாகக் கருதி பெருமைப்பட்டனர்.

விழுப்புண் படாத நாட்களை பயன்படாத நாட்களாகக் கருதினர். 'விழுப்புண் படாத நாள் எல்லாம் வழுக்கினுள், வைக்கும் தன் நாளை எடுத்து' என்பது திருக்குறள்.[6] போரிட்டு இறந்து கிடந்த மகனை கண்டபோது ஒரு தாய் அடைந்த மகிழ்ச்சி அவனை அவள் பெற்றபொழுது கொண்ட மகிழ்ச்சியைவிட பெரியதாயிருந்தது என்று கூறுகிறது ஒரு புறநானூற்றுப் பாடல்.

'... சிதைந்துவேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ,
ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே'[7]

வீரர் குடும்பத்தில் விழுப்புண் படாமல் நோய்வாய்பட்டு இறந்தவர்களை வாளால் கீறி அடக்கஞ் செய்தல் பண்டைய தமிழர்களின்மரபு.[8] இறந்து பிறந்த குழந்தை கூட இதற்கு விதிவிலக்கல்ல.

'குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்,
ஆள் அன்று, என்று வாளின் தப்பார்'

என்பது புறநானூறு.[9] விழுப்புண் பட்டு மடிந்த வீரர்களுக்கு நடுகல் எழுப்பி வணங்கும் வழக்கம் தமிழகத்தில் தொன்றுதொட்டு இருந்து வந்துள்ளது என்பதை தொல்காப்பியமும் பிற சங்க இலக்கியங்களும் நமக்கு காட்டுகின்றன.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் நடுகற்கள் பண்டைத் தமிழகத்தின் வீரவரலாற்றினை நமக்குப் பறைசாற்றி நிற்கின்றன.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்று போற்றிய நமது முன்னோர்கள் வீரவிளையாட்டுகளுக்கும் அதேபோல் ஊக்கம் தந்தனர் என்பதை பண்டைய இலக்கியங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன. சங்க காலத்தில் நாடெங்கும் வீர விளையாட்டுகள் பயிற்சியளிக்கப்படும் களரிகள் பல இருந்தன எனத் தெரிய வருகிறது. அங்கு மற்போர், கம்பு வீச்சு, வாள்சண்டை, வில் பயிற்சி போன்ற பல வீரவிளையாட்டுகள் பயிற்றுவிக்கப்பட்டன. மற்போர் காட்சியை புறநானூற்றிலே நாம் காணலாம்.[10] இந்தப் பயிற்சிக்களத்தை களரி என்று பட்டினப்பாலை கூறுகின்றது.[11] பண்டைய தமிழ்நாட்டு வீரர்கள் நடத்திய போர் விளையாட்டு விழாவினை சங்க காலத்துப் புலவர் மாமூலனார் 'பூந்தொடை விழா' என்று குறிப்பிடுகிறார்.[12] பண்டைய தமிழகத்தில் போர்ப் பயிற்சிகள் மட்டுமல்ல, உடற்பயிற்சி முறைகளும் பயிற்றுவிக்கப்பட்டன. பதினென்கீழ்கணக்கில் ஒன்றான ஏலாதியை தற்போதை உடற்பயிற்சி நூல்களுக்கு ஒப்பிடுவர்.[13]

சேரநாடு வீரமுடைத்து என்பர். சேரமன்னன் கொடியை வில் அலங்கரிப்பது இதனை வலியுறுத்தும், மேற்குக் கடற்கரை இன்றும் வீரத்தின் விளை நிலமாகக் காட்சி தருகிறது. பண்டைய தமிழகத்தைப் போலவே ஊர்கள் தோறும் அமைந்துள்ள களரிகள் வீரவிளையாட்டுகளுக்கு ஊக்கம் தந்து நிற்கின்றன. கேரள மாநிலத்திலும் குமரி மாவட்டத்திலும் இன்றும் களரிகள் பல காட்சி தருகின்றன. களரியை நடத்தும் ஆசான் ஆசிரியர் மட்டுமல்ல எலும்பு நரம்பு மருத்துவராகவும் திகழ்கிறார். உடல் அமைப்பையும் அதன் கூறுகளையும் மர்ம மையங்களையும் நன்கு அறிந்தவர் அவர். அவர் உடலில் பட்ட அடிகளை நாடித்துடிப்பின் மூலம் அறிந்து அதனை தடவி குணப்படுத்தும் திறன் படைத்தவர்.

பண்டையத் தமிழனின் போர்த்திறனையும் அவனது வீர விளையாட்டுகளையும் இன்றைய களரிகள் நமக்கு நினைவூட்டி நிற்கின்றன. வீர விளையாட்டுகளை சிறுவர்கள் பயிலவும், முதியவர்கள் பழகவும் இக்களரிகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த வீர விளையாட்டுகள் தற்காப்புக் கலையாக மட்டுமல்ல, உடற்பயிற்சி முறைகளாகவும் திகழ்கின்றன. இவ்வாறு பயிற்சி பெறும் முறையை களரிப்பயிற்று என்பர். களரி என்றால் போர்ப்பயிற்சி பெறும் களம் என்பது பொருள். பயிற்று என்றால் பயில்வது. போர்ப் பயிற்சி பயிலும் இடம்தான் களரி எனப்பட்டது. இக்களரி வடக்கன்களரி என்றும் தெக்கன்களரி என்றும் இரண்டு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது. வடக்கன்களரி காலத்திற்கு ஏற்றாற்போல வளர்ச்சி பெற்றுத் திகழ்கிறது. வடக்கன்களரி வீரர்கள் பறக்கும் நிலையில் நின்று விளையாடுவர். தெக்கன்களரி பண்டைய முறையிலிருந்து சிறிதும் மாறுபடாமல் உள்ளது. வடக்கன்களரியை விட காலத்தால் முந்தியது தெக்கன்களரிதான். வடக்கன்களரி கேரள மாநிலத்தில் மட்டும் உள்ளது. தெக்கன்களரி தென்

கேரளத்திலும் குமரி மாவட்டத்திலும் உள்ளது. வடக்கன்களரியில் ஆயுதத்திற்கு முக்கியத்துவம் இல்லை. வெறுங்கையினால் அடிப்பதுதான் தெக்கன்களரியின் சிறப்பு அம்சம். வர்மத்தின் அடிப்படையில் எழுந்தது தெக்கன்களரி. இதனை குமரி மாவட்டத்தில் அடிமுறை என்று கூறுவர். தெக்கன்களரி முறைகளையும் ஜப்பான் நாட்டு கராத்தே முறைகளையும் ஒப்பிட்டு 'களரிப்பயிற்று' என்ற நூலிலே கராத்தே வீரர் திலக் மோசஸ் எழுதுகின்றார்.[14]

வடக்கன்களரியை தோற்றுவித்தவர் பரசுராமர் என்றும், தெக்கன்களரியை தோற்றுவித்தவர் அகத்தியர் என்றும் கூறுவர். வடக்கன்களரி நாயர் இனத்தவரிடம் உள்ளது போல, தெக்கன்களரி நாடார் இனத்தவரிடம் உள்ளது. வடக்கன்களரி பயிற்றுவிக்கும் ஆசிரியரை குருக்கள் என்றும் தெக்கன்களரி ஆசிரியரை ஆசான் என்றும் அழைப்பர். தொல்காப்பியத்தை அரங்கேற்றிய அதங்கோட்டு ஆசான்-இந்த வீரர் குலத்தில் பிறந்தவராகத்தான் இருக்க வேண்டும். (அதங்கோடு குமரி மாவட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்). நாயர் இனத்தவரின் போர் திறனையும் அவரது வீரவிளையாட்டுகளையும் பல நூல்கள் நமக்குக் கூறுகின்றன. ஆனால் நாடார் இனத்தவரது வீரத்தையும் அவர்களது வீர விளையாட்டுகளையும் எந்த ஒரு நூலும் குறிப்பிடவில்லை. 'தென்னிந்திய சாதிகளும் பழங்குடிமக்களும்' என்ற நூலை எழுதிய எட்கர் தர்ஸ்டனும் 'தமிழகத்து நாடார்கள்' என்ற ஆய்வு நூலை அண்மையில் எழுதிய டாக்டர் ராபர்ட் ஹார்டுகிரேவும் நாடார்களின் போர்த்திறனையும் அவர்களது வீரவிளையாட்டுகளையும் கூறத் தவறிவிட்டனர். கேரள வரலாற்று ஆசிரியர்கள் போர்த்திறன்மிக்க நாகர் இனத்தினர்தான் நாயர்கள் என்று எழுதியுள்ளனர்.[15] நாயர்களும் நாடார்களும் போர் தேவதையான கொற்றவையின் அம்சமான பகவதியை மிகவும் தீவிரமாக வணங்குகின்றனர். தமிழகத்தில் மறவர்கள், கள்ளர்கள் போன்ற இனத்தினர் நாகர்களின் வாரிசுதான் என்று திருச்சி மாவட்டக் குறிப்பேடு தெரிவிக்கின்றது. நாடார்களும் நாகர்களின் வாரிசுகள்தானா என்பது ஆராயத்தக்கது.

மலைமண்டலத்திலுள்ள குறுநில மன்னர்கள் களரிப் பயிற்றை பேணி பாதுகாத்து வந்தனர். இளைஞர்களுக்கு வீரவிளையாட்டுகளை பயிற்றுவித்தனர். 'வடக்கன்பாட்டு' என்றழைக்கப்படும் கதைப்பாட்டுகள் களரியில் பயின்று வெளிவந்த பல வீரர்களின் கதையினை கூறி நிற்கின்றன. அவர்களுள் தச்சோளி உதயனன், சாப்பன், பாயம்பள்ளில் சந்து, ஆரோமலுண்ணி போன்ற வீரர்களின் சாகசங்கள் சிறப்பு வாய்ந்தவை. அக்காலத்தில் உண்ணியார்ச்சா போன்ற பெண்களும் வீர விளையாட்டுகளில் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தனர். போர்க்காலங்களில் படைகள் தேவைப்பட்டால் மன்னர்கள் களரியிலுள்ள வீரர்களுக்கு அழைப்பு அனுப்பும் வழக்கம் இருந்து வந்தது. களரியில் பயின்ற வீரர்கள் போர்க்களத்திற்கு அனுப்பப்பட்டனர் என்றும் திறம்மிக்க வீரர்கள் சிறப்பு விருதுகள் பெற்றனர் என்றும் தெரிய வருகிறது.

தெக்கன் களரியில் தேர்ச்சி பெற்ற வீரர்கள் பலர் சோழர் படைகளில் பணிபுரிந்ததாகத் அறியமுடிகிறது. பல்கலைப் படை பிரிவுகளில்

வேளைக்காரப்படை என்ற ஒரு பிரிவு சோழர் படையில் இருந்தது என்பதை தென்னிந்திய கல்வெட்டுகளும் மகாவம்சமும் தெரிவிக்கின்றன.[16] கண்ணினைக் காக்கும் மெய்க்காப்பாளர் படை அது. ஆபத்து வேளையில் அருள்புரியும் முருகவேளை 'வேளைக்காரப்பெருமாள்' என்று அழைக்கிறார் அழைப்பது நமது நினைவுக்கு வருகின்றது. பராந்தக சோழனின் (கி.பி.907–905) மகன் இராஜாதித்திய தேவனின் படையில் களரியில் தேர்ச்சி பெற்ற மலைநாட்டு வீரர்கள் பலர் பணிபுரிந்தனர் என கல்வெட்டுகள் கூறுகின்றன. அவர்களுள் இரவிகோதை, இயக்கன்ராமன், மணக்கரை கந்தன் காமன் ஆகியோர் சிறப்புற்று விளங்கினர்.[17]

'இராஜாதித்திய தேவர்பெரும்படை நாயகர்மலைநாட்டு
நந்திக்கரை புத்தூர் வெள்ளன்குமரன்'[18]

என கல்வெட்டு ஒன்று மலை நாட்டைச் சார்ந்த வெள்ளன்குமரன் சோழ இளவரசன் இராஜாதித்திய தேவனில் பெரும்படை நாயகனாக விளக்கிய செய்தியை தெரிவிக்கின்றது. இராஜாதித்திய தேவன் கொலையுண்டபிறகு வெள்ளக்குமரன் கோட்டாற்றைச் சுற்றி அமைந்திருந்த கோட்டைக்கு திரும்பி வந்து சிறிது காலம் தங்கி இருந்தான் என்று கூறப்படுகிறது. கோட்டாற்றை அடுத்துள்ள வெள்ளன்குமாரவிளை என்ற ஊர் இந்த செய்தியை உறுதிப்படுத்துகின்றது.[19] இந்த வெள்ளன்குமரனும் பிற மலைநாட்டு விரர்களும் தெக்கன்களரியில் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்திருக்க வேண்டும்.

கட்டப்பொம்மனின் வீர வரலாற்றினைக் கூறும் 'ஜெகவீரபாண்டியத் துரை கலியுகப்பெருங்காவியம்' என்ற தமிழ் சுவடி ஒன்று 'பொருத்தறி படலம்' என்ற தலைப்பில் மலைநாட்டு வீர விளையாட்டினைப் புகழ்ந்துரைக்கின்றது. இந்த ஏடு தற்போது தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தில் உள்ளது எனத் தெரிய வருகிறது.

திருவிதாங்கூர் மாநிலத்தை உருவாக்கிய மார்த்தாண்டவர்மா இளவரசராக இருந்தபோது பல இன்னல்களையும் எதிர்ப்புகளையும் தாங்க வேண்டியிருந்தது. எதிரிகள் பலர் அவரை கொலை செய்ய முயன்றனர். அந்த ஆபத்துக்களிலிருந்து அவரைக் காப்பாற்றியது அவர் வேணாட்டிலுள்ள ஆசான்களிடம் பயின்ற தெக்கன்களரி வீரவிளையாட்டுகள்தான். கி.பி.1729–ஆம் ஆண்டு அவர் மன்னராகிய பின்னர் அவரைப் பயிற்றுவித்த நாடார் இனத்தவர் பலருக்கு மான்யங்கள் விட்டுக் கொடுத்துள்ளார் என அறியலாம். வேணாட்டை திருவிதாங்கூர் மாநிலமாக்க மார்த்தாண்டவர்மாவின் படையில் தெக்கன்களரியில் பயின்ற வீரர்கள் பலர் பணியாற்றியிருக்க வேண்டும்.

கி.பி.1808–ஆம் ஆண்டு ஆங்கிலப் பேராட்சியை ஒழிக்க போராட்டம் நடத்திய வீரன் தலக்குளம் வேலுத்தம்பி தளவாய் தெக்கன்களரியில் தேர்ச்சி பெற்று விளங்கினார். தலக்குளத்தைச் சுற்றி வாழ்ந்த ஆசான்களிடம் அவன் தெக்கன்களரி வீர விளையாட்டுகளை பயின்றிருக்க வேண்டும். களரியில் பயின்றதால்தான் அவர் உடல் வலிமையுடன், உள்ள உறுதியும் கொண்டிருந்தார் என்று 'ஆத்மார்ப்பணம்' என்ற மலையாள நூல் கூறுகின்றது.[20]

மலையாளத்தின் கலைக்களஞ்சியமான 'விஷ்வ விஞ்ஞான கோஷம்' வடக்கன்களரியை நான்கு பிரிவுகளாக வகைப்படுத்துகின்றது.

1. மெய்ப்பயிற்று	–	*உடற்பயிற்சி போன்ற விளையாட்டுகள்*
2. கோல்தாரி	–	*கம்பு கொண்டு விளையாடும் வீரவிளையாட்டுகள்*
3. அங்கதாரி	–	*ஆயுதங்கொண்டு விளையாடும் வீரவிளையாட்டுகள்*
4. வெறுங்கை அடி	–	*ஆயுதம் கையிலிருந்து தவறினால் பிடித்தம் தடை என்ற முறைகளால் தன்னைக் காத்துக் கொள்ளும் கலை.*

வடக்கன்களரியில் பயன்படுத்தும் சொற்கள் முழுவதும் தமிழ்தான் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

வடக்கன்களரி போன்று தெக்கன்களரி அல்லது அடிமுறையை 1. சுவடு, 2. கைப்போர், 3. ஆயுதப்பயிற்று, 4. கம்புவீச்சு என நான்கு பிரிவுகளாக வகுக்கலாம். அடிமுறையில் முதன்மையானது சுவடுதான். இந்த சுவட்டின் அடிப்படையில்தான் தெக்கன்களரி அமைந்துள்ளது. ஒற்றைச்சுவடு, இரட்டைச்சுவடு, நாலுமுக்குச்சுவடு, வட்டச்சுவடு, அங்கச்சுவடு போன்ற பன்னிரண்டு சுவடு முறைகள் உள்ளன. சுவடு முறையில் காலும் கையும்தான் முக்கியமான வேலைகளைச் செய்கின்றன. இந்த சுவடுதான் கராத்தே விளையாட்டில் 'கட்டாஸ்' என்று அழைக்கப்படுகிறது. மேலும் ஒற்றைச் சுவடுதான் கராத்தேயில் 'இப்பன் குமிட்' என்று அழைக்கப்படுகிறது என்று மோசஸ் திலக் எழுதுகிறார்.[21] கப்போர் என்பது ஆயுதமில்லாது ஒருவரோடு போரிடுதல். மனிதனின் வர்ம மையங்களில் தட்டி கீழே விழச்செய்வது கைப்போர். மற்போருக்கும் கைப்போருக்கும் வேறுபாடு உண்டு. அடிமுறையில் நன்கு தேர்ச்சி பெற்றவர்கள் எதிரிகள் எந்த ஆயுதத்தை பயன்படுத்தினாலும் அதை கீழே விழும்படி செய்யும் திறன் படைத்தவர்களாக இருப்பர். எதிரிகளின் வர்ம மையங்களைத் தொட்டு கீழே விழச் செய்வார்கள். வர்ம மையங்களைத் தொடும்போது அங்கு இரத்த ஓட்டம் தடைபட்டு உயிருக்குக்கூட ஆபத்து நேரிடலாம். அடிமுறையில் பூட்டும் பிரிவும் முக்கியமான ஒரு அம்சமாகும். எதிரிகள் தாக்க வரும்போது அவர்களை பூட்டுபோட்டு கீழே விழச் செய்வார்கள். எதிரியும் அடிமுறை தெரிந்தவராக இருந்தால் அந்த பூட்டைப் பிரித்து கீழே விழாமல் தன்னைக் காத்துக் கொள்வார். அதனை 'கர்ணம்' அல்லது 'மறிதல்' என்பர். தெக்கன்களரி முறையில் ஆயுதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காவிட்டாலும் சுவடுமுறையில் ஆயுதங்களைப் பயன்படுத்துவதும் உண்டு. கத்தி, வாள், சுருள்வாள், மான்கொம்பு, கண்டகோடாலி போன்ற பல ஆயுதங்கள் இந்த ஆயுதப்பயிற்று என்ற பிரிவில் பயன்படுத்துகின்றனர். தெக்கன்களரியில் பயன்படுத்தும் ஆயுதங்களை பத்மநாபபுரம் அரண்மனையில் நாம் காணலாம். ஆயுதத்தோடு விளையாடும்போதும் பயன்படுத்துகின்றனர்.

கம்புவீச்சு என்பதை தமிழகத்தின் பிற பகுதிகளில் 'சிலம்பம்' என்றும், கேரள மாநிலத்தில் 'கோல்தாரி' என்றும் அழைக்கின்றனர். தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் சிலம்பம் சிறப்புற்று விளங்கினாலும் குமரி மாவட்டத்தில் விளையாடும் சிலம்பாட்டத்திற்கு ஈடாகாது. சிலம்பத்தை வர்மக்கலையோடு இணைத்து அங்கே ஆடுகின்றனர். குமரி மாவட்டத்துச் சிலம்பாட்டத்தில் பலவிதமான சுவடுமுறைகள் கையாளப்படுகின்றன. அவற்றுள் 'தட்டு வர்மச்சுவடு' ஒன்று. இது உடலிலுள்ள வர்ம நாடி யிடங்களை நோக்கி அடிப்பதாகும். இதனை ஆடுவதற்கு மிகுந்த நுட்பத்திறன் வேண்டும். இக்கலையிலே மிகவும் கைதேர்ந்தவர்கள்தான் இச்சுவடுகளைச் கையாள முடியும். இக்கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் ஒரே அடியில் எதிரிகளை வீழ்த்திவிடுவார்கள். இத்திறன் கொண்ட சிலம்படி ஆசான்கள் பலர் குமரி மாவட்டத்தில் உண்டு.

சிரம்ம், குறுதடி, நெடுதடி, ரட்டுவீச்சு என இந்த கம்பு வீச்சினை நான்கு பிரிவுகளாக வகுத்துள்ளனர். சிரம அடிக்குப் பயன்படுத்தும் கம்பு 3 அடி நீளமுடையது. குறுதடி 2 அடி நீளமும், நெடுதடி விளையாடும் வீரனின் உயரமும் கொண்டவை. நெடுதடி வீச்சை மறவன் அடி என்றும் கூறுவர். நெடுதடியால் கூட்டத்தை விரட்டுவதற்கு பயன்படுத்தும் முறையினை ரட்டுவீச்சு என்பர். விரட்டு வீச்சுதான் ரட்டு வீச்சாகவும் மாறியிருக்க வேண்டும். ரட்டு வீச்சிற்கு பயன்படுத்தும் கம்புகளில் இரு பக்கமும் துணியினால் செய்த பந்துக்கள் பொருத்தப்படும். சில வேளைகளில் பந்துகளில் எண்ணையிட்டு தீவைப்பதும் உண்டு. நன்றாக தேர்ச்சி பெற்றவர்கள் ரட்டு வீச்சு விளையாடினால் சுற்றி நிற்பவர்கள் எறியும் கற்கள் ஒன்றுகூட அவர்மீது விழாது என்று கூறப்படுகிறது.

தெக்கன்களரி அல்லது அடிமுறை, வர்மத்தின் அடிப்படையில் எழுந்தது. பதினெண் சித்தர்கள் வாழ்ந்த இடம் தமிழகம். சக்தியின் அருள் பெற்ற அந்த சித்தர்கள் இந்த உலகுக்கு வழங்கியதுதான் சித்த வைத்தியம். அந்த சித்த வைத்தியத்தில் வர்மக்கலை ஒன்று. மனித உடலில் மர்மமாக அடங்கியிருக்கும் அல்லது மறைந்திருக்கும் சில மையங்கள் தன் நிலை வேறுபட்டால் ஏற்படும் மாற்றங்களையே வர்மம் கொண்டுள்ளது என்பர். வர்மம் என்றால் என்ன என்பதை 'முறிவுசாரி' என்ற வர்மநூல் எடுத்துரைக்கின்றது.

'கேளப்பா தடியடிகள் படுதலாலும்
கெடியான எறிவிசைகள் கொள்ளலாலும்
வாளப்பா கட்டை குற்றி தட்டலாலும்
மாற்றானின் கைபிடிகள் படுதலாலும்
மேலப்பா ஆகாசமதிலே நின்று
மெய்மறந்து கைமறந்து விடுதலாலும்
தாளப்பா பற்பலவாம் விதத்திலே
சங்கையில்லாக் காலமது சாருந்தானே'.

இங்கு காலம் என்பது வர்மம். சுருங்கக் கூறின் வர்மம் என்பது நாடி நரம்புகளில் தட்டுப்பட்டு உணர்விழப்பது அல்லது உயிரிழப்பது. ஆனால் எல்லா நரம்புகளிலும் மையங்களிலும் தட்டுப்பட்டால் வர்மம் கொள்வதில்லை. குறிப்பிட்ட நரம்பில், குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட அளவில் தட்டுப்பட்டால்தான் ஒருவர் உணர்விழப்பர். அவருக்கு அப்போது வர்மம் கொண்டிருக்கிறது என்று கூறுவர். இதனைக் குணப்படுத்தும் கலைதான் 'வர்மக்கலை' அல்லது 'வர்ம பரிகாரம்'. வர்மம் கொண்டவருக்கு உடனே பரிகாரம் செய்யவில்லையானால் அவரது உயிர் சிறிது நேரத்தில் போகலாம். இந்த வர்மக்கலை தமிழகம், கேரளம் இவற்றின் தென்பகுதியில் இன்றும் அழியாமல் உள்ளது. குமரி மாவட்டத்தில் குறிப்பாக கல்குளம் விளவங்கோடு வட்டங்களில் ஒவ்வொரு ஊரிலும் வர்ம ஆசான்கள் பலர் இருந்து இக்கலையை அழியாமல் பாதுகாத்து வருகின்றனர். குமரி மாவட்டம் பற்றி தெரிந்தவர்களுக்கு வர்மாணி, ஆசான் என்ற சொற்கள் புதியவை அல்ல. வர்ம பரிகாரம் செய்பவர் வர்மாணி. அடிமுறை பயிற்றுவிக்கும் ஆசிரியர் ஆசான். அடிமுறையில் மட்டுமல்ல வர்ம பரிகாரம் செய்வதிலும் வல்லவராக இருப்பவர்தான் ஆசான். அவர் எலும்பு முறிவை கட்டிக் குணப்படுத்தும் மருத்துவர். வர்ம மையங்களில் அடிபட்டு மயங்கியவரை எழுப்பும் திறன் கொண்டவர். சீன நாட்டில் வீரவிளையாட்டு வல்லுனர்களும் இதேபோன்று மருத்துவராக இருப்பது சிந்திக்கத்தக்கது.

பண்டைய ஏடுகள், பரம்பரை வழக்கங்கள் இவற்றின் அடிப்படையில் வர்மக்கலையும், அடிமுறையும் பயிற்றுவிக்கப்படுகின்றன. குமரி மாவட்டத்தில் வர்ம சாஸ்திரம், வர்மகண்டி, வர்மசாரி, வர்மசூடாமணி, படுவர்மதிரட்டு, வர்மதிறவுகோல், நரம்பு திறவுகோல், ஒடிவுமுறிவுசாரி, சிரமஅடிசாஸ்திரம் போன்ற பல ஏடுகள் கிடைக்கின்றன. சித்த வைத்திய ஏடு ஒன்று வர்மத்தைப் பற்றி 72 நூல்கள் இருப்பதாகக் கூறுகின்றது. அவற்றுள் சில அச்சில் ஏறியுள்ளன. பலவும் ஏட்டுப் பிரதிகளாகவே உள்ளன. இன்றும் குமரி மாவட்டத்தில் வர்மம், அடிமுறை இவற்றில் தேர்ச்சிமிக்க பல ஆசான்கள் உள்ளனர். இக்கலையிலே தேர்ச்சி பெற்ற பல பெண்களும் அங்கே உண்டு. இவர்கள் சமுதாயத்தில் மிகவும் உயர்வாக கருதப்படுகிறார்கள். குரு சீடர் பரம்பரை முறைப்படி இந்தக் கலைகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. வாழை நாரினால் மனித உருவத்தை உருவாக்கி அவனது நாடி நரம்புகளின் நிலைகளை அதன்மூலம் பயிற்றுவிக்கும் வழக்கம் இன்றும் குமரிமாவட்டத்தில் உள்ளது. ஆடுமாடுகளின் உடம்பிலும் வர்மம் பயில்வது உண்டு. அடிமுறை பயிற்றுவிக்கும்போது எதிரியை வர்ம அடியால் கீழே விழச்செய்யும் முறையோடு அவனை எழுப்பும் முறையும் பயிற்றுவிக்கப்படுகிறது. வர்மஅடி பயிலும்போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். வர்ம அடியில் சிறிது தவறு நேர்ந்தால்கூட உயிர் போய்விடும். மரணத்தின் காரணத்தை சவப் பரிசோதனையில்கூட கண்டுபிடிக்க இயலாது. மனிதனின் வர்ம மையங்களையும், அதில் அடிப்பட்டால் ஏற்படும் விளைவுகளையும், அதில் அடிபட்டால் ஏற்படும் விளைவுகளையும், அந்த அடிகளுக்கு பரிகாரம்

செய்யும் முறைகளையும், வர்ம அடியால் மயங்கியவனை எழுப்பும் நுணுக்கங்களையும் வர்மசூத்திரம் கூறுகின்றது. படுவர்மம் 12 என்றும், தொடுவர்மம் 96 என்றும் ஆக 108 வர்மங்கள் வர்ம ஏட்டில் பேசப்படுகின்றன.

குமரி மாவட்டத்திலுள்ள ஆசான்கள் சிலர் மிகவும் தேர்ச்சி மிக்கவர்கள். உடம்பிலே ஒரு காயமும் படாமல் இலேசாக தொட்டு கீழே விழ வைக்கும் திறன் கொண்டவர்களாக உள்ளனர். அடிபட்டவர்கள் உடனே அல்லது ஆசான்கள் குறிப்பிட்ட நேரத்தில் இறக்க நேரிடலாம். ஒரு துணியில் முடிச்சிட்டு எதிரியின் உடம்பிலே அடித்து எலும்பை முறிக்க சிறந்த ஆசான்களால் முடியும். ஓர் உப்புக் கல்லையோ அல்லது ஒரு தானியத்தையோ கொண்டு நெற்றியில் எறிந்து மயக்கமடையச் செய்வர். வர்மசூத்திரம் என்ற நூலிலே 'மெய்தீண்டாக்காலம்' என்று ஒரு வர்மம் கூறப்படுகிறது. இந்த வர்மம் ஒருவனது உடலைத் தீண்டாமல் பார்வையால் வீழ்த்தும் ஒருவிதக கலையாகும். இதனை நோக்குவர்மம் என்றும் கூறுவர். இதுபோன்று தமிழர் கலைகள் எத்தனையோ வெளியே வராமல் சுவடிகளுக்குள்ளே புதைந்து கிடக்கின்றன.

மற்ற கலைகளை போலவே வர்மக்கலையும் அடிமுறையும் பாரதநாட்டு சமயத்தோடு தொடர்பு கொண்டவை. வர்மசூத்திரம் 'ஆதியென்ற மூலமே' என்றுதான் தொடங்குகின்றது.வர்மக்கலையில் தேர்ச்சி பெற்றவர் ஆசையை அடக்க வேண்டும். கோபத்தைத் தணிக்க வேண்டும், குருவையும், தெய்வத்தையும் நினைக்க வேண்டும், நமச்சிவாய மந்திரத்தை ஓத வேண்டும் என்று வர்மநூல் கூறுகின்றது.

'கேளப்பா மன்மதனை அடக்க வேணும்,
கெடுதியான கோபமெல்லாம் தொலைக்க வேணும்,
ஆளப்பா அடி இடியால் காலங் கொண்டால்,
அப்பனே கேள் குருவரனைத் தேட வேணும்,
தாளப்பா அவர் பாதம் பணிந்து போற்றி
தெய்வமதை உள்ளத்தே தியானம் செய்வாய்,
வேளப்பா ஐந்தெழுத்துச் சித்தி வேணும்,
சீருலகில் ஐந்தெழுத்தை தியானம் செய்ய வேணும்'.

சிவபெருமான் நாமத்தை மனதிலே நிறுத்தி வர்மப்பரிகாரம் தொடக்க வேண்டும் என்று வர்மநூல் கூறுகின்றது.

தமிழகத்திலே தோன்றிய இந்த வீரவிளையாட்டுக்கள்தான் சீனநாட்டிற்கும், ஜப்பான் நாட்டிற்கும் சென்றன என்பதற்கு பல ஆதாரங்கள் நமக்கு கிடைக்கின்றன. கி.மு.1112 முதல் பாரத நாட்டிற்கும், சீன நாட்டிற்கும் போக்குவரத்து இருந்துள்ளது என்று சீன இந்திய பண்பாட்டுக் கழகத்தைச் சார்ந்த பேராசிரியர் 'தான்அன்யுங்ஷான்' குறிப்பிடுகிறார்.[22] பண்டைக் காலத்தில் தென்னிந்திய துறைமுகங்களோடு சீனா கொண்ட தொடர்பினை எடுத்துக்காட்டி தத்துவத்துறையில் மட்டுமல்ல கலைத்துறைகளிலும் சீன நாட்டில் பாரத நாட்டின் தாக்கம் உள்ளது என்று பண்டிதர் நேரு தமது

'இந்தியாவின் கண்டுபிடிப்பு' என்ற நூலிலே குறிப்பிடுகிறார்.[23] பௌத்த சமயத்துறவிகள்மூலம் இந்த போர்க்கலைகள் சீன நாட்டிற்கும், ஜப்பான் நாட்டிற்கும் சென்றன என்பர் வரலாற்று ஆசிரியர்கள். இந்த பாரதநாட்டு அடிமுறைதான் சிறிது மாற்றங்களுடன் சீனா நாட்டில் 'குங்பூ' என்றும், ஜப்பான் நாட்டில் 'கராத்தே' என்றும் வழங்கப்படுகின்றன என்று மோசஸ் திலக் குறிப்பிடுகிறார். மேலும் அடிமுறை கராத்தே இவற்றின் ஒற்றுமைகளை விளக்கி 'போதிதர்மர்' என்ற பௌத்த சமயத்துறவி சீனநாட்டிலுள்ள ஷாவோலின் மடத்திற்கு எடுத்துச் சென்றார் என்று அவர் எழுதுகிறார்.[23] நமது நாட்டில் வடக்கன்களரி தெக்கன்களரி என்று இருப்பது போலவே சீன நாட்டிலும் 'வடக்கன் ஷாவோலின் தெக்கன்ஷாவோலின்' என்ற பிரிவுகள் இருந்ததாகவும் போதிதர்மரே இக்கலைகளை அந்த நாட்டிற்கு கொண்டுவந்தவர் என்றும் பீட்டர் பெய்ன் கூறுகிறார்.[24] சீனநாட்டிற்குச் சென்று அவர்களது மொழியில் பலநூல்கள் எழுதிய பௌத்த சமயத்துறவி 'வஜ்ஜிரபோதி' (கி.பி.661–730) மலைநாட்டைச் சார்நதவர் என்று பௌத்தமும் தமிழும் என்ற நூல் கூறுகிறது.[25] மலைநாடு வீரவிளையாட்டுக்களின் பிறப்பிடம் என்பது தெரிந்ததே. 'புசுதங்சி' என்ற சீனநூலொன்று சுவையான ஒரு செய்தியைத் தருகிறது. கி.மு.268–ல் சீன நாட்டில் சின் பகுதியை ஆண்ட மன்னன் செங் அவையிலே பாரத நாட்டிலிருந்து 18 பௌத்த சமயத்துறவிகள் சென்றனர். துறவிகளை விரும்பாத அந்த மன்னர் அவர்களைச் சிறையில் அடைத்தார். சிறிது நேரத்தில் அந்த துறவிகள் சிறையை உடைத்து மன்னர் முன்பு நின்றனர். இதனை கண்ட மன்னன் வியப்புற்று துறவிகளின் அடிபணிந்து அவர்களை வரவேற்றான் என்று கூறுகிறது அந்த நூல். பாரத நாட்டு வீர விளையாட்டின் சாகசங்களை சீன நாட்டில் இந்த நூல்வழியாக நாம் காண முடிகிறது.[26] ஜப்பான் நாட்டில் இன்று வளர்ந்து வரும் வீர விளையாட்டுக்கள் பாரத நாட்டிலே பிறந்து திபெத், சீனா வழியாக வந்ததுதான் என்று அமெரிக்க நாட்டைச் சார்ந்த மைக்கேல் டி பாஸ்குரே ஜுனியர் குறிப்பிட்டுள்ளார்.[27] மேலே எடுத்துக்காட்டிய ஆதாரங்களிலிருந்து தமிழகத்துக் கலைகளான களரிப்பயிற்றுதான் சீனா, ஜப்பான் நாடுகளுக்குச் சென்று குங்பூ ஆகவும் கராத்தேயாகவும் மாறின எனத் தெரியவருகிறது.

அகத்தியர்தான், சீனநாட்டிற்கு வர்மக்கலையையும், அடிமுறை யையும் கொண்டு சென்றார் என்றதொரு கருத்தும் உள்ளது. புத்தர் காலத்திற்கு முன்பு வாழ்ந்த சரகர் என்ற மருத்துவ வல்லுனர் கி.மு. பத்தாம் நூற்றாண்டில் இமய மலைச்சாரலிலே நடைபெற்ற அனைத்துலக மருத்துவ மாநாடு பற்றிய செய்திகளைத் தருகிறார். நாட்டின் பலபகுதிகளிலிருந்து 53 முனிவர்கள் அந்த உலக மாநாட்டிலே கலந்து கொண்டனர் என்றும், தென்னகத்திலிருந்து அகத்தியரும், புலத்தியரும் சென்றனர் என்றும், தென்னகத்தின் மருத்துவ மேன்மைகளை எட்டு பிரிவுகளாக வகுத்து அகத்தியர் அந்த மாநாட்டிலே சிறப்புரை ஆற்றினார் என்றும் பல செய்திகளை 'சரக சம்ஹித்தை' என்ற நூல் கூறுகின்றது.[28] அந்த எட்டு பிரிவுகளில் தென்னகத்திற்கே உரிய வர்மக்கலையும்

அடிமுறையும் இடம் பெற்றிருக்க வேண்டும். திபெத், சீனா நாடுகளிலிருந்து அந்த உலக மாநாடு வந்த மருத்துவர்கள் இந்த தமிழகத்து கலைகளை அகத்தியர்மூலம் அறிந்திருக்க வேண்டும். அடுத்து அகத்தியரது மாணாக்கர் போகர் சீனா சென்று சீனபெண்ணொருத்தியை மணந்தார் என்பது ஒரு வரலாறு. போகர் சீனா, பெர்ஷியா, ரோம் என்ற நாடுகளுக்குச் சென்ற செய்தியை 'போகர் ஏழாயிரம்' என்ற நூல் குறிப்பிடுகிறது. இவற்றை எல்லாம் வைத்து நோக்கும்போது இந்திய சீன பண்பாட்டு பரிமாற்றத்தின் பழமையையும், நெருக்கத்தையும் நாம் அறியமுடிகிறது.

தமிழ்நாட்டு அடிமுறைதான் ஜப்பான் நாடு சென்று கராத்தேயாக உருப்பெற்றது எனலாம். கரத்தினால் விளையாடும் கலை கராத்தே என்ற பெயரைப் பெற்றது. கீழை நாடுகளிலுள்ள ஆலயங்களில் காணப்படும் காவல் தெய்வங்கள் நமது நாட்டிலே காணப்படும் துவாத பாலகர்களை நினைவூட்டி நிற்கும். துவார பாலகர்கள் நிற்கும் நிலை கராத்தேயின் ஒருநிலைதான். அடிமுறையில் குத்து, இடி, வெட்டு, இழுத்து எறி என்ற சொற்கள் கராத்தேயில் பஞ்ச், கிக், சாப்ஸ், த்ரோ என்று அழைக்கப் படுகின்றன. அடிமுறை சில மாற்றங்களோடு கராத்தேயாயிற்று என்பதை நமது நாட்டவர்கள் மட்டுமல்ல ஜப்பான் நாட்டவர்களும் ஒப்புக் கொள்கின்றனர். அடிமுறையின் மேன்மைகளைக் காண ஜப்பான் நாட்டினர் அந்த அடிமுறையின் பிறப்பிடமான குமரி மாவட்டத்திற்கு வருகை தந்து அக்கலையை ஆராய்கின்றனர்.

அடுத்து வர்மகலையும், அடிமுறையும் குமரிமாவட்டத்தில் மட்டும் ஏன் காணப்படுகிறது என்ற கேள்வி எழுகின்றது. வர்மகலையையும், அடிமுறையை இந்த உலகுக்கு அறிமுகப்படுத்தியவர் அகத்தியர் என்பது மரபு. அந்த அகத்தியருக்கும் குமரி மாவட்டத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அகத்தியரால் எழுதப்பட்ட பல ஏடுகள் குமரி மாவட்டத்திலே கிடைக்கின்றன. அகத்தியர் போன்ற சித்தர்கள் தங்கள் உள்ளொளியாலும், அனுபவத்தாலும் கண்ட உண்மைகள் உபதேசமாக உரைக்கப்பட்டு அது வழிவழியாக வந்து பின்னர் சுவடி வடிவம் அடைந்திருக்க வேண்டும். இன்றும் குமரி மாவட்டத்தில் வர்மக்கலையும், அடிமுறையும் குருசீடர் மூலமாகவே கற்பிக்கப்படுகிறது. அகத்தியர் தமது சீடர்களோடு மருத்துவ தத்துவ ஆராய்ச்சிகள் நடத்திய அகத்தியர்கூடமும், மருந்துவாழ்மலையும் குமரி மாவட்டப் பகுதியிலேதான் காணப்படுகின்றன. மருந்துவாழ்மலை அடிவாரத்தில் உள்ள 'அகஸ்தீஸ்வரம்' என்ற ஊரும் அதே பெயரில் உள்ள ஒருவட்டமும் அகத்தியருக்கும் குமரிமாவட்டத்திற்கும் உள்ள தொடர்பினை கூறுகின்றன. அகத்தியரால் எழுப்பப்பட்ட அகஸ்திலிங்கம் கோயிலும் அகத்தியருக்காக எழுப்பப்பட்ட பல மலை கோயில்களும் குமரி மாவட்டத்திலே காட்சி தருகின்றன. அகஸ்தியன் 'அகஸ்தியலிங்கம்' என்ற பெயர்கள் குமரிமாவட்டத்திலே ஏராளம். அம்மாவட்டத்தின் சில பகுதிகளில் பெண்களுக்கும் அகஸ்தி என்று பெயர் இடுவது உண்டு. குமரி மாவட்டத்தில் அடிமுறை தொடங்கு முன் ஆசானும் மாணவர்களும் அகத்தியருக்குத்தான் என்றும் கூறுவர்.

இவ்வாறு அகத்தியருக்கும் குமரி மாவட்டத்திற்கும் உள்ள தொடர்பினை அடிப்படையாகக் கொண்டு வர்மகலையும் அடிமுறையும் தமிழகத்தின் தென் பகுதியிலேதான் தோன்றியிருக்க வேண்டும் என்று கருத இடமிருக்கிறது.

மேலும் குமரிமாவட்டத்தில் குழித்துறையிலிருந்து 9 கி.மீ. தொலைவிலுள்ள பார்த்திபசேகரபுரம் என்ற இடத்திலே கிடைத்த செப்பேடு ஒன்று தெக்கன்களரி பற்றிய செய்தியை நமக்குத் தருகின்றது. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் அப்பகுதியை ஆண்டு வந்த 'கோக்கருந்நடக்கன்' என்ற ஆய்குல மன்னன் பார்த்திபசேகரபுரம் என்ற ஓர் ஊரை எழுப்பி அங்கே ஒரு கோயிலும் ஒரு பல்கலைக்கழகமும் அமைத்தான் என்ற செய்திகள் அந்த செப்பேட்டிலிருந்து நமக்குத் தெரிய வருகிறது. [29] அந்த பல்கலைக்கழகத்தில் வர்மக்கலை அடிமுறை போன்ற பல்வேறு கலைகள் பயிற்றுவிக்கப்பட்டன. அங்கு கற்ற மாணவர்கள்கல்வி பயின்றதோடு அமையாது சகமாணவர்களுக்கு கல்வி பயிற்றுவிக்கவும் செய்தனர். இன்றும் அப்பகுதியில் வர்மகலை, அடிமுறை பயிலும்போது அதேமுறை கையாளப்படுகிறது. குமரிமாவட்டத்தில் வர்மக் கலையும், அடிமுறையும் அன்று அரசின் ஆதரவோடு பயிற்றுவிக்கப் பட்டதால்தான் அந்த கலைகள் அழியாது அம்மாவட்டத்தில் மட்டும் இன்றும் உயிருடன் இருந்து வருகிறது.

தெக்கன்களரி பற்றிய இந்த ஆய்வுரை ஓர் அறிமுகமே தவிர விரிவான வரலாறு அல்ல. வர்மக்கலை, அடிமுறை இவற்றில் தேர்ச்சி பெற்றவர்கள் அக்கலைகளின் நுட்பங்களை பிறருக்கு சொல்லித் தராததால் அக்கலைகள் அழியும் நிலையில் உள்ளன. வர்மம் அடிமுறை பற்றிய ஏடுகளை ஆசான்கள் தங்கள் குடும்ப சொத்துபோல பாதுகாத்து வருகின்றனர். அதனை பிறர் பார்க்கக்கூட அனுமதிப்பதில்லை. வடக்கன்களரி விளையாட்டுகள் முறையாக எல்லோருக்கும் பயிற்றுவிக்கப்படுகின்றன. அதனால் வடக்கன்களரி வாழ்கிறது, வளர்கிறது. ஆனால் தெக்கன்களரி விளையாட்டுகள் ஆசான்களின் குடும்பத்தினருக்கு மட்டும் பயிற்றுவிக்கப் படுகின்றன. பிறர் அதன் நுட்பங்களை அறிய முடிவதில்லை. சிறப்புமிக்க இந்த கலையின் மேன்மைகளை மேல்நாட்டு மருத்துவம் கண்டதுமில்லை. அந்த அடிப்படையில் இந்த தமிழ்நாட்டு கலை நம்மை பெருமைப்படுத்துகிறது.

தமிழனுக்குச் சொந்தமான இந்த வர்மக்கலை அடிமுறை இவற்றின் பெருமைகளை தமிழர்களே இதுவரை உணரவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்கது. சித்த மருத்துவதத்திற்கு தமிழக அரசு தந்துள்ள ஆதரவு போன்று வர்ம கலைக்கும். அடிமுறைக்கும் ஆதரவு தரவேண்டும். ஆய்வாளர்கள் முயன்று ஏடுகளை பதிப்பிக்கவேண்டும். அப்போதுதான் தமிழ்நாட்டின் பழம்பெரும்கலையான வர்மக்கலைக்கும், அடிமுறைக்கும் நல்லதொரு எதிர்காலம் பிறக்கும்.

குறிப்புகள்

1. தொல்காப்பியம் புறத்திணையியல், பாடல் 4.
2. திருமுருகாற்றுப்படை, 258-260.
3. குமரி மாவட்டக் கோயில்கள், எஸ். பத்மநாபன், பக்கம் 118.
4. புறநானூறு, பாடல் 335.
5. ஐந்தாவது உலக தமிழ் மாநாட்டு மலர், பகுதி ஒன்று, பக்கம் 6, 43.
6. திருக்குறள், பாடல். 776.
7. புறநானூறு, பாடல். 278.
8. புறநானூறு, பாடல். 93.
9. புறநானூறு, பாடல். 74.
10. புறநானூறு, பாடல். 80.
11. பட்டினப்பாலை, வரி. 59.
12. அகநானூறு, பாடல் 187:8
13. Educational System of the Ancient Tamils - Jeya Kotai Pillai p.57.
14. Kalaripayat - Moses Thilak, P.12.
15. Social History of Kerala - L.A.Krishna Iyer, Volume II, p.117.
16. Epigraphia Indica., Volume. III, p.331.
17. Annual Report of the Director General of Archaeology of India for 1905-06 p.181.
18. Director General's Annual Report of 1915, p.180.
19. The Forgotten History of the Land's end, S. Padmanabhan, p.60.
20. Atmarpanam, V.R. Parameswaran Pillai, P.2.
21. Kalaripayat, Moses Thilak, P.15.
22. India, Mother of us All, Chamanlal, p.101.
23. The Discovery of India, Jawaharlal Nehru, p. 191.
24. Kalaripayat, Moses Thilak, p. 11.
24. Martial Arts, petu payru. p.26.
25. பௌத்தமும் தமிழும், சீனி வெங்கடசாமி, பக்கம். 62.
26. India, Mother of us All, Chamanlal, P.102.
27. Martil Arts for Young Athlets, Micheal DC Parguale Jr., p.11.
28. History of Indian Pharmacy, G.P. Srinivastava, p.30.
29. South Indian Temple Inscriptions, Volume III, Part II, p.6.

நேர்முக சந்திப்பில் செய்திகளை வழங்கியவர்கள்

1. ஆற்றூர் செல்லம்மா, குமரி மாவட்ட வர்மக்கலை வல்லுனர்.
2. டாக்டர் குமாரதாஸ், ,,
3. டாக்டர் நாராயண ஆசான், ,,
4. எலியாஸ் ஆசான், ,,
5. சி.வி. என். களரி சங்க குருக்கள், ,,
6. சி.வி.நாராயணன் நாயர், ,,
7. ஜேம்ஸ் அருமைராஜ், ஆய்வு மாணவர், கேரளப் பல்கலைக் கழகம்.

MEDICINE

ROLE OF SIDDHA MEDICINE IN INDIGENOUS SYSTEMS OF MEDICINE

S. Prema

The medical systems in India are as old as mankind itself. In olden days people used only the herbs which were readily available around their habitat for preparing medicines. Due to the migration of population from one place to another, new sources of herbs and other ingredients had to be found for the preparation of medicines and newer methods had to be adopted. Thus gradually a vast fund of knowledge was gathered and developed. In this process, different systems of medicine came into vogue in different regions. This article deals with the Siddha system of Medicine that came into vogue in Tamil Nadu and the regions of the world where to the Tamils migrated.

Indian Systems of Medicine

Presently in India, various systems of medicine such as Ayurveda, Siddha, Unani, Homeopathy, Allopathy Naturopathy, Chinese system of medicine etc., are in vogue. The Allopathy and Homeopathy systems were introduced to India by the English and the West Germans respectively. While the Unani system was introduced by the Moghul rules. The Chinese systems of medicine was spread through the Chinese trade channels in this country. The Ayurveda and siddha are the two unique indigenous medical systems of India which are in practice. An attempt is made in this article to discuss the salient features of the siddha system.

Siddhars

The siddha system got its name because it was developed and practised by siddhars, the Saints. Researchers say that siddhars were people who had conquered their senses and who could accomplished whatever they wanted by the Grace of the Almighty. They were capable of converting baser metals into higher ones and they also produced medicines from various combination of poisons.

There are number of tales about that various siddhars and their achievements and activities. There are references about "Navanatha siddhars" and "Eighteen siddhars" in siddha literatures. There is difference of opinion as to the exact number of siddhars who lived through the ages. There are also some siddha books other than those listed. Though there is no specific reference about "Siddhars" in the age old Tamil "Cankam literature", it is said that the reference about 'Arivar' in cankam literature refers only to them, as has been brought out in the "Nachinarkkiniyar's" commentary on Tolkappiyam. The first reference about siddhars is found in the Jain literature like "Neelakesi" of the 5th century A.D. In the books 'Thirumuraikal' it is said that devotees are those who try to see God and Siddhars are those who have seen God and got enlightenment and bliss.

There are also references about siddhars in the later day literature as for the instance in the "Thevaram" of Sundarar, Thirugnanasambandar and Thiruvasakam of Manikkavasagar. The Periyapuranam of Chekkilar contains the history of Thirumular, the great Siddhar. Thirumandiramalai of Thirumular describes in detail the siddha traditions and their characteristics. "Thiruvilaiatalpuranam" of Paranjothi Munivar describes about siddhars in a separate chapter of "Ellam valla siddharana padalam".

But the precise period in which the siddhars lived is not yet known clearly. It is evident that Bogar and Karuvurar were

contemporaries and belonged to the 10th century A.D., as the famous Chola temple was constructed in the 10th century A.D. Bogar's grandfather "Thirumular" should have lived a little earlier. Only a few siddhars among the many, seem to have practised medicine, as no medical books are available in the name of others.

Siddha System of Medicine

The system of medicine developed by siddhars is known as siddha system. This system is peculiar and unique to Tamil Nadu. Though this nomenclature might have been acquired only later, the medicinal system has been in practice for ages. This is ambly brought out by the numerous references about various medicines and their methods of preparation in ancient Tamil literatures. In the very ancient Tamil book Tolkappiyam medicinal uses of 'Neem' and 'Myrobalan have been explained. The method of preparation of medicine from trees is explained in Purananuru (verse 180). There are also references about medicine in "Narrinai" and "Kalithogai". In Thirukkural there are 10 couplets under the heading Medicine. In the "Pathinen kil kanakku Noolkal" there are titles about the medicine such as Tirikadukam Cirupanchamulam and Elathi etc., Elango adigal's Silappathikaram speaks about separate quarters that existed in those days for medical men. We can also see references about medicine, and their uses and medical man in Kamba Ramayanam and Kulasekarar's Pasuram.

Salient Features of Siddha Medicine

"Andaththil Ullathe Pindam
Pindaththil Ullathe Andam
Andamum Pindamum Ontre
Arindhuthan Parkkum Poluthe"

The above said verse found in "Cattamuni Gnanam" explains that the human body is part of the universe and that the body and universe are one and the same are inseparable.

All the forces that exist in the universe are also in existence in the human body. The forces which manifest themselves through actions of the various parts out of the body have a close relation with the outside forces in the universe. The human heart is controlled by the sun, the mind is controlled by the moon, the gall bladder by Mars, the kidneys by Venus, the lungs by mercury, the liver by Jupiter and the spleen by the planet Saturn. The planet Mars exerts great influence in the constituents of human blood. There is a close relationship between the planet Venus and the sexual reproduction of organisation in the universe. So long as the universal forces work in unison with in their parameters and their limits, there is no danger to the universe. Once the limits are crossed and the balance is disturbed, serious calamities such as earthquake, storm, drought, torrential rain result. Similarly in the human body, so long as the internal forces function within their limits, one can lead a disease free life. Once the balance of forces is disturbed it results in some form of disease of the human body.

The body and the universe are made up of the five great elements. i.e. Earth, Water, Fire, Air and Ether. The Earth's represents the flesh, hair, bones, Skin and nerves of the human body. Water stands for bibe, blood, semen, urine and sweat. The third force 'Fire' stands for appetite, sleep, fear, cathergy and Coition. The fourth force 'Air' represents the following actions running, walking, standing, sitting, lying. While the fifth one 'Ether' is a symbolic of pleasure, palm, avarice, ego and the like. These five great forces act in unison in the human body as the three great life forces known as "Ueir thathukkal" and the are called vali, Azhal, and Iyam. The combination of universe and Air is known as vali, Fire manifests itself as Azhal and the combination of Earth and Water represents Iyam. If the three life forces are at work in the ratio 1 : ½ : ¼ that represents a healthy body free from

disease. If any of them act in greater or lower proportion, the body functions are affected and this results in the unmanifestation of disease. This fact is brought out beautifully by the Thirukkural couplet.

"Miginum Kurainum Noi seium noolor
Vali mudalai enniya moondru"

Diagnosis of Diseases

The process of detecting the disease of the body is called diagnosis. The siddha medical men should know the condition of the patient by hearing the necessary details either from the patient or from his relatives and to arrive at a conclusion after careful examination of the patient by the other diagnostic methods. For preliminary diagnosis of one's illness observation of his skin, colour, voice, eye, tongue, discharges and pulses are prescribed as stated in the following verse of 'Theraiyar'

'Meikuri niram thoni vizhi na
Erumalam kaikkuriye'

1. Meikuri (External characters of the body)

The body of the 'vali' affected patient will be hot, that of the 'Azhal' affected patient will be hotter, while the body temperature of a Iyam patient will be less than normal.

2. Colour

The skin colour often proclaims the nature of the disease. Black skin generally indicates 'Vali' disease, yellow or reddish skin will denote 'Azhal' disease, while a pale skin may indicate 'Iyam' disease.

3. Voice

Existence of disease is also detected by change in nature of voice. A 'vali' patient will have medium voice, a 'Azhal' patient will have a high voice while a 'Iyam' patient has a low and musical voice.

4. Eyes

Dim Black eyes with gummy secretion (Peelai) indicate 'vali', yellow or reddish coloration indicates 'Azhal', while pale eyes are an indication of Iyam disease.

5. Tongue

Block tongue which is broken or having thorny surface is indicative of `vali' disease. Reddish tongue with excess of saliva denotes `Azhal' disease while whitish and smooth tongue is an indication of `Indication of `Iyam' disorder. The colour of saliva also determines the nature of disease.

6. Stools

Examination of stools is also a diagnostic procedure. Blackish constipated passage of stools indicates 'Vali' disease. Passage of white coloured and mucus form of stools is an indication of 'Iyam' disease and yellow colour of stools is an indicative of 'Azhal'

7. Urine:

(a) Neerkuri:

White or reddish coloured urine indicates 'vali' yellowish urine indicates 'Azhal', while white and frothy urine indicates 'Iyam'.

(b) Neikuri:

If a drop of gingelly oil added to urine collected early morning in a clean vessel takes the form of wheat indicates 'vali' disease. If it takes a ring shape it indicates 'Azhal' disease. If it takes a shape of pearl it denotes the 'Iyam' disease.

8. Nadi

Study of nadi is an important diagnostic method. Any disorder of the human body manifests itself through the 'nadi'. The blood veins carry the rhythm of the three life minerals. The 'vali' 'nadi' vibrates for 1 mathirai time, 'Azhal' nadi'

vibrates for half a mathirai and "Iyam Nadi" first for a quarter mathirai.

Cause of Disease

The reasons for the disorder of 'vali' 'Azhal' and 'Iyam' must be analysed and measures should be taken to rectify the same.

Treatment of Disease

As expounded in verse 949 in Thirukkural the nature and extent of disorder in the patient, the severity and duration of illness must be studied and treatment given based on such study. There are three methods of curing a disease. They are 'oppurrai' 'edhirurai' and 'kalappurai'.

> "Verparu thazhaiparu minginakkal
> mella mella parpa chenduram pare".

The natural herbs, their leaves and roots in proper form must first be administered for curing a disease. If it is not effective, parpam and chenduram preparations which will act faster must be prescribed. There are two routes of medicine based on pharmacology. They are Internal medicine and External medicine. The diet restrictions are also explained in detail in the treatment of siddha medicine.

Disease are recognised in two forms. Body ailments and mental ailments. While the body ailments are treated entirely by the medical methods, the ailments of the mind are treated with the help of charts and manthras also. The charts and manthras are all in Tamil version only.

Codes of conduct for the prevention of disease, aging and maintenance of proper health are prescribed in detail.

The rejuvenating process is of two kinds, one general and the other special. The general karpa, protects and beautifies the body, gives vigour and prevents greying, contraction of skin,

aging and delays death or increase longevity. The special karpa eliminates disease in any part of throughout the body and give strength and vitality to the system. The rejuvenating process of general and special karpa encompasses not only the medicines, derived from herbal, mineral and animal matter but also the yogic and pranayama exercises and Muppu. Pranayama is a breathing exercise. We know that for all living beings oxygen is indispensable. We take in oxygen required for our body by inhaling. Not all the oxygen inhaled gets into the system and a part of it is wasted away while exhaling. By the pranayama exercise, we can retain the oxygen inhaled for a longer time in our lungs and make it get into the system, without being wasted. Pranayama rejuvenates the body, gives strength and vigour, controls the mind besides curing the diseases.

Yoga

Yoga is the exercise of controlling and consolidating our senses, without frittering away our energies and thinking only of the heavenly bliss. This is of eight kinds.

Muppu

Muppu is of three kinds. Medical Muppu easily cures diseases of the body. Vatha Muppu invigorates the body and prevents aging. Yoga Muppu denotes the harmonal secretion of our body. By doing yoga, the secretion of harmones can be controlled and longevity of the person promoted. This method is something special and unique to Siddha medicine.

The siddha system explains the properties of various food stuffs and the qualities of drinking water. The medicinal values of pearl, conch, coral, amber, salt and the methods using them in the preparations of medicine and the medicinal uses of various kinds of fishes are also explained in siddha literature. These medicinal fish varieties are found in the sea, tanks, Lakes and inland river water ways in Tamil Nadu.

The siddha system has been successful in making effective and powerful medicines out of volatile poisons by the process of parpam, chenduram and kattu. Siddha has been the forerunner if alchamy, the science of converting base metals into higher ones. The system makes use of rare black herbs for the preparation of medicinal alchemy and kayakarpam. The black herbs are not available and the methods of cultivating them have been described in detail in a siddha book "Bogar charakku vaippu 800".

Siddhars have found out the ingredients of vegetables, metal and mineral matter and utilised them in the preparation of siddha medicine. The metals copper, lead, gold and mercury cannot be used directly as medicine and they cannot also be consumed directly. They can be used as medicine only after repeated purification and chemical processes. Further, impure and substandard minerals cannot be used in the preparation of high quality and potent drugs or for medical alchemy.

For rarely available crude drugs like rock salt, camphor, sulphur, copper sulphate, musk, synthetic substances are also prepared for the medicinal purposes by siddhars.

The book Agathiyar Nayana Vidhi describes the nature of eye diseases, the surgical treatment for the cataract of the eye and the proper instruments to be used for surgery.

One branch of siddha medicine called "Varma vaidhyam" describes the method of treatment, for injuries caused to vital organs or parts of the body.

Siddha and Ayurveda System - A Comparison

Of all the Indian systems of medicine, Siddha and Ayurveda are very much alike in many ways. Hence some researchers say that siddha is only the Tamil form of Ayurveda, and a few researchers say that when Sanskrit was the official language, even Tamil medical literature would have

been translated into Sanskrit. It may be the reason and Dhanvantri in both the Siddha and Ayurveda medical literature.

In the preface to the Tamil translation of the work "Sarangathara Samhithai" Vidwan M.Duraiswamy Iyangar has observed as follows.

"The two great pioneers of Ayurveda Sastra in Sanskrit, Agasthya and Dhanvantri have been the authors of some important Tamil medical books as well. Further it is believed that the author Yoganantha Nathar who had provided Tamil translation and explanatory notes to the Ayurvedic formulas in Sanskrit, is one of the siddhars, who had also written original works in siddha medicine. From this one can conclude that the name Ayurveda had been commonly applied both for Tamil and Sanskrit medical literature in those days. But if one makes a deep study of the Tamil works Agathiyar vaidhiya kaviyam, Agathiyar Paripuranam, Pulipani 500, the medical parlance and methods peculiar to Ayurvedic Sanskrit literature, are no where to be found."

Hence one has to conclude that the Dravidians had been well versed in medicine even before the advent of Aryans and that the Dravidian medical system came to be called as siddha in the later days. One can also notice that siddha system differs materially in certain aspects from Ayurveda.

The Decline and Resurgence of Siddha Medicine

In very early times. this system was taught only in the 'Gurukula' method. In later days during the regin of kings, they donated lands and funds with here ditory rights to the medical practioners. The hereditory conferred on family members might have lad to the heriditary system of teaching and practice of siddha medicine.

After the advent of foreign rule, people are craze for everything westam. Allopathic system, began to hold sway and

dominate in every sphere. It lad to the steady decline and almost extinction of the siddha system. After we because independent, there was a growing awareness and search for real values of our ancient system among our people which gradually lad to the reveal and resurgence of the siddha and indigenous medical systems. In the process siddha colleges were started and siddha practisionces have been making special wards and wings of many Government hospitals. The mints of the siddha system has been recognised by the practitioners of the other system too, especially in the treatment of liver disorders, arthritics and skin diseases etc.,. Herbal farms and factories with well equipped modern laboratories have been established to provide siddha medicine widely.

Conclusion

In conclusion, I would like to add that so far I have analysed the evolution of the siddha system from early times, its salient features, its decay and resurgence. This should through some light on the various aspects of this Tamil system and of its high values. This system originated in Tamil Nadu and developed by the Tamil siddhars. And if siddha system of medicine is properly nourished and developed, it would come in times to prove beneficial to the whole of mankind.

BIBLIOGRAPHY

1. Amirdhalingam Pillai. T.S., Agathiyar nayanavidhi 400., Manoranjani Press, Madras 1936, p.68-70.
2. Balaramiah. V, The greatness of Siddha Medicine, Aruljothi Publishers, Madras.,p.16.
3. Chakkravarthi. A. Neelakesi, Tamil University, Thanjavur, 1984., p.146
4. Duraiswamy Iyangar.M, Sarangathara Samhidhai Vaidhiya Kalanidhi Press, Madras. 1927., p.22
5. John Selvarj.S, Varma Cuttiram I.I.T.S., Madras. 1984, p.14,20
6. Kasim Mohideen Ravuthar, Padarthaguna Chinthamani, Maran Press, Madras.1926., p34,51.
7. Kesava Iyengar, Nalayira Thivya Prabandam, Rajaji Press, Devakottai.
8. Manikkavasakam.R, Namnattu Siddhargal, Agathiyar Press, Madras. 1982., p.53.
9. Manikkavasakam.R, Thirumanthira Araichi, Agathiyar Press, Madras. 1982., p.35.
10. Narayanaswami. V, Introduction to the siddha system of medicine, Madras. 1975., p12-13.
11. Pattuswamy Odhuvar. T, Thiruththondar Puranam City Press, Trichy. 1950., p.299
12. Prema. S. & Nagarajan.P.V, Bogar Vaidhiyam 700, Tamil University, Thanjavur. 1985., (Poem 538).
13. Ramarathnam Iyer, Kambaramayanam, Vidhyarathnakaram Press, Madras. 1926., Poem 145.
14. Robert. J. Bloom field, Article in "Traditional Medicine and Health-care coverage", World Health Organization, Geneva. 1983., p.117.
15. Selvaganapathy.R, Korakkar Siddhar Arul Varalaru Popular Press, Mayiladuthurai., 1986., p.2.
16. Shanmuga Velan.A, Siddhar's Science of Longevity and Kalpa Medicine of India, Sakthi Nilayam, Madras. 1963., p.26.

17. Shanmuga Velu. B, Noinadal Noi Mudalnadal Thirattu. Part. I., Govt. Press, Madras. 1967., p.87.

18. Subramaniya Swamy, Bogar Carakku Vaippu 800 Sripadmanaba Vilasam Press, Madras. 1908., P.49.

19. Subramaniya Pillai. R., Thirugnana Sambandar Devaram, Kumaraguruparan Press, Srivaikundam. 1980., p. 234.

20. Subramania Pillai. K., Thiruvacagam Thirumagal Vilasam Press, Madras. 1949., p.516.

21. Swaminatha Iyer. U.V., Manimekalai, Commercial Press, Madras. 1921., Poem 95.

22. Thiyagarajan. R., Theriyar maha karisal Anbuselvi Press, Madras. 1974., p. 29.

23. Uthamaroyan. C.S., Siddha Maruthu Vanga Churukkam, Govt. Press. Madras. 1983. p.4-9.

24. Agananuru, New Century Book House, Madras. 1981., Poem 138.

25. Kalitthogai, New Century Book House, Madras. 1981., Poem 17.

26. Narrinai, New Century Book House, Madras 1981., Poem 136.

THE SIDDHA MEDICINE AND ITS PREVENTIVE WAY OF LIFE FROM DISEASE.

A. Vasuki Devi

The Siddha medicine is a Tamil medicine, which not only deals with the gross body, and also deals with the subtle body. It not only tells us how to live, further tells us how man can become Immortal.

This medicine not only having its own, hygienic, preventive way and also having its own treasuric value, in the fields of immunology, prophylactive and treatment.

உலகில் தோன்றிய மருத்துவ முறைகள் பல. அவற்றுள் இந்தியாவில் தோன்றிய தொன்மையான மருத்துவ முறைகள் சித்த மருத்துவமும் ஆயுர்வேதமும் ஆகும். இவ்விரு முறைகளும் முறையே தென்னிந்தியா வையும் வட இந்தியாவையும் களங்களாகக் கொண்டு தோன்றி வளர்ந்து இன்றும் நின்று நிலவுகின்றன. இவற்றுள், தென்னகத்தில் தோன்றிய சித்த மருத்துவம், வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழமையுடையது. சிந்து சமவெளி நாகரீகக் காலத்தில் திராவிட மருத்துவமாகச் சிறப்புற்று விளங்கிய இக்கலை, பின்னர், 'சித்தர்' எனப்பெறும் தமிழ்ச்சான்றோரால் போற்றி வளர்க்கப்பெற்ற நிலையில் 'சித்த மருத்துவம்' என்று பெயர் பெற்றது.[1] தமிழகத்தில் தோன்றி வளர்ந்து, இன்றும் தமிழகத்தில் மட்டுமே பெருவழக்கினதாகி, உலகில் தமிழர் வாழுமிடங்களிலெல்லாம் கைக்கொள்ளப் பெறுதலின் தமிழ் மருத்துவம் என்றும் அழைக்கப்பெறுகிறது.

திராவிட நாகரீகம் இந்தியப் பண்பாட்டிற்கு வழங்கிய கொடையாகச் சித்த மருத்துவத்தைக் கூறுவர்.[2] சித்த மருத்துவம் தமிழர்கள் பண்பாட்டோடு இணைந்து அன்றாட வாழ்வியற் கூறுகளுள் ஒன்றாக விளங்குவது. சான்றாகத் தமிழர்கள் உணவு முறையே மருத்துவ நோக்கை அடிப்படையாகக் கொண்டது. இயற்கையோடு இணைந்த மருத்துவமுறை இச்சித்தமருத்துவம். சித்தர்கள், தமது வியத்தகு ஆற்றலால் மனத்தை ஒருமுகப்படுத்தி ஆன்மீக அறிவை வளர்த்துக் கொண்டு பெற்ற யோகப் பயிற்சி வழியே, இயற்கையைக் கூர்ந்து நோக்கி, பஞ்சபூதத்தத்துவம், அண்ட பிண்டத் தத்துவம், முக்குற்றவியல், உடற்கு உறும் நோய்கள் அவற்றுக்கான மருத்துவம ஆகியவற்றை அறிந்து இம் மருத்துவ முறையைப் போற்றி வளர்த்தனர்.

பிற மருத்துவ முறைகள் யாவும் உடலுக்கே மருத்துவம் கூற, சித்த மருத்துவமோ உயிருக்கும் மருத்துவம் கண்ட சீர்மையது. சித்த மருத்துவத்தில் 'மருந்து' என்ற சொல் நோய் நீக்கும் நிலையை மட்டுமன்றி சாவே வராமல் காத்தலையும் குறிப்பதாகும். இதனைத் திருமூலர்

'மறுப்பது உடல்நோய் மருந்தெனல் சாலும்
மறுப்பது உளநோய் மருந்தெனல் சாலும்
மறுப்பது இனிநோய் வாரா திருப்ப
மறுப்பது சாவை மருந்தென லாகும்'[3]

என்பார்.

சித்த மருத்துவத்தின் சிறப்புக் கூறுகள் பல. அவற்றுள் 'நாடி', 'காயகற்பம்' என்ற இரண்டும் தலையாய சிறப்புடையன. இவற்றுள் மருந்து நிலையில் 'காயகற்பம்' சிறப்புடையதாக விளங்குதல் போன்று நோய்நாடும் நிலையில் 'நாடி' முதன்மை பெற்று விளங்குகின்றது.

நோய் நாடல்

எந்தவொரு மருத்துவமுறையிலும் நோயறிதல், மருத்துவம் செய்தல் என்ற இரண்டு நிலைகள் அடிப்படையாக அமைந்திருத்தல் தெளிவு. ஒருவற்கு நோய் வந்துற்றவிடத்து, அஃது இன்ன நோய் என்று அறிந்த பின்பே அதற்கு ஏற்ப மருத்துவம் செய்ய இயலும். அவ்வாறு நோயை ஆராயும்போது, நோயின் தன்மையொடு அது தோன்றியதற்கான காரணத்தையும் கண்டு, அதற்கேற்ப மருத்துவம் செய்வதன் மூலம் நோயை வேரொடு களைவதுடன், மீண்டும் வாராவண்ணம் உடலைக் காக்கவியலும் என்பது சித்த மருத்துவக் கொள்கை. இதனை வள்ளுவர்

'நோய்நாடி நோய்முதல் நாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்'[4]

என்றார்.

சித்த மருத்துவத்தில் நோய்நாடும் நிலைகள் பல உள. அவையாவும் புற ஆராய்ச்சி, அக ஆராய்ச்சி என்னும் இருவகையுள் அடங்கும்.[5] பிணியாளனை அணுகி நோய்க் குறிகளை ஆராய்வதற்கு முன்னரே, பிணிபற்றிய செய்தியறியும் மருத்துவன், தன் கண்ணெதிரே காணுகின்ற குறிளைக்கொண்டு நோயின் வன்மை மென்மைகளைத் தீர்மானிப்பது 'புற ஆராய்ச்சி' எனப்படுகிறது. தூதன் வந்து மருத்துவரை அழைக்கும் குறி, தொடுகுறி, சொற்குறி, நின்றழைக்கும் திசைக்குறி, தூதாக வந்தோர் நிலை, மருத்துவர் செல்லுங்கால் எதிர்ப்படும் பொருட்களின் சகுனக்குறி, பறவைகளின் குறி என்பனவற்றை இதன் உட்பிரிவுகளாகக் கூறுவர்.[6] மேலும் நோயாளி பாயில் படுக்கும் நாட்குறி, மருத்துவனுக்கு இடும் தவிசின் குறி, மருத்துவனுக்குத் தரும் வெற்றிலை பாக்கின் எண்ணிக்கை முதலியவற்றையும் இதன் பிரிவுகளாகக் கூறுவர்.[7] இவ்வாராய்ச்சி மூலம் நோயாளி பிழைப்பதற்கான சாத்திய, அசாத்தியக் கூறுகளைக் கருதலாமேயன்றி, நோயின் தன்மை, காரணம்

முதலானவற்றை அளவிடவியலாது. இவற்றைத் தெளிவாக அறிவதற்கு அக ஆராய்ச்சி உதவுகிறது. அக ஆராய்ச்சி முறையில் எட்டு வகைகள் சிறப்பானவை. இவ்வெண்வகைத் தேர்வுகளையும் வைத்தியனுக்கு உரிய எட்டு அங்கங்களாகக் கூறுவர்.[8] அவை நாடி, கண், ஒலி, தொடுவுணர்வு, நிறம், நா, மலம், மூத்திரம் என்பன. [9] இவையேயன்றித் தலை, முகம், இமை, வாய், பல், எச்சில், மணம், வியர்வை, இந்திரியம் ஆகியவற்றின் குறிகளும் நோயறிய உதவுகின்றன. இவ்வாறு அக ஆராய்ச்சி முறை பல வகையினதாயினும், அவையாவற்றுள்ளும் நாடித் தேர்வே தலையாயது. சித்த மருத்துவத்தில் கைநாடி பார்த்தலே தொன்று தொட்டு வரும் வழக்கமாகும். பிற குறி குணங்களால் ஆய்ந்து கண்ட நோய்க்கணிப்பை நாடி முறையுடன் ஒப்பிட்டுப் பார்த்த பிறகே உறுதி செய்வர். இவ்வாறு நோய் நாடும் நிலையில் நாடி முறையே சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது.

நாடி – சொற்பொருள்

நாடி என்னும் சொல் உட்துளையுடைய பொருள், ஒருவகைப் புல், பூவின்தாள், யாழ் நரம்பு, மாளிகையின் ஓர் உறுப்பு, நாழிகை, சோதிட நூல், வளையலுப்பு முதலான பலவற்றைக்குறிக்கும் என்றாலும், குறிப்பாக மருத்துவத் துறையிலேயே இச்சொல் மிகுதியும் வழங்குகின்றது.

மருத்துவத்துறையிலேயே இச்சொல் ‘இரத்தக் குழாய்’, சுவாசக் குழாய், வாதபித்த சிலேத்துமங்களைக் குறிக்கும் தாது நரம்பு; கைநாடி; மணிக்கட்டின் மேல் நிற்கும் தாது; நரம்பின் துடிப்பு, வாத, பித்த, சிலேத்துமம்; உடல்தாது; உயிர்த்தாது; சீவசக்தி முதலிய பல பொருள்களில் வழங்குகின்றது.[10]

நாடி எனும் சொற்பொருளுக்கும், இரத்தக் குழாய், சுவாசக் குழாய், நரம்பு முதலியவற்றுக்கும் இடையே உள்ள தொடர்பை ஆராயுமிடத்து இவையாவும் உட்துளையுடையனவே என்பது பெறப்படும். இவற்றின் வழியேதான் நாம் நாடியை உணர்கிறோம். எனவே, இவை நாடியை உணர்த்துவனவேயன்றி இவையே நாடியாகா. மேலும் நாடியானது நரம்பு முதலியவற்றின்றும் வேறானது. இக்கருத்தை

> *‘நாடியோ என்போ நரம்புசீக் கோழையோ’*[11]
>
> *‘நரம்பெனும் நாடி யவற்றினுக் கெல்லாம்*
> *உரம்பெறு நாடியொன் றுண்டு’*[12]

என்ற பாடல்கள் உணர்த்துகின்றன.

‘கைநாடி’ ‘மணிக்கட்டின் மேல் நிற்கும் தாது’ என்னும் பொருள்கள் நாடி ஆராயும் இடத்தைச் சுட்டுவனவேயன்றி நாடியை விளக்குவன ஆகா. நரம்புக் குழாயில் ஏற்படும் துடிப்பே நாடி என்றால், அத்துடிப்பு உயிரற்ற பிணத்தின்கண் நிகழாமையை நோக்குழி, நரம்பின்துடிப்பு நாடியன்று என்பது போதரும். அவ்வாறே வாத, பித்த, சிலேத்துமங்களே நாடியாம் என்பார்க்கு, அவை தாமே இயங்கும் தன்மையவல்ல என்று கூறி அக்கருத்தையும் மறுப்பர்.[13] எனவே, நாடி எனும் சொல், நரம்பு, இரத்தக்குழாய், சுவாசக் குழாய்

முதலியவற்றையோ, அவற்றில் தோன்றும் துடிப்பையோ அத்துடிப்பின் வழி உணரப்பெறும் வாத பித்த சேத்துமங்களையோ குறிக்காது, அவற்றுக்கும் மேலாக அமைந்த ஒன்றையே குறிக்கும் என்பதும், அஃது உடலின் கண் உயிர்நிலை பெற்றிருக்கும் காலத்திலேயே நிகழ்வது என்பதும் அங்கைநெல்லி.

'நாடியென்றால் நாடியல்ல, நரம்பில்தானே
நலமாகத் துடிக்கின்ற துடிதானல்ல,
நாடியென்றால் வாதபித்த சேற்பனமுமல்ல,
நாடியெழு பத்தீரா யிரமுமல்ல,
நாடியேன்றால் அண்டரண்ட மெல்லாம்நாடி
யேழுவகைத் தோற்றத்தி னுள்ளாய்நின்ற
நாடியது ஆராய்ந்து பார்த்தா ரானால்
நாடியுறும் பொருள்தெரிந்து நாடுவாரே'[14]

என்ற 'வைத்திய சதகநாடி' யில் வரும்பாடல் இதனை வலியுறுத்துகின்றது. இவற்றைக் கருத்திற் கொண்டு காணும்போது, உயிரானது உடலின்கண் இயங்குகின்ற நிலையில், அவ்வியக்க சக்தியானது வளி, அழல், ஐயம் என்ற முத்தாதுக்களின் வழியே தொழிலாற்றி உடலை இயக்குகின்றது. இந்த இயக்க சக்தியே 'நாடி' எனப்படுகிறது. இதனை

' உடலின்கண் உயிர்தரித் திருப்பதற்குக் காரணமான
சக்தி எதுவோ அதுவே தாது அல்லது நாடி எனப்படும்'.[15]

என்று சித்த மருத்துவ அறிஞர் மா. சண்முகவேலு விளக்குகிறார். எனவே அண்டபிண்டம் அனைத்திற்கும் மூலமாக விளங்கும் சக்தியே உடலுக்குள் உயிராக நின்று இவ்வுடலை இயக்குகின்றபோது நாடி என்று பெயர் பெறுகிறது என்பது தெளிவு. இதனைச் சீவசக்தி, ஆன்மா என்ற வேறு பெயர்களாலும் வழங்குவர். இவற்றை ஆழ்ந்து நோக்கும் போது, உடலின்கண் உயிரை நிலைபெறச் செய்விக்கின்ற சக்தி என்னும் நுண்பொருளை உணர்த்திய நாடி எனும் சொல் பின்னாளில், அந்நுண்பொருளைத் தாங்கிநிற்கும் கருவிகளாகிய நரம்பு முதலிய பருப்பொருள்களுக்கும் ஆகிநின்றது. பின்னர், அவற்றின் வழியே, உட்துளையுடைய பொருள்களை உணர்த்தும் சொல்லாகப் பொருள்மாற்றம் பெற்றிருக்கக்கூடும். நாடி எனும் சொல்லுக்கு வழங்கப்பெறும் பிறபொருள்களை நோக்க, அவையாவும் மருத்துவத்தில் வழங்கும் 'நாடி' எனும் பொருளின் அடிப்படையினவே என்பது புலனாகும்.

நாடி ஆராய்ச்சியின் தோற்றம்

உயிரின் இயக்கத்திற்கு உயிர்வாயு இன்றியமையாதது. சுவாசத்தின போது நாம் உள்ளிழுக்கும் காற்றிலுள்ள உயிர்வாயுவை, இரத்தக்குழாய்களும், நரம்புகளும் ஏற்று உடலின் சீரான இயக்கத்திற்கு உதவுகின்றன. இவ்வாறு உடல் சீரான நிலையில் இயங்குதற்குக் காரணமான சுவாசம் ஒரு நாளைக்கு 21,600 முறை நடைபெறுகிறது என்றும், இதில் மூன்றில் இரண்டு பங்கு, அதாவது 14,400 சரங்கள் உள்ளே சென்று மூலாதாரத்தில் ஒடுங்கும் என்றும் கூறப்படுகிறது. இவ்வாறு மூலாதாரத்திற் சென்று தங்கும் பிராணன், மூளைக்கு

எடுத்துச் செல்லப்பட்டு அங்கு சேமிக்கப்படுகிறது. பின் அப்பிராணன் அங்கிருந்து உடலின் தேவையான பகுதிகளுக்குப் பாய்ந்து சென்று உடலை இயக்குகின்றது. எஞ்சிய 7,200 சரங்கள் வெளியே பாய்ந்து வீணாகின்றது.[16]

மனிதனின் சராசரி வாழ்நாள் 120 வயது காலம் என்றும், நாளொன்றுக்கு 7,200 சரங்கள் வீணாவதன்வழி, ஆயுட்காலம் அதற்கேற்பக் குறைகிறது என்றும் கருதப்படுகிறது.[17] நாளொன்றுக்கு வீணாகும் இச்சுவாசத்தை வீணாகாதவாறு உள்ளுக்குள்ளேயே நிறுத்திப்பயன் கொள்வதன் வழி உடலை நரை திரை மூப்பின்றி நெடுநாள் வாழச் செய்யவியலும். இவ்வாறு உயிர்க்காற்றை வீணாகாதவாறு உடலின் கண் நிறுத்துதற்குப் பிராணாயாமம் போன்ற யோகப் பயிற்சிகள் உதவுகின்றன.[18]

மனத்தை ஒருமுகப்படுத்திச் செய்யப்பெறும் இப்பிராணாயாமத்தின் மூலம் சுவாச ஓட்டத்தை நெறிப்படுத்துதலே நாடி தத்துவத்திற்குத் தோற்றுவாயாக அமைந்தது. இன்றும் இம்முறை 'நாடி சுத்தி' என்ற பெயரில் யோகப் பயிற்சியின் ஒரு கூறாக விளங்குவதைக் காணலாம்.[19] இவ்வாறு நாடி இயக்கத்தின் முதற்கட்டமாக, உயிர்வாயுவின் இயக்கத்தைக் கட்டுப்படுத்தி, உடலின் இயக்கத்தையும் முக்குற்ற நிலை முதலிய வற்றையும் சித்தர்கள் கண்டதோடு அவை நன்னிலையில் இயங்குமாறும் செய்தனர்.[20] ஆயினும், இதனைக் கொண்டு ஒருவன் தன்னளவில் உடல் நிலை முதலியவற்றை உணரலாமேயன்றி, பிறருடைய உடல்நிலையை அறிந்து கூறவியலாது. மேலும் இந்நாடி தத்துவமும் யோகப் பயிற்சியும், கடினமும் சிக்கலும் நிறைந்த கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருந்ததால் கடைப்பிடித்தற்கு அரிய ஆயின. இந்நிலையிலேயே நாடி தத்துவத்தின் இரண்டாவது கட்டமாக, நரம்புகளில் உணரலாகும் துடிப்புகளைக் கொண்டு உயிரின் இயக்கத்தையும், உடலின் நிலைகளையும் ஆராயும் நாடித் தேர்வுமுறை தோற்றுவிக்கப்பட்டது.[21]

நாடி – விளக்கம்

அறிவியல் முறையில் நாடியானது இதயத்துடிப்புடன் தொடர்புபடுத்திக் கூறப்படுகிறது. இதயம் ஒவ்வொரு முறையும் துடிக்கும்பொழுது, இதயத் தசை சுருங்கி விரிவதால் எழும் நாடியலை, இதயத்தின் இடது கண்டறையிலிருந்து வெகுவேகமாகப் புறப்பட்டு எல்லா நரம்புகள் வழியாகவும் பரவும்பொழுது இரத்தத்தை அவற்றுள் உந்தித் தள்ளுகின்றது. இதனால், ஒவ்வோர் இதயத் துடிப்பின்போதும் ஒரு குறிப்பிட்ட அளவு இரத்தமானது இதயத்திலிருந்து பெருந்தமனி வழியாக வேகமாகத் தள்ளப்பட்டு, நாடி நரம்பு மண்டலத்தில் ஒரே சீரான அழுத்தத்துடன் குதித்து அலைபோன்று ஒரு சுழற்சிப் பாதையில் ஓடுகின்றது. இக் குருதியலையே, கையின்கண் நாடித் துடிப்பாக உணரப்படுகிறது. அத்துடிப்பின் வேகம், குணம் முதலியவற்றால் மனித உடல் நிலையையும், அதன் மாறுபாட்டையும் அறியலாம். எனவே, நாம் கையில் உணரும் நாடியானது இதயத்தின் இயக்கமே என்றும் தேகத்தின்கண் உண்டாகின்ற நோயை இதயம் தெரிந்து கொண்டு நாடிமூலம் நமக்கு அறிவிக்கின்றது என்றும் கூறுவர்.[22]

சித்த மருத்துவத்தில் நாடி மிகவும் நுண்மையானது, சிக்கலானது. இதனை அறிவியல் முறைப்படி விளக்கவியலாது. தியானப் பயிற்சி வழியே மனத்தை ஒரு நிலைப்படுத்தி ஆராய்வதன் மூலமே உணரமுடியும்[23] இந் நாடி முறை – 1, பின்னலான நரம்பமைப்பு, 2.வெளிக்காற்றைச் சுவாசித்தல், 3. பிராணவாயுவின் செயற்பாடு, 4. உணவு முறையினால் நேரும் முக்குற்ற முறைப்பிறழ்வு, 5. இரத்த ஓட்டம் நரம்புகளில் ஏற்படுத்தும் தாக்கு, என்னும் இவ்வைந்து இயக்கங்களை உள்ளடக்கியது. ஒருபுறம் பிராணவாயுவால் ஆளப்படுகின்ற நரம்புகளின் இயக்கத்தையும், மறுபுறம் முக்குற்றத்தோடு தொடர்புடைய இரத்த ஓட்டத்தையும் நாடி தத்துவம் அடிப்படையாகக் கொண்டது.[24]

உடல் இயக்கத்திற்கு அடிப்படையான உயிர்வாயு மூளையையும், இடகலை, பிங்கலை, சுழுமுனை என்னும் மூன்று நாடிப்பாதைகளையும் ஆளுவதன் மூலம் உடலின் மிக நுண்ணிய வேலைகளுக்கும் மூலசக்தியாக விளங்குகின்றது. சீரணத்தொழில், இரத்த ஓட்டம் என்பனவும் பிராணவாயுவின் ஆளுமைக்குள் அடங்கும். இவற்றின் வழி, இவற்றோடு தொடர்புடையதாக முக்குற்றத் தத்துவம் நாடியுள் இடம்பெறுகிறது. உடலின் கண் முக்குற்றங்களின் நிலையை ஆராய்தலையே இன்று 'நாடி' என்கிறோம். வாத பித்த சிலேத்தும நாடிகள் 1: ½: ¼ என்ற விகித்தில் நடுநிலையில் உள. பல்வேறு காரணங்களால் இந்நிலை பாதிக்கப்பெறலாம். குறிப்பாக, நமது உணவுப் பொருட்களும் பஞ்சபூதத் தத்துவத்தால் அமைந்து உடலின்கண் உள்ள முக்குற்றங்களைப் பாதிக்கும் மூலக் கூறுகளைக் கொண்டு விளங்குகின்றன. இவ்வாறு உயிர்வாயு, முக்குற்றத்தோடு தொடர்புடைய இரத்த ஓட்டம் ஆகியவற்றின் அடிப்படையாக விளங்கும் இந்நாடி தத்துவத்தைப் புரிந்துகொள்ள உடல் தத்துவம், அண்டபிண்டத் தத்துவம், பஞ்சபூதத் தத்துவம் ஆகியவற்றை அறிதல் இன்றியமையாததாகும்.

நாடி – அமைப்பு

மனித உடலின் தூலமாகவும், சூக்குமமாகவும் 3,50,00,000 நாடிகள் மூலாதாரத்தினின்று தோன்றி மேலும் கீழும் குறுக்குமாக உடல் முழுவதும் பரவி நிறைந்துள்ளன என்றும் அவற்றுள் உயிர்க்காற்று இயங்குவதற்குப் பொருத்தமானவை 72,000 நரம்புகள் மட்டுமே என்றும் கூறுவர்.[25] ஆயின், சித்தர் நூல்கள் யாவும் நாடிகள் 72,000 என்றே குறிப்பிடுகின்றன. இவையாவும் மூலாதாரத்தினின்று தோன்றி உடல் முழுதும் ஆலின் விழுதெனப் பின்னிப் பிணைந்து விளங்குகின்றன. இவை முறையே தலையில் 7,000; செவியிலிருந்து கன்னம் வரை 3,000, கண்களில் 4,000; நாசியில் 3,330, பிடரியிலிருந்து தோள்வரை 5,000; கண்டத்தில் 6,000; கைகளில் 3,000, தொண்டையிலிருந்து கொப்பூழ் வரை 9,016, விலாவில் 3,000, முதுகந்தண்டில் 8,000; சந்தியில் 2,000; வயிறு முதல் லிங்கம் வரை 7,000 தொடை முதல் பாதம் வரை 8,654 மூலத்தில் 3,000 என்றவாறு அமைந்துள்ளன.[26]

இவ்வெழுபத்தீராயிரம் நாடிகளுள் சிறப்புடையனவாகப் பத்து நாடிகளை மட்டுமே குறிப்பர். இவை 'தச நாடிகள்' எனப் பெயர்பெறும். இவை முறையே இடகலை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிங்குவை, அலம்புடை, புருடன், குரு, சங்கினி என்ற பெயர்களால் அழைக்கப் படுகின்றன. இவற்றுள் புருடன் நாடியை 'வயிரவன்' என்றும், குரு நாடியை 'குகுதன்' என்றும் [27] அத்தி நாடியை 'அசனை' என்றும் [28] சிலர் வழங்குவர்.

இப்பத்து நாடிகளில் இடகலை இடது நாசியிலும், பிங்கலை வலது நாசியிலும், சுழுமுனை புருவ நடுவிலும் நிற்கும். அவ்வாறே காந்தாரி இடது கண்ணிலும், அத்தி வலது கண்ணிலும், அலம்புடை நாவிலும், சங்கினி தலையிலும், புருடன் குறியிடத்திலும், சிங்குவை, குரு என்பன முறையே இடது கை, வலது கை ஆகியவற்றிலும் நிற்கும். இவற்றுள் இடகலை, பிங்கலை, சுழுமுனை ஆகியவற்றைத் தவிர ஏனையவற்றின் இடங்களைக் கூறுவதில் கருத்து வேறுபாடுகள் உள. [29]

இத்தச நாடிகளில் இன்றியமையாதன இடகலை, பிங்கலை, சுழுமுனை என்ற மூன்றுமே. இவை மூன்றும் முறையே அபானன், பிராணன், சமானன் என்னும் வாயுக்களால் தூண்டப்பெற்றுத் தத்தம் தொழிலைச் செய்யும்போது வாதம், பித்தம், கபம் என்னும் மூன்று சக்திகளாகத் தோன்றுகின்றன. நாடிகள் உடல் முழுதும் பரவி விளங்குகின்றன என்றாலும் உயிரின் இயக்கத்தை உணர்தற்கு ஏற்றனவாகப் பத்து இடங்கள் மட்டுமே குறிக்கப்பெறுகின்றன. அவை கை, தலையுச்சி, புருவம், கழுத்து, நாசி, காது, மார்பு, உந்தி, காமியம், குதிகால் சந்து என்பன. [30] இப்பத்து இடங்களிலும் நாடித்துடிப்பின் தன்மையைத் தெளிவாக அறிய முடியும் எனினும் மிக எளிதாகவும், தெளிவாகவும் நுட்பமாகவும் கண்டறிதற்கு ஏற்ற இடம் கையின் பகுதியாகிய மணிக்கட்டே ஆகும். மேலும் நாடியறியும் இடங்கள் யாவற்றிலும் கைந்நாடி ஒன்றே தோலுக்கு மிக அருகில் செல்லுகின்றதாகலின் கையில் நாம் எளிதாக நாடித்துடிப்பை உணரமுடிகிறது.

நாடி ஆராயும் முறை

'கரிமுக னடியை வாழ்த்திக் கைதனில்நாடி பார்க்கில்
பெருவிர லங்குலத்திற் பிடித்தடி நடுவே தொட்டால்
ஒருவிர லோடில்வாதம் உயர்நடு விரலிற் பித்தம்
திருவிரல் மூன்றிலோடில் சேத்தும நாடியாமே' [31]

என்று நாடி ஆராயும் முறை கூறப்படுகிறது. நாடி பார்ப்பதற்கு முன் நோயாளியை உட்காரவைத்துக் கையைப் பிடித்து விரல்களின் மூட்டுகளில் தங்கியிருக்கின்ற வாயுவை நெட்டை வாங்கி நீக்க வேண்டும். [32] பிறகு, மணிக்கட்டில் பெருவிரலின் கீழ் ஓர் அங்குலம் விட்டு ஆங்குள்ள விசை நரம்பின் மீது சுட்டுவிரல், நடுவிரல், மோதிரவிரல் ஆகியவற்றை வைத்துப் பார்க்க வேண்டும். மூவிரல்களாலும் விசைநரம்பை அழுத்தியும் தளர்த்தியும் பார்க்கும் போது வீணைத் தந்தியின் இயக்கம் போல நாடியானது நம் கை விரல்களைத் தூக்கிக் குறிப்புக் காட்டும். அவ்வாறு காணுமிடத்து முறையே

சுட்டுவிரல் வாத நாடியையும், நடுவிரல் பித்த நாடியையும், மோதிரவிரல் சேத்தும நாடியையும் உணர்த்தும். மேலும் பெருவிரலாலும், சிறுவிரலாலும் உணரப்பெறுவது பூத நாடி என்றும், ஐந்து விரல்களுக்கும் இடையே நடப்பது குருநாடி என்றும் கூறப்படுகிறது.[33]

மருத்துவர் நோயாளியின் நாடியை ஆராயும் போது, தன் குருவை மனத்திற் கொண்டு வழிபட வேண்டும். அவ்வாறு நாடியை ஆராயும் போது நோயின் நாலில் ஒரு பங்கு வைத்தியர் கையில் பாயும் என்றும், அவர் கையைத் தரையில் தட்ட, வைத்தியர்கையில் பாய்ந்த காற்பங்குநோய் நீங்கும் என்றும் கூறுவர்.[34] ஒருவன், நீண்ட நாள் பெற்ற அனுபவப் பயிற்சியின் மூலமே நாடி நடையை உணரவியலும்.

நாடிகளின் துடிப்பை ஆராயுமிடத்து வாதநாடி ஒரு மாத்திரையளவும், பித்த நாடி அரைமாத்திரையளவும், கப நாடி கால் மாத்திரையளவும் துடிக்கும். இத்துடிப்பின் அளவைக் கோதுமையின் அளவோடு ஒப்பிட்டுக் கூறுவர். முக்குற்றங்களாகிய வாதம், பித்தம், சிலேத்துமம் என்ற மூன்றும் முறையே படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் பண்புகளை உடையன. இதனை 'வாதமாய்ப் படைத்து, பித்தவன்னியாய்க் காத்து, சீத சேட்பமாய்த் துடைத்து', என்பார் தேரையர்.[35] இக்காரணம் பற்றியே இம்மூன்று நாடிகளும் முறையே பிரம நாடி, விட்டுணு நாடி, உருத்திர நாடி எனப் பெயர் பெறுகின்றன. இவற்றுள் படைக்கும் தொழில் அதிக முக்கியத்துவம வாய்ந்தது. அதற்கு அதிக சக்தி தேவை. காத்தல் தொழிலும் முக்கியத்துவம் வாய்ந்ததெனினும், படைப்புத் தொழிலைப்போல் அவ்வளவு கடினமான தன்று. அழித்தல் தொழில் முன்னிரண்டளவுக்குச் சிறப்புடையதன்று. மேலும் இத்தொழிலைச் செய்தல் எளிது. இவ்வாறு முக்குற்றங்களும் தொழிற்படும் இயல்பை அடிபபடையாகக் கொண்டே அவ்வவற்றின் துடிப்பு விகிதங்களும் 1:½:¼ என்றவாறு அமைந்து விளங்குகின்றன.[36]

பொதுவாக நோயாளியின் இரு கைகளிலுமே நாடி பார்க்கவியலும் எனினும், ஆணுக்கு வலது கையிலும், பெண்ணுக்கு இடது கையிலும் நாடி பார்க்க வேண்டும் என்பது சித்த மருத்துவம். இதற்குரிய காரணத்தை ஆராயுமிடத்து நாபிக்கூர்மம் ஆண்களுக்கு கீழ்நோக்கியும், பெண்களுக்கு மேல் நோக்கியும் அமைந்துள்ளமையால் இவ்வாறு நாடியறியுமிடங்கள் வேறுபடுகின்றன என்பர்.[37] மேலும், கருத்தரிக்கும் காலத்தில் பிராணவாயு வலது நாசியில் ஓடினால் பிறக்கும் குழந்தை ஆண் என்றும், இடது நாசியில் ஓடினால் பெண் என்றும் சித்தர் நூல்கள் கூறுகின்றன. நாடியறியும் இடம் ஆண்–பெண் இருபாலர்க்கும் வேறுபடுதற்கு இந்த அடிப்படையும் ஒரு காரணம் என்பர்.[38] எனினும் பொதுவாக, மனித உடலில் இடப்பக்கம் பெண தத்துவமும், வலப்பக்கம் ஆண் தத்துவமும் அமைந்துள்ளன என்பது மரபுவழி வந்த நம்பிக்கை. இந்து சமய வழிபாட்டில் இடம் பெறும் அர்த்த நாரீசுவரர், அர்த்த நரேசுவரி திருக்கோலங்கள் இவண் கருதத் தக்கன. சீனர்தம் யங், இன் (முறையே ஆண், பெண்) தத்துவங்களும் இவண் ஒப்பிடற்பாலன.[39]

நாடி – நடை

சித்தமருத்துவம் மூந்நாடிகளையும் மூவிரல்களின் துணைக்கொண்டு ஆராய்ந்து நாடி நடைகளின் வேகம், அளவு, அசைவு ஆகியவற்றை விலங்கு, பறவை, ஊர்வன முதலாயவற்றின் நடைகளுடன் ஒப்பிடுகிறது. மருத்துவர் நோயாளியின் நாடிநடையை அறியுங்கால் இந் நடை ஒப்பீடுகளைக் கருத்தில் இருத்திச் செயல்படுவார். இவ்வகையில் ஆடவர்க்கு வாதநாடியின் நடை அன்னம், கோழி, மயில் ஆகியவற்றின் நடையை ஒத்த இயல்பினது என்றும், பித்த நாடி நடை ஆமை, அட்டை ஆகியவற்றின் நடையை ஒத்தது என்றும், சிலேத்தும நாடிநடை தவளை, பாம்பு ஆகியவற்றின் நடையை ஒத்ததும் என்றும் கூறுவர்[40], பெண்களுக்கு வாத நாடி பாம்பு போன்றும், பித்த நாடி தவளை போன்றும், கப நாடி அன்னம் போன்றும் நடக்கும் என்பர்.[41]

நாடி நடைகளுக்குச் சித்தர் கூறும் ஒப்புமைகளை ஆழ்ந்து நோக்கினால் அவர்தம் நுண்மாண்நுழைபுலம் புலப்படும். சான்றாக, வாத நாடி நடைக்கு ஒப்பாகக் கூறப்பெறும் கோழியின் நடையைக் காண்போமானால், கோழியின் கால்கள் உயரமானவை. கோழி முதலில் ஒரு காலை விரைவாக உயரே தூக்கும். ஆனால், சிறிது தயங்கிய பின்னரே காலைக் கீழிறக்கும். அவ்வாறு கீழிறக்கும் போது காலைச் சற்று முன்னோக்கி வைக்கும். அப்போது இரு கால்களுக்கும் இடையே உள்ள தூரம், அதன் உயரத்தைப் பொறுத்து அமையும். இதன் நடையை வரைபடமாக்கினால் முதல்கோடு நேராகவும், அடுத்த கோடு சாய்வாகவும் நீளமாகவும் அமைய, இடையே உள்ள பரப்பு அகலமாகவும் உயரமாகவும் விளங்கும். அடுத்து, பித்த நாடிக்கு ஒப்புமையாகிய ஆமையின் கால்கள் சிறியவை. மேலும் அது நடக்கும்போது அருகருகே கால் வைத்து நடக்கும் இயல்பினது. எனவே இதன் நடையமைப்பும் பரப்பும் கோழியை விடப் பாதியளவு குறைந்தவை. பாம்புக்குக்கால்கள் கிடையா. மேலும் அது வளைந்து நெளிந்து ஊர்ந்து செல்லும் இயல்பினது. எனவே இதன் நடை உயரமற்ற வளைவுக் கோடாக விளங்கும். இதன் நடையின் உயரமும் பரப்பும் முன்னிரு நடைகளைக காட்டிலும் அளவிலும் பரப்பிலும் குறைந்தவை.[42] இவ்வாறு நாடிகளின் எழுச்சி, உயர்ச்சி, வீழ்ச்சி ஆகியவற்றைக் கணித்ததோடு, அந்நாடிகள் முன்னும் பின்னும் பக்கங்களிலும் இயங்குமாற்றை ஆய்ந்து கண்டு முறையே அவ்வவற்றின் முன்பாய்ச்சல், பின்பாய்ச்சல், வலப்பாய்ச்சல், இடப்பாய்ச்சல் என்று கணித்துள்ளமை ஆழ்ந்து உணர்ந்து இன்புறற்பாலது.

உடலின் சீரான இயக்கத்தில் தமக்குரிய இயல்பில் நடக்கும் இம்மூன்று நாடிகளும் உடல் நிலை மாறுபட்ட இடத்து, தம்மளவில் மிக்கும் குறைந்தும் கலந்தும் நடக்கும் இயல்பின. இந்நடை வேறுபாட்டைக் 'கலப்பு நாடி' என்றும் 'தொந்த நாடி' என்றும் பெயரிட்டு வழங்குவர். இத்தகைய மாறுபட்ட நடைகளையும் சித்தர்கள் தக்க ஒப்புமைகள் கூறி வரையறுத்துள்ளனர். சான்றாக, வாதம் இரண்டும், பித்தம் ஒன்றுமாகக் கலந்து நடக்கும்போது மிகுந்த சினத்தைச் சிரமேற்கொண்டு நடப்பவனைப் போலத் தோன்றும். பித்தம்

இரண்டும், சிலேத்துமம் ஒன்றுமாக நடந்தால், தொட்டிலில் துயிலும் பிள்ளை அழுகின்ற காலத்து தொட்டிலில் ஏற்படும் சிறு அசைவுபோல இருக்கும். சிலேத்துமம் இரண்டும் பித்தம் ஒன்றும் கூடி நடக்கில் மயில் ஓடுவது போலக் குறிப்புக் காட்டும்.[43] இவ்வாறு நாடிகள் நன்னிலையிலும் நோய் நிலையிலும் நடக்கும் போது அவற்றின் குணம், அசைவு, விரைவு முதலியவற்றை ஆய்ந்த சித்தர், நாடி நடைகளைப் பொதுவாக, தீவிரநாடி, துள்ளு நாடி, நிறைநாடி, தளம்பு நாடி, பூத்த மங்கை நாடி, இரட்டை நாடி, தெறிக்குநாடி, சன்னி நாடி, மரண நாடி என்றவாறு இருபத்தைந்து வகைகளாகப் பகுத்துள்ளனர்.[44] அவற்றின் இயக்கங்களின் அடிப்படையில் அற்று நிற்றல், சிதறி ஓடல், சுழன்று காணல், தணித்துத் தளரல், புழுப்போலூர்தல் என்றும் கூறுவர்.[45]

நாடியைப் பாதிக்கும் காரணிகள்

வளி, அழல், ஐயம் என்ற மூன்றும் நடுநிலையில் பணியாற்றும்போது உடலை நன்முறையில் இயங்கச் செய்யும்.

'வழங்கிய வாதம் மாத்திரை யொன்றாகில்
தழங்கிய பித்தம் தன்னி லரைவாசி
அழங்கும் கபந்தான் அடங்கியே காலாகில்
பிறங்கிய சீவற்குப் பிசகொன் றில்லையே'[46]

என்பர். வாதாதி மூன்றும் பணியாற்றும் முறையில் அவைதாமே நோய்களை உண்டாக்குவதில்லை. இம்மூன்றும் மனித உறுப்புகளைச் சார்ந்து இயங்குவன. இந்த உறுப்புகளைத் தன் நிலையினின்றும் மாறும்படிச் செய்வன புறக் காரணிகளே. எனவே மருத்துவர் நோயாளியிடத்தே முக்குற்ற நிலைகளில் காணும் மாறுதல்களை ஆராயுமிடத்து, அவற்றைப் பாதிக்கும் புறக்காரணிகளை அறிந்திருத்தல் அவசியம். அவை சிறுபொழுது, பெரும்பொழுது, கோள்நிலை முதலிய புறச் சூழல்களும், உணவு முதலிய ஒழுக்கங்களுமாகும்.

சிறுபொழுது: ஒரு நாளில், காலையில் மிகுதியாக இயங்கும் நடை வாதம் என்றும், பகலில் மிகுதியாக இயங்கும் நடை பித்தம் என்றும், இரவில் வேகமாக நடக்கும் நடை கபம் என்றும் கணக்கிடப்படுகிறது. இவற்றுக்கு உரிய நேரத்தினளவை..

'உதயத்தில் வாதம் பத்தாம் உச்சியில் பித்தம் பத்தாம்
பதனியில் சாயங்காலம் பத்துமே சேத்தும மாகும்'[47]

என்று நாழிகையளவு கொண்டு கண்டுரைத்துள்ளனர். (ஒரு நாழிகை.. 24 நிமிடம்). அன்றியும் வாதத்திற்குரிய நேரம் காலை 6 மணி முதல் 10 மணி வரை; பித்தத்திற்குரிய நேரம் காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை; கபத்துக்குரிய நேரம் மதியம் 2 மணி முதல் மாலை 6 மணி வரை எனவும் இரவிலும் இவ்வாறே தொடர்ந்து முறையாக நடக்கும் எனவும் ஒரு சிலர் குறிப்பிடுகின்றனர்.[48]

பெரும்பொழுது: பருவ கால மாற்றங்களும் நாடி நடையின் இயக்கத்தில் முக்கிய இடம் பெறுகின்றன. இந்தக் காலங்களில் நாடி கணிக்கும் நேரத்தைச் சித்தர் ஆய்ந்து கூறியுள்ளனர். பன்னிரு மாதங்களுள், சித்திரை, வைகாசி மாதங்களில் காலையில் நாடி பார்க்க வேண்டும். ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் மதிய உச்சிப் பொழுதில் நாடி பார்க்க வேண்டும். மார்கழி, தை, மாசி ஆகிய மாதங்களில் மாலையில் நாடி பார்க்க வேண்டும். ஆவணி, புரட்டாசி, பங்குனி ஆகிய மாதங்களில் இரவுப் பொழுதில் நாடி பார்க்க வேண்டும் என்பர்.[49]

கோள் நிலை: உடலின் முக்கிய உறுப்புகளுக்கும், கோள்நிலைகளுக்கும் இடையே தொடர்பு உள்ளதாகச் சித்த மருத்துவம் கூறுகின்றது. சான்றாக, பிங்கலை நாடி சூரியன், செவ்வாய், சனி என்ற மூன்று கிரகங்களின் ஆதிக்கத்தின் கீழ் அமைகிறது என்றும், இடகலை நாடி சந்திரன், புதன், வெள்ளி என்ற மூன்று கிரகங்களின் ஆதிக்கத்தில் உள்ளது என்றும், சுழுமுனை நாடி 'குரு' கிரகத்தின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளது என்றும் கூறப்படுகிறது. இவ்வாறு நாடி நடையில் கோள்நிலையின் ஆட்சியை ஆராய்ந்து திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் வாதம் விஞ்சி நடக்கும் என்றும், சனி, ஞாயிறு, செவ்வாய் ஆகிய நாட்களில் பித்தம் மேலோங்கி நடக்கும் என்றும், வியாழனில் கபம் மிகுந்து நடக்கும் என்றும் கணக்கிட்டுள்ளனர்.[50] இவ்வாறே, அமாவாசை, பௌர்ணமி மற்றும் கிரகண நாட்களிலும் மூன்று நாடிகளின் நடைகளும் மாறுபடுமென்பர்.

இப்புறச் சூழல்களேயன்றி மனித உடலில் இயல்பிலேயே அமைந்த மாற்றங்களான வயது, பால்வேறுபாடு முதலியவற்றுக்கேற்பவும் நாடி நடை வேறுபடும். சான்றாக, ஒரு மனிதன் வாழ்நாளை மூன்று பிரிவுகளாகக் கொண்டு முதலாவது பகுதி வாதத்திற்கும், இரண்டாவது பகுதி பித்தத்திற்கும், இறுதிப் பகுதி சிலேத்துமத்திற்கும் உரியதெனக் கூறுவர். பால்வேறுபாட்டை நோக்குமிடத்து, ஆண்களின் நாடி நடையைக் காட்டிலும் பெண்களின் நாடி நடையில் அழுத்தம், உயர்ச்சி, தன்மை முதலியன குறைவாகவே இருக்கும்.[51]

இவையேயன்றி உணவாதி ஒழுக்கங்களும் நாடி நடையை வெகுவாகப் பாதிக்கவல்லன. பொதுவாக, எண்ணெய் தேய்த்துக் குளித்த நிலையிலும், ஈரமுடன் நிற்கும் போதும், உணவு உண்ணும் போதும், பசி வேளையிலும், நடந்து செல்லும் போதும், சிற்றின்பக் காலத்தும், கள்ளுண்ட நிலையிலும், நஞ்சுண்ட போதும் நாடிநடை தெளிவாகத் தோன்றாது.[52] அதிக பசி, அதிக தூக்கம், வருத்தம் ஆகிய நேரங்களில் நாடி நடையின் வேகம் குறையும்.[53] விடாச்சுரம், குறைவான தூக்கம், அதிக பலவீனம், இரத்தப் போக்கு, சூடான உணவு உண்ணல், வெயிலில் நடத்தல் ஆகிய நேரங்களில் நாடி படபடப்புடன் விரைந்து நடக்கும்.[54] மேலும் தரையில் கையூன்றியிருக்கும்போதும், மணிக்கட்டின்மேல் ஏதேனும் கட்டுப் போட்டிருக்கும் போதும் நாடி நடை தெளிவாகத் தெரியாது.[55] ஆகவே, இக்காலங்களை 'நாடி பலித்திடாக் காலங்கள்' என்று குறிப்பர்.

நாடி வழியாக நோயறிதல்

முக்குற்ற நாடிகளின் பண்புகளை ஆராயுமிடத்து வாத நாடி மந்தம், குளிர்மை, மலக்கட்டு முதலியவற்றை உண்டாக்கும்; பித்த நாடி வெம்மை, நீர்வேட்கை, எரிச்சல், சினம் முதலான இயல்பு தரும்; சிலேத்தும நாடி கீழ் நோக்கி வாய்வு பரிதல், விழி குழிதல், நெஞ்சடைப்பு, திகைப்பு, விக்கல் தோன்றுதல் முதலியனவற்றுக்குக் காரணமாகும்.[56] இவற்றைக் கருத்திற்கொண்டு ஆராயுமிடத்து வாத நாடியின் மிகுதி மந்தம், வயிற்றுப் பொருமல், திரட்சை வாய்வு, கிராணி, மகோதரம், வாய்வு சூலை, அண்டவாதம், நீர்க்கிரிச்சரம் போன்ற நோய்களைக் குறிக்கும். பித்த நாடி மிகுதி வெப்ப வாய்வு, அத்தி சுரம், அதிசாரம், பயித்திய ரோகம், இதய நோய், பெரும்பாடு, இரத்தப் பிரமேகம், மூர்ச்சை முதலான நோய்களை உண்டாக்கும். கப நாடி மிகும்போது எலும்புருக்கி, ஈளை, இருமல், சன்னி, கரப்பான், நெஞ்சடைப்பு, காமாலை, பாண்டு, சோகை முதலானவற்றை உண்டாக்கும்.[57] இவ்வாறே, கலப்பு நாடிகளும் அவ்வவற்றுக்குரிய நோய்களை உணர்த்தி நிற்கின்றன.

நாடிகளின் பண்புகளைக் கொண்டு நோயறிதலேயன்றி, அவற்றின் நடையியல்புகளைக் கொண்டு நோய்களை அறியும் முறைகளையும் சித்தர்கள் வகுத்துள்ளனர். சான்றாக அசீரண நாடியில் நாடி மதயானை போன்று நடக்கும். பசி வேளையில் காக்கையின் தூக்கம் போல நடக்கும். வாத நாடி மடங்கித் துடித்து நின்றால் மலச்சிக்கல் என்று உணரலாம். சன்னி பாத நாடியில் மூன்று நாடிகளும் ஒன்றாய் எழுந்து காணும் அல்லது அடங்கி நடக்கும்.[58]

கருப்ப நாடியில் வாதமும் பித்தமும் கலங்கி நடக்கும். இதன் நடை எறும்பு புழு ஆகியவற்றை போல் ஊர்ந்தும், ஆமை போல அசைந்தும், பஞ்சு மெத்தை போல மெதுவாயும் நடக்கும் இயல்பினது.[59] இவ்வாறே, பொய்ச் சூல் நாடியில் வாதநாடி வெடித்துப் பாய்ந்து சிதறிக் கிளம்பி நிற்கும்.[60]

இவ்வாறு நோய் நிலையில் நாடிகளின் இயக்கங்களைக் கூறியதோடு அவற்றின் சாத்திய அசாத்திய நிலைகளை அறியும் முறைகளையும் சித்தர்கள் கண்டு உரைத்துள்ளனர். வாத பித்தம், பித்த வாதம், பித்த ஐயம், ஐய பித்தம் முதலான நாடிகளால் உண்டாகும் நோய்கள் குணமாதற்குரியன. ஐயவாதம் வாத ஐயம் இவற்றால் உண்டாகும் நோய்கள் குணமாதல் அரிது என்று சதகநாடி கூறுகிறது.[61] பித்தம் அடங்குதலும், கபம் ஓடுதலும் அசாத்தியக் குறிகளாகக் கூறப்படுகின்றன.

> *'பித்த மடங்கினாற் பேசாதே போய்விடு*
> *எத்தி யவையம் எழுந்திடிற் கிட்டாதே*
> *எத்தி யவாத மெழும்பின் மருந்துசெய்*
> *எத்திய மூன்றி னியல்பை யறிந்திடே'*[62]

என்பார் திருமூலர். வாதபித்த சிலேத்துமங்கள் மூன்றும் கூடி நடத்தலும் அசாத்தியக் குறியாகவே கருதப்படுகிறது.[63]

நாடி நடைகளை ஆய்ந்து மரணக் குறிகளையும் அவை நிகழும் நேரங்களையும் கூட அறுதியிட்டுக் கூறியுள்ளனர் நம் முன்னோர். ஐயநாடி பித்தநாடியைப் பற்றி இணைந்து நடந்தால் ஒரு நாளில் மரணம்; ஐயநாடி வாதத்தைப் பற்றி நடந்தால் ஒரு நாழிகையில் மரணம்;[64] வாதநாடி வளைந்து முன்னோடிப் புரளுதல், மந்தமுடன் மயில், அன்னம் ஆகியவற்றின் நடையில் நடவாது நிலைகுலைந்து, முன்பின் பாய்ச்சலாகச் சிதறி நடத்தல் ஆகிய நடைகள் எட்டே நாளில் மரணம் வரும் என்பதை உணர்த்தும் குறிகளாம்.[65] பித்த நாடி தேள் கொடுக்குபோல் நடந்தால், ஒரு மாதத்தில் மரணம்; அரணைவால் போல் துடித்தால் எட்டு நாளில் மரணம்; சிதறி ஓடினால் மூன்று நாளில் மரணம்.[66] காலையில் சிலேத்தும நாடியும், உச்சிப் போதில் பித்த நாடியும், மாலையில் வாத நாடியும் வகைதப்பி நடக்குமாயின் மரணம் உண்டாகும்.[67] மேலும் வாத பித்த சிலேத்தும நாடிகள் இணைந்து தன்னிலை தவறிச் சிதறி நடந்தால் ஒரு மண்டலத்திலும், மூன்றும் தேள் கொடுக்குப் போல ஆடி ஓடம் போல நடந்தால் ஒரு திங்களிலும், அரணைவால் போலத் துடித்தால் உடனேயும் மரணம் விளையும்.[68] இவ்வாறு சித்தர்கள் நாடி நடைகளின் வழியே நோய்களையும் அவற்றின் சாத்திய அசாத்திய நிலைகளையும், மரணக்குறிகளையும் நுண்ணிதின் ஆய்ந்து உணர்த்தியுள்ள திறம் உணர்ந்து மகிழ்தற்குரியது.

குருநாடி

நாடி முறையில் இடகலை, பிங்கலை, சுழுமுனை ஆகிய மூன்று நாடிகளுக்கும் மேலாகக் குறிக்கப் பெறுவது குருநாடியாகும். (69) மற்ற நாடிகள் யாவற்றுக்கும் இது தலைமையான நாடி என்பதாலும், தக்க துணையின்றி இதனைப் புரிந்து கொள்ள வியலாது என்பதாலும் இந்நாடி, 'குருநாடி' எனப் பெயர் பெற்றது என்பர். குருநாடி, தனக்கெனத் தனித்த இயல்புகள் ஏதுமின்றிப் பிறநாடிகளை இயக்குதலை மட்டுமே தொழிலாகக் கொண்டது. இந்நாடி வாத பித்த நாடிகளுக்கு இடையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. மனத்தை ஒருமுகப்படுத்தி, சுட்டுவிரலை வைத்து நுட்பமாக முறையில் ஆராய்வதன் மூலம் இந்தக் குரு நாடி மூலமாகவே முக்குற்றங்களின் நிலைகளையும் ஆயுட்காலத்தையும் கூட அறியலாம்; குரு நாடியை மட்டும் ஆண் பெண் இருபாலாருக்குமே வலது கையில்தான் காண வேண்டும் என்பர்.[70]

குருநாடி என்று தனியே ஏதுமில்லை என்றும், வாத பித்த சிலேத்துமங்களை உணர்த்தும் கை நாடியே 'குறு நாடி' என வழங்கப் பெற்றுப் பின்னாளில் 'குருநாடி' எனத் திரிந்தது என்றும் மறுத்துக் கூறுவாரும் உளர்.[71] இன்று இந்நாடி காணும் முறை வழக்கில் மிகவும் அருகியமையால் இதன் நுட்ப இயல்புகள் மேலும் ஆய்வுக்குரியதாக உள.

பிற மருத்துவ முறைகளில் நாடி

நாடி பார்க்கும் முறை மேலை நாட்டு மருத்துவத்திலும் கையாளப் படுகிறது. கையில் நாடி பார்த்தலை அவர்களும் மேற்கொள்கின்றனர். எனினும்

நம்மைப் போல் நடையியல்புகளைக் கொண்டு முக்குற்ற நிலைகளை ஆராய்வதில்லை. மாறாக, நாடித்துடிப்பின் எண்ணிக்கை, நடை, எழுச்சியின் அளவு, அழுத்தம், தன்மை ஆகியவற்றை ஆராய்ந்து அவற்றின் மூலம் இதயத்தின் நிலை, இரத்தக் குழாய்களின் நிலை மற்றும் இவை போன்ற பிற குறிப்புகளை அறிவிக்கின்றனர். அவற்றுள்ளும் நாடித் துடிப்பின் எண்ணிக்கைக்கே அவர்கள் முதன்மை தருகின்றனர். ஒருவரின் வயது, பால் வேறுபாடுகளுக்கேற்ப மாறுபடும் நாடித்துடிப்பின் எண்ணிக்கைகளை அவர்கள் அடிப்படையாகக் கொள்கின்றனர். அவ்வகையில், நாடித் துடிப்பானது பிறக்கும் குழந்தைக்கு ஒரு நிமிடத்திற்கு 100 முதல் 140 தடவையும், வாலிபப் பருவத்தில் 80 முதல் 90 தடவையும் துடிக்கும். முழுப்பருவ ஆணுக்கு 70 முதல் 72 முறையும், முழுப்பருவப் பெண்ணுக்கு 78 முதல் 82 வரையும், முதியோருக்கு 60 தடவையும் துடிக்கும் என்றும் கணக்கிட்டுள்ளனர்.[72]

சீன மருத்துவத்தில் நாடி முறையில் நோயறிதல் வழக்கிலுள்ளது. சீனர்கள் உடலின் ஒவ்வொரு உறுப்புக்கும் நாடித் துடிப்பு உண்டு என்றும், எல்லா நாடித்துடிப்புகளும் பொருந்தியமையும்போதே உடல் நன்னிலையில் இருக்கும் என்றும் கருதுகின்றனர்.[73] சீன மருத்துவத்தில் நாடியானது 'யங்', 'இன்' என்ற ஆண்-பெண் தத்துவங்களின் சமநிலை மற்றும் அவை ஒன்றோடொன்று கலந்து செயல்படும் நிலை ஆகியவற்றை உணர்த்துவதாகும். சீனர் இருநூற்றுக்கும் மேற்பட்ட நாடி வகைகளைக் கூறுவர். இவர்கள் கையில் உணரும் நாடியைப் பன்னிரு பிரிவுகளாகக் கொண்டு ஆராய்கின்றனர்.[74] மேலும் அவர்கள், நம்மிலிருந்து மாறுபட்டு, ஆண்களுக்கு இடதுகையும், பெண்களுக்கு வலது கையுமே நாடி பார்க்கும் இடங்களாகக் கொள்கின்றனர்.[75] சீனர்களின் இந்நாடியாராய்ச்சி முறை சித்த மருத்துவத்தினின்றே அடிப்படையைப் பெற்றிருக்க வேண்டும் என்றும், காலப் போக்கில் மாற்றம் பெற்றிருக்கலாம் எனவும் கருத இடமுண்டு.

இந்திய மருத்துவ முறையான ஆயுர்வேதத்திலும் நாடி வழி நோயறிதல் கையாளப்படுகிறது. ஆயுர்வேதத்தில் இதன் தோற்றத்தை ஆய்வோமேல், ஆயுர்வேத முன்னோடிகளான சரகர், சுசுருதர் இருவரும் நாடி பற்றி ஏதும் கூறவில்லை. பின்னர் வந்த சக்ரபாணி தத்தா, பாவ மிஸ்ரா, வாக்படர், மாதவகரர் ஆகியோர் நூல்களிலும் நாடி பற்றிய செய்தி காணப்படவில்லை என்பர்.[76] கி.பி.1300-ஆம் ஆண்டில் தோன்றிய சாரங்கதாரர் என்பவர் தாம் முதன் முதலில் நாடி பார்க்கும் முறையைத் தமிழினின்று வடமொழியில் எடுத்தெழுதினார் என்று 'ஆயுர்வேத ஆசான்' எனும் நூல் குறிப்பிடுகிறது.[77] மேலும் ஆயுர்வேதத்தில் தசநாடிகளுக்கு வழங்கும் பெயர்களான இட, பிங்களா, சுஷும்னா முதலிய பெயர்கள் தூய தமிழ்ச் சொற்களான இடகலை, பிங்கலை, சுழுமுனை என்ற பெயர்களின் திரிபுகளே என்பதும் தெளிவு. இவற்றைக் கருத்திற் கொண்டு ஆராயும்போது நாடி முறை சித்த மருத்துவத்தின்றே ஆயுர்வேதத்திற்குச் சென்று வழங்கியது என்பது பெறப்படுகிறது. இவ்வகையில் ஆயுர்வேத நாடிமுறை தமிழர் பண்பாட்டுக்

கூறுகளுள் ஒன்றான சித்த மருத்தவம் ஆயுர் வேதத்திற்கு வழங்கிய கொடையாகவே குறிப்பிடலாம்.

முடிவுரை

சித்த மருத்துவத்தில் நாடி சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது. தொடக்கத்தில் ஒருவர் தன்னளவில் உயிரின் இயக்கத்தை உணரும் முறையாக முகிழ்த்துப் பின், பிறரிடத்து நோயறியும் முறையாக வளர்ச்சியடைந்தது. இந்நாடி முறை, விளக்குதற்கியலாத நுட்பமான முறையாகும். நாடியை மட்டுமே ஆய்ந்து ஒருவர் உற்ற நோயை அறியும் ஆற்றலில் மேம்பட்ட மருத்துவர்கள் பண்டைக் காலத்தில் மிகுதியாக இருந்தனர். இந் நூற்றாண்டிலும் கூட, 1936-ஆம் ஆண்டில் தஞ்சையில் நடந்த மருத்துவ மாநாட்டில், திரைமறைவில் இருந்து நோயாளி ஒருவர் கையை மட்டும் வெளியே நீட்டினரார். அவரது நாடியை மட்டுமே கண்டு நோயைக் கணிக்கும் போட்டியில் ஒருவர் தங்கப்பதக்கமும், இருவர் வெள்ளிப் பதக்கமும் பெற்றனர்[78] என்ற செய்தி வழி இந்நூற்றாண்டின் தொடக்கத்திலும் கூட நமது நாட்டில் சிறந்து விளங்கியமை தெளிவு. இன்றும் இம்முறை வழக்கில் உள்ளது எனினும், இதன் நுட்பமறிந்தோர் தொகை மிக அருகிக் கொண்டே வருதல் கண்கூடு. எனவே, இந்நாடி முறை மீண்டும் செம்மையுற்று நமது சித்த மருத்துவ முறை உலக அரங்கில் ஏற்றம் பெற ஆவன செய்தல் தமிழர் கடன்.

குறிப்புகள்

1. க.வேங்கடேசன், ஆய்வு நோக்கில் நாட்டுப்புற மருத்துவம், ப.100.
2. K.Meenakshi Sundara Moorthy, Siddha System of Medicine on Piles, Heritage of Tamils Siddha Medicine, p.362.
3. டாக்டர். கோ. வேலுச்சாமி மற்றும் பிறர், (பதி), சித்தர் காயகற்பம் மூலமும் உரையும், ப:3, பா.7.
4. திருக்குறள், பா.948.
5. வடிவேலு முதலியார் , நாடி மர்ம மூலமும் வடிவேலர் விரிவுரையும், ப.5.
6. இரத்தினச் சுருக்கம் ஐந்நூறு (பா.16-25), பதினென் சித்தர்கள் அருளிய நாடி சாஸ்திரம், பக். 12-13.
7. வடிவேலு முதலியார், நாடிமர்ம மூலமும் வடிவேலர் விரிவுரையும், ப.5
8. டாக்டர். இரா. தியாகராசன் (பதி) அங்காதி பாதம், பா.277-1.
9. குணவாகடத்தின் வைத்திய சாரம் (பா.25) பதினெண் சித்தர்கள் அருளிய நாடி சாஸ்திரம், ப, 34.
10. T.V.சாம்பசிவம் பிள்ளை அகராதி, Vol. IV., ப.2925, Tamil Lexicon, பக்.938-939, செந்தமிழ் அகராதி .. ப.423.

    டாக்டர். ம. சண்முகவேலு, சித்த மருத்துவ நோய் நாடல் நோய் முதனாடல் திரட்டு, ப.78.
11. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை (பதி) சிவஞான போதம் மூலமும் சிற்றுரையும், சூத். 9 (உதாரணவெண்பா), ப.276
12. ப.வடிவேலு செட்டியார் (உரை) ஔவைக் குறள், பா.4.2.
13. ப.வடிவேலு முதலியார், நாடிமர்ம மூலமும் வடிவேலருரையும்,பக்.6-7.
14. வைத்திய சதக நாடி (பா.34) பதினெண் சித்தர்கள் அருளிய நாடி சாஸ்திரம், ப.71.
15. டாக்டர் ம.சண்முகவேலு, சித்தமருத்துவ நோய்நாடல் நோய்முதனாடல் திரட்டு, ப.78.
16. மேற்படி, ப.53.
17. Dr.A.Shanmuga Velan, Siddhar's Science of Longevity and Kalpa Medicine of India, pp. 60-61.
18. டாக்டர். ம. சண்முகவேலு, சித்த மருத்துவ நோய்நாடல் நோய் முதனாடல் திரட்டு, ப.58.
19. அ கோ.சுந்தரம், தமிழர் கண்ட மருத்துவம், பக் 18-19.
20. டாக்டர். ம. சண்முகவேலு, சித்த மருத்துவ நோய்நாடல் நோய் முதனாடல் திரட்டு, ப.53.

21. Dr. K.Radhakrishnan, Pulse in Siddha System, pp. 46-47.
22. Encyclopaedia Americana, Vol.. XXII p.809.
23. Dr. K.Radhakrishnan, Pulse in Siddha System pp.4-5.
24. Ibid, p.5.
25. ஜெ. சீத்தாராம் பிரஸாத், அனுபவ வைத்திய தேவரகசியம், ப.10.
26. டாக்டர்.இரா.தியாகராசன் (பதி) அங்காதி பாதம், பா.76-82.
27. டாக்டர்.இரா.தியாகராசன் (பதி) யூகிமுனி வைத்திய சிந்தாமணி, பா 93.
28. வல்லாதியின் வயித்திய நாடிப் பரிட்சை (பா.5) பதினெண் சித்தர்கள் அருளிய நாடி சாஸ்திரம், ப.59.
29. அபிதான சிந்தாமணி, ப.958 டாக்டர் மு.சௌரிராஜன் (பதி) சரபேந்திரர் சித்த மருத்துவச் சுடர் பக்.11-12 குணவாகடத்தின் வைத்திய சாரம் (பா.22-24) பதினெண் சித்தர்கள் அருளிய நாடி சாஸ்திரம், ப.34 வல்லாதியின் வயித்திய நாடிப் பரிட்சை (பா.3-5) மேற்படி, பக்.59-60 டாக்டர் இரா.தியாகராசன் (பதி) யூகிமுனி வைத்திய சிந்தாமணி, பா.96-99.
30. திருமூல நாயனார் நாடி (பா.39), பதினெண்சித்தர்கள் அருளிய நாடி சாஸ்திரம், ப.118, காவியத்தின் நாடி (பா.7) மேற்படி ப.48.
31. அகத்திய முனிவர் நாடி (பா.1) மேற்படி ப.4.
32. திரட்டு நாடி (பா.13), மேற்படி ப.25.
33. பரிபூரண நாடி (பா.10), மேற்படி ப.10.
34. டாக்டர். எஸ்.-சிதம்பரதாணுப்பிள்ளை, மருத்துவத் திறவுகோல், ப.77.
35. டாக்டர் ம.சண்முகவேலு, சித்த மருத்துவ நோய் நாடல் நோய் முதனாடல் திரட்டு, ப.91.
36. Dr. K.Radhakrishnan, Pulse in Siddha System, p.17.
37. டாக்டர் ம.சண்முகவேலு, சித்த மருத்துவ நோய்நாடல் நோய் முதனாடல் திரட்டு, ப. 126
38. குணவாகடத்தின் வைத்திய சாரம் (பா.16) பதினெனன் சித்தர்கள் அருளிய நாடி சாஸ்திரம் – ப.33
39. N. Kandaswamy Pillai, Histroy of Siddha Medicine, p.95.
40. பரிபூரண நாடி (பா.3) பதினெனன் சித்தர்கள் அருளிய நாடி சாஸ்திரம், ப.9.
41. மேற்படி (பா.4) ப.9.
42. Dr. K.Radhakrishnan, Pulse in Siddha System, pp.57-58.
43. திரட்டு நாடி (பா.17-20) பதினெனன்சித்தர்கள் அருளிய நாடி சாஸ்திரம் ப. 25.
44. T.V. சாம்பசிவம் பிள்ளை (ஆங்கிலம்), கே.ஆர்.சுந்தரேசன்(மொ.பெ) சித்த மருத்துவக் கருப்பொருள், ப. 39.
45. சாம்பசிவம் பிள்ளை அகராதி, Vol. IV, ப.2925.

46. திருமூல நாயனார் நாடி (பா.9) பதினெண்சித்தர்கள் அருளிய நாடி சாஸ்திரம், ப.115.
47. திரட்டு நாடி (பா.44) மேற்படி ப.28.
48. டாக்டர். மு. சௌரிராஜன் (பதி) சரபேந்திரர் சித்த மருத்துவச்சுடர், ப.17.
49. அகத்திய முனிவர் நாடி (பா. 31-32) பதினெண்சித்தர்கள் அருளிய நாடி சாஸ்திரம், ப.8.
50. பரிபூரண நாடி (பா. 5) மேற்படி ப.9.
51. Dr. K.Radhakrishnan, Pulse in Siddha System, p.53.
52. குணவாகடத்தின் நோயின் சாரம் (பா.4) பதினெண் சித்தர்கள் அருளிய நாடி சாஸ்திரம், ப.37.
53. டாக்டர். ம. சண்முகவேலு, சித்த மருத்துவ நோய்நாடல் நோய் முதனாடல் திரட்டு, ப.162.
54. மேற்படி
55. மேற்படி ப. 163.
56. டாக்டர். இரா. தியாகராசன் (பதி) யூகிமுனி வைத்திய சிந்தாமணி, ப.94-95
57. வைத்திய சதக நாடி (பா.48, 51-54) பதினெண் சித்தர்கள் அருளிய நாடி சாஸ்திரம், பக்.73-74.
58. குணவாகடத்தின் நோயின் சாரம் (பா.11) மேற்படி, ப.38 டாக்டர் எஸ். சிதம்பரதாணுப்பிள்ளை, மருத்துவத்திறவு கோல், பக்.78-80.
59. டாக்டர். இரா. தியாகராஜன் (பதி) அங்காதி பாதம், பா.175
60. குணவாகடத்தின் நோயின் சாரம் (பா.23) பதினெண் சித்தர்கள் அருளிய நாடி சாஸ்திரம், ப.40.
61. வைத்திய சதக நாடி (பா. 67) மேற்படி, ப.76.
62. திருமூல நாயனார் நாடி (பா.36) மேற்படி, ப.118.
63. டாக்டர். இரா. தியாகராஜன் (உரை), தேரையர் வெண்பா மூலமும் உரையும், பா.742.
64. குணவாகடத்தின் நோயின் சாரம் (பா.47) பதினெண்சித்தர்கள் அருளிய நாடி சாஸ்திரம், ப.44.
65. டாக்டர். எஸ். சிதம்பரதாணுப்பிள்ளை, மருத்துவத்திறவு கோல், ப.85.
66. மேற்படி, ப.85.
67. அகத்திய முனிவர் நாடி (பா.13) பதினெண் சித்தர்கள் அருளிய நாடி சாஸ்திரம் , ப.6.
68. பரிபூரண நாடி (பா.21-22) மேற்படி ப.13
69. குருநாடி (பா.1:3), மேற்படி ப.95
70. Dr. K.Radhakrishnan, Pulse in Siddha System, pp.61-62

71. வடிவேலு முதலியார், நாடிமர்ம மூலமும் வடிவேலருரையும், பக்.9:10.

72. Encyclopaedia Americana, p.809.

73. ரா. ராஜதுரை, மருத்துவக்கலை அன்றும் இன்றும், ப.15.

74. N.Kandaswamy Pillai, Histroy of Siddha Medicine, p.98.

75. R.Kumaraswamy, "Correlative Studies on Tamil and Chinese Medicines' - Cultural Heritage of tamils, Siddha Medicine, p.638.

76. டாக்டர். தே. ஆண்டியப்பன், இரா. குமாரசுவாமி, சித்தமருத்துவம், பக்.31-32 எஸ். ஆர். நமசிவாய ராஜயோகி, ஆயுர்வேத ஆசான்,ப.20

77. மேற்படி

78. Dr. V.Narayanaswamy, Introduction to the Siddha System of Medicine, p.30.
டாக்டர். தே. ஆண்டியப்பன், இரா. குமாரசுவாமி, சித்த மருத்துவம் ப.11

துணைநூற் பட்டியல்

செய்யுள் நூல்கள்

1. அங்காதி பாதம்: தியாகராசன் டாக்டர் இரா. (பதி) அருள்மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்குழு, பதி.1, 1975
2. ஔவைக் குறள்: வடிவேலு செட்டியார், ப. (பதி.) அரங்கசாமி நாயகரவர்கள் (வெளி) ஜார்ஜ் டவுன், சென்னை பதி.இ.,1955.
3. சிவஞான போதம் மூலமும் சிற்றுரையும்: துரைசாமிப் பிள்ளை ஔவை சு.(பதி) அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பதி. II ; 1968.
4. சித்தர் காயகற்பம் மூலமும் உரையும்: வேலுச்சாமி டாக்டர் கோ. முதலியோர் (பதி) ஆயுர்வேத சித்த மைய ஆராய்ச்சிக் கழகம் புது தில்லி, 110 016 பதி. 1 ; 1981.
5. தாயுமானவ சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாடல்கள்: கதிரைவேற்பிள்ளை, நா. (பதி) ஆர்.ஜி. பதி கம்பெனி, சென்னை-1 பதி.இ. ; 1964.
6. திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும் : திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம். லிமிடெட், சென்னை-1 பதி: 17, 1979.
7. தேரையர் வெண்பா மூலமும் உரையும் : தியாகராசன் டாக்டர், இரா.(உரை) அன்புச் செல்வி அச்சகம், சென்னை-17 பதி: 1; 1974.
8. நாடி மர்ம மூலமும் வடிவேலர் விரிவுரையும்: வடிவேலு முதலியார் (நூ.ஆ.) தேவசேனாபதி முதலியார், மா.(வெளி) பதி.இ.ஆ.இ.
9. பதினெண் சித்தர்கள் அருளிய நாடி சாஸ்திரம்: இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ் (பதி.) சென்னை-1 பதி.இ:ஆ.இ.
10. யூகி முனி வைத்திய சிந்தாமணி (பெருநூல் 800) பாகம்-1: தியாகராசன், டாக்டர் இரா.(பதி.) அருள் மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்குழு. பதி. 2 ; 1976.

உரைநடை நூல்கள்

11. ஆண்டியப்பன் டாக்டர் தே. குமாரசுவாமி, இரா.: சித்த மருத்துவம் முத்துப் பதிப்பகம், 'மாதவி' ஆழ்வார் நகர், மதுரை-625 019 பதி. 1 - 1979
12. சண்முகவேலு டாக்டர், ம. .. சித்த மருத்துவ நோய் நாடல் நோய் முதனாடல் திரட்டு (முதல் பாகம்) தமிழ்நாடு சித்த மருத்துவ வாரிய வெளியீடு, தமிழ்நாடு பதி. 1 ; 1987
13. சாம்பசிவம் பிள்ளை, T.V. (நூ.ஆ.-ஆங்கிலம்) .. சித்த மருத்துவக் கருப்பொருள் சந்தரேசன் கே.ஆர். (மொ.பெ.) கண்ணப்பர் டாக்டர் ஆ.இரா.(வெளி) மூலிகைமணி வெளியீடு வேலூர்-1 பதி. 1; 1973

14. சிதம்பரதாணுப்பிள்ளை டாக்டர் எஸ். மருத்துவத் திறவு கோல், சித்த மருத்துவ நூல் ஆராய்ச்சி நிலையம், அண்ணாநகர் (கிழக்கு) சென்னை - 12 பதி. 1; 1982

15. சீத்தாராம் பிரஸாத்,ஜெ .. அனுபவ வைத்தியதேவ ரகசியம் இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ் சென்னை பதி. 2 ; 1969

16. சுந்தரம், கோ. .. தமிழர் கண்ட மருத்துவம் 1018, 45வது தெரு, கொரட்டூர் சென்னை பதி. 1 ; 1984

17. சௌரி ராஜன் டாக்டர் மு. (பதி) .. சரபேந்திரர் சித்த மருத்துவச் சுடர் சரசுவதி மகால் நூல் நிலையம் தஞ்சாவூர் பதி. 2 ; 1982

18. நமசிவாய ராஜயோகி, எஸ்.ஆர். .. ஆயுர்வேத ஆசான், ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தக சாலை, சென்னை. பதி.இ; ஆ.இ.

19. ராஜதுரை, ரா. .. மருத்துவக் கலை அன்றும் இன்றும், கிறிஸ்துவ இலக்கிய சங்கம் சென்னை-3 பதி. 1 ; 1969.

20. வேங்கடேசன், க. .. ஆய்வு நோக்கில் நாட்டுப்புற மருத்துவம், சித்தர் கோட்டம் தி.நகர், சென்னை-17 பதி.1 ;1976.

ஆங்கில நூல்கள்

21. Kandaswamy Pillai, N. History of Siddha Medicine, Government of Tamilnadu (Pub.) Edn. I-1979

22. Narayana Swamy, Dr. V. Introduction to the Siddha System of Medicine, Pandit S.S.Anandam Research Institute of Siddha Medicine T.Nagar, MADRAS-17 Edn. I - 1975

23. Radha Krishnan , Dr. K. Pulse in Siddha System, (an Integrated Study) Siddar Seyal Achagam Madras - Edn. I - 1983.

24. Shanmugavelan, Dr. A. Siddhar's Science of Longevity and Kalpa Medicine of India, Sakthi Nilayam, Madras -10 Edn. I - 1963.

25. Subramanian, S.V. Madhavan, V.R.. (Editors) Cultural Heritage of Tamils Siddha Medicine, International Institute of Tamil Studies, Madras -113 Edn. I - 1983.

அகராதி முதலியன

26. அபிதான சிந்தாமணி சிங்கார வேலு முதலியார், ஆ. ஆசியன் எஜுகேஷனல் சர்வீசஸ் நியூ டெல்லி 1981

27. செந்தமிழ் அகராதி கந்தையா பிள்ளை ந.சி.ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம் சென்னை-2, பதி. 1957

28. Tamil English Dictionary of Medicine, Chemistry and Allied Sciences, Vol.IV, Sambasivam Pillai, The Research Institute of Siddhars Science, MADRAS. Edn. I - 1977

29. Tamil Lexicon, Vol.IV, Part-I, University of Madras Edn. 1982. Reprinted.

30. The Encyclopaedia Americana, Vol.XXII, Americana Corporation New York - 10022 38th Edition - 1927.

TITLES IN ENGLISH

The Contributions of the Tamils to Indian Culture		
Vol. I Language and Literature	Dr. K. Subbiah Pillai	18.00
Vol. II Art and Architecture	Dr. K. Bhagavathi	30.00
Vol. III Socio Cultural Aspects	Dr. M. Valarmathi	90.00
Vol. IV Religion and Philosophy	Dr. V. C. Sasivalli	80.00
Selected Poems of Bharathidasan		
Translation from Tamil to English — Dr. V. Murugan		60.00
Tamil to Malayalam — Dr. Padmanabhan Thampi, Dr. Desamangalam Ramakrishnan		60.00
Tamil to Kannada — Mr. V. Pasumalai Arasu		60.00
Tamil to Telugu	Dr. C. R. Sharma	60.00
A Comparative study of Tamil and Japanese — Dr. Pon. Kothandaraman		15.00
Chieftains of the Sangam Age — Dr. K. D. Thirunavukkarasu		20.00
Hand Book Tamil — Dr. S. Jean Lawrance & Dr. D. Renganathan		55.00
A Tamil Reader Vol. I & II — Dr. J. Vacek, Dr. S. V. Subramanian		65.00
Tamilnadu Bengal Cultural Relations — (Ed.) Dr. A. N. Perumal, Dr. K. Subbiah Pillai, Dr. Renganayaki Mahapatra		35.00
Thirukkural — The Daylight of the Psyche — Mr. C. Rajasingham		25.00
Tamil Verse in Translation	Mr. P. N. Appuswami	40.00
Heritage of the Tamils — Education & Vocation — (Ed.) Dr. S. V. Subramanian, Mr. V. R. Madhavan		50.00
Tolkappiyam Phonology & Morphology — (Tr.) Dr. D. Albert		25.00
Heritage of the Tamils — Temple Arts — (Ed.) Dr. S. V. Subramanian, Dr. G. Rajendran		50.00
Karaikkal Ammaiyar — Dr. V. C. Sasivalli		6.00
Siddha Medical Manuscripts in Tamil — (Ed.) Mr. V. R. Madhavan		8.00
Heritage of the Tamils — Siddha Medicine — (Ed.) Dr. S. V. Subramanian, Mr. V. R. Madhavan		45.00
Tamil-Text-An auto instructional Course — Dr. N. Deivasundaram, Dr. A. Gopal		25.00
Tiru Murugan	Dr. Kamil, V. Zvelebil	5.00
Dissertations on Tamilology	(Ed.) Dr. Annie Thomas	10.00
Dr. Mu.Va.	(Ed.) Dr. S. V. Subramanian, Dr. Manavalan	20.00
Tamil Language Learning through English — Audio Cassettes		300.00